உ
சிவமயம்

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.



தென்திசை வாயிற் கோபுரம், குபேர வாயிற் கோபுரம்.

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

28.01.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை, இலங்கை

தென்திசை வாயிற் கோபுரம், குபேர வாயிற் கோபுரம்

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

**வெளியீடு:**
நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

28.01.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் – தெல்லிப்பழை

## தர்மகர்த்தா சபை

| | | |
|---|---|---|
| கௌரவ த.சித்தார்த்தன் | பா.உ | தலைவர் |
| வைத்திய கலாநிதி தி.திவாகரன் | நரம்பியல் நிபுணர் | பொதுச் செயலாளர் |
| திரு.நா.திருநாவுக்கரசு | சமாதான நீதவான | உப தலைவர் |
| திரு.சி.சண்முகானந்தன் | கிராமசேவை அதிகாரி | இணைச் செயலாளர் |
| திரு.சி.கனகசிங்கம் | சிரேஸ்ட சட்டத்தரணி | சட்ட ஆலோசகர் |
| திரு.க.ஜனநாயகம் | | ஐக்கிய இராச்சியம் |
| வைத்திய கலாநிதி.ந.புவனேந்திரன் | | ஐக்கிய இராச்சியம் |
| திரு. பா.பாலகங்கேயன் | | ஐக்கிய அமெரிக்கா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை
## நிர்வாக சபை

| | |
|---|---|
| 1. செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் | - தலைவர் |
| 2. திரு. சி. அருளானந்தசிவம் | - உப தலைவர் |
| 3. திரு.ச. ஆறுமுகநாதன் | - உப தலைவர் |
| 4. Dr. தி. திவாகரன் | - பொதுச் செயலாளர் |
| 5. திரு. நா. தவநாதன் | - நிர்வாக செயலாளர் |
| 6. திரு. மு. அருளையா | - உப செயலாளர் |
| 7. திரு. து. சண்முகநாதன் | - பொருளாளர் |
| 8. திரு. சு. ஏழுர்நாயகம் | - உப பொருளாளர் |
| 9. திரு. நா. திருநாவுக்கரசு | |
| 10. திரு. சி. சண்முகானந்தன் | - இணைச் செயலாளர் |
| 11. திரு. சு. முருகையா | |
| 12. திருமதி கலாதேவி பொன்னம்பலம் | |
| 13. திரு. ச. உமாசுதன் | |
| 14. திரு. வி. பாக்கியநாதன் | |
| 15. திரு. S. ரஜீவ்காந்த் | |
| 16. திரு. இ. இராதாகிருஸ்ணா | |
| 17. திரு. ப. சேயோன் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன கர்த்தா அவர்களின் ஆசிச்செய்திகள்



திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

தெல்லிப்பழைத் திருவூரில் அருளாட்சி செய்யும் துர்க்காதேவியின் இரு கோபுர மஹா கும்பாபிஷேகம் குறித்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வெய்துகின்றேன். எங்கள் நகுலேஸ்வர ஆதீனத்திற்கும் துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்கும் நீண்ட பாரிய தொடர்பு பூர்வீகமாக இருந்து வருகின்றது. அவ்வகையில் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் எமது அக்கறையம் ஆசியும் என்றும் உண்டு.

தென்னாட்டில் உள்ள சக்தி பீடங்களுக்குத் நிகராக தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயம் பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. எல்லாத் திசையும் தூலலிங்கமாகிய கோபுரத்தை அமைப்பது பெருமைக்குரிய விடயமாகும். இக்கோபுரத்தின் அடிக்கல் நாட்டு விழாவிலும் அடியேன் கலந்துகொண்டு ஆசீர்வதித்ததையிட்டு ஆனந்தமடைகின்றேன்.

ஆலயத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள நிர்வாக சபையினருக்கும் திருப்பணிக்கு நிதி வழங்கி சிறப்பித்த அம்பாள் அடியவர்களுக்கும் எல்லா நலமும் கிடைக்க நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

துர்க்கை அம்பாளின் திவ்விய சக்தி மேலும் பிரகாசிக்க அனைவரும் பிரார்த்திப்போம்.

சுபம்

**ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்,**

ஆதீனகர்த்தா,
ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் கோயில்,
கீரிமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்புரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா அவர்களின் ஆசிச்செய்தி



இலங்கையின் யாழ்ப்பாண மாநகரத்தின் வடபால் தெல்லியூரில் அமர்ந்து வேண்டியவர்க்கு வேண்டிய வரங்களைத் தந்தருள் செய்து கொண்டிருக்கும் அன்னை துர்க்கையம்பாளின் திருக்கோவிலின் தெற்கு வீதி, வடக்கு வீதியில் நிர்மாணிக்கப்பெற்ற கோபுரம் ஸ்ரீ சக்கர மகாமேரு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மாவை ஆதீன பேரரசு ஆனந்தம் கொள்கின்றது.

"திருக்கோயில் இல்லா திருவில் ஊரும்
திருவெண்ணீறணியாத திருவில் ஊரும்
பலகோடிப் பத்திமையாற் றிடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்போடுமலர் பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"

என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவாக்கு.

**தீப்பிழம்பு**

ஹோமகுண்டமும், அதிலிருந்து எழும் தீப்பிழம்பும் இணைந்த வடிவே நமது கோபுர வடிவமாகும். பீடத்திலிருந்து பிரஸ்தளம் வரை உள்ள கோபுர அங்கமே ஹோமகுண்டமான வேதிகையாகும். எனவே தான் பிரஸ்தளத்திற்கு கீழ் உள்ள தாமரை போன்ற கோபுர அங்கத்திற்கு "வேதிகை" எனப் பெயரிட்டனர். ஹோம குண்டமான வேதிகையின் அங்கங்களுக்கு என்ன பெயரோ அதே பெயர்கள் தான் கோபுர அங்கங்களுக்கும் உரியதாயிற்று. அடுத்து பிரஸ்தளம் என்பது ஹோம குண்டத்தின் மேல் பரப்பப்படும் தளிர்ப்படுக்கையான தர்ப்பையாகும். அதே பெயரோடு தான் கோபுரத்தின் முதல் தளம் திகழ்கின்றது. வேதிகையான குண்டத்தில் எவ்வாறு எட்டுத்திசை பாலகர்களுக்கு இடம் அளிக்கப்படுகின்றதோ அதே அமைப்பில் கோபுரத்திலும் எட்டுத்திசை பாலகர்களுக்கு இடமுண்டு. பிரஸ்தளத்திலிருந்து தீப்பிழம்பு எவ்வாறு வெளிவருகின்றதோ அதேபோன்று கோபுரத்தில் பிரஸ்தளத்திற்கு மேலுள்ள பல தளங்களும், சிகரமும், கலசமும் சிகர மகாநாசிகளின் கூர்முனைகளும் தீ நாக்குகளின் வடிவிலே அமைக்கப் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கோபுரமாகத் திகழும் கட்டுமான அமைப்பு ஓமகுண்டத்திலிருந்து எழும் சோதிவடிவமான அம்மனின் உருவமே. ஒரு திருக்கோயிலில் அம்மனின் திருமேனிக்கு எவ்வாறு பூசைகள் உண்டோ அதேபோன்று கோபுரத்திற்கும் பூஜை முறைகள் உண்டு. இது சிருஷ்டி, சம்ஹாரம் என்ற இரு வகைகளில் அந்த அந்தக் கோயிலுக்குரிய ஆகமத்திற்கேற்ப நடைபெறும். கோபுரத்தின் ஒவ்வொரு அங்கமும் மந்திரசாஸ்திரத்தின் அக்ஷரங்களின் வடிவேயாகும்.

எல்லையில்லாப் பெருவெளியான பிரபஞ்சமே அம்மன். அதுவே ஆனந்தன் அதுவே பரமானந்தம் அதுவே அனைத்தையும் இயக்கும் ஒரு மகாசக்தி அந்த சக்தியின் வெளிப்பாடு நெருப்பு. அதுவே இயக்கம் என்ற உன்னத தத்துவத்தை உணர்த்தும் ஒளிமயமான அம்மனை நமக்குக் காட்டுவதே கோபுரத்தத்துவம். எனவே கோபுரம் என்பது உன்னத தத்துவம் உரைக்கும் ஒரு சிறப்ப வெளிப்பாடு.

ஸ்ரீசக்கரமும் மேருவும் சிவசக்திகளின் ஐக்கிய ரூபமாகும். சிவசக்கிரங்கள் நான்கு. அவை பிந்து, அஷ்டதள கமலம், பதினாறு தளகமலம், பூபுரம் என்பன. சக்தி சக்கிரங்கள் ஐந்து அவை மத்திய முக்கோணம், அஷ்டகோணம், உள்தசாரம், வெளித்தசாரம், பதினான்கு கோணம் என்பனவாகும். இவற்றுள் முக்கோணத்தை பிந்துவோடும், அஷ்டகோணத்தை அஷ்டதள கமலத்தோடும் உள், வெளி என்னும் இரண்டு தசகோணங்களைப் பதினாறு தளகமலத்தோடும் பதினான்கு கோணத்தை கோபுரத்தோடும் ஐக்கியப்படுத்தி சிவசக்திகளின் ஐக்கியத்தையுணர்தல் வேண்டுமென்பது சம்பிரதாயமாகும். சக்தியை சிவத்தோடு ஐக்கியம் செய்வது தான் ஜீவப்பிரஹ்மைக்கியம் எனப்படும். சித்சக்தி அல்லது பிரஹ்ம வித்தியோபாஸனா மார்க்கமாய், ஹயக்கிரீவர், வியாசர், துர்வாசர், அகஸ்தியர், தத்தாத்ரேயர், வசிட்டர் முதலிய சகல ரிஷிகளும் , கோரக்ஷ நாதர், மத்ஸ்யேந்திரநாதர் முதலிய சகல சித்தர்களும் காளிதாசர் ஸ்ரீசக்கர பகவத் பாதர், ஏனைய சக்தி உபாசனைப் பெரியார்களும் நித்தியானந்தப் பெரு வாழ்வையடைந்துள்ளார்கள்.

நிர்விஷேசநிருபாதிக பிரஹ்மமே காமேஸ்வரர் இவர் கேவலம் பிரகாச வடிவினர். இந்த நிர்விஷேசப் பிரஹ்மத்தில் சூரியனிடத்தில் கிரஹணங்களைப் போல் அபின்னமான (பிரிக்கமுடியாத) ஒரு சக்தியுண்டு. இது சித்சக்தி என்று கூறப்படும்.

இது விமர்சவடிவம் இது தான் அஹம்பதலக்ஷ்யார்த்த வடிவ கூடஸ்த ஸ்வரூப சாக்ஷியாகும். ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களில் ஜாக்கிர ஸ்வப்ன, ஸுஷுப்தி திரிபுரசுந்தரியென்றும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மின்னல், அக்னி, மனம் என்னும் பிரகாசப் பொருள்களையும் பிரகாசிக்கச் செய்வதனால் இராஜராஜேஸ்வரீயென்றும் யாவராலும் "நான் நான்" என்று அனுபவிக்கப்படுவதால் பராஹந்தையென்றும் எல்லாவிகல்ப (பேத) ஞானங்களை பிரகாசிக்கச் செய்வதால் சிதி அல்லது ஸம்வித் என்றும் ஜடசக்தியாகும். அவித்தையினால் தோன்றும் சகல அத்தியாயங்களையும் நிவர்த்திப்பதனால் வித்தையென்றும் இந்த சிற்சக்தியே விவரிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பிரஹ்மாபின்ன சிற்சக்தியினின்றும், ஸர்வ ஜீவர்களின் கர்மாக்களின் நிமித்தமாய், அவரவர்களுக்கு அவரவர்களின் புண்ணியபாவ அனுபவரூபமான சுக துக்கங்களையடைவிக்கப் போக்கிய வடிவப் பிரபஞ்சம் சிருஷ்டி செய்தற்பொருட்டு ஜடசக்தியென்னும் ஒரு கற்பிதசக்தி உண்டாயிற்று. ஒரு பெருமணல் வெளியில் சூரியகிரணங்களின் சம்பந்தத்தால் இல்லாததான பேய்த்தேர் என்னும் கானல் ஜலம் தோன்றியது போல் அஜ்ஜட சக்தியின்றும் காலத்திரயத்திலும் இல்லாத தானமாயை உண்டாயிற்று. அம்மாயையினின்றும் கானல் ஜலம் பிரவாகம் போல் அவ்வியக்தமும் மஹத்தத்துவ அஹங்காரங்களும் தோன்றின. அவ்வகங்காரத்தினின்றும் ஆகாசாதி பஞ்சபூதங்களும் தோன்றின. இதுவே ஸர்வப் பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமமாகும். சித்சக்தி பின்னபிரஹ்ம சேதனம் ஜடமாயுள்ள மாயையில் அனுப்பிரவேசஞ் செய்து காரணேச்வரன் எனப்படுவன்.

இந்த ஸ்ரீவித்யாஸ்வரூபிணியான பராஸம் வித்தானது யாருடைய சித்தத்தில் ஸ்புடமாய் விளங்குமோ அவனே பேதத்தைக் காரணமாய்க் கொண்டு தோன்றின. சகல அனர்த்தங்களாகும். பண்டாஸுரன் முதலிய சத்ருக்களை யொழித்து ஸ்வாராஜ்யத்தை அடைதற்குரிய யுவராஜாவாவன். அவன் தனது ஞானத்தின் மகிமையால் கற்பிதமாய்த் தோன்றும் சகல அநாத்ம பேதங்களையொழித்து சிவசக்தி ஐக்கியப் பேரானந்த ஸாகரமாய் விளங்குவான். இதுதான் சாக்தாத்வைதத்தின் சுருக்கமாகும். ஸ்ரீசக்கரயந்திரமும் மகாமேருவின் ரகஸ்யங்களையும் விஸ்தாரமாய் அறிய விரும்புவோர் ஞானாவர்ணம், தந்திரராஜம், தந்த்ரஸாரம், மாத்ருகாசக்கிர விவேகம், ஸௌபாக்யரத்னாகரம், யோகினி, ஹ்ருதயம்(வாமகேச்வரதந்த்ரம்), காமகலாவிலாசம், வரிவஸ்யா ரஹஸ்யம், திவ்விய மங்கள தியானம் முதலிய நூல்களைக் குருமுகமாய்ச் சிரவணஞ்செய்து அறியவும்.

ஸ்ரீ மகாமேரு யந்திரப் பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் கோபுர கும்பாபிஷேகமும் நடைபெறும் இக்காலத்தில் எல்லாம்வல்ல மாவைக்கந்தப் பெருமானுடைய அனுக்கிரகங்களும் மாவையாதீன பேரரசுவின் ஆதீனகர்த்தாக்களினுடைய ஆசீர்வாதங்களும் என்றைக்கும் உரித்தாகுக.

**மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்,**
ஆதீனகர்த்தா, மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருவின் அருளாசிச் செய்தி



தெல்லிப்பழை உழுகுடைப்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ துர்க்கை அம்பாளின் திருவருளால் அன்னையின் ஆலயத்தில் ஆண்டுதோறும் புதிய திருப்பணிகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. அந்தவகையில் கடந்தவருடம் தென்திசைக் கோபுரம் சிறப்பாக அமையப்பெற்று கும்பாபிஷேகம் நடந்தேறியது. எமது தேவஸ்தான தலைவரின் உன்னத உழைப்பினால் நடப்பாண்டில் வடதிசைக்கோபுரம் அமையப்பெற்று கும்பாபிஷேகம் நிகழ்வது அம்பாளின் அருட்கடாச்சம் பொங்கிப் பிரவகிப்பதை நிதர்சனமாக்குகின்றது.

வடதிசைவாயிற் கோபுரத்தை குபேரவாயிற் கோபுரம் என்பர். ஏனெனில் முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட சிவபக்தனான குபேரன் வடக்குத் திசையின் திக்குப்பாலகர் ஆவார். அத்துடன் குபேரன் செல்வத்தின் அதிபதியாவார். அதாவது பத்மம், மகாபத்மம், மகரம், கச்சபம், குமுதம், நந்தம், சங்கம், நீலம், பத்மினி ஆகிய நவநிதிகளுக்கும் அதிபதி குபேரன். திருப்பதி வெங்கடாஜலபதிக்கு குபேரன் கடன் கொடுத்ததாகவும் அக்கடனை அடைக்க திருப்பதியின் வடதிக்கில் குபேர உண்டியல் நிறுவப்பட்டதாகவும் ஐதிகம் நிலவுகின்றது.

இவ்வாறான பெருமைகளையுடைய குபேரவாசலில் கோபுரம் அமைவது ஆலயத்திற்கு சாலவும் சிறப்பானதாகும். மேலும் குபேரவாயிலை நோக்கியதாக மகாமேரு இயந்திரம் பிரதிட்டை செய்தல் உத்தமோத்தம கைங்கர்யமாகும். அத்துடன் இக்குபேர கோபுர வாயிலை நோக்கியதாக ஆலயத்திற்கு புதிய பாதை அமைந்திருப்பது மேலும் மகத்தானதாகும். இவ்வாறான சிவபுண்ணிய செயல்களில் ஈடுபட்ட தர்மகர்த்தாக்கள், நிர்வாக சபையினர், பொருளுதவி நிதியுதவி செய்த அடியார்கள், கட்டுமாணப் பணிகளில், உழைத்தோர் அனைவருக்கும் அன்னை துர்க்காதேவியின் பேரருள் கிடைப்பதாகுக.

மேலும் குபேரவாசற் கோபுர கும்பாபிஷேகம் சிறக்கவும் கும்பாபிஷேக மலர் மலர்ந்து அருள்மணம் பரப்பவும் அம்பாளின் அடிபணிந்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

**'லோகா சமஸ்தா சுகினோ பவந்து"**

**சுபமஸ்து**

**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்,**

**பிரதமகுரு,**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வசாதகர் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் வழங்கிய ஆசியுரை



உலகமெலாம் பரந்துவாழும் இலங்கை சைவ நன்மக்களின் சக்தி வழிபாட்டில் யாழ் / தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்கையம்பாள் பெருங்கருணையினால் வரம்பெற்று, வளம்பெற்று வாழ்வதை நாம் கண்கூடாக் காண்கின்றோம். இவற்றின் மூலகாரணமாக அமைவது ஆதிமூலத்தில் அமர்ந்து அருளாட்சி செய்யும் அன்னையின் திருவருட் திருமேனியாகும்.

அன்னையின் திருவுருவம் ஆவர்த்தன பிரதிஷ்டையாக (புதிய மூர்த்தி) கும்பாபிஷேகம் நடந்த நாள் முதல் இன்றுவரை நடந்தேறிய நடக்கின்ற நடை பெறப்போகின்ற நிகழ்வுகள் யாவும் அன்னையின் திருவருளேயாகும்.

நடந்தேறியவை : அழகிய வெள்ளைக்கல் மூலாலயம் சுற்றுமதிலுடன் கூடிய அழகிய உள்வீதி கிழக்கு, தெற்கில் ராஜகோபுர வாயில், சித்திரத்தேர் துர்க்கா புஷ்கரணி தீர்த்தம், சரஸ்வதி மண்டபம், கோசாலை திருமண மண்டபம், அன்னபூரணி அன்னசாலை, மகளிர் இல்லம், யாத்திரிகர் விடுதி என விரிவடையும் திருப்பணிகள்.

நடப்பவை : ஐந்துகாலப் பூஜையுடன் நித்திய நைமித்திய விழாக்கள், சஞ்சிகைகள் வெளியீடு, அன்னதானம், புராண படனங்கள், குபேரவாயில் (வடக்கு) கோபுர ஸ்ரீ மஹா மேருயந்திர கும்பாபிஷேகம்.

நடைபெறப்போகின்றவை : கிழக்கில் பிரதான வீதி அருகாமையில் மிக உயர்ந்த இராஜகோபுரத் திருப்பணி மேற்கு வாயில் கோபுரம் என விரியும் திருப்பணிகள்.

குபேரவாயில் மஹா கும்பாபிஷேக விழாவும், தெற்கு, வடக்கு கோபுரங்களின் கும்பாபிஷேக விழா மலரும் சிறப்பாக அமைய, எனையாளும் தெய்வம் ஸ்ரீ துர்க்காதேவியின் பாதம் பணிந்து ஆசி வழங்குகின்றேன்.

அன்னையின் அருட்பணியில் தம்மை ஈடுபடுத்திய அனைவருக்கும் தேவியின் திருவருள் நலமெலாம் தர பிரார்த்தித்து அமைகின்றேன்.

**வேதாகம வித்தியா பூஷணம்,**
**சிவாகம ரத்னா, பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா,**
(வி.சோமசுந்தர ஐயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஆதீன கர்த்தாவின் ஆசிச் செய்தி



**நா**ம் முற்பிறவியிலே செய்துகொண்ட தவம் காரணமாக அருமையாகப் பெற்ற மனிதப் பிறவியினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சிவ புண்ணியங்களைச் செய்து மெய் அன்புடன் இறை வழிபாட்டுடன் பரமகுருசாத்துவுமாகிய நித்தியானந்த முத்தி அடைதலேயாம். எங்கும் வியாபகமாக இருக்கும் இறைவன்; திருமேனியையும், குருவையும், மெய்யடியார் திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர்களிடமாகக் கொண்டும் நின்றும் நாம் வழிபாட்டைக் கொண்டருள்வார். இறைவன் இவ்விடங்களில் தயிரில் வெண்ணெய் போல் விளங்கி நிற்பார். மற்றைய இடங்கள் எல்லாம் பாலில் வெண்ணெய் போல் வெளிப்படாது நிற்பார். ஆதலினாலே நாம் எல்லாம் நமது பரமபதியாகிய இறைவனை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களில் விதிப்படி சிரத்தையுடன் வழிபடவேண்டும்.

ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவமாக இறைவன் விளங்குகின்றான். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியாரால் உண்மை ஞானம் பெற்று முத்தியடைவார். இதற்காகவே கோவிலை ஆகம முறைப்படி அமைத்து இறைவனை வழிபடுகின்றார்கள். சரீரத்திலே ஆறு ஆதாரங்கள் அமைந்திருத்தல் போல புறத்தே காணப்படும் ஆலயத்திலும் கர்ப்பக்கிரகம் முதலிய மண்டபங்கள் இத்தத்துவத்தை விளக்கும் தூபி, பிரகாரம், கோபுரம் முதலியவற்றால் உணரப்படும். கோபுரத்திலுள்ள ஒவ்வொரு பகுதிகளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வொரு உறுப்பையும் குறிப்பன. கோபுரத்தில் ஈஸ்வரனது பராக்கிரம லீலா விநோதங்களும் அவரது அதிகாரம்பெற்ற பிரமா, விஷ்ணுவாதிய தேவர்கள், அட்டதிக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோரது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தூபியானது பிரதுவிதி தத்துவம் முதல் 36 தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இதயக் கமலத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. கோபுரம் தூலலிங்கமெனவும் விமானத்தில் எழுந்தருளியிருக்கும் இறை சுக்கிலாலிங்கமெனவும் சொல்லப்படும். இவ்வுண்மை நோக்கி திருமந்திரத்தில் சொல்லப்படுகின்றது.

தூய விமானமுந் தூலம தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமா
மாய வரநிலை யாய்ந்து கொள்வார்க்கே.

என்று திருமூலர் அருளிச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக பல ஆகம முறைகளுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் பல சக்தி பீடங்கள் விளங்குகின்றன. அவற்றில் தொன்மையும் பழைமையும் மிக்கதாகக் கூறப்படும் தெல்லிப்பழை துர்க்காபுரம் உழுகுடைப்பதியில் வீற்றிருந்து திருவருளை வாரி வழங்குகின்ற துர்க்கா தேவஸ்தானத்தில் குபேர வாசலாக விளங்குகின்ற வடக்கு வாசலில் கோபுரம் அமைத்து குடமுழுக்கு விழாவைச் செய்கின்றார்கள். இந்த சிவ கைங்கரியத்தில் ஈடுபட்ட சிவாச்சாரியப் பெருமக்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், நிர்வாக சபையினர், தொண்டர் சபையினர், சிவாச்சாரியார்கள், இளைஞர்கள், அன்பானவர்கள், நிதி வழங்கியவர்கள் அனைவருக்கும் துர்க்காதேவியின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து இத்திருப்பணியை முன்னின்று செயலாற்றிய நிர்வாகசபைத் தலைவர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கு என் ஆசிகளும், வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவித்து மேலும் சிவபுண்ணிய தர்மங்களில் ஈடுபடுவதற்கு உடலில் வலிமை, உள்ளத்தில் துணிவு, சிந்தையில் நல்லெண்ணம் கைகூடிவர அம்பாளைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**'லோகா சமஸ்தா சுகினோ பவந்து"**

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்,
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம், இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சிவாசாரியாரின் ஆசிச்செய்தி



துர்க்காபுரம் துர்க்காதேவி தேவஸ்தான குபேரவாயில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் சர்வமங்களம்மிகு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 15ஆம் நாள் (28-01-2018) அன்று நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகத்தை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பேரானந்த நிகழ்வில் என்னையும் கலந்துகொள்ள வைத்த பெருமாட்டியின் பேரருளை வியந்து, தெற்குவாயில் இராஜகோபுரம் சென்ற வருடம் கும்பாபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து இவ்வருட குபேரவாயில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. தொடர்ந்துவரும் வருடம் சந்திரவாயில் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற துர்க்காதேவியை வேண்டி, இந்த மாபெரும் திருவருட் கைங்கர்யத்தை பெருமாட்டி திருவருளோடு நடாத்திவரும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களைத் தலைமையாகக் கொண்ட நிர்வாக சபையினருக்கு முதல் ஆசிகளைத் தெரிவித்து அழகுமிகு கோபுரத்தை அமைத்த விஸ்வ பிரம்மஸ்ரீ புருஷோத்தமன் ஸ்தபதி அவர்கள் தம் சிறப்பான பணி, அவர்களும் அவர் குழுவினரும் மென்மேலும் அவர்கள் பணி சிறக்க பெருமாட்டி திருவருளும் எனது ஆசிகளும் கிடைக்கப் பிரார்த்தித்து ஸ்தபதிகள் அமைத்த எங்கள் ஆலய குபேர வாயில் இராஜகோபுர சிறப்புக்களைப் பார்ப்போம்.

எங்கள் ஆலய பஞ்சதள அதாவது ஐந்துநிலை கோபுரம் இது சகல லக்ஷணங்களோடும் அமைந்துள்ளது. அவையாவன :-

பஞ்சதள கோபுரம் 21 பங்குகளாக 11 வரிமானங்களாக அமைக்கப்பட்டுள்ளது. அவற்றைத் தனித்தனியாகப் பார்ப்போம்.

1ம் கர்ணக்கூடு 3 $\frac{1}{2}$ பங்கும்

1ம் பிரஸ்த்தளம் 1 $\frac{1}{2}$ பங்கும்

2ம் கர்ணக்கூடு 3 பங்கும்

2ம் பிரஸ்த்தளம் 1 $\frac{1}{4}$பங்கும்

3ம் கர்ணக்கூடு 2 $\frac{1}{2}$பங்கும்

3ம் பிரஸ்த்தளம் 1 பங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் கர்ணக்கூடு 2 பங்கும்

4ம் பிரஸ்த்தளம் 1 பங்கும்

கனம் 1 $\frac{1}{4}$ பங்கும்

சிகரம் 2 $\frac{3}{4}$ பங்கும்

ஸ்துாபி 1 $\frac{1}{4}$ பங்குமாக 21 பங்கு 11 வரிகளாக சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்லாமல் கர்ணக்கூடு பங்கு அளவு லக்ஷணப்படி சாலை, பஞ்சரம், செகத்திரசாலை, சொருவுசாலை முதலியவை பங்கீடு செய்து முகபத்திரம் 3இல் 1 பங்கு வைத்து ஏறுசாலை வாசல்களால் அகலங்களுக்கு உயரம் 1 $\frac{1}{2}$ பங்கு அதற்கு மேல் கர்ணக்கூடு அடுக்குகளுக்கு சொல்லிய பங்கு லக்சணம் வைத்து பிரஸ்த்தானத்தில் உள்ள யாளமட்டம், கலசம், உள்மட்டம் அமையும்படி வைத்து, மீதியுள்ள கர்ணக்கூடு செகத்திரசாலை, சொருவுசாலை இவைகளுக்கு கர்ணக்கூடு அளவுகளுக்கு மேல் 9இல் 1 பங்கு கலச உயரம் வைத்து கலசங்கள் எல்லாம் பிரஸ்த்தானத்தில் உள்ள கபோதக கீழ் மட்டத்திற்குள் பொருந்தும்படி அமைத்து பஞ்சரத்திற்கு அகல அளவில் 3இல் 1 பங்கு முகபத்திரம் வைத்து கர்ணக்கூட்டில் அடுக்கின் அளவுபோல் தூக்கு கோடு வரையில் செய்து அதற்கு மேல் நாசிமுகக்கூடு அமைத்து பக்க பாந்து சுவர்களை தூக்கூடு அளவை கபோதகமாகச் செய்து அதன் மேல் யாளம் செய்து மீதியுள்ள பங்குகளுக்கு உள்நாட்டு கழுத்து அமைத்து மிக அழகாக சர்வலக்சணங்களோடும் அமைந்துள்ளது.

**பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார்,**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கிய அருளாசிச்செய்தி



திருச்சிற்றம்பலம்

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளரம் நீடரங்கு எங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம்பு ஆர்ப்பன.

திருச்சிற்றம்பலம்

– பெரியபுராணம்

தெல்லிப்பழை துர்க்காபுரம் கோபுரங்களாலும் மணிமண்டபங்களாலும் அன்ன சத்திரங்களாலும் திருமடங்களாலும் அருட்பொலிவு பெற்று விளங்குவது பெரும் பாக்கியமாகும். சைவப் பெருமக்கள் இன்று முன்னுதாரணக் கோயிலாகக் கொள்ளும் வகையில் துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்குகின்றது. சிவாகம நெறிமுறை தவறாது காலத்திற்குக் காலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் காலத்தில் வளர்ச்சி பெற்ற ஆலயம் அவருக்குப் பின்பு படிப்படியாக பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. இரு பெருங்கோபுரங்கள் அம்பாளின் திருவருளால் ஒருசில ஆண்டுகளில் நிறைவு பெற்றுள்ளமை திருவருளே.

ஆலயம் பல அறப்பணிகளை ஆற்றிவருவதுடன், ஆலயத் திருப்பணிகளையும் செவ்வனே செய்துவருவது மெச்சத்தக்க விடயமாகும். வாரத்திலே இரு நாட்கள் சிறந்த அன்னதானப் பணி துர்க்காபுரத்தில் நடைபெறுவதுடன், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் வெள்ளிதோறும் அன்னதானப்பணி சீராக நடைபெறுவது பாராட்டுக்குரிய விடயமாகும். இத்தகைய மக்கள் படையோடு அம்பாளுக்கு பெரும் கோபுரங்கள் கட்டப்பட்டமை தெய்வசக்தி என்றுதான் சொல்லவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சிற்பக்கலைஞர் திரு. க. புருஷோத்தமன் அவர்கள் சிறந்த ஆற்றல்மிக்க கலைஞராவார். அவரது கைவண்ணத்தில் கோபுரங்கள் சீராகவும் சிறப்பாகவும் கட்டப்பட்டுள்ளமை பெருமை தருகின்றது.

இத்திருப்பணிக்காக அயராது உழைத்த தேவஸ்தான தலைவர் மற்றும் நிர்வாக சபையினர் வாழ்த்துக்குரியவர்கள். அம்பாளின் அனுக்கிரகத்தால் அனைத்து அடியவர்களும் எல்லா செல்வங்களோடும் சீர்பெற்று வாழ நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்,**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கத் திருநாட்டில் வாழும் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி



எங்கள் மண்ணில் அறங்காக்கும் ஆலயமாக கடந்த ஐம்பது ஆண்டுகளாக பெருமையாகப் பேசப்படும் திருக்கோயில் துர்க்காதேவி தேவஸ்தானம் என்பதில் ஐயமில்லை. உலகின் பல பாகங்களில் வாழும் சைவ அடியவர்கள் உயர்நிலையில் மதிக்கும் தேவஸ்தானமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

வருடந்தோறும் ஆலயத்தின் புதிய திருப்பணியொன்று நடைபெறுவதோடு பொதுமக்களுக்கான பயன்மிக்க காரியங்களைப் புதிதாக ஆற்றுவதும் இத்தேஸ்தானத்தின் வழக்கமாகும். சமூக அவதானிகள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சீரிய பணிகளை இன்றும் முன்னுதாரணமாகக் குறிப்பிடுவதை யாம் அவதானித்து வருகின்றோம்.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் ஆற்றிய ஆன்மீக அறப்பணிகளுக்காக யாம் சார்ந்த ஹவாய் சைவ ஆதீனம் HINDU RENAISSANCE AWARD என்னும் உயர்விருது வழங்கி அம்மையாரையும் துர்க்காதேவி தேவஸ்தானத்தையும் கௌரவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அம்மையார் இறையடி சேர்ந்தபின் அவர் வழியில் ஆலய தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற எமது உடன்பிறவா சகோதரன் ஆறு. திருமுருகன் அவர்கள் முயற்சியால் ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

வருடாவருடம் தேவஸ்தானத்தின் விழாக்களில் கலந்துகொள்ளும் பாக்கியம் இறையருளால் எமக்குக் கிடைத்து வருகின்றது. அவ்வகையில் கடந்த இரு ஆண்டுகளில் தென் திசையிலும் வடதிசையிலும் மிக அழகான திருக்கோபுரங்கள் கட்டப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது திருவருளே. இக் கும்பாபிஷேகங்கள் தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலர் ஒரு வரலாற்று ஆவணமாக எதிர்கால சந்ததியினரால் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும்.

இச் சிறப்புமலர் குறித்து இதயபூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து அமைகின்றேன்.

**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்,**
ஹவாய் சைவ ஆதீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்மயா மிஷன் யாழ்ப்பாணம் வதிவிட ஆச்சாரியாரின் ஆசிச்செய்தி



எங்கும் நிறைந்த நிர்க்குண நிராகாரப் பிரம்மமான பரம்பொருளை மக்கள் தத்தம் விருப்பங்களுக்கேற்ப சகுண சாகாரப் பிரம்மமாக, சிவன், சக்தி, கணபதி, முருகன், கிருஷ்ணர் எனப் பல உருவங்களில் பிரார்த்தனை செய்து தத்தமது தேவைகளை நிறைவேற்றுகின்றனர். அந்தவகையில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பதியில் சக்தி வழிபாடு துர்க்கை அம்மன் வடிவத்தில் நடைபெறுகின்றது.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பெருமுயற்சியால் 79ஆம் ஆண்டில் அன்னை துர்க்காதேவியின் ஆலயம் புனரமைக்கப்பட்டு, மஹாகும்பாபிஷேகம் செய்யப்பட்ட நாள் முதல் இவ்வாலயத்தில் தினமும் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் வழிபாடு செய்து அன்னையின் அருட்கடாட்சம் பெற்று தத்தம் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். அம்மா அவர்கள் அன்னை துர்க்கையின் அருளால் பல அறப்பணிகளையும் ஆரம்பித்து நடாத்தி வந்தார். அவரின் மறைவுக்குப் பின்னர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள் அப்பணிகளைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றார்.

இத்தகைய அருட்பணிகளையும் அறப்பணிகளையும் முன்னெடுத்து நடாத்திவரும் அன்னை துர்க்கையின் ஆலயத்தில் இன்று (28-01-2018) குபேரவாசல் கோபுர மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் சிறப்பாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம்.

கோபுரம் ஆலயத்தின் ஸ்தூல லிங்கமாகப் போற்றப்படுகின்றது. ஆலயங்களில் வானுயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்படும்போது மக்கள் தமது இல்லங்களில் இருந்தவாறே கோபுரத்தைப் பார்த்து இறைவனைச் சிந்தித்து வழிபாடு செய்ய வழிவகுக்கின்றது. கோபுரத்தில் அமைக்கப்படும் சிற்பங்கள் நாட்டில் வாழும் பல்வகைப்பட்ட மக்கள், பிராணிகள், தாவரங்கள் மற்றும் ஞானிகள், சித்தர்கள் ஆகியவற்றின் உருவ அமைப்பைத் தாங்கி அமைக்கப்படுவது இறைவனின் படைப்பில் உள்ள மகத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கோபுரங்களில் மேல் கலசங்களில் தானியங்கள் பேணப்படுகின்றன. இவை மழை வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகால் பயிர்வகைகள் அழிக்கப்படும்போது அத்தானியங்களை மீண்டும் உருவாக்க உதவுவதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட கோபுர மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், இந்நிகழ்வை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் சிறப்பாக வெளிவரவும் ஆசிவேண்டி தெல்லிநகர் அன்னை துர்க்காதேவியையும் பூஜ்ய குருதேவரையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா,**
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் பிரார்த்தனையுரை



நாயே னையும்இங்கு ஒருபொரு யாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண் மால்திருத் தங்கச்சியே.

–அபிராமி அந்தாதி

"எங்கும் எதிலும் சக்தியெடா" என்றுரைத்தார் பாரதியார். தெல்லி நகர்த் துர்க்கை அம்பாளின் திருவருட் கடாட்சத்தை அறியாதார் இல்லை. அம்பாள் பேசும் தெய்வம். அம்பாளை வேண்டி எக்காரியத்தைத் தொடங்கினாலும் அவை பரிபூரணமாக நிறைவேறும். சிறியேன் பெற்ற அனுபவம் வார்த்தைகளால் சொல்லிட இயலாது.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரவர்கள் 1995ஆம் ஆண்டு ஆலய நிர்வாக சபையில் இணையுமாறு அன்பான வேண்டுதல் விடுத்தார்கள். அம்பாளின் திருவருளாலும் அம்மையாரின் குருவருளாலும் அடியேன் பணிசெய்யும் வாய்ப்புக் கிட்டியது. சுமார் 14 ஆண்டுகள் அம்மையாரின் தலைமைத்துவத்தின் கீழ்ப் பெற்ற பயிற்சி மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆயை தர்மகர்த்தா சபையினர், நிர்வாக சபையினர் சிறியேனை மதித்து வழங்கிய பொறுப்பையிட்டு யான் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

அம்பாளின் பேரருளாலும் சிவாச்சாரியார்களின் ஆசியினாலும் அடியார்களின் பேராதரவாலும் தேவஸ்தான திருப்பணிகள் எதுவித குறையுமின்றி தொடர்ந்து நிறைவேறி வருகின்றது. அம்பாள் ஆலயத்தின் திசைகள் தோறும் திருக்கோபுரங்கள் அமைய வேண்டுமென்ற எண்ணம் தென்னாட்டில் உள்ள பெருங்கோயில்களைக் கண்டவர்களுக்கு ஏற்படுவது இயல்பு. அவ்வகையில் தென்திசையில் கோபுரத்தை உருவாக்க எமது தேவஸ்தானம் முயற்சி செய்தது. அடியார்களின் பேராதரவு திருவருளால் நிறைவாகக் கிடைத்தது. இந்தியா, சிதம்பரம் சிற்ப கலாவித்தகர் திரு. கலியபெருமாள் புருஷோத்தமன் அவர்கள் இப்பாரிய திருப்பணியைப் பொறுப்பேற்று சீராக நிறைவேற்றி வைத்தார். 2011ம் ஆண்டு எமது தேவஸ்தான புனருத்தாரணப் பணியில் பங்கேற்று தன் கைவண்ணத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய கட்டுமாணப்பணிகளை இக் கலைஞர் அற்புதமாக நிறைவேற்றினார். ஆதலால் கோபுரத் திருப்பணியை திரு.புருஷோத்தமன் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென எமது தேவஸ்தானம் விரும்பியது. தென்திசை கோபுரத்தை சீராக நிறைவேற்றிப் பாராட்டுப்பெற்ற இக்கலைஞரிடம் வடதிசைக் கோபுரத் திருப்பணியையும் ஒப்படைக்க வேண்டுமென தேவஸ்தானம் ஏகமனதாக விரும்பியது. அந்நிலையில் வடதிசைக் கோபுரத்தையும் சிறப்பாக அமைத்து எங்கள் தேவஸ்தானத்தைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

எங்கள் தேவஸ்தான திருப்பணி வேலைகளுக்கு தர்மகர்த்தா சபை , நிர்வாக சபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், தேவஸ்தானப் பணியாளர்கள், பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் ஆகிய யாபேரும் தரும் பரிபூரண ஒத்துழைப்பினால் எதுவித இடையூறுமின்றி தொடர்ந்து திருப்பணிகள் பூர்த்தியாகி வருகின்றன.

எங்கள் தேவஸ்தானத்தில் எல்லாத் திருப்பணி வேலைகளிலும் எமக்கு பெரும் பக்கபலமாக விளங்குபவர் நிர்வாக சபையின் உபதலைவர் தேசகீர்த்தி லயன் ச.ஆறுமுகநாதன் என்றால் மிகையாகாது. அவரிடம் உள்ள கட்டடத் திருப்பணிகள் தொடர்பான அனுபவம் எமது தேவஸ்தானத்திற்குப் பெரும்பேறு எனலாம். தேவஸ்தான கோபுர திருப்பணிகளின் போது பலரும் முன்வந்து நிதிவழங்கி திருப்பணியை ஊக்குவித்தனர். அதனால் குறிப்பிட்ட காலத்திற்குள் இருபெருங் கோபுரங்கள் உருவாக்கப்பட்டமை அம்பாளின் பேரருளே.

அம்பாளின் திருக்கோயிலில் என்ன திருப்பணியைத் தொடங்கினாலும் அம்பாளது பெரும் சக்தி அவற்றைப் பரிபூரணமாக நிறைவேற்றுகின்றது. அம்பாள் சோதனைகளைத் தருவாள், முடிவில் அவற்றை சாதனைகளாக நிறைவு செய்வாள். மனித சக்திக்கு அப்பால் மகத்தான சக்தியாக துர்க்காதேவி செயற்படுவதை ஆலயத்தோடு தொடர்புபட்ட அனைவரும் அறிவர். அம்பாளின் திருவருளால் மேலைத் திருவீதியிலும் கோபுரம் அமைத்து எல்லாத் திசைகளிலும் துர்க்காதேவியின் கோபுரங்கள் அணிசெய்ய வேண்டும் என்பது எம் நிர்வாக சபையின் பேராவல் ஆகும். எல்லாம் துர்க்கை அன்னையின் திருவருளால் குறையுமின்றி நிறைவேறும் என்பது எம் நம்பிக்கை.

அம்பாளின் தெற்கு, வடக்கு கோபுர கும்பாபிஷேக ஆவணமாக இம்மலரை வெளியிடுவது குறித்து நாம் மிகவும் திருப்தி அடைகின்றோம். இம்மலர் வெளியிடுவதற்குத் துணைபுரிந்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், அறிவு சார்ந்த கட்டுரைகள் மற்றும் விடயங்களை வழங்கிய அனைவருக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் எனது நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

எல்லாம்வல்ல துர்க்காதேவியின் திருவருட் கடாட்சத்தால் எம்மண்ணில் அனைவரும் நிறைவாக வாழப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**ஆறு. திருமுருகன்**

தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மகர்த்தா சபைத் தலைவரின்
## வாழ்த்துச் செய்திகள்



இலங்கையில் பிரசித்திபெற்ற சைவ ஆலயங்களுள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயமும் முக்கியத்துவம் வாய்ந்தது. சுமார் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்த இவ்வாலயமானது வவுணாவத்தை உழுகுடைப்பதியைச் சேர்ந்த சைவப் பெரியார் கதிர்காமர் என்பவரால் இந்திய திருத்தலங்களின் யாத்திரையின் போது அங்கிருந்து கொண்டு வரப்பட்ட துர்க்கை யந்திரம் ஸ்தாபனம் செய்து வழிபாடு செய்யப்பட்டு அம்மனின் அருட்பொழிவால் பிரசித்தமானது என அறியப்படுகின்றது. 1968ஆம் ஆண்டிலிருந்து மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக தொடர்கின்றது.

ஆலயத்தில் கோபுரங்கள் கட்டப்படும் வழக்கமானது சோழர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டபோதும் அது விஜயநகர பேரரசு காலத்தில் வளர்ச்சி கண்டதாக சரித்திரம் கூறுகின்றது. பண்டைய மக்களின் கலை, கலாசாரங்களைப் பிரதிபலிப்பனவாகவும் அதே வேளை கட்டடக் கலையின் சிறப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும் இன்னுமொருபடி மேற்சென்று இடிதாங்கிகளாகவும், திசைகாட்டிகளாகவும் கோபுரங்கள் அமைந்திருந்தன. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆலயம் சென்று தரிசனம் செய்ய முடியாத வயோதிபர்களும் நோய்வாய்ப்பட்டவர்களும் தூரத்திலிருந்தே கோபுர தரிசனத்தினூடாக கர்ப்பக்கிரகத்திலுள்ள இறைவனை வழிபட்ட பலனைப் பெறலாமென நம்பப்படுகின்றது.

அருள் நாடி நிற்கும் அடியவர்களுக்கு அமைதியான சூழலையும் தம் துயர் தீர்க்கத் தேடிவரும் பக்தர்களின் மனதிற்கு இதந்தரும் அழகான அமைப்பையும் கொண்டதாக ஆலயங்கள் அமைவதும், அங்கு சமூகத்தை நல்வழிப்படுத்தும் ஆன்மீக நெறிகளைப் போதிப்பதும் அறப்பணிகளில் நாட்டங்கொண்டு நலிந்தோர் நலனோம்புதலும் வரம். அது 1977இல் ஆலய நிர்வாகப் பொறுப்பினைக் கையேற்ற சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினாலும், அவரது அமரத்துவத்தின் பின்னர் ஆலய நிர்வாக பொறுப்பின் தலைமையை ஏற்று நடாத்தும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களாலும் எங்கள் துர்க்கை அம்மனின் ஆலயத்திற்கு வாய்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வியின் ஆன்மீகப் பற்றும் அயராத தீவிர உழைப்பும் துர்க்கை அன்னையின் அருட்கடாட்சமும் ஆலயத்தின் இராஜகோபுரம் 1981ஆம் ஆண்டு அழகுற கம்பீரமாக எழுந்துநிற்க காரணமாயின. அதேபோன்று தெற்கு வாயிலுக்கான கோபுரம் அமைக்க எண்ணங்கொண்டு அதற்கான பணிகளை ஆரம்பித்து 2016ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக தோற்றத்துடன் கோபுரம் எழுந்துநிற்பதற்கு ஆலய தலைவர் செஞ்சொற் செல்வரும் அவரோடு இணைந்து செயற்பட்ட ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்களும் பெரிதும் காரணமாயினர். இவர்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பும் ஆர்வமுங்கூடிய ஆன்மீக சேவையே தற்போது வடக்கு வாசல் கோபுரமும் வனப்புடன் எழுப்பப்பட்டு மகா கும்பாபிஷேகம் காண்பதற்கு மூலகாரணமெனபதில் எவ்வித மிகையுமில்லை. ஆன்மீகப் பணிகளோடு மட்டுப்படுத்தப்படாமல் அறப்பணியையும் முன்னெடுத்துச் செல்லும் ஸ்ரீ துர்க்காதேவி நிர்வாகசபை சிறந்த முன்மாதிரியாக இயங்குவது பெருமைக்குரியது. மிகக் குறுகிய இந்த இரு வருடங்களில் இவ்விரு கோபுரங்களும் அழகுற கட்டியெழுப்பப்பட்டமைக்கு துர்க்கா தேவியின் அடியார்கள் வாரி வழங்கிய தாராள நிதிக்கொடையின் பங்கு பாரியதென்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

நாடிவரும் அடியவர்க்கு ஓடிவந்து அருள்பாலிக்கும் எங்கள் தெல்லியூர் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தின் செல்வத்தை வாரி வழங்கும் குபேரனின் திசையாம் வடக்கில் கம்பீரமாக காட்சியுறும் கோபுரத்தின் மஹாகும்பாபிஷேகம் தைத் திங்களில் நடைபெறுவது பெரும் பேறாகும். இந் நன்னாளில் அடியவர்கள் அனைவரும் அனைத்து சௌபாக்கியங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ துர்க்கை அம்மனை வழிபடுவோமாக.

**த.சித்தார்த்தன், பா.உ,**

தலைவர்,

தர்மகர்த்தா சபை,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையில் உள்ள அம்மன் ஆலயங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாக இன்று விளங்குவது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் என்றால் மிகையாகாது. அனைவரையும் ஆட்கொள்ளும் துர்க்கை அம்பாளின் மகத்துவத்தைத் தரிசித்தவர்கள் விளங்கிக் கொள்வர். இவ்வாலயத்தை ஒருமுறை தரிசித்தவர் மீண்டும் மீண்டும் தரிசிக்க வேண்டும் என்ற உணர்வோடு தரிசிப்பார். எவ்வேளையிலும் அடியார் கூட்டத்தை அம்பாள் சன்னிதானத்தில் காணலாம். சகல வளங்களுடனும் சிறப்புற்றிருக்கும் இவ்வாலயம் சமூகப் பணிகளினால் இலங்கையில் உள்ள ஆலயங்களில் தனித்துவமான பெருமையைப் பெற்று விளங்குகின்றது. தெய்வத்திருமகள் சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களின் முயற்சியால் சிறிய ஆலயமாக இருந்த இத் திருக்கோயில் உயர் வளர்ச்சியைக் கண்டது.

அம்மையாரின் மறைவுக்குப்பின் அவரது பாசறையில் வளர்த்த எங்கள் மதிப்புக்குரிய செஞ்சொற் செல்வர் சைவஞான பானு கலாநிதி ஆறு.திருமுருகன் இன்று இக் கோயிலை சீரோடும் சிறப்போடும் வழிநடத்துவது பெருமை தருகின்றது. எங்கள் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவராகிய கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் இப்பொறுப்பில் உள்ளமை எமக்கும் பெருமை தருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் இரு பெரிய கோபுரங்கள் அழகாக அமைக்கப்பட்டு சென்ற ஆண்டும் இவ்வாண்டும் கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதென்பது தெய்வத் திருவருளே. துர்க்கை அம்பாளின் திருப்பணிக்கு உதவியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் பேரருள் கிடைக்குமென்பது உண்மை. போருக்குப்பின் சைவத் திருக்கோயில்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுவருவது அனைவருக்கும் ஆறுதல்தரும் செய்தியாகும்.

பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம் கருங்கற் கோவிலாக மாற்றம்பெற்று வருவது திருவருளே. அவ்வகையில் எம் மண்ணில் திருத்தலங்கள் யாவும் எழுச்சி பெறப் பிரார்த்தித்து

இந்துமாமன்றத்தின் சார்பிலும் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக சபையின் சார்பிலும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கந்தையா நீலகண்டன் ,**
தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
தலைவர் திருக்கேஸ்வர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



**தெ**ல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வடக்கு வாசல் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் திருமணி நாட்டின் வடபால் யாழ்ப்பாண மாநகரில் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காபுரத்திலே எழுந்தருளி அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ துர்க்காதேவி திருக்கோயில் வடதிசையில் அமையப்பெற்றிருக்கும் கோபுர மஹா கும்பாபிஷேகம் அடியவர்களுக்கு 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்னும் ஆன்றோர் வாக்குக்கு அமைய புண்ணியத்தைத் தேடித்தரும் நிகழ்வாகும்.

ஊர்தோறும் ஆலயங்கள் ஆன்மீக அறநிலையங்களாக விளங்கினும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு தனிச்சிறப்பும், மதிப்பும் பக்தர்களிடத்தேயும், மக்களிடத்தேயும் அமையப்பெற்றிருப்பது அவர்களின் சமூக சேவையே. துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முயற்சியில் உருவாகிய பல்வேறு சமூகப்பணி இன்னும் பல வகையில் ஆற்றப்படுவதும் திருவாளர் ஆறு. திருமுருகன் அவர்கள் தனிப்பட்ட தம் வாழ்வை விடுத்து அம்பிகையின் ஆன்மீக விருட்சத்திற்கு பாடுபடும் அதேவேளை அவர்களின் பணிமூலம் சமூகத்திற்கு சிறந்த சேவை ஆற்றப்படுகின்றமையை இவ்விடத்தில் பதிவு செய்வது தவறில்லை என எண்ணுகின்றேன். தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகள், விசேட தேவையுடையோர்கள் ஆகியோரை சமூகத்தின் அங்கத்தவராக அவர்களின் தேவையறிந்து சேவையாற்றும் சமூக நிறுவனமாகவே தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

சமூக சேவையோடு அம்பாளின் ஆலயம் அழகுற அமையப்பெறும் கோபுரம் சிறப்புற விளங்கவும், அடியார்களுக்கு அருட்கடாட்சத்தை வாரிவழங்கும் அருட்பிரவாகயந்திரமாக இக்கோபுரம் செயற்பட வாழ்த்தி, இவ் அரிய பணியை முனைப்புடன் செயற்படுத்தி வெற்றி காணும் நிர்வாக சபையினர் மற்றும் இப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டி மலரும் சிறப்புமலர் மலர்ந்து நறுமணம் வீச என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி!

**நா. வேதநாயகன்,**

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையிலே பிரசித்திபெற்ற ஆலயமாக பல்வேறு சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் வலிகாமம் வடக்கு பிரதேசத்திலே அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான குபேரவாசல் கோபுர கும்பாபிஷேக நிகழ்விற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதனை என்றும் மனிதனாக வாழவைப்பது ஆலய வழிபாடாகும். இதனாலேயே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்னும் மூதுரைகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. இவ்வரிய பிறப்பாகிய மானிடப்பிறப்பு எடுத்த ஒவ்வொருவரும் ஆலய தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு ஆலயங்களில் விழாக்களும் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தி விழாக்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையிலே வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேசத்தில் சமயத்தின் பெருமையை எடுத்தியம்பும் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றாகவும் உன்னத வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் விளங்கும் ஸ்ரீ துர்க்காதேவி ஆலயமானது 1760களில் சைவப் பெரியார் கதிர்காமம் அவர்களால் இலுப்பை மரநிழலிலே உருவாக்கப்பட்டு தற்போது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்த ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமாக வளர்ச்சி பெற்று ஆவணி திருவோணத்திலே தீர்த்தத் திருவிழாவைக் கொண்டு பன்னிரண்டு நாட்கள் பெருந்திருவிழா இடம்பெறுவதோடு, பல விசேட திருவிழாக்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் ஆலயத்தினூடாக பல்வேறு சமூகப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவது போற்றத்தக்க விடயமாகும். முக்கியமாக துர்க்காபுரம் மகளிர் இல்லம் மற்றும் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம் ஆகியவை உருவாகக்கப்பட்டு ஆதரவற்ற சிறுமிகள் மற்றும் பெண்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையிலே இவ்வாலயத்தின் சமய, சமூக, ஆன்மீகப் பணிகள் மேன்மேலும் போற்றத்தக்க சிறப்படைய வாழ்த்துவதோடு இன்று அன்பர்கள், அடியவர்கள், ஆலய நிர்வாக சபையினர் மற்றும் ஆலய தர்மகர்த்தா சபையினரின் பெருமுயற்சியினால் சிறந்த முறையிலே நிர்மாணிக்கப்பட்டு நிறைவு பெற்றிருக்கும் குபேரவாசல் கோபுர கும்பாபிஷேகமானது சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ச. சிவஸ்ரீ,**
பிரதேச செயலாளர்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபரின் வாழ்த்துச் செய்தி



சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணத்தின் தெல்லிநகர் துர்க்காபுரத்தில் உறைந்துள்ள அன்னை ஸ்ரீ துர்க்காதேவி அம்பாளுக்கு இன்று குபேரவாசல் கோபுர மஹா கும்பாபிஷேகம் எனும் போது மெய்சிலிர்க்கின்றது.

வேண்டுவார்க்கு வேண்டியபடி வரமருளும் அம்பிகைக்கு கடந்த வருடம் தெற்குவாசல் கோபுர மஹா கும்பாபிஷேகம். அதே வருடத்தில் ஆனி உத்தரம் அன்று அடிக்கல் நாட்டிய வடக்கு வாசலில் அமைந்துள்ள குபேரவாசல் கோபுரம் இன்று வானுயர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற அம்பாளின் இறையருள் பாலித்திருக்கின்றது.

கோபுரம் ஸ்தூல(வெளிப்படை) லிங்கமாகும் "கோபுர தரிசனம் கடவுளது பாததரிசனம்" ஆகும். கோபுரத்திலுள்ள கணக்கற்ற சிற்பங்கள் ஆகமவிதிப்படியும் புறச்சின்னமாகவும் அமைக்கப்படுவது. குறிப்பாக தேவர்கள், மனிதர்கள், ரிஷிகள், பூதகணங்கள் , விலங்குகள், தாவரங்கள் போன்ற பல உருவங்கள் பிரபஞ்ச அமைப்பில் யாவருக்கும் இடமுண்டு என்ற கோட்பாட்டைக் குறித்து நிற்கின்றது. மேலும் கும்பாபிஷேகத்தின் போது கோபுரகலசத்தில் சேமித்து வைக்கப்படும் தானியங்கள் யுகங்கள் தோறும் இவ்வுலகம் அழிந்து போனாலும் மீண்டும் பிரபஞ்சத்தில் உயிர் தோன்ற , வாழ அவை காரணியாக அமைகின்றது என்பது ஐதீகம்.

கோபுரத்தின் கீழ் நாம் நிற்கும்போது நாம் ஒரு சிறிய உருவமே. எமது ஆணவம் அடக்கப்படுகின்றது. மன ஒருமைப்பாடும் பரம்பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்திடமும் மெலான எண்ணங்களில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதை கோபுரம் விளக்குகின்றது.

நாம் தூர இருந்து பார்க்கும்போதும், எத்திசையில் இருந்து பார்க்கும் போதும் எமது கண்ணுக்குத் தெரியும் கோபுரம் இறைவன் எம்மை எப்போதும் கண்காணித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார் என்ற உணர்வைத் தருகின்றது. இது நாம் தீயசெயல்கள் செய்வதைத் குறைக்கின்றது. எனவேதான் "கோபுர தரிசனம் எம் பாவ விமோசனம்" என சான்றோர் கூறியுள்ளனர்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் துர்க்கை அம்பாளின் அருளால் மிகக் குறுகிய காலத்தில் குபேரவாசல் மஹா கோபுர கும்பாபிஷேகம் காண்பதற்கு ஆலய நிர்வாக சபையினரது அனுசரணையும், நிர்வாக சபைத் தலைவர் கலாநிதிஆறு.திருமுருகன் அவர்களினது உளமார்ந்த முயற்சியும் அவருடைய ஆத்மீக வலுவும் என்றால் மிகையல்ல.

கோபுரங்கள் உயர உயர எங்கள் மனங்களும் நேரான மனப்பாங்கும் உயரவேண்டும். கூடவே மனிதநேயமும் வளர்ந்து நன்மக்களாக நாம் வாழ துர்க்கையம்பாளின் அருள்வேண்டி அவள் தம் பாதம் பணிந்து பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!


**திருமதி சிவமலர் அனந்தசயனன்,**

ஓய்வுநிலை அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி,

அதிபர் , துர்க்காபுரம் மகளிர் இல்லம்.


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவிக்கு ஒரு சில வருடங்களில் தென் திசையிலும் குபேர திசையிலும் இரு பெருங் கோபுரங்கள் நிர்மாணிக்கப் பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுதல் மகிழ்ச்சிக்குரியதாகும். பாடு, பரவு, பணிசெய் என்பதை மகுட வாசகமாகக் கொண்ட எமது சங்கம் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் தொண்டு செய்து வந்துள்ளது. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் சங்கத்தின் பங்கு பிரதானமானதாக இருக்கும். அந்தவகையில் இரு பெருங்கோபுரங்கள் நிர்மாணம், கும்பாபிஷேகம் என்பவற்றிலும் எமது பங்களிப்பு நிறைவாக இருந்தது.

துர்க்கை அம்பாளின் தெற்கு வாசல் அற்புதம் நிறைந்தது. அம்பாளின் களவாடப்பட்ட நகைகள் தெற்கு வாசலிலேயே மீட்கப்பட்டன. தற்போது அவ்வாசலை அழகிய கோபும்அணி செய்கின்றது. அதேபோல செல்வத்திற்கு அதிபதியான குபேரனுக்குரிய வட திசையில்கோபுரம் அமையப்பெற்றிருப்பது அம்பாள் ஆலயத்திற்கு தனிச்சிறப்பைச் சேர்க்கின்றது. வடக்கு வாசலை நோக்கியதாக ஸ்ரீ சக்கர மகாமேரு இயந்திரம் பிரதிஷ்டை செய்யப்படுதல் ஆலயத்தின் தெய்வீகத் தன்மையை அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில் மேற்கு வீதியிலும் கோபுரம் அமைக்கப்படின் அம்பாள் ஆலயத்தின் எழிற்காட்சியைக் காண கண்கள் கோடி வேண்டும்.

இத்தகைய சிறப்புமிகு பணிகளை முன்னெடுத்த நிர்வாக சபையினர், தர்மகர்த்தா சபையினர் மற்றும் அம்பாள் திருப்பணிக்கு வாரி வழங்கிய அடியார்கள் அனைவருக்கும் அம்பாளின் பேரருள் கிடைக்கப் பிரார்த்தித்து கோபுர மஹா கும்பாபிஷேக மலர் மலர்ந்து மணம் வீச எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ச.சுவேந்திரன்
தலைவர்

அ.நிரோசன்
செயலாளர்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி ஆலயப் பெண்கள் தொண்டர் சபையின் பிரார்த்தனையுரை

### "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முன்னுள்ள சைவச் சான்றோர்களின் அற்புதமான வாசகமாகும். 17.04.1981ஆம் ஆண்டு துர்க்காதேவியின் ஆலய முகப்பில் வானளாவும் இராஜகோபுரமொன்று அமைத்துக் கும்பாபிஷேகம் பொலிவுபெற்ற மை அடியார்களுக்கு வழிபாட்டு முக்கியத்துவத்தை உணர்த்தியது.

துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையைச் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா ஆரம்பித்து வைத் துள்ளமையால் யாம் அனைவரும் அம்பிகையின் திருவருளால் திருத்தொண்டு செய்யும் பெரும்பேறு பெற்றோம்.

அதன்பின்னர் கடந்த ஆண்டு தைப்பூச நன்நாளில் தெற்கு நோக்கிய வண்ணம் ஒரு கோபுரம் அமைத்து கும்பாபிஷேக விழாவைக் கண்டோம். இவ்வாண்டு 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை. வடக்கு நோக்கியவண்ணம் கோபுரம் அமைத்து மஹா கும்பாபிஷேக விழாவைக் காண்கின்றோம்.

துர்க்கையம்மன் திருவருளால் அடியார்கள் அனைவருக்கும் நல்லருள் புரியப் பிரார்த்தனை செய்வோமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருவருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி (எழுந்தருளி அம்பாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வரலாறு

**ஸ்ரீ** துர்க்காதேவி தேவஸ்தானமானது ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்த ஆலயமாகும். இவ் ஆலயமானது ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடக்கே வலி – வடக்கு பிரதேச செயலக பிரிவில் துர்க்காபுரம் கிராம சேவையாளரின் பிரிவில் (J/229) உழுகுடைப்பதியில் அமைந்துள்ளது.

இவ் உழுகுடைப்பதியில் வவுணாவத்தையிலே சைவ மரபிலே பிறந்த பெரியார் கதிர்காமர்1750ஆண்டளவில் இந்தியாவில் உள்ள காசிக்கு தலயாத்திரை மேற்கொள்ள காங்கேசந்துறையில் தோணியேறித் தென் இந்தியாவில் வேதாரணியத்தில் கரையேறினர். அங்கிருந்து அவர் பாதயாத்திரை மூலமாக தல வழிபாடு செய்து காசிவரை சென்று அங்கு ஏறக்குறைய பத்து ஆண்டுகள் தமிழ், சமஸ்கிருதம் நன்கு கற்று தேர்ந்து ஒரு துர்க்காதேவி உபாசகராக மாறிவிட்டார். ஏறக்குறைய 1760 ஆண்டளவில் யாழ்ப்பாணம் திரும்பும் போது துர்க்காதேவி இயந்திரமொன்றையும் திருமுகக் கெண்டி உருவமொன்றுங் கையோடு மீளவும் கடல்மார்க்கமாக காங்கேசந்துறை அடைந்து அங்கிருந்து நடந்து மூன்று மைல் தூரம் நோக்கி வந்தபோது நடைதளர, உடல்தளர இலுப்பை தோப்பிலே இளைப்பாறினார். திருவருள் கருணையால் அவர் முன் ஜோதியாக தோன்றி அவர் கொண்டு வந்த துர்க்கா இயந்திரத்தை அவ்விடத்தில் ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டது. அக்கட்டளையினை ஏற்று அவ் இலுப்பை தோப்பிலே ஸ்தாபித்தார். அவ்விடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் அழகிய கோபுரமும் அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும் அழகிய தெப்பங்குளமும் உடையதாகக் கட்சியளிக்கின்றது.

கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாக விளங்கிய இவ் ஆலயம் காலப்போக்கில் பரார்த்த பூசை நிலையமாக விருத்தியடைந்தது.

1953இல் திரு.க.நாகநாதர் இவ் ஆலய தர்மகர்த்தா பொறுப்பினை ஏற்ற பின்னர் பலமாற்றங்கள் இவ் ஆலயத்தில் ஏற்பட்டன.

அதில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய அம்சம் யாதெனில் தனி நபர் நிர்வாகத்தை இல்லாமை செய்து தனக்குப் பின் தம் மரபினரையும் ஆலய ஸ்தாபன பரம்பரையினரையும் ஆலய நித்திய நைமித்திய தொடர்புடையவரையும் இணைத்து 26.04.1949ஆந் திகதிய உறுதிச்சாதனம் மூலமாக பதினொரு பேர் கொண்ட அறங்காவலர் சபை ஒன்றை நியமித்தார். இச்சபையிடம் கோயிலின் அசைவுள்ள ஆதனங்களின் சகல உரிமைகளும் கையளிக்கப்பட்டன. இச்சபையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகால தலைவராக வைத்திய கலாநிதி P.S சுப்பிரமணியம் அவர்களும் செயலாளராக திரு.வ. சுப்பிரமணியம் அவர்களும் பொருளாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கு. வன்னியசிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபை 1950ஆம் ஆண்டளவில் ஆலயத்தைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் செயற்பட்டது.

1953.08.06ஆம் திகதி கருப்பக்கிருக மண்டபத்திற்கான அத்திபாரம் இடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெள்ளைப் பாறைக் கற்கள் மூலம் கருப்பக்கிருகம் அர்த்தமண்டபம் கட்டப்பட்டு மகா மண்டபத்திற்குரிய அத்திபாரம் நிறைவேற்றப்பட்டது. 05.05.1962இல் தர்மகர்த்தா சபையினால் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு வெகு விரைவில் கும்பாபிஷேகத்தை நிறைவேற்ற திருப்பணிச்சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது. இச்சபையின் தலைவராக கல்வி அதிகாரி திரு.சே.தியாகராசா அவர்களும் இணைச் செயலாளராக திரு. தம்பு பொன்னம்பலம் திரு. க.சிவராசா அவர்களும் தனாதிகாரி திரு. தி.ஆறுமுகசாமி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இத் திருப்பணி சபை மஹா கும்பாபிஷேகத்தை கூடியவிரைவில் நடாத்த திட்டமிட்டு விநாயகர் சந்நிதி பலிபீடம் மடப்பள்ளி உட்கோயில் மின்சார இணைப்பு ஆகியன நிறைவேற்றின.

11.07.1965இல் தெல்லிப்பழை வாழ் இளைஞர்கள் ஒன்றுகூடி சிரமதான இயக்கம் ஒன்றினை உருவாக்கி அதன்மூலம் கதம்ப நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தி அதன்மூலம் கிடைத்த நிதியை நிருத்த மண்டபம் கட்டவும் மீதிப்பணத்தைப் பெருந்தெருவிலிருந்து கோயிலுக்கு நிரந்தர மின் இணைப்பினைப் பெற உதவினார்கள்.

இச் சிரமதான இயக்கம் இராஜகோபுர அத்திபாரம் மற்றும் தமது பணிகள் மூலம் பொது மக்களிடையே பெரும் எழுச்சி ஏற்படுத்தவும் அதன்மூலம் ஆலய திருப்பணிகளுக்கு ஆதரவு நிதி மற்றும் பொருட்கள் அன்பளிப்பு பெரிதும் கிடைத்தன. இச் சிரமதான இயக்கமே 1966இல் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாக இயங்கத் தொடங்கியது. இத் திருப்பணிச் சபையின் முயற்சியால் விசுவாச வருடம் ஆவணிமாதம் திருவோண நட்ச்சத்திரத்தில் 08.09.1965இல் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது.

திரு. சே.தியாகராசா அவர்கள் நித்திய, நைமித்திய கிரியைகள் யாவும் குறிப்பிட்ட நேரம் தவறாது வழிவகுத்த பெருமை இவரைச் சாரும். 1970ஆம் ஆண்டு இவர் சுகயீனமுற்ற காரணத்தால் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார் அத்தலைமைப் பதவிக்கு மகாஜனா சிற்பி என அழைக்கப்பட்ட புகழ்பூத்த அதிபரில் ஒருவராகிய திரு.து. ஜயரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த நிர்வாகியான இவரது காலத்தில் பல பாரிய திருப்பணிகள் தேவஸ்தானத்தில் நிறைவேற்றப்பட்டன. பத்தர்களின் வரவு அதிகரித்து ஆலய வருமானம் பெருகத் தொடங்கியது. அத்துடன் தேவஸ்தான செயற்பாடுகள் விரிவடைந்தன. 29.10.1976 அன்று திடீர் சுகயீனமுற்று இறைவனடி சேர்ந்தார். இவரின் சிந்தனையில் உதித்த தேர், இராஜகோபுர திருப்பணிகள் நிறைவு பெற வேண்டுமென ஆத்மார்ந்த விருப்பம் கொண்டவராக இருந்தார்.

இவர் மறைவுக்கு சில நாட்களுக்கு முன் 10.10.1976 இல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் சித்தரத்தேர் அமைப்பு சம்பந்தமாக நிர்வாகசபை உறுப்பினருக்குத் தெளிவாக விளக்கி அத்திருப்பணி நிறைவேற நடவடிக்கைகளை எடுத்தபோதும் அத்திருப்பணி நிறைவேறிய காலத்தில் அவர் இல்லாது வருத்தம் அளிக்கின்றது. இவரின் மறைவிற்குப் பின்னர் தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவராக சிரேஸ்ட உபதலைவராக இருந்த சட்டத்தரணி திரு.நம சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். இவர் குறுகிய காலம் அப்பதவியிலிருந்து சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை தலைவர் பதவியை ஏற்குமாறு கேட்டு கொண்டார். 18.05.1966இல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தேவஸ்தான நிர்வாக சபைப் பொருளாளராகப் பதவியை ஏற்று 20.01.977இல் தலைவர் பதவியினைப் பெறுப்பேற்று 15.06.2008 வரை சிறப்பாகக் கடமையாற்றினார்.

இவர் தலைமைப் பொறுப்பினை ஏற்றபின்னர் பல பாரிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இவரின் காலம் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக இவரின் காலத்தில் 17.04.1981இலும் 07.09.1997இலும் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறின.

அம்மையார் அவர்கள் தேவஸ்தான தலைமைப் பெறுப்பினை ஏற்றவுடன் தனது அரச ஆசிரிய பணியை ஐம்பது வயதிலே துறந்து, தனது முழு நேரத்தை தேவஸ்தான பணிகளிலும் சமய சமூக பணிகளில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தார். அம்மையார் மறைவிற்கு பின்னர் அவரினால் இனம் காணப்பட்டவரும் தேவஸ்தான இணைச் செயலாளராகப் பதினான்கு வருடம் பதவியை வகித்த செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தேவஸ்தான தலைவர் பதவியை நிர்வாக சபையின் ஏகமனதான ஆதரவுடன் பொறுப்பேற்றார். இவர் அம்மையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தனது ஐம்பது வயதில் தான் பதவி வகித்த அதிபர் பதவியைத் துறந்து தனது வாழ்வினை சைவதமிழ் உலகிற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வந்தமை அவருக்கு அம்பாளிடம் இருந்த அளவுகடந்த பக்தியும் திருவருளுமே காரணமாகும்.

**தேவஸ்தானத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய திருப்பணிகள்.**

1954 – கருப்பக்கிருகம் (மூலஸ்தானம்)

1962 – அர்த்த மண்டபம்

1964 – மகா மண்டபம்

1965 – விநாயகர் சந்நிதி, நாகதம்பிரான் சந்நிதி, வைரவர்சந்நிதி, சிங்கம் பலிபீடம், மடைப்பள்ளி, வெளிக்கிணறு, உட்கோயில் மின்சார அமைப்பு

1966 – ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், உள்வீதி சுற்றுமதில்

1967 – மணிக்கோபுரம், முன்வாசல் வெளிமண்டபம், அலுவலக மண்டபம்

1968 – யாகமண்டபம், விநாயகர் உற்சவமூர்த்தி, ஆறுமுகசாமி உற்சவமூர்த்தி, சண்டேஸ்வரர் உற்சவமூர்த்தி, அஸ்திரதேவர், கொடிக்கம்பம்

1971 – வாகனசாலை

1972 – திருமுறைமடம், திருநந்தவனம், நீர்தாங்கியும் குழாய்நீர் விநியோகம்

1973 – வெளிவீதி விஸ்தரிப்பு

1974 – வசந்தமண்டப புனர்நிர்மானம், மேற்கூரைதிருப்பணி

1976 – திருமுறை மடத்தின் கிழக்கு அறை, மேற்கு அறை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சந்நிதி, ஸ்ரீ பாலசுப்பிரமணிய விக்கிரகம்.

1977 – ஸ்ரீ கஜலட்சுமி சந்நிதி, கஜலட்மி விக்கிரகம், வெளிவீதி விஸ்தரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 – சித்திரத்தேர், பொது அலுவலகம்

1979 – புதிய உற்சவ மூர்த்தி அம்பாள் பிரதிஷ்டை

1980 – ஞானசுரபி மண்டபம்

1981 – இராஜகோபுரம்

1982 – துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகம், அந்தணர் இருப்பிடம்

1983 – சண்டிஹோமம்

1984 – அன்னபூரணி (திருமணமண்டபம்) மண்டபம்

1985 – சப்பரம், பக்தர்விடுதி

1987 – சரஸ்வதி மண்டபம்

1988 – புதிய அன்னதான மண்டபம், அலுவலர்கள் இருப்பிடம்

1990 – சிவத்தமிழ்ச் செல்வி பிறந்ததின அறநிதியம்

1998 – நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

2001 – அன்னசத்திர மண்டபம், அறநெறிப் பாடசாலை

2002 – சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம்

2004 – யாத்திரிகர்விடுதி

2009 – ஆன்மீகத் தாயின் சிலை அமைப்பு, சிவத்தமிழ் செல்வி நினைவாலயம், திருமஞ்சம்

2011 – நிதி அலுவலகத்துக்கு முன் புறம் புதிய அலங்கார மண்டபம் மஹா கும்பாபிஷேகம், லண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1200 கிலோ எடையுள்ள காண்டாமணி புதிய மணிக் கோபுரத்தில் பிரதிஷ்டை

2013 – கைலாசவாகனம்

2014 – தணிகாசலம் பூங்கா, மகளிர் இல்ல புதிய விடுதி, நால்வர் ஐம்பொன் விக்கிரகங்கள் பிரதிஷ்டை, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மண்டபம் மூன்று மாடிக் கட்டட அமைப்பு

2015 – துர்க்காதேவி வீட்டுத்திட்டம், ஆறுவீடுகள் அமைப்பு

2017 – தென்திசை கோபுர கும்பாபிஷேகம்(09-02-2017) வடதிசை(குபேரவாசல்) கோபுரம் 30-06-2017 அத்திபாரம், சிவாச்சாரியர் மடம் திறப்பு விழா 30.09.2017

2018 – வடதிசை குபேரவாசல் கும்பாபிஷேகம் 28-01-2018

**தொகுத்தவர் - நா.தவநாதன்,**
நிர்வாகச் செயலாளர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வத் திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள்

**(07.01.1925 - 15.06.2008)**

முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செஞ்சொற் செல்வர்

**கலாநிதி ஆறு. திருமுருகன்** அவர்கள்

தலைவர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ துர்க்கைகள்

**செஞ்சொற்கொண்டல்,**
**திருமுறைச்செம்மல்**
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி

**கொற்றவை வழிபாடும் தமிழகமும் :**

கொற்றவை வழிபாடு தமிழகத்தில் பழங்காலம் தொட்டு இருந்து வருகிறது. வீர வாழ்வு வாழ்ந்த பழந்தமிழ் மக்கள்,வீர வடிவமாக அன்னையைப் போற்றிப்பரவினர்; 'கொற்றவை" என்ற சொல்லே,'கொற்றம்" என்ற சொல் அடியாகப்பிறந்தது. திருமுருகாற்றுப் படையில், முருகப் பெருமானைத் தீந்தமிழாற் பாடும் நக்கீரர், கொற்றவை பெற்ற குழந்தையே முருகன் என்று குறிப்பிடுகின்றார்.

'அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோன் குழவி"
(திருமுருகாற்றுப்படை 255 – 259)

'மலைமகள்", 'கொற்றவை", 'பழையோன்' என்ற மூன்று சொற்களும், அம்மையின் பல்வேறு நிலைகளே. கொற்றவை – துர்க்கை; பழையோன் – காடுகின்றாள்; காளி மகிடாசுரனை வென்றமை கருதி வெற்றி வெல்போர்க் கொற்றவை என்று கூறினாராதல் வேண்டும். 'கொற்றவை சிறுவன்" என்றும், 'வெல்போர்" என்பதற்கு 'அவள் மகிடனைச் செற்றது" என்றும், 'வெல்போர்" என்பதற்கு 'அவள் மகிடனைச் செற்றது" என்றும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

'பார்வதி" இமயமலையை இடமாக உடையவள் (பர்வதம்–பார்வதி). 'துர்க்கை' மலையை இடமாக உடையவளே (துர்க்கம் – மலை). இவற்றைக் கூர்ந்து நோக்கினால், மலைவாழ் மக்களாகிய பழங்கால மாந்தரிடையே சக்தி வழிபாடு முதன் முதல் தோன்றி வளர்ந்திருக்கக்கூடும் என்று ஆய்வாளர் கருதுவர். அம்மை எடுத்த பல்வேறு கோலங்களைக் குறித்ததே 'நவதுர்க்கை' என்ற நிலை வேறுபாடு. வடமொழி நூல்களில் இவை பிற்காலத்து விரிவாகப் பேசப்பட்டுள்ளன. நவதுர்க்கை யாவார் : குமரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கை, சுபத்திரை இவர்களுள் காளி, சண்டி, துர்க்கை பற்றிய விளக்கங்களே பெரும்பாலான தமிழ், வடமொழி நூல்களிற் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**தொல்காப்பியத்தில் :**

கொற்றவைத் தெய்வத்தை வழிபடும் புறத் திணைத்துறை 'கொற்றவை நிலை" என்று கூறப்பட்டுள்ளது . வெட்சித்திணையின் பகுதியாகக் "கொற்றவைநிலை"யைக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர்; 'சிறந்த கொற்றவை நிலை" என்ற அடைமொழி கொடுத்து ஆசிரியர் கூறியுள்ளார் :

"மறக்கடைக் கூட்டிய
துடிநிலை; சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"
(புறத்திணை இயல் – 4)

**புறப்பொருள் வெண்பா மாலையில் :**

கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியத்திலேயே இத்துறை கூறப் பட்டுள்ளமை கொண்டு தமிழகத்தில் இதன் தொன்மையை உணரலாம். புறப்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாமாலை, வெட்சி, வஞ்சி ஆகிய இரண்டு திணைகளின் பாகுபாட்டிலும் கொற்றவை நிலையைக் குறிக்கின்றது.

'ஒளியின் நீங்கா விறற்படையோன் அளியின் நீங்கா அருள் உரைத்தன்று"

(வெட்சி 19)

'நீடோளான் வென்றி கொள்கென நிறைமண்டை
–வலனுயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவை நிலை
–உரைத்தன்று"

(வஞ்சி – 5)

என்பன இந்நூற்பாக்கள்.

**சிலப்பதிகாரத்தில் :**

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில், சாலினி என்பாளுக்குக் கொற்றவைக் கோலம் புனைந்து, அவள் வாயிலாகக் கண்ணகியைப் பாராட்டுகின்றார் இளங்கோவடிகள். அப்போது கொற்றவையின் சிறப்பை வாயாரப் பாடுகின்றார்

'ஆனைத்தோல் போர்த்துப்
புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக்
கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க
மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய்
நடுக்கின்றியே நிற்பாய்"

'வரிவளைக்கை வாளேந்தி
மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக்
கலைமிசைமேல் நின்றாயால்
அரியரன்பூ மேலோன்
அகமலர்மேல் மன்னும்
வரிகதிரஞ் சோதி
விளக்காகியே நிற்பாய்"

'சங்கமும் சக்கரமும்
தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால்
சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த
கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய்
மறையேத்தவே நிற்பாய்"

(வேட்டுவ வரி – 7–9)

துர்க்கையில் கோலம் புனையும் போது, சாலினிக்குப் பின்வருமாறு செய்கின்றார்கள்; குறுங் கூந்தலைப் பாம்பின் குட்டியாகிய கயிற்றாற் கட்டுகின்றனர். வளைந்த பன்றிக் கொம்பை இளம்பிறை போன்று அணிகின்றனர். புலிப்பற்களை நிரைத்தாலியாகக் கட்டு கின்றனர். புலித் தோலை மேகலையாக உடுத்கின்றனர். கொற்றவையின் அழகிய தோற்றத்தை அடிளார் இவ்வாறு காட்டுகின்றனர்.

'தேவர்கள் வணங்க நான்கு மறை கட்கும் அறிய வொண்ணாது மறைந்த பொருளாக நிலைத்து நிற்கும் நீ, புலியினது தோலை அரைக் கண் உடையாக உடுத்து எருமைக் கடாவின் கரிய தலைமீது நின்றாய்' என்பது அடிகள்தரும் கொற்றவை மாண்பின் முதற்பகுதிக் கருத்து.

'திருமாலும், சிவபிரானும், பிரம்மனும் ஆகிய மூன்று பெருங்கடவுளர் நெஞ்சத் தாமரையின் மேல் அறிவு விளக்காக நிற்கும் இயல்புடைய நீ, வளையணிந்த பெண்ணுருவம் உடையாகி அக்கையின் கண் வாள் ஏந்தி நின்று மகிடாசுரனைக் கொன்றொழித்துக் கரிய கொம்பை உடைய கலைமான் மீது வீற்றிருந்தருள்கின்றாய்' என்பது இரண்டாம் பகுதிக் கருத்து.

'சிவபிரானின் உடலில் ஒரு பாதியாகி அருள் திருமேனி கொண்ட நீ, இப்போது சங்கு சக்கரம் ஆகியவற்றைத் தாமரை மலர்க் கைகளில் ஏந்திச் சிங்கத்தினை ஊர்தியாகக் கொண்டு நின்றாய்" என்பது மூன்றாவது பகுதிக் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவடிகள் கொற்றவை ஆடிய கூத்தின் சிறப்பையும் குறித்துள்ளார்: மரக்கால் மீது நின்று வாள் ஏந்தி ஆடுதலைப் புகழ்கின்றார் அடிகள் :

"ஆய்பொன் னரிச்சிலம்பும் சூடகமும்
மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை
மரக்கால்மேல் வானமலை ஆடும் போலும்"
(வேட்டுவ வரி–11)

'சுடரொடு திரிதரும் முனிவரும் அமரரும், இடர்கெட அருளும் நின் இணையடி தொழுதேம்" என்றும், 'அணி முடி அமரர் தம் அரசொடு பணிதரும், மணியுருவினை நின் மலரடி தொழுதேம்" என்றும், வேட்டுவர் துர்க்கையைத் தொழுது பாடினர் என்பர் அடிகள். மேலும்

(வேட்டு வரி–17, 18).

'சங்கரி அந்தரி
நீலி சடாமுடிச்
செங்கண் அரவு
பிறையுடன் சேர்த்துவாய்"

'விண்ணோர் அமுதுண்டும்
சர்வ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு
இருந்தருள் செய்குவாய்"

'மருதின் நடந்து நின்
மாமன்செய் வஞ்ச
உருளும் சகடம்
உதைத்தருள் செய்குவாய்"
(வேட்டுவ வரி –– 20–22)

என்ற பகுதிகள், சிவதுர்க்கை, விட்டுணு துர்க்கை என்ற நிலைகளைக் கருதியன என்று கொள்ளலாம்.

இளங்கோவடிகள் காலத்திலேயே தேவியைப் பற்றிய புராண வரலாறுகள் (தேவி மான்மியம், தேவி பாகவதம்) வளர்ந்து நிறைவுபெற்றுவிட்டன. இதனையே அவர் தரும் விளக்கங்களிலிருந்து நாம் உணர்கின்றோம்.

'அடர்த்தெழு குருதி
அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம்
ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் தடக்கைக்
கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய
நங்கை இறைவனை
ஆடல் கண் டருளிய
அணங்கு சூருடைக்
கானகம் உகந்த
காளி தாருகன்
பேருரம் கிழித்த
பெண்ணும் அல்லள்"
(வழக்குரை காதை 35–40)

என்ற பகுதியில் அமைந்த கருத்துக்களும் இக்கருத்துக்கு அரண் செய்வனவேயாகும். (அறுவர்க்கிளைய நங்கை–பிடாரி; அணங்கு–பத்திரகாளி; கானகம் உகந்த காளி–காடுகிழாள்)

**சக்தி-மூர்த்த பேதங்கள்; துர்க்கை :**

இச்சக்தி வழிபாடு மிகவும் பழைமை உடையது என்பதனைச் சிந்துவெளி அகழ் வாராய்ச்சிக்காரர்களும் சுட்டியுள்ளனர். தனி வழிபாடாகவே பழைய காலத்தில் இருந்து வந்தது. சாக்தமதம் சக்தியை உயரிய தெய்வமாக உரைக்கின்றது. சாக்தர்கள், 'நிர்க்குண பிரமத்தின் சகுண நிலைதான் சக்தி" என்ற கருத்து உடையவர்கள். அர்த்த நாரீசுவர வடிவத்தில் சக்தி சிவனுடன் இணைகின்றாள். இது சைவமும் சாக்தமும் ஒன்றிக் கலக்கும் நிலையையே சுட்டுவதாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநிறம்கடைமையால்சக்தி, 'காளி" என்ற பெயரைப் பெறுகின்றாள்; கடுந்தவம் புரிந்து கரிய நிறம் நீங்கி வெண்ணிறம் பெற்றுக் 'கௌரி" என்ற பெயரை எய்தினள். அரக்கர் பலரையும் அழித்த வீரச் செயல்களாலேயே புராண ங்கள் துர்க்கை பேதங்கள் உண்டாகியமையை விரிவாக உரைக்கின்றன. மகிடன், இரக்தபீசன், கம்பன், நிசும்பன், பண்டாசுரன் என்பவர்களை அழிக்க வெவ்வேறு கோலம் கொண்டாள் சக்தி என்று புராணங்கள் கூறக் காண்கின்றோம்.

உயிர்களை உய்யக் கொள்வதற்காக அச்சம் தரத்தக்க உருவத்துடன், அச்சம் தரக்தக்க படைக்கலங்கள் பலவற்றை ஏந்தி அம்மை கொண்ட கோலத்தை, சிங்கத்தின் மீது இவர்ந்து வந்து மும்மூர்த்திகளைவிடப் பேராற்றல் கொண்ட வடிவத்தைத் தேவிபாகவத புராணம் விளக்குகின்றது.

மும்மூர்த்திகளுடைய சக்தியனைத்தும் ஒருங்குதிரண்டபோது 'சண்டிகை" யாக உரு வெடுத்தனள். மகிடாசுரனுடன் போரிட்டு வெற்றிபெறத் தத்தமக்கு உரிய படைக்கலங்களை இம்மும்மூர்த்திகளும் தந்துதவினர்; இவள் சிவனின் சக்தி; விட்டுணுவின் தங்கை. ஆதலால் 'பத்மநாப சோதரி", 'நாராயணி" என்ற பெயர்களை எய்துகின்றாள்.

துர்க்கையின் திருவுருவம் பிரதிட்டைக்காக உருவாக்கப்பட வேண்டிய ஒன்று என்று காரணாகமம் கூறியுள்ளது.

மார்க்கண்டேய புராணம் சண்டியைப் பற்றிக் கூறுகின்றது; மகிடாசுரனால் தோற்கடிக்கப்பட்ட தேவர்கள் தங்கள் துன்பங்களைச் சிவபிரானிடமும், விட்டுணு விடமும் சென்று முறையிட்டனர். விட்டுணுமுகத்தினின்றும் ஒளிப்பிரம்புகள் தோன்றின. அவ்வொளிப் பிழம்புகள் ஒன்று கூடிப் பெண்ணுருவமாக–துர்க்கையாக வடிவெடுத்தன. அவளே மகிடாசுரனைப் பிறகு கொன்றாள். அவளுக்குரிய பூசை இளவேனிற் காலத்தில் கொண்டாடப் பெறுகின்றது என்பது அச்செய்தி.

மகாபாரதத்தில் இரண்டு இடங்களில் துர்க்கையின் பிரார்த்தனை காணப்படுகின்றது. விராட நகரிலே புகுந்தபோது தருமன் துர்க்கையை வழிபடுகின்றான்; தேவகிக்கும் வசுதேவனுக்கும் கண்ணன் பிறந்தான்; யசோதைக்கும் நந்தகோபனுக்கும் மகளாக 'வைஷ்ணவி" பிறந்தாள்; பின் விந்தியமலையிலே குடிபுகுந்தாள். ஆதலால் வைஷ்ணவியை 'துர்க்கை" 'காளி" 'மாகாளி" 'விந்தியாவாசினி" என்றெல்லாம் உதிட்டிரன் போற்றினான். வீடும பருவத்தில் அர்ச்சுனன் துர்க்கையைத் தொழுகிறான். 'உமா", 'சங்கரி" 'சரசுவதி" 'சாவித்திரி" என்ற பெயர்கள் இவ்விடத்துக் காணப்படுகின்றன. இம்மூர்த்தி வேறுபாடுகளில் 'துர்க்கை', 'இலட்சுமி" ' சரசுவதி " ஆகிய மூன்று இன்றியமையாதவை. மகிடனை வதைத்தபோது 'சண்டி" ஆனாள்; சண்டன், முண்டனை அழித்தபோது 'சாமுண்டி" ஆனாள்; கம்பன் நிசும்பனை வதைக்கத் 'கௌசிகி" ஆக வடிவம் கொண்டாள். பண்டனைக் கொல்ல எடுத்த கோலமே 'வனிதை". நவ துர்க்கைப் பாகுபாடுகளும் இந்த அடிப்படையிலேயே எழுந்தன.

**நவராத்திரி - நவதுர்க்கை வழிபாடு:**

நவராத்திரி நாட்களிலே துர்க்கை மண்ணுலகிற்கு நவதுர்க்கை வடிவங்களுடன் எழுந்தருளுகின்றாள் என்பர். அதனாலேயே ஒன்பது கன்னியர்களை நவதுர்க்கைகளாகப் பாவித்து வழிபாடு இயற்றிச் 'சண்டியாகம்" என்ற வேள்வியை இயற்றுகின்றனர் அன்பர்கள்; துர்க்கையின் பேரருளைப் பெறுவதற்கு நவராத்திரி நோன்பு பெரிதும் சிறந்தெடுத்துப் பேசப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் (சாந்திரமானப்படி) சுக்கில பட்சத்தில் பிரதமை முதல் வரும் ஒன்பது நாட்களே நவராத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் எனப்படுகின்றன. துர்க்கை, இலட்சுமி, சரசுவதி ஆகிய மூன்று நிலைகளில் அம்மையை வழிபடுதல் இந்நாட்களிற் சிறப்புறப் பேசப்பெறும்.

துர்க்காதேவியைச் சாரத நவராத்திரியில் 'சண்டிகா" என்ற தன்மையிலும், வசந்த நவராத்திரியில் 'ரக்த தந்திகா" என்ற தன்மையிலும் பூசிக்க வேண்டும் என்பர். 'சரத், வசந்தம் என்ற இருதுக்கள், யமனுடைய கோரப் பற்கள்; இக் காலங்களில் நோய் மல்கி மக்கள் பெருவாரியாக அழிவர். நவராத்திரி துர்க்கைப் பூசை இதனைத் தவிர்க்கும்" என்று தேவிபுராணம் கூறுகின்றது.

**அபிராமிப்பட்டரின் அமுதக் கருத்துக்கள் :**

அபிராமி அந்தாதியில் 'துர்க்கை" என்று கூறப்படும் சக்தி நிலையை எடுத்துக் கூறி அபிராமிப்பட்டர் போற்றும் பகுதிகள் பல உண்டு. எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் இடங்களை இங்குச் சுட்டிக் காட்டுதல் பொருந்தும்.

'சுந்தரி, எந்தை துணைவி,
என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள்,
மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத
கன்னிகை, ஆரணத்தோன்
சுந்தரி, கைத்தலத் தாள்
மலர்த்தாள் என் கருத்தனவே"
(அபிராமி அந்தாதி – 8)

'நாயகி, நான்முகி, நாராயணி
கைந் நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி
சாமளை, சாதி நச்சு
வாயகி, மாலினி, வாராகி
சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள்
சரணம் அரண் நமக்கே"
(அபிராமி அந்தாதி – 50)

'பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை,
பஞ்சபாணி, வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி,
காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி,
சூலி, வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு
நாமங்கள் செப்புவரே"
(அபிராமி அந்தாதி – 77)

'கோமள வல்லியை,
அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை,
ஏதமிலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகல
கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார்
எழுபாருக்கும் ஆதிபரே"
(அபிராமி அந்தாதி – 96)

நவ துர்க்கைகளின் தோத்திரங்கள் பலவும் தேவிமான்மியம், தேவி பாகவதத்துள் காணப்படுகின்றன. அபிராமி அந்தாதி போன்ற தமிழ்ப் பனுவல்களிலும் ஆங்காங்கு உள்ளன. இவற்றைப் படித்தறிந்து அம்மையின் அருட்பெருங் கருணையை உணர்ந்து அவள் காட்டும் நன்நெறி நின்று இருமைப் பயன்களையும் எய்தி இன்புறுவோமாக. (தேவி மான்மியம், தேவி பாகவதம் ஆகிய வடமொழி நூல்களில் இவை பற்றிய முழு விளக்கங்களும் உள்ளன; அவற்றை முழுதும் எடுத்து ஆராய இச்சிறு கட்டுரையில் இடம் பற்றாது. ஆதலின் ஓர் அறிமுகம் என்ற வகையில்தான் இவ்விளக்கங்கள் அமைகின்றன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி

**ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்**
திருப்பராய்த்துறை.

**பெ**ற்றெடுத்த சிசுவை அன்புடன் பேணி வருபவள் அன்னை. அவளுடைய பணிவிடை ஒப்பு உயர்வு அற்றது. கைம்மாறு கருதாது குழந்தையை அல்லும் பகலும் அவள் பராமரித்து வருகின்றாள். குழந்தையைப் பேணுதலில் அவளுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. மற்ற அலுவல்களை ஒழுங்காகக் கவனிப்பதற்கிடையில் தன்மகவை அவள் அன்போடு பராமரித்து வருகின்றாள். தன் குழந்தைக்காக அவள் செய்யும் தியாகம் பாராட்டு தற்குரியது. தான் செய்கின்ற தியாகத்தையோ, பணிவிடையையோ அவள் விளம்பரம் செய் வதில்லை. மகிழ்வுடனும், பொறுமையுடனும், ஊக்கத்துடனும் தன் மகவை அவள் ஆதரித்து வருகிறாள். அன்பின் விளைவாக இத்தகைய ஆதரவு அவளிடத்திலிருந்து உருவெடுக்கின்றது.

பிரபஞ்சத்திலுள்ள தாய்மார்கள் அனை வரின் தொகையாகத் திகழ்பவள் அன்னை பராசக்தி. ஆதலால், அவள் 'ஸ்ரீமாதா" எனப் போற்றப் பெறுகின்றாள். பராசக்தியின் தாய்மை மானுட வார்க்கத்தில் மட்டும் வெளி யாகின்றது என எண்ணலாகாது. ஸ்தாவர ஜங்கமங்களாயுள்ள உயிர் வகைகள் அனைத்தி லும் அவளுடைய அருள் செறிந்த அன்பு வெளி யாகின்றது. வெவ் வேறு நிலப் பாங்குகளாக அமைந்திருந்து ஸ்தாவர வர்க்கங்களை அவள் வளர்த்து வருகின்றாள். மண்ணினுள் உழலும் புழு வகைகளை அவள் பேணி வருகிறாள். நீர் வாழ்வன, நிலத்தில் வாழ்வன ஆகிய சிற்றுயிர்களையும் அவள் செவ்வனே வளர்த்து வருகிறாள். இனி முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுக்கேற்றவாறு சேமித்து குஞ்சுவின் வாயில் செலுத்துகின்றாள். பராசக்தியின் பேரன்புக்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும். இனி விலங்குகளின் வர்க்கத்தில் அவள் பேடு வடிவெடுத்து இலங்குகிறாள். குட்டிகளாக ஈன்றெடுத்தவைகளை அவள் தன் சரீரத்தினின்று பால் அமைத்து ஊட்டிப் பரிபாலித்து வருகின்றாள். குட்டிகளைச் சத்துருக்களிடத்திலிருந்து பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்வதற்கும் விலங்குகளுக்கிடையிலுள்ள பெட்டையினம் ஆயத்தமாயிருக்கிறது. இவை யாவும் அம்பிகையின் தாய்மைக்கு விளக்கமாக இலங்குகின்றன. ஆதலால் அன்னை பரா சக்தியை 'ஜகன்மாதா" என்று போற்றுவதும் பொருத்தமாகும்.

அன்புடன் உயிர் வகைகளைப் பேணி வந்தால் மட்டும் போதாது. பிறந்து வளர்ந்து வருகின்ற சிசு வகைகள் இடையிடையே நெறி பிறண்டுபோவது இயல்பு. இதையொட்டியே 'இளம் கன்று பயமறியாது' என்னும் கோட்பாடு வந்துள்ளது. எப்பொழுதெல்லாம் உயிர் வாழ்வன நெறிதவறுகின்றனவோ அப்பொழுதெல்லாம் அன்னை வடிவிலும் ஏனைய வடிவங்களிலும் இலங்குகின்ற பராசக்தி தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறாள். உயிர் வகைகள் நெறியில் நிலைநிற்கும்படி வற்புறுத்துகின்றாள். ஆதலால் அவள் ஸ்ரீமகாராஜ்ஞீ எனப் போற்றப் பெறுகின்றாள். பேராசிரியராயிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலித்து வருபவள் என்பது இந்த நாமத்தின் பொருள். அவள் செலுத்திவரும் செங்கோல் ஆட்சியில் பிழை வருவதில்லை. ஆதலால் அவள் கோல்வளையாள் எனக் கூறப்பெறுகின்றாள். எப்பொழுதெல்லாம் உயிர் வகைகளுக்குத் துன்பம் வருகின்றதோ அப்பொழுதெல்லாம் அவ்வுயிர்கள் நெறி பிறண்டு போயிருக்கின்றன என்பது வெளியாகின்றது. மக்கள் உலகில் இக்கோட்பாடு தெற்றெனத்திகழ்ந்து வருகின்றது. மானுடனொருவனுக்குத் திரும்பத் திரும்பத் துன்பம் நேர்வது இயல்பு. தான் ஏன் துன்பத்துக்கு ஆளாகிறான் என்பதை மானுடன் அலசி ஆராய்ந்து பார்த்தால் அதற்குக் காரணமாயிருந்தது அறிந்தோ அறியாமலோ, தான் செய்த பிழை என்பது புலப்படும். வாளைக் கையில் ஏந்தியவளாகப் பராசக்தி இலங்கி வருகின்றாள். துன்பம் என்னும் தண்டனையை வழங்கி மக்களை அவள் புனிதப்படுத்துகிறாள். துன்பத்தையும் கஷ்ட தசையையும் துருவி ஆராய்கிறவர்களுக்கு அம்பிகையின் ஆட்சி முறை நன்கு புலனாகும். பெருந்துயரங்களுக்கு மக்கள் ஆளாவதெல்லாம் அவர்கள் நெறிவழுவியதின் விளைவாம். நெறி வழுவுகின்ற மனிதன், அம்பிகை விதிக்கிற தண்டனையினின்று ஒரு பொழுதும் தப்பித்துக்கொள்ள முடியாது. அவளுடைய ஆட்சிமுறை அத்தகைய கண்டிப்பானதாய் இருந்து வருகின்றது.

அம்பிகைக்கு அமைந்துள்ள ஆயிரம் திருநாமங்களுள் 'சதாசிவ குடும்பினீ" என்பதில் பொருள் மிகப் பொருந்தியிருக்கின்றது. சிவனார் கணவனாகவும், அம்பிகை மனைவியாகவும் இருந்துகொண்டு பிரபஞ்ச நடைமுறை என்னும் குடும்பத்தை நிர்வகித்து வருகின்றார்கள் என்பது இந்த நாமத்தின் உட்கருத்து. இந்த நாமத்தின்படி சிவனாரும் அம்பிகையும் இரண்டு தனித்தனிமூர்த்திகள் ஆகின்றனர். மற்று மெய்ப்பொருள் ஒன்று, அதன் சொரூபங்கள் பல என்பது மறைமொழி. இம்மறைமொழியின் உட்பொருளுக்கு ஒப்ப அம்பிகையும் இறைவனும் இரண்டு மூர்த்திகள் அல்லர். அர்த்தநாரீசுவரன் என்னும் கோட்பாட்டில் மாது ஒரு பாகம் ஆனவன் என்னும் கருத்து அடங்கியிருக்கின்றது. அர்த்தநாரீசுவர வடிவத்தை இரண்டாகப் பிரித்தெடுத்து இது ஈசுவரன், இது ஈசுவரி எனப் பகரமுடியாது. பொருள் ஒன்று. அதன் கூறுகள் இரண்டு என்னும் கோட்பாடு அர்த்தநாரீசுவர தத்துவத்தில் அடங்கியிருக்கின்றது. சதாசிவம் என்னும் பலகையின் மீது லலிதாம்பிகை இனிது வீற்றிருக்கின்றாள் என்பது மரபு. சவம் போன்று படுத்துக் கிடக்கின்ற சிவனார் நெஞ்சின் மீது நின்றுகொண்டு ஸ்மசான காளி திருநடனம் புரிகின்றாள் என்பதும் கோட்பாடு. இக்கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவத்தை அறிந்துகொள்ள நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். அசையும் பொருள் ஒன்றுக்கு ஆதாரமாக அசையாப் பொருள் ஒன்று இருந்தாக வேண்டும் என்பது இயற்கையின் நியதி. கடலின் அடிப்பகுதி அசையாதிருக்கின்றது. கடலின் மேற்பரப்பு அம்பிகையின் சொரூபம். அதன் அடிப்பகுதி சிவ சொரூபம். இங்கு ஆதாரமாகவும், ஆதேயமாகவும் அமைந்திருப்பது கடல் ஒன்றே. அதேபாங்கில் சதாசிவ குடும்பினீ என்னும் கோட்பாட்டில் சதாசிவம் அசைவற்ற பகுதி. அம்பிகை அசையும் பகுதி. அசையும் பகுதிக்கு அசையாத பகுதி ஆதாரமாக இருந்துவருகிறது. ஒரே பொருள் இரண்டுவித மகிமைகளுடன் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. சிதாகாசம் அல்லது சிதம்பரம் என்னும் அறிவுப் பெருவெளியின்கண் சிவகாமி சமேத நடராஜன் நடனம் ஆடுகின்றார் என்று பகருவதும் அம்பிகை தன்னுடைய கிருத்தியங்களையெல்லாம் செய்து சாதிக்கின்றாள் என்பதும் அக்குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கு விளக்கங்களாகின்றன. பொருள் ஒன்று அதன் கூறுகள் இரண்டு.

அன்னை பராசக்தி 'பஞ்சகிருத்திய பராயணா" எனப் போற்றப்பெறுகின்றாள். ஐந்து கிருத்தியங்களை ஒழுங்காக நடாத்துதலில் கண்ணும் கருத்துமாய் இருப்பவள் அம்பிகை. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் எனப் பஞ்ச கிருத்தியங்கள் அமைந்துள்ளன. இவ்வைந்து கிருத்தியங்களையும் முறையே படைத்தல்,காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்று இயம்புகின்றோம். இவ் வைந்தினுள் முதல் மூன்று செயல்களும் இயற்கையின் கண் இடையறாது நிகழ்ந்து வருவது அனைவருக்கும் வெளிப்படை. எல்லாப் படித்தரங்களிலும் உள்ள உயிர் வகைகள் இடையறாது பிறப்பெடுத்து வருகின்றன. பிறப்பின் வாயிலாகத் தோற்றத்துக்கு வந்துள்ள உயிர் வகைகள் வளர்ச்சியின் வாயிலாக இடையறாது காக்கப்படுகின்றன. வாழ்ந்து வருபவைகள் அனைத்துக்கும் இயற்கையின் நடைமுறையில் இடம் உண்டு. அவைகள் வீணே தோற்றத்துக்கு வந்தவைகள் அல்ல. அம்பிகையின் திருவிளையாடலாகிய பிரபஞ்சத்தின் நடைமுறையில் சிற்றுயிர், பேருயிர் ஆகிய யாவும் பொருத்தமாக இடம்பெற்று இருக்கின்றன. நல்லவைகள், கெட்டவைகள் எனப் பாகுபடுத்தப்படுபவைகள் வீணில் உலகில் வரவில்லை. அகிலாண்டத்தின் செயல்களைத் தொகுத்து ஆராயுமிடத்துக் கெட்டவைகளிடத்தும் அதில் பொருத்தமான இடம் உண்டு. ஒவ்வோர் உயிரும் அதனதன் செயல்களை நிறைவேற்றியான பிறகு அவைகள் மறைந்துபட்டுப் போகின்றன. பிறப்புக்கு நிகராக இறப்பும் இடம்பெற்றிருக்கின்றது. இறப்பின் வாயிலாக உயிர்கள் யாவும் படிப்படியாக மேல்நிலையெய்தி வருகின்றன. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணாக்கர்கள் பரீட்சையின் வாயிலாக மேல் வகுப்புகளுக்குப் போவது போன்று மரணத்தின் வாயிலாக மண்ணுலகில் பிறந்திருப்பவைகள் மேலோங்கி வருகின்றன. இச்செயல் பரிணாமம் எனப் பகரப்பெறுகின்றது. கல்லாகவும், புல்லாகவும் துவக்கிய வாழ்வு இறுதியில் மானுட நிலையை எட்டுகின்றது. உடலின் பரிணாமத்தில் உச்ச நிலையில் இருப்பது மானுட உடல். அதற்குமேல் பரிணாமம் உள்ளத்தில் நிகழ்ந்து வருகிறது. அறிவில் கீழ்நிலையில் இருப்பவர்கள் மாக்கள் என இயம்பப்பெறுகின்றனர். பிறவிகள் பல எடுத்துக் கீழோராயிருப்பவர்கள் மேலோராகப் பரிணமிக்கின்றனர். நுண்ணறிவு படைத்துள்ள மக்கள் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். பக்தியில் முன்னேறியவர்கள் உலகைப் பற்றிய உண்மை ஒன்றை யுக்தியால் அறிந்து கொள்கின்றனர். தாங்கள் பிரபஞ்சத்துக்கு உரியவர்கள் அல்லர். பரதேவதைக்கு உரியவர்கள் என்னும் உண்மை தெளிவுபட அன்னவர்களுக்கு விளங்குகின்றது. பிரபஞ்சத்துக்கு உரியவர்கள் என்னும் எண்ணத்தில் ஊறியிருப்பவர்கள் திரோதானம் அல்லது மறைத்தல் என்னும் அம்பிகையின் செயலுக்கு இலக்காகின்றனர். மறைத்தல் என்னும் செயலின் வாயிலாக அன்னை பராசக்தி பிரபஞ்சத்தின் அமைப்பை இனிது நடாத்தி வருகிறாள். ஓர் உபமானத்தின் வாயிலாக திரோதானத்தையும், அனுக்ரஹத்தையும் அம்பிகையின் அருள் செல்வராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் இனிது விளக்குகின்றார். தமையன் பத்மநாபனும், தங்கை கமலாவும் தங்கள் பூங்காவில் மகிழ்வுடன் விளையாட்டிக் கொண்டிருந்தனர். விளையாட்டுக்கிடையில் தமையன் திடீரென்று காணாமல் போய்விட்டான். அவனைத் தேடித் தங்கை அலைந்து திரிந்து கொண்டிருந்தபொழுது புதர்க்குள்ளிருந்து கரடி ஒன்று வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பியது. 'கோ" வென்று கதறி கமலா நடுநடுங்கினாள். விளையாட்டு வரம்பு கடந்து போய்விட்டது என்று உணர்ந்த பத்மநாபன் கரடித்தோலை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன் நிஜ வடிவத்தைக் காட்டினான். பயந்துபோன கமலா 'இது அண்ணா தானா' என்று சிரித்துக்கொண்டு அவனிடம் ஓடினாள். பத்மநாபன் காணாமல் போனதும், கரடித் தோற்றத்துக்கு வந்ததும் திரோதானம் அல்லது மறைத்தல் என்னும் செயலுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகின்றன. பத்மநாபன் மீண்டும் தன்னுடைய நிஜ வடிவத்தை உள்ளபடி காட்டியது அனுக்ரஹத்திற்கு எடுத்துக்காட்டு ஆகின்றது. அன்னை பராசக்தி தன்னை ஆனந்தங் கோடி வடிவங்களில் விளக்கிக் கொண்டிருப்பது திரோதானம் அல்லது மறைப்பு. பிரபஞ்ச நடைமுறைக்கு இது முற்றிலும் இன்றியமையாதது. பிரபஞ்ச வாழ்க்கையில் சலிப்படைந்துள்ள சான்றோர்கள் அன்னையின் அருளை நாடுகின்றனர். அப்பொழுது அவள் தனக்கும், தனது செல்வர்கள் செல்விகளுக்கும் இடையிலுள்ள பேரிணக்கத்தை உள்ளபடி காட்டியருளுகின்றாள். அது அனுக்ரஹம் எனப்படுகின்றது.

அன்னை பராசக்தி தானே ஜகத்மயமாய் இலங்குகின்றாள். ஜகத்தில் யாவும் அடங்கப் பெற்றிருக்கின்றன. வெவ்வேறு விதமான பொருள்கள் தேவையாயிருக்கின்றன. எவன் ஒருவன் எதை விரும்புகின்றானோ அதை அவன் அன்னையிடமிருந்து பெறலாம். அதற்குத் தகுதி உடையவனாக இருக்கத் தன்னைச் செய்து கொள்ளுதல் மனிதனுடைய கடமையாகின்றது. தகைமைக்கேற்ற பொருளை அன்னை கரவாது எடுத்து வழங்குகின்றாள். ஆதலால், அவளுக்கு 'வாஞ்சி தார்த்த ப்ரதாயினீ" என்னும் பெயர் வந்துள்ளது. கற்பக விருக்ஷம் வேறு; பராசக்தி வேறு அல்ல. அவள்தானே கற்பக விருக்ஷமாக இலங்குகின்றாள்.

'அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்" என்பது கோட்பாடு. ஆத்ம சாதகனொருவன் அம்பிகையிடமிருந்து எதை வரமாகக் கேட்கின்றான். அதினின்று அவனுடைய ஆத்மபரிபாகம் எளிதில் விளங்குகின்றது. இவ்வுலக சம்பந்தமான சம்பத்துக்களை அவன் வேண்டுவானாகில் அவனுக்கு இன்னும் உலகப் பற்றுகள் பல இருக்கின்றன என்பது தேற்றம். ஆயுள், ஆரோக்யம், பொருள், போகம், மகப்பேறு, பதவி ஆகியவைகளை நாடுகின்றவர்களுக்கு அன்னை கிருபைகூர்ந்து அவனுடையநாட்டத்தை நிறைவேற்றி வைக்கின்றாள். இங்ஙனம் நிலையற்ற உலக சம்பத்துக்களை நாடுவது காமிய பிரார்த்தனை ஆகும். சின்னஞ்சிறு குழந்தைகள் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுகின்றன. விளையாட்டுக் கருவிகளில் குழந்தைகள் பற்றுதல் மிக வைத்திருக்கின்றன. பற்றுதலுக்கேற்ற பொருள்களைப் பிள்ளைகளுக்கு வழங்குவது உசிதம். அங்ஙனம் காமியப் பிரார்த்தனை பண்ணுகிறவர்களுக்குத் தேவையாயிருப்பவைகள் யாவையும் அன்னை தாராளமாக எடுத்து வழங்குகின்றாள்.

ஆனால் ஆத்மபரிபாகம் அடைந்திருப்பவர்கள் நாடுவது அலாதியான சிறப்பு ஆகும். நித்திய அநித்திய வஸ்து விவேகம் படைத்தவனாக ஆத்மசாதகன் இருக்கின்றான். அநித்தியமாயுள்ள பிரபஞ்சப் பொருள் எதையும் அவன் நாடுவதில்லை. நித்திய வஸ்துவாகிய பராசக்தியையே அவன் நாடி நிற்கின்றான். தன் சொரூபம் முழுதையும் அவன் பராசக்திக்குச் சொந்தமாக்குகின்றான். அகங்காரமும் மமகாரமும் அவனிடத்தில் இல்லை. வானத்தினின்று வீழ்கின்ற மழைத்துளி கடலினுள் வீழ்வதற்கு நிகராக ஆத்மசாதகன் தன்னை அம்பிகைக்குச் சொந்தமாக்குகின்றான். மழைத்துளி கடல் மயமானது போன்று பராசக்தியினிடம் தன்னுடைய ஜீவவியக்தியைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத்தரமான ஆத்மசாதகன் ஒப்படைக்கின்றான். அம்பிகையாண்டும் சாந்த சொரூபிணி அல்லள். அவளிடத்து உக்கிர சொரூபமும் உண்டு. ஐம்பூதங்கள் மயமாய் அம்பிகை இலங்குகின்றாள். அவைகளுள் பூமி பொறுமையே வடிவெடுத்தது என்பது கோட்பாடு. ஆனால் இடையிடையே சிறிது நேரத்துக்கு பூகம்பம் ஏற்பட்டு பெரும் நாசத்தை விளைவிக்கின்றது. பல்லாயிரம் உயிர்கள் நொடிப்பொழுதில் மடிந்து போகின்றன. நீர் என்னும் பூதம் ஜீவகோடிகளுக்கு உணவையும், உயிரையும் ஊட்டுகின்றது. அத்தகைய நீர் அளவுக்கு மீறி பெருக்கெடுக்கின்றபொழுதுபெரும் சேதத்தை விளைவிக்கின்றது. நெருப்பு என்னும் பூதம் உணவு சமைப்பதற்கு நன்கு உதவுகின்றது. ஆனால் இதே நெருப்பு ஊர் முழுதையும், வனம் முழுவதையும் பற்றிப் பிடித்துக் கொண்டால் அது நாசகாரியாகக் காட்சி கொடுக்கின்றது. காற்று உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பூதமாகின்றது. ஆனால் அது புயலாக வடிவெடுக்கின்றபொழுது நிலவுலக வாழ்வைப் பாழ்படுத்துகின்றது. இப்படி பூதங்கள் மயமாக பொலிகின்ற பராசக்தி இடையிடையே பாழ்படுத்தும் பயங்கரமான வடிவெடுப்பதும் இயல்பு.

அன்னை பராசக்திக்கு வடிவங்கள் பல உள. அவைகளுள் ராஜராஜேஸ்வரி வடிவம் இனிமையே வடிவெடுத்தது. அருளுக்கு அது இருப்பிடம். ஆனந்தத்துக்கு அது பிறப்பிடம். அமைதிக்கு அது உறைவிடம் பின்பு அதே பராசக்தி சண்டியாகவும், மகா காளியாகவும் இலங்குகின்ற பொழுது அவளுடைய செயல் பயங்கரமானது. நொடிப்பொழுதில் அண்டங்களைத் தவிடு பொடியாக்குவது அவளுடைய விளையாட்டு ஆகும். சம்ஹாரத் தாண்டவமாடுவது அவளுடைய பாங்கு. உயிர்களை விரட்டி ஓட்டுவது அவளுடைய விளையாட்டு. நெறிபிறழ்கின்றவர்களை படாத பாடுபடுத்துவது அவளுடைய பாங்கு. விதவைகளுடைய கண்ணீருக்கும் கம்பலைக்கும் அவள் கருணை காட்டுவதில்லை. அனாதைகளின் கூக்குரல்களை அவள் காதில் போட்டுக் கொள்வதில்லை. இப்படிச் சம்ஹாரத் தாண்டவமாடுவதில் அவள் தீவிரமாக ஈடுபடுகின்றாள். இத்தகைய கோர சொரூபிணியுடன் இணக்கம் பூண வல்லவனே வீரனாகின்றான். ஆதலால், அவளுக்கு **'வீர ஆராத்யா"** என்னும் நாமம் வாய்த்துள்ளது. மாலுமி ஒருவன் கொந்தளிப்பான கடலில் கப்பலை முறையாகச் செலுத்துவானாகில் அவன் திறமை வாய்ந்த மாலுமியாகின்றான். அதே பாங்கில் மகாகாளியுடன் பேரிணக்கம் பூணவல்லவனே தலைசிறந்த ஆத்ம சாதகனாகின்றான். அத்தகைய சாதகர்களுள் ஒருவர் அண்மையில் தோன்றியுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவராவார்.

அன்னை பராசக்தி ப்ரக்ருதி சொரூபமாக இலங்குகின்றாள். ஜீவகோடிகளைத்தும் ப்ரக்ருதியைச் சார்ந்திருக்கின்றன. ஆதலால் அவை யாவும் மறைமுகமாக ப்ரக்ருதித் தாயைச் சார்ந்திருக்கின்றார்கள். உணவைத் தேடுகின்ற உயிர்கள் அனைத்தும் மறைமுகமாக அன்னையின் ஆதரவைத் தேடுகின்றன. பருகுவதற்கு நீரைத் தேடுகின்ற உயிர் வகைகளும், சுவாசிப்பதற்குக் காற்றைச் சார்ந்திருக்கின்ற உயிர்வகைகளும் மறைமுகமாக அன்னையின் ஆதரவையே சார்ந்திருக்கின்றன. ஆதலால் உயிர்வகைகள் யாவும் அஞ்ஞானத்தில் இருந்துகொண்டு அன்னையின் ஆதரவைப் பெற்று வருகின்றன. பின்பு அன்னை பராசக்திக்கு **'தாபசாராத்யா"** என்னும் நாமம் பொருத்தமாக அமைந்திருக்கின்றது. தவம் புரிகின்றவர்கள் தங்களுக்கும் பரதேவதைக்கும் உள்ள இணக்கத்தை உள்ளபடி அறிகின்றனர். அந்த அறிவின் விளைவாக உணவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பதையும் நீரைப்பருகுவதையும், காற்றைச் சுவாசிபபதையும் வழிபாட்டின் கூறுகளாக அவர்கள் பொருள்படுத்துகின்றனர். தங்கள் மூலம் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் யாவும் அன்னையின் ஆராதனையாகத் தவஸிகளால் கருதப்படுகின்றது. தாங்கள் படைத்துள்ள ஜீவவியக்தி முழுதையும் அன்னைக்கு உரியதாக ஒப்படைத்து விடுவதே அவர்கள் புரிகின்ற தபஸ் ஆகின்றது. அதன் விளைவாக அவர்கள் அன்னையின் அருள்செல்வர்கள் ஆகின்றார்கள். அன்னையாரிடம் அன்னவர்கள் பூணும் பக்தி பராபக்தியாகப் பரிணமிக்கின்றது. அத்தகைய பக்திக்கு அன்னை உடந்தையாக இருப்பதால் அவள் **"பக்தி வஸ்யா"** எனவும் **"பக்தி கம்யா"** எனவும் பாராட்டப்படுகின்றாள். அனன்ய பக்தி பண்ணுவது தவத்தில் ஒரு கூறு ஆகின்றது. அதேவிதத்தில் தீவிரமாக யோக சாதனங்கள் புரிவதும் தபஸ் ஆகின்றது. யோக சாதனம் புரிகின்றவர்களுக்கு அன்னை யோகத்தை கிருபை கூர்ந்து கொடுத்தருள்கின்றாள். யோகமே அவளிடத்திருந்து உதயமாவதால் அவள் **"யோகானந்தா"** எனவும் **"யோகதா"** எனவும் 'யோகினீ" எனவும் பாராட்டப் பெறுகின்றாள். தவம் ஓங்குவதற்கேற்ப அன்னையின் மகிமை மேலும் மேலும் தபஸியின் உள்ளத்தில் ஒளிர்கின்றது. அதன் விளைவாக அன்னையைப் பற்றிய ஞானம் அதிகரிக்கின்றது. அன்னையை அறிந்து கொள்தற்கேற்ப தபஸி ஒருவன் தன்னை அம்பிகைக்கே உரியவனாக்குகின்றான். அக்கோட்பாடு **"ஞானகம்யா"** என்னும் நாமத்தில் அங்கியிருக்கின்றது. அத்தகைய ஞானத்தை அவள் மேலும் பெருக்குவதால் **"ஞானதா"** என்னும் நாமம் அவளுக்கு வாய்த்திருக்கின்றது. பராசக்தியின் ஞானம் ஓங்குவதற்கேற்ப தபஸி ஒருவன் பராசக்தி சொரூபமாகப் பரிணமிக்கின்றான். அச்சீரிய நிலையை **"ஞானக்ஞேய சொரூபிணி"** என்னும் நாமம் விளக்கிக் காட்டுகின்றது. இங்ஙனம் தபஸி ஒருவன் தன்னுடைய ஜீவவியக்தியை யோகத்தாலும் , பக்தியாலும், ஞானத்தாலும் பராசக்தி சொரூபமாக திருத்தியமைக்கின்றான்.

அம்பிகையின் உபாசகன் ஆத்மசாதனத்தில் ஆழ்ந்து செல்லுதற்கேற்ப அவனுக்குப் புதிய அனுபவம் ஒன்று வருகின்றது. அன்னையின் உபாசனையை அந்தர்முகமாகச் செய்கின்ற பொழுது அதில் அவன் பேரானந்தம் அடைகின்றான். மற்றுக் கிரியா விசேஷங்களுடனும் புஷ்பம், சந்தனம், குங்குமம் முதலிய திரவியங்களுடனும் பாகிய பூஜையில் அவன் ஈடுபடுகின்றபொழுது மனது ஓரளவு சிதறடைகின்றது. அதற்கேற்ப வழிபாடு இரண்டாந்தரமானதாக மாறுகின்றது. இவ்விரண்டு கோட்பாடுகளும் **"அந்தர்முக சமாராத்யா", "பகிர்முக சதுர்லபா"** என்னும் நாமங்களில் அடங்கியிருக்கின்றன. அமைப்பில் அண்டமும், பிண்டமும் ஒன்று எனினும் பிண்டத்தில் வாழும் பக்தன் பிண்டத்தினுள்ளேயே அதாவது தன்னுடைய உடல் அமைப்பிலேயே வழிபாட்டுக்குரிய பாங்குகள் யாவையும் தெற்றென உணருகின்றான். புறக்கருவி கரணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அந்தக் கரணத்தின் வாயிலாக அகத்தினுள் ஆழ்ந்துபோகின்றான். புறத்திலும்பெரியது அகம் என்னும் அனுபவம் அவனுக்கு வருகின்றது. ஜடம் போன்ற சரீரம் அமைந்திருக்கையில் உள்ளத்தினுள் அவன் தீவிர வழிபாட்டில் திளைத்திருக்கின்றான். சாதனத்தில் ஆழ்ந்து செல்கின்றவர்கள் அனைவரும் அடைகின்ற அனுபவம் இதுவாம்.

ஆத்மசாதகனுடைய அந்தக்கரணம் அற்புதமான ஆலயமாக அமைகின்றது. அதில் அம்பிகையின் சாந்நித்தியத்தை அவன் தெளிவுறத் தரிசிக்கின்றான். இத்தகைய அரிய அனுபவத்துக்குப் பிரமாணங்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லலிதா ஸஹஸ்ரநாமங்களுள் இரண்டு நாமங்கள் முன்னணியில் வந்து இருக்கின்றன. அவைகளுள் **"பக்தமானஸ ஹமஸிகா"** என்பது முதலானது. **"முனி மானஸ ஹம்ஸிகா"** என்பது இரண்டாவதாக வந்து அமைகின்றது. இடையறாது அன்னையின்கண் தன் அன்பைச்செலுத்துகின்றவன் பக்தனாகின்றான்.இடையறாது தன் எண்ணத்தை அன்னையினிடம் செலுத்துகின்றவன் முனி ஆகின்றான். மனனசீலம் வாய்க்கப் பெற்றவன் முனி. பக்தியின் வாயிலாகவும் எண்ணத்தின் வாயிலாகவும் அந்தக் கரணம் அறவே சுத்தியடைகின்றது. அந்நிலையில் அது மானஸ ஸரோவரமாக மிளிர்கின்றது. பண்பட்டுள்ள மனது என்னும் தடாகம் என இந்த நாமம் பொருள்படுகின்றது. இதற்குச் சான்றாகப் புறத்தில் கயிலயங்கிரியின் தென்திசையில் மானஸசரோவரம் என்னும் தடாகமிருக்கின்றது. அகத்திலிருக்கும்தடாகத்திற்கும், புறத்திலிருக்கும் தடாகத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கின்றது. புறத்திலிருக்கின்ற மானஸ சரோவரத்திற்குக் கோடை காலத்தில் அன்னப் பறவைகள் வருகின்றன. அதற்கு நிகராக அம்பிகை என்னும் பேடை அன்னப்பறவையாக கருவி கரணங்கள் ஓய்ந்த தொண்டர்களுடைய உள்ளத்தில் உலாவுகின்றாள். அன்னையின் பக்தர்களனைவருக்கும் இது பொது அனுபவம் என்பதைக் குமரகுருபரஸ்வாமிகள் 'புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்று அம்பிகையை வருணிக்கின்றார்.

அந்தக் கரண சுத்தி அடைவதற்கு நிகரான பேறு ஏதும் ஆத்மசாதகனுக்கு இல்லை. சுத்தியடைந்த உள்ளமே பெரும் கோயில் ஆகின்றது. அதன்கண் மிளிரும் அன்னையின் சாந்நித்தியமே போற்று தற்கு அரிய தரிசனமாகின்றது. அத்தரிசனத்தில் திளைத்திருப்பதே சாயுஜ்யமாகின்றது. பிறப்பு எடுப்பதின் முடிந்த குறிக்கோள் இது. இந்நிலையில் ஆத்மசா தகன் அம்பிகையின்ஆனந்தவெள்ளத்தில் ஒன்றுபடுகின்றான்.அப்படி ஒன்றுபடுகின்ற நிலையை **"கைவல்யபததாயினீ"** என்னும் அம்பிகைக்குரியநாமம் தெளிவுபடுத்துகின்றது. சாதகனை அம்பிகை தன்மயமாக்கிவிட்டாள் என்பதும் பொருந்தும். இந்நிலையை அணுகுகின்ற ஆத்மசாதகன் ஓயாது உள்கி உள்கி உள்ளம்குளிர்ந்து தன்சொரூபத்தை அன்னையின் சொரூபத்தில் ஐக்கியப்படுத்துகின்றான். அன்னவனை அன்னை வாரி எடுத்துத் தன்மயமாக்குகின்றாள் என இயம்புவதும் பொருந்தும். பெறுதற்கு அரிய இப்பேறு அதனைப் பெறுதற்குப் பெருமக்கள் யாவரும் பெருவாழ்வு வாழ்ந்திருப்பார்களாக. ஓங்குக பராசக்தியின் பேரருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மகர்த்தா சபை



**இடமிருந்து வலமாக :**

திரு.சி.சண்முகானந்தன், திரு.சி.கனகசிங்கம், திரு.த.சித்தார்த்தன் (பாராளுமன்ற உறுப்பினர், தலைவர்),திரு.நா.திருநாவுக்கரசு, Dr.தி.திவாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக சபை



**இருப்பவர்கள் இடமிருந்து வலமாக :**

திரு.சு.முருகையா, அமரர் ந.விநாயகரத்தினம், லயன் ச. ஆறுமுகநாதன் (உபதலைவர்) கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைவர்), திரு . சி.அருளானந்தசிவம் (உபதலைவர்), திரு.நா.தவநாதன் (நிர்வாகச் செயலாளர்), திரு. அ.சண்முகநாதன் (பொருளாளர்)

**நிற்பவர்கள் இடமிருந்து வலமாக :**

திரு.வி.பாக்கியநாதன், திரு.எஸ்.றஜீவ்காந், திரு.சி.சண்முகானந்தன் (இணைச் செயலாளர்) திரு.சு.ஏழூர்நாயகம் (உப பொருளாளர்), திரு.மு.அருளையா (உப செயலாளர்), திரு.இ.இராதாகிருஷ்ணா, திரு.நா.திருநாவுக்கரசு, திரு.ப.சேயோன், திரு.ச.உமாசுதன், Dr.தி. திவாகரன் (பொதுச் செயலாளர்), திருமதி கலாதேவி பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி தத்துவம்

ஸ்ரீ வித்யோபாசக ஞானபாஸ்கர எஸ். நடராஜன்

ஆதி பரம்பொருளின் ஊக்கம்
அதை அன்னை எனப்பணிதல் ஆக்கம்
மூலப் பழம்பொருளின் நாட்டம்
இந்த மூன்று புவியும் உனது ஆட்டம்.
(பாரதியார்)

உலகம் இயங்க, உலகத்திலுள்ள ஜீவ ராசிகள் செயற்பட சக்தி தேவை, ஏன், ஆக்குவதும் காப்பதும் அழிப்பதும் அந்த சக்தியேதான். இந்த சக்தி எவ்வாறெல்லாம் செயற்படுகின்றது என்பதை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த சக்தி வழிபாடே அம்பிகை வழிபாடாகப் பரிணமித்தது.

ஆதியில் பிரம்மம் மட்டுமே இருந்தது. இப் பிரம்மம் உலக சிருஷ்டிக்காக சிவம் என்றும் சக்தி என்றும் பிரிந்தது.

சக்தி இருந்ததால்த்தான் செயற்பட முடியும். இந்த சக்தி செயற்பட ஒரு பொருள் வேண்டும். சக்தியும் பொருளும் சேர்ந்தால்தான் குணம் வெளிப்படும். இதற்குத் தூண்டுதல் வேண்டும் . இத்தூண்டுதலே சக்தியின் சலனம்.

**ஆக்கும் (சிருஷ்டி) சக்தி**

மகா சக்தியின் சலனம் காரணமாகவே உலகம், சூரிய நக்ஷத்திர மண்டலங்கள், மனிதவர்க்கம், ஜீவராசிகள் எல்லாம் ஏற்பட்டன.

ஆகாயமே சக்தி மயம் என்று நம் முன்னோர்கள் குறிப்பிட்டனர். ஆகாயம் எல்லையே இல்லாதது. ஆனால் ஒரு எல்லை இருப்பது போல காணப்படுகின்றது. நாம் பிறப்பதற்கு முன் ஆகாசத்தைத்தான் ஆதாரமாகக் கொண்டிருந்தோம். இந்த ஆகாசம் மூச்சைப் படைத்து, அதன் மூலமே ஜீவராசிகளின் இதயத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டது.

பிரம்மத்தின் மூச்சுதான் சக்தி. அம் மூச்சே வேதம் (மறைகள்). இறைவனைப் பற்றி அடியார்கள் பாடியதெல்லாம் இறைவனின் மூச்சேயன்றி வெறும் பேச்சல்ல. இந்த பிரம்மம் ஜீவாத்மாவாகிய விதைகளை நட்டு விசித்திர செடிகளை வளர்க்கின்றது. இதுவே மனித குலம். விதை முளைத்து வளர்வதற்கு வெய்யிலும் நிழலும் வேண்டுமல்லவா? அதுபோல ஜீவாத்மா வாகிய விதை முளைப்பதற்கு நல்வினை தீவினை யாகிய இரண்டும் வேண்டும். ஆகவே அவ்விரு வினை களையும் கூட்டி ஐம்பூதங்களில் நான்காகிய மண், நீர், காற்று, தீ இவைகளையும், விண்ணாகிய ஆவியையும் சேர்த்து ஜீவராசிகளாகிய செடிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த ஐம்பூதங்களாக விளங்குவது சக்தி ஸ்வரூபமே.

ஜீவராசியாகிய இந்த செடிக்குள் சக்தி (அம்பிகை) பிரகாசித்துக் கொண்டிருப்பதால் அவை வளர்கின்றன; வாழ்கின்றன. சக்திக்கு உருவம் கிடையாது. சிவத்துடன் (ஒரு பொருளுடன்) சேரும்போதுதான் அதற்கு உருவம் ஏற்படுகின்றது. இதைத்தான், சிவபெருமானே தனக்கு ஆற்றல் கோரி சக்தியை வேண்டிக் கொள்கின்றார் என்று சொல்லப்படுகின்றது.

சக்தியின் சலனம் காரணமாகவே குண முள்ள பொருளுக்கு மனம் உண்டாகின்றது. மனமும் எண்ணமும் பூவும் மணமும்போல செயற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலே பொருளாகிறது. பொருளே சிவமாகின்றது. இந்திரியங்களே சக்தியாகின்றது. சக்தியின் சலனத்தினால் மனம் மாறுகின்றது. இதனால் பொருளின் குணம் செயற்பட ஆரம்பிக்கின்றது. உடல் செயற்படுவதால் கர்மம் (செயல்) உருவாகின்றது. கர்மத்திற்கு ஏற்றாற் போலக் குணம் அமைகின்றது. இது ஒரு சக்கரம் போல் சுழன்று கொண்டே இருக்கின்றது.

இந்த மனித உடலே, சிவம். இதைச் சார்ந்திருப்பதே ஜீவாத்மா. இது சக்தி மயமானது. மனித உடலுக்கு இந்திரிய உறுப்புகள் போல மனித இயந்திரத்திற்கு ஜீவாத்மா ஒரு தெய்வீக இந்திரியம் ஆகின்றது. இதுவே கடைசிக்காலத்தில் உடலையும் சக்தியையும் பிரியச் செய்கின்றது. உடல் அழிந்து மண்ணோடு சேர்ந்து விடுகின்றது. சக்தி சக்தியோடு கலந்து விடுகின்றது. இவ்விதமே பொருள் சக்தியான ஜீவன், பகுத்தறிவு சக்தியை உருவாக்கி அருள் சக்தியாக மாறிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சக்தி வேலை செய்யவில்லை என்றால் மனிதன் ஒருபொருளிலும் ஆசை யில்லாமல் மந்த கதியிலே எக்காலமும் தூங்கி வழிந்து கொண்டிருப்பான்.

விவாகம் ஆகாத வரை குணம் மாறாதவன், மணமான சில மாதத்திற்குள் மனம் மாறி விடுகின்றான். இதுவே மனைவியாக வரும் அந்த சக்தியின் சலனம்.

மனிதனுக்குள்ள சக்தி குண்டலினி சக்தி. இது சூரியனிடமிருந்து நமக்குக் கிடைக்கின்றது. இதுவே 'ஜீவாத்ம சக்தி'.

சக்தியை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். மந்தசக்தி, புத்தி சக்தி, பகுத்தறிவு சக்தி. மந்தசக்தி தான் பரந்த சக்தி. சலனம் ஏற்படாததே மந்தத்திற்குக் காரணம்.

சலனம் ஏற்பட்டால் புத்தி சக்தி தோன்று கின்றது. இதனால் மனமும் குணமும் ஏற்பட்டுப் பகுத்தறிவு சக்தி உதயமாகின்றது. இந்தப் பகுத்தறிவு சக்தியை நம் முன்னோர்கள் "அமிர்தம்" என்றனர்.

உலகத்திலுள்ள எல்லா சக்திகளும் மூல சக்தியான பராசக்தியின் அம்சமே. உல கத்திலுள்ள பொருள்கள் எல்லாம் சிவ அம்சமே. சக்தியும் சிவமும் பிரிந்தும் சேர்ந்தும் பலவித சக்திகளை உண்டு பண்ணுகின்றன.

**பலவித சக்திகள்**

சக்தியின் விரிவினை ஏழாகப் பிரித்தி ருக்கிறார்கள். அவை ஒழுக்கம், ஒலி, படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என் பர் இந்த ஏழு வகையினை

குலமகள் (சிவை)
புலமகள் (ஒலி, விந்து)
நிலமகள் (மனோன்மணி)
தலைமகள் (மகேஸ்வரி)
மலைமகள் (உமை)
அலைமகள் (லக்ஷ்மி)
கலைமகள் (சரஸ்வதி)

என்கின்றனர். இதை, சிவஞான சித்தியார்

'சக்தியாய் விந்து சக்தியாய்
மனோன்மணி தானாகி
ஒத்துறு மகேசியாகி
உமைதிரு வாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக்கிங்ஙன்
வரும் சக்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பாள்"

என்று குறிப்பிடுகின்றது. வாணி – படைப்பவள், லக்ஷ்மி – காப்பவள், உமை – துடைப்பவள், மகேசி – மறைப்பவள், மனோன்மணி – அருள்பவள்.

**ஆக்கும் சக்தி**

உலகம் இயங்க அடிப்படையான சக்திகள் மூன்று. இவை செல்வம், அறிவு, இயக்கம், இம்மூன்றையும் தருபவர்கள் லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஆதி காலத்தில் உண்ண, உடுக்க, வசிக்க எல்லாம் சிறுகச் சிறுகத் தெரிந்து கொண்டிருக்கின்றான். ஓங்கி உயர்ந்த மலையைக் கண்டு அதன் அழகையும் காம்பீர்யத்தையும் கண்டு அதிசயித்திருக்கின்றான். அம்மலை யையும் கடலையும் அம்பிகையாகவே நினைத்து மலைமகளாகவும், அலைமகளாகவும் வழிபட ஆரம்பித்திருக்கின்றான்.

இந்த மலை மூலமாக, அலை மூலமாக ஆரம்பித்த வழிபாடு, அவன் உள்ளத்தில் ஏற்பட்ட அழகுணச்சி காரணமாக அந்த அம்பிகையே உலகுக்கு அன்போடு அறிவையும் நல்கும் கலைமகளாகவும் உருவகப்படுத்தியிருக்கின்றது. இப்படித்தான் அம்பிகை மலைமகளாகவும், அலை மகளாகவும், கலைமகளாகவும் அவன் மனத்தில் தோன்றியிருக்கிறாள்.

இப்படி மூன்று தேவிகளை உருவாக்கிய அவன், மூவரையும் ஒருவராகவே காணும் பேற்றுக்குத் தவம்கிடந்தான். இப்படி மூவரும் ஓருருவாய் இணைநது நிற்கும் தேவியே தேவர் மூவர்க்கும் முதல்பொருள். அவர்கள் செய்யு ம் முத்தொழிலுக்கும் அடிகோலும் பராசக்தி அவளே என்பதை உணர்ந்திருக்கிறான். இதைவிளக்கும் பாடல்

மூவர்க்கும் முதல் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும்
நாடறிய பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற் பரையை வணங்குவோம்.

இந்த பராசக்தியான அன்னைதான் எண்ணற்ற திருப்பெயர்களுடன் எழில் நிறைந்த எத்தனையோ உருவோடு நம் நாட்டிலுள்ள கோவில்களில் எழுந்தருளியிருக்கின்றாள்.

**அன்னையாக வழிபாடு**

நம்மையும் மீறி ஏதோ ஒரு சக்தி செயற்படுகின்றதென்பதை நாளடைவில் மனிதன் உணர்ந்தான். இந்த சக்தியை பெண் தெய்வமாகவும் பின் அன்னையாகவும் வழிபட ஆரம்பித்தான்.

'ஒரு நாகரிகத்தின் நிலையை தாய்க் குலமாகிய பெண்ணின் நிலைகண்டே நிச்ச யிக்கலாம்" என்று சக்தி பற்றி நிறைய ஆராய்ச் சிகள் செய்து பல புத்தகங்கள் எழுதிய ஆர்தர் ஆவ்லான் குறிப்பிடுகின்றார். தாய்க்குலமே சக்திகுலம். எனவேபெண்ணை சக்தி என்று சிறப்பித்தனர் முன்னோர்.

ஆன்ம உணர்ச்சிகளில் அடித்தளம் காணாத ஆழத்திலிருந்து வெளிப்படுவது தாயன்பு. வாழ்க்கையை வெற்றிபெறச் செய்வதன் ரகசியம் தாய்மைப் பண்பை வளர்ப்பதில்தான் உள்ளது. இந்த தாய்மைச் சக்தியே, ஆக்கும் சக்தி.

உடல் ஈன்ற தாய் உலகம் ஈன்ற தாயை நினைவூட்டுகின்றாள். நாம் மறந்தாலும் நம்மை அவள் மறப்பதில்லை. அவளது அரவணைப்பில் தளிர்க்கிறது உயிர்க்குலம்.

தாய்மையை உணராத ஜீவன் எங்கும் இல்லை. தாயை வணங்குவது போற்றுவது, ஆராதிப்பது ஜீவனுடைய கடமையாகும்.

தாய்க்குத்தான் தன் குழந்தைக்கு எப்போது பசிக்கும்?எதற்காக அழுகின்றது? என்பதெல்லாம் தெரியும். அதேபோல, தாயான அம்பிகைதான் நம் கஷ்டங்களை அறிந்து அருள்பாலிக்க முடியும். பசி, கஷ்டம் வரும் காலத்தில் குழந்தைகள் தாயைத் த ான் அழைக்கின்றன. ஔவையும் 'இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேணடித் தாயாய் எனக்குத் தான் எழுந்தருள" வேண்டும் என பிரார்த்திக்கின்றாள்.

எல்லாப் பெண்களையும் சக்தி தேவியாக பாவிக்கவேண்டும் என்பதே தேவி வழிபாட்டின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை. நம் முன்னோர்கள் பெண்களைத் தாயாகவும், சுமங்கலியாகவும், கன்னியாகவும் பூஜித்து வழிபட்டு வந்திருக்கின்றனர். மாதரைக் குழந்தைகளுக்குத் தாயாக அருள் சுரக்கும் போது 'ஜனி' என்றும், வேள்விகளில் பங்கு கொண்டு இல்லறத்தை நடத்தும் போது 'பத்னீ' என்றும்,கணவனின் அன்பைப் பெறும்போது'ஜாயா"என்றும் அழைத்தனர்.

வித்தில்லாமல் பயிர் இல்லை. அன்னையில்லாமல் பிறவி இல்லை. இது உலகறிந்த உண்மை. தாய்இல்லாதஜனனம் இருக்கிறது என்பதாக எந்த தத்துவ ஞானியும் சாதிக்கத்துணியவில்லை.

எல்லோருக்கும் தாயாக விளங்கும் அம்பிகை, சிவபெருமானுக்கும் தாய் தானா? குமரகுருபரர் 'சிவனின் மனைவி மட்டுமல்ல தாயும்தங்கையும்மகளும்அவளே" என்கின்றார். இதென்ன குழப்புகிறீர்களே என்று கேட்பதற்கும் அவர் பதில் சொல்கின்றார்.

'இதிலென்ன குழப்பம்? உள்ளதைத் தானே சொல்கின்றேன். கூத்தாடிக்கு ஏது உறவு? நாடகமேடையில் ஒருத்தியே தாயாகவும் தங்கையாகவும் மகளாகவும் பல சமயங்களில் வேடம் தரித்து நடிப்பதில்லையா? சிவபெருமான் தன் திருவருளையே சக்தியாகக் கொள்கின்றார். இச்சக்தியைப் பெண்ணாகக் கொள்வது மரபு. நாம் நம் கையினால் பல காரியங்களைச் செய்வது போல இறைவனும் தன் அருட்சக்தியான தேவியின் உதவி கொண்டு ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் முதலியவைகளைச் செய்கின்றார். இந்த ஐந்தொழில்களை சக்தியின் துணை மூலமே செய்யமுடியும்."

அம்பிகையின் மூலமே இந்த ஐந் தொழில் நடைபெறுகிறதென்பதை விளக்கவேசிருஷ்டிக்கும் பிரம்மா, காப்பாற்றும் விஸ்ணு, சம்ஹரிக்கும் ருத்திரன் , மாயையைக் கொண்டு மறைக்கும் மகேஸ்வரன் இவர்கள் நால்வரும் அம்பிகை அமர்ந்து இருக்கும் பீடத்தின் நான்கு கால்களாகவும், இதற்கு மேலுள்ள பலகை சதாசிவனாகவும் இதன் மேல் சிவசக்தியை ஐகய் ஸ்வரூபிணியாக அம்பிகை வீற்றிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

**சிவசக்தி ஐக்கியம்**

உலகில் எல்லாச் செயல்களுமே சிவசக்தி இணைப்பால்தான் நடந்தேறுகின்றன. உலகை இரு கூறுகளாகப் பிரிக்கின்றனர் விஞ்ஞானிகள். ஒன்று பொருள், மற்றொன்று சக்தி. பேச்சளவில் பிரிக்கின்றார்களேயொழிய இவை இரண்டும் இணைபிரியாதவை என ஒப்புக்கொள்கின்றனர்.

இந்த சிவசக்தி ஐக்யத்தை இயற்கையில் காணலாம்.

இயற்கையன்னை பச்சைப் பசேலெனறு செடி, கொடி, பயிராக விளங்குகின்றாள்.இது நம் கண்ணில்படுகின்றது. ஆனால் இதற்கு ஆதாரமாகவுள்ள நிர்குணவஸ்துவை நாம் காணமுடிவதில்லை. இதுஇரண்டும் சக்தியும் சிவமும்.

அமைதி, அன்பு இவ்விரண்டில் அன்பு என்பது மகா பெரிய சக்தி. இந்த சக்தி அமைதியில்தான் பிறக்கின்றது. உள்ளே சாந்த மயமானால் வெளியே பிரேமை மயமாகின்றது. உலகப்பற்று நீங்கி ஆத்ம சாந்தியில் திளைத்தால் உலகுக்கெல்லாம் நலம் புரியும் அன்பு ஏற்படும். இந்த அமைதி சிவம், அன்பு சக்தி.

**இருளும் ஒளியும்**

ஒரு பொருளுக்கு முன்தீபத்தை வைத்தால் அப்பொருளின் நிழல் ஏற்படுகின்றது. இப்படி இருளையும் ஒளியையும் சேர்த்து வைத்துள்ளது ஒரு மகாசக்தி. இங்கும் சிவசக்தி ஐக்கியமே.

**கடலும் நதியும்**

நதி எங்கோ மலைமுகட்டில் ஆரம்பமானா லும் கடலைத் தேடிக்கொண்டு ஓடி அடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கடல் நீர் ஆவியாகி மேகமாகி மழையாகி நதியாகின்றது. பரமாத்மா என்ற கடலிலிருந்து பிறந்த ஜீவாத்மாவான நதிகள் உலகிற்கு நன்மை பயக்க வாழ்ந்து, தங்கள் பேரும் உருவும் இழந்து கலந்துவிட வேண்டும் என்பதே இதன் தத்துவம். ஆகவே சிவசக்தி ஐக்கியம் இல்லாத இடமே இல்லை.

இந்த சிவசக்தி ஐக்கியத்திற்கு உருவாக்கப்பட்ட மூர்த்தமே மாதொரு பாதியன் என்ற அர்த்தநாரீஸ்வர மூர்த்தம். இந்த உருவத்தை எண்ணி எண்ணி வியந்தவர் நாவுக்கரசர். பாதி ஆணும், பாதிப் பெண்ணும் ஓர் இழையும் பிசகாமல் எவ்வளவு சரியாக இவ்வேறுபாடு காணப்படுகின்றது என்று அதிசயிக்கின்றார்.

உலகில் சில மதங்கள் கடவுளை ஆணாகக் கருதுகின்றன. சில மதங்கள் பெண்ணாக வழிபடுகின்றன. நம் மதம் ஆணும் பெண்ணுமாக, அம்மையும் அப்பனுமாக ஒன்றுசேரக் கொண்டு போற்றுகின்றது. ஆணின்றிப் பெண் இல்லை. பெண் இன்றி ஆண் இல்லை. உலகியலின் நல்வாழ்வுக்கு ஆணும் பெண்ணும் இணைந்து நிற்றல் இன்றியமையாதது.

இந்த சிவசக்தி ஐக்யத்தை மாணிக்க வாசகர் 'தொன்மைக் கோலம்" என்கின்றார். அருள் நந்திசிவம் 'முதல் உரு" என்கின்றார். சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் பாகம் பிரியாள் தத்துவம் போற்றப்படுகிறது.

'பெண்ணுரு ஒரு திறன்
ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக்
கரக்கினும் சுரக்கும்"

என்று கூறுகின்றது. ஐங்குறு நூறு காப்புச்செய்யுளே மங்கை பங்கனைப் பற்றியது தான்.

'நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள்
நிழற்கீழ் மூவகை உலகும்
முகிழ்த்தன முறையே"

என்று கூறப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் 'சக்தியுள்ளவனாகிய தையல்பங்கன்" என்று வழிபடுகின்றார்.

'சிவம் சக்தி தன்னையீன்றும்
சக்திதான் சிவத்தையீன்றும்
உர்ந்துஇருவம் புணர்ந்து இங்குலகு
உயிரெல்லாம் ஈன்றும்"

என்கின்றது சிவஞானசித்தியார்.

ஞானமே சிவம். சக்தியே பக்தி. பக்தி மூலமே ஞானத்தைப் பெறமுடியும்.

**அழிக்கும் சக்தி**

இறைவன் இறைவிக்கு மூன்று வடிவங்கள் உண்டு. போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம், போகம் என்பதே அருள் சக்தி. வேகம் என்பது அழிக்கும் சக்தி. எவ்வித காரணமும் இல்லாமமல் கருணையே வடிவான பராசக்தி எல்லாவற்றையும் பொறுப்பாள். ஆனால் அதர்மத்தையும் அநீதியையும் பொறுக்கமாட்டாள். அப்போது கொள்ளும்உக்கிர ரூபமே வேக சக்தி. துர்க்கை, காளி முதலிய மூர்த்தங்கள் இந்த உக்கிர உருவங்களையே குறிப்பதாகும்.

இம்மாதிரி சக்தி, ஆக்கி ஆதரித்துஅழிக்கும் வேலைகளைச் செய்கின்றது.மாயை என்ற மறைப்பு சக்தியையும் செயற்படுத்தி நம்மை ஆட்டுவிப்பதும் அருள்புரிவதும் அதுவேதான்.

இந்த சக்தியின் அருள்பெற நமக்குத் தகுதி வேண்டாமா? என்ற கேள்வி எழும் தூய பக்தி ஒன்றே தேவையான தகுதியாகும். பணம், படிப்பு, பதவி, அழகு, அறிவு எதனாலும் அதைப் பெறமுடியாது. பக்தி மூலமே அவள் கடைக்கண் அருளைப் பெறமுடியும்.

கடைக்கண் அருள் படைத்தன்றோ
மணிவண்ணன் உலகமெல்லாம்
காவல் பூண்டான்
படைத்தனன் நான் முகன்
பசுங்குழலில் மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன் நின் பெரும் கீர்த்தி
எம்மனோரால் எடுத்துச் சொல்லற் பாலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தியானம்

**சிற்ப கலாசாகரம்,**
**சில்ப கலாநிதி எஸ்.எம். கணபதி ஸ்தபதி.**

**கோ**டி மன்மதன்களின் அழகுடைய சிவபெருமானின்இடதுமடியில்வீற்றிருப்பவளும், ஒரே காலத்தில் உதித்த கோடிக்கணக்கான சூரியனைப் போன்ற பிரகாசத்தையுடையவளும், தனது ஒளியினாலே சிவப்பாகச் செய்யப்பட்ட அநேககோடிபிரம்மாண்டங்களையுடையவளும், செம்பரத்தம்பூவைப் போன்ற நிறமுடையவளும், அஜபையாகவும், அஜபாரூபியாகவும் இருப்ப வளும், குங்குமப்பூவின் மத்யபாகத்தைப் போன்ற பிரகாசமுடையவளும், மாதுளம் பூவைப்போன்ற சிவப்பு நிறமுடைய வளும், ஒரே சமயத்திலுதித்த கோடி சூரியனைப் போல தேஜோமயமாகப் பிரகாசிப்பவளும், மூன்று கண்களை உடையவளும், பாலச்சந்திரனுடன் கூடிய மகுடத்தை அணிந்திருப்பவளும், பாசம், அங்குசம் கரும்பு வில், புஷ்பபாணம் இவை களுடன் கூடிய கைகளை உடையவளும், அசைவற்ற் ஆயிரக் கணக்கான மின்னலைப் போன்ற காந்தியுடைய மஞ்சள் நிறமான பட்டாடையை அணிந்திருப்பவளும், ஸம வட்டமாகவும், அழகான வட்ட வடிவமாகவும் இருக்கின்ற துடைகள், ஜகநம் (பிருஷ்டபாகம், அல்லது அடி வயிறு) ஸ்தன மண்டலம் இவைகளை உடையவளும், மகுடா கிரஹத்தில் இருக்கின்ற சந்திரனிலிருந்து பெருகுகின்ற அமுதத்தினாலே நனைந்திருப்பவளும், நெற்றியில் திலகம் போல் பிரகாசிக்கின்ற கண்களை யுடையவளும், விரும்பியவற்றையளிக்கும் கடைக்கண் வழியாக பெருகின்ற கருணை நிறைந்த கண்களை உடையவளும், ஆற்றலுடைய கண்களை உடையவளும், சூரிய சந்திர மண்டலங்களைப் போன்று விளங்குகின்ற ரத்னங்கள் பதித்த தோடுகளை அணிந்திருப்பவளும் சுக்கிர நக்ஷத்திரத்தைப்போல் பிரகாசமான நாஸா பரணத்தை யணிந்திருப்பவளும், மாதுளை முத்துக்களோ என்று சந்தேகிக்கத்தக்க பல்வரிசை களையுடையவளும், வீணையின் ஒலியைப் பழிக்கும், தனது சொற்சுவையுடையவளும், பச்சைக் கற்பூரவாசனை கமழும் தாழ்புல வடயத்தின் வாசனையினாலே திகந்தங்களை வாசனையுள்ளவை களாகச் செய்கின்றவளும் ரத்னக் கண்ணாடியின் செருக்கைப் பழிக்கின்ற கபோல பலகத்தின் ஒளியையுடையவளும், அழகு நிறைந்து மாசற்று விளங்கும் முக கமலத்தையுடையவளும், புன்சிரிப்புடன் கூடிய கடைக்கண் பார்வையுடையவளும், மணிமயமான மங்கள சூத்ரத்தினாலே பிரகாசிக்கின்ற சங்கு போன்ற கழுத்தையுடையவளும், தன்னை அண்டியவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கின்ற கல்ப விருக்ஷமாக விளங்குகின்ற நான்கு கைகளையுடை யவளும், ரத்தினங்கள் பதித்த மோதிரங்களை அணிந்து திகழ்கின்ற தளிர் போன்ற விரல்களையுடையவளும் ஒளி மிகுந்த ஹாராவளிகளை அணிந்து பிர காசிக்கின்ற தங்க மலைகளைப் போல பிராகாசிக்கின்ற ஸ்தனங்களை உடையவளும், ஸ்தன பாரத்தினாலே வணங்கி மத்யபாகத்தில் திருவலி (3 மடிப்பு) யினால் மனோஹரமான உதரத்தை (அடிவயிற்றை) யுடையவளும், விலைமதிக்கமுடியாத ரத்னங்கள் பதித்த அரை நூல் மாலையை ஜகநஸ்தலத்தில் (அடிவயிற்றில்) அணிந்திருப்பவளும், நன்கு வட்டமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற துடைகளை உடையவளும், நன்கு (வெளிப் படையாகத் தெரியாமல்) மறைந்து காணப்படுகின்ற கணுக்காலையும், கணுக்கால் முண்டையுமுடையவளும், ஒலிக்கும் மணிச் சலங்கையணிந்து அழகாகத் திகழ்கின்ற பாதங்களுடன் விளங்குகின்றவளும், ரத்னங்கள் பதித்த கழுத்தணி, வளையல், கிரீடம், தோள்வளை, கங்கணம், இவைகளையணிந்து இருப்பவளும், சங்கம் போன்று அழகான கழுத்தையுடையவளும், அழகான நாசிகையுடையவளும், கோவைக்கிளிபோன்றஓஷ்டத்தை (உதட்டை) உடை யவளும், சந்திரனைப் போன்ற முக மண்டலத்தையுடையவளும், சிருங்கார ரஸ பாவத்தை விளக்குகின்ற சகல விதமான ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு விளங்குகின்றவளும், சந்தனம், அகில், பச்சைக் கற்பூரம், இவைகளாலே நறுமணம் கமழும் கந்தத்தைத் தரித்து இருப்பவளும், காரணேஸனுடைய சிரஸிலுள்ள ரத்னங்களாலே வருடப்பட்ட பாத பத்மங்களையுடையவளும், பஞ்சப்ரேதாஸனத்தில் வீற்றிருப்பவளும் பஞ்சப்ரணவஸ்வரூபிணியுமான ராஜராஜேஸ்வரி தேவியை வணங்குகின்றேன்.

(சிந்தூரவர்ணம்)

**விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு, வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு, அவ்வழி கிடக்க,**
**பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ் நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு, என்ன கூட்டு இனியே?**

**பொருள் :** அபிராமியின் விழிகளில் என்றும் அருளுண்டு. வேதமுறைப்படி அவளை வழிபட எனக்கு நெஞ்சமும் உண்டு. ஆகையால் பழியையும், பாவத்தையுமே விளைவித்து, பாழ் நரகக்குழியில் அழுந்தி வாடும் பேதையர்களோடு எனக்கு இனி என்ன தொடர்பு? (அபிராமி அன்னை சிறந்த துணையாவாள்).

-அபிராமி அந்தாதி (79)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

சு. த. காசிராஜன்

சக்தி வழிபாடு மிகவும் பழமையானது. 5000 ஆண்டுகளுக்கும் முந்தியது என்று கருதப்படுகிறது. சிந்து சமவெளி நாகரிகத்தில் தேவி வழிபாடு இருந்திருக்கிறது. அதனை ஆராய்ச்சி வல்லுநர்கள் 'அம்பா வழிபாடு' எனக் குறிப்பிடுகிறார்கள். அம்பாதான் இன்று அம்மா ஆகியிருக்கிறாள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கொற்றவை வழிபாடு மிகவும் தொன்மையானது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் கொற்றவை பலவாறாக வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். கொற்றவை வெற்றியைக் குறிக்கும் தெய்வம். அதுவே பண்டைத் தமிழர்களின் வெற்றித் தெய்வம். போருக்குப் போன தலைவன் வெற்றியுடன் திரும்பி வருவதற்கு, தலைவியுடன் அவள் தோழிகளும் கொற்றவையை வழிபட்டனர் எனச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன. கொற்றவையை 'இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு" எனப் போற்றிப்பாடுகிறது சிலப்பதிகாரம். வேத உபநிஷத்துக்களும், தேவி வழிபாடு பற்றிப் பலவாக உரைக்கின்றன.

வாழ்விலே முக்தி தருவது சக்தியின் பக்திதான் என்பதும், இந்தக் கலியுகத்தில் பொன்யுகம் காட்டுவது அதுவே என்பதும், கோடானுகோடி பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தேவி பூஜையில் நவராத்திரி மகோன்னதமானது. புரட்டாதி மாதம் வளர்பிறையில் ஒன்பது நாள்கள் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. பக்தி நயத்துடன் ஆடல் பாடல்களுடன் அந்த விழா கோலாகலமாக நடைபெறும்.

அந்த ஒன்பது நாள்களில் முதல் மூன்று நாள்கள் ருத்திர துர்க்கையை வணங்குகிறார்கள். அடுத்த மூன்று நாள்கள் லட்சுமி துர்க்கையைப் பூசிக்கிறார்கள். கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதி துர்க்கையை வழிபடுகிறார்கள். விண்ணவர்களும் மண்ணவர்களும் நவராத்திரி விரதத்தைப் பயபக்தியுடன் மேற்கொண்டு லட்சிய சித்தி அடைந்ததாக ஏடுகள் கூறுகின்றன. நவராத்திரி ஒரு சாதாரணமான கலைத்திருவிழா அன்று. மேலே குறிப்பிடப்பட்டுள்ளது போலச் சக்தி பூஜையை மையமாகக் கொண்ட கலைப் பெருவிழா ஆகும். கிரியா சக்தி என்பது மகாகாளியைக் குறிக்கும். லட்சுமியை இச்சா சக்தி என்பார்கள். மகா சரஸ்வதிதான் ஞானசக்தி. ஞானசக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி ஆகிய மூன்று தத்துவச் சக்திகளும் இணைந்து பெரும் சக்தியாக – மகாசக்தியாக விளங்குகிறாள். அவளைத் தான் துர்க்கை என்றும் திருமகள் என்றும் கலைமகள் என்றும் போற்றிப் பாடுகிறோம். அந்தச் சக்தியின் வழிபாடுதான் கலை வளர்க்கும் நவராத்திரி விழாவாகிறது.

அந்த விழாவில்தான் எத்துணை எழுச்சி; எத்துணை மகிழ்ச்சி. வீடுகளில் கொலு வைக்கிறோம். ஆலயங்களிலும் கொலு வைப்பதுண்டு. நவராத்திரி விழாவில் பொம்மைகளை அலங்கரித்துக் கொலு வைப்பது கலை உள்ளங்களுக்கு விருந்தாகிறது. குழந்தைகளை அலங்கரித்து அழகு பார்க்கிறோம். பெண்கள் தங்களை அலங்காரம் செய்து கொள்வார்கள். மங்களகரமாகக் காட்சி தருவார்கள். மஞ்சள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோபுரத் திருப்பணிகளை மேற்பார்வை செய்த
லயன். தேசகீர்த்தி
**ச. ஆறுமுகநாதன்** அவர்கள்
உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



தேவஸ்தான பிரதமகுரு
**சிவஸ்ரீ. வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



ஸ்தபதி **திரு. க. புருஷோத்தமன்** அவர்கள்
சிதம்பரம், தமிழ்நாடு, இந்தியா.



தேவஸ்தான ஆஸ்தான ஆசாரியார்
**செ.முத்துக்குமார், செ.செந்தில்குமார்**
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமம் பரிமாறிக் கொள்வார்கள். இது ஒன்பது நாட்களும் தவறாமல் நடக்கும். இந்த மகிழ்ச்சியில் முதியவர்களும் பெரியவர்களும் கலந்து கொள்ளுவார்கள். அழகுணர்ச்சியும் கலை உணர்ச்சியும் பெருக்கெடுத்து ஓடும். கலைச்சுவை சொட்டச்சொட்டப் பொம்மைக் கொலு வைத்து விடுவதால் மட்டும் நவராத்திரி மகிமை, முழுமை பெற்று விடுவதில்லை. பொம்மைகளை மேடைகளில் அடுக்கி அழகு பார்ப்பதுபோல நம்முடைய இதய மேடைகளில் நவராத்திரி நாயகியான அம்மனைக் கொலுவிருக்கச் செய்வதே முழுமையான வழிபாடு ஆகும்.

உலகத்தை வசப்படுத்திக்கொள்ள மகாகாளி அருள் பாலிக்கிறாள். மகாலட்சுமி தன்னை வழிபடுவோர்க்கு தலைமைப் பொறுப்பைத்தருகிறாள். அறிவுச் செல்வங்களை வழங்கும் தெய்வம் மகா சரஸ்வதியே.

மகிஷாசுரனை வதம் செய்து கொன்றொழித்த சக்தியை 'மகிஷாசுரமர்ததனி' என்று வாழ்த்தி வணங்கி நவராத்திரி விழாக் கொண்டாடப்படுகிறது. கெடுமதி, சூது நெஞ்சம், முரட்டுத்தனம், மிருகபுத்தி, துஷ்டத்தனம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற மகிஷாசுரனின் அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல. அதை மும்மூர்த்திகளாலேயே தாங்கமுடியவில்லையாம். அவர்கள் அதை அடக்க முடியாமல் செயலற்றுப் போனார்கள். தீமைகளின் பேருருவாய்த் திகழ்ந்த மகிஸாசுனை அழித்தொழித்து உலகில் அன்பும், அறமும் எல்லா நலங்களும் பெருகச் செய்வது எப்படி? அசுரனின் அட்டூழியங்கள் நாளும் பெருகி உலகம் அழிவதா அல்லது அவனை அழித்து உலகம் உய்வதா? சேயைக்காக்கத்தாய் புறப்பட்டது போல அன்னை பராசக்தி புறப்பட்டு விட்டாள். தாயன்புக்கு நிகர் உண்டோ? தாய், சக்தி மயமாய்ப் புறப்பட்டுவிட்டாள். பார்வதியும், லட்சுமியும், சரஸ்வதியும் ஒன்றிணைந்து துர்க்காதேவி என்ற பெயரில் மகிஷாசுரனை வதம் செய்து, மகிஷாசுரமர்த்தனி ஆனாள். தேவி ஒன்பது நாட்கள் கடும் விரதம் இருந்து கடும்போர் புரிந்து பத்தாவது நாளில் அசுரனை வென்றாள். உலகில் அநீதிகள், அக்கிரமங்கள், அட்டூழியங்கள், அட்டகாசங்கள் எல்லாம் அழிந்து அன்பு, அறம், பண்பு எல்லாம் மீண்டும் மேலோங்கி நின்றன. அகிலலோக மோகினி – ஜகன்மாதா விரதமிருந்த அந்த ஒன்பது நாட்கள் தான் நாம் கொண்டாடுகின்ற நவராத்திரி, பத்தாவது நாள்தான் விஜயதசமி. இந்தப் பத்து நாட்களையும்தான் 'தசரா' என்கிறோம். மைசூரில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் தசரா உலகப் பிரசித்திபெற்றது. ஒன்பதாவது நாளை ஆயுத பூஜையாகக் கொண்டாடுகிறோம். அன்றுதான் அன்னை வெற்றிதேடித் தரப்போகும் ஆயுதங்களைப் படைத்துப் பூஜை செய்தாளாம். தொழிலாளர்கள், உழவர்கள், நெசவாளர்கள், மாணவர்கள் எல்லாம் தத்தம் தொழிலில் முன்னேற–வெற்றி பெற ஆயுதங்களை வைத்துக் கலைமகளை வணங்குவது நவராத்திரி விழாவில் ஓர் முக்கிய அம்சமாக இன்றும் இருக்கிறது. அன்னை அசுரனை வென்ற பத்தாவது நாள் விஜயதசமி என்று கொண்டாடப்படுகிறது. வெற்றியைத் தரும் பத்தாம் நாள் என்பதே அதற்குப் பொருள்.

தேவி, ஒளிமயமானவள். கண்ணைப் பறிக்கும் அழகுக்கு இருப்பிடம் அவள். பரவசமூட்டும் அழகுக்கலைக்கு அன்னையே விளைநிலம். அழகுணர்ச்சியின் உருவமும் அவளே. அம்மையின் அழகுக்கு நிகர் உண்டோ? அவளுக்கு நிகர் அவளே.

நவராத்திரி நாட்களில் அன்னைக்கு அலங்காரம் வெகு அற்புதம். அழகுக்கு அழகு செய்து பார்ப்பது நேர்த்தியிலும் நேர்த்தி. ஒவ்வொரு நாளும் தேவி அலங்காரம் நவராத்திரி விழாவுக்கு விளக்கம். அர்த்தமற்ற அலங்காரம் அலங்கோலம் தான். அசுரர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதம் செய்த அன்னையின் அலங்காரம் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும். ஆயிரம் அர்த்தங்கள் அதனுள்ளே அடங்கும்.

முதல் நாளில் அன்னை அட்சய மாலையுடனும், அசுரர்களை வதம் செய்ய உதவிய ஆயுதங்களுடனும் அலங்கார நாயகியாகக் காட்சி தருவாள். மகிஷா சுரனின் பரிவாரங்களை வதம் செய்த ராஜராஜேச்வரியாக இரண்டாவது நாளில் எழுச்சி உருவாய்க் கரும்புவில், மலரம்பு ஆகியவற்றுடன் நிற்பாள். மூன்றாவது நாளில் தேவி, சூலாயுதம் தாங்கி மகிஷத்தின் தலை மீது நின்றிருக்கும் காட்சி இடம்பெறும்.

வெற்றிநாயகியாக நாலாவது நாளில் அலங்கரிப்பார்கள். அன்று ஜெயதுர்க்கை சிங்காசனத்தில் வீற்றிருப்பாள். துன்பங்களில் இருந்து விடுபட்ட முனிவர்களும் தேவர்களும் அன்று ஆசி பெறுவார்கள். ஐந்தாவது நாளில் அசுரன் ஒருவனின் தூதுவன் வந்து சொல்லுவதைக் கேட்கும் கோலத்தில் அன்னையின் அலங்காரம் இருக்கும். ஆறாவது நாளில் பரமேஸ்வரி பிற அணிந்து கரத்தில் அட்சயமாலை, மண்டை ஓடு, தாமரைப்பூ, பொற்கலசம் எல்லாம் தாங்கி சர்ப்பராஜ பீடத்தில் உட்கார்ந்திருப்பாள்.

தேவி ஏழாவது நாளில், பொற்பீடத்தில் உட்கார்ந்து வீணை மீட்டும் நிலையில் அமைதியே உருவாய்க் காட்சி அளிப்பாள். எட்டாவது நாளில், அஷ்டசக்திகள் சுற்றி நிற்க, கரும்பு வில்லுடன் கருணை பொழியும் முகவசீகரத்துடன் அம்மா அமர்ந்திருப்பாள். கடைசி, ஒன்பதாவது நாளில், சிவசக்தி வடிவாய் சகல ஆயுதங்களுடனும் அம்பாள் அலங்காரம் அமைகிறது. நவராத்திரி அலங்காரங்கள் தேவி மகிமையின் தத்துவார்த்த விளக்கமாக விளங்குகின்றன.

நவராத்திரி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களில் கொண்டாடப் படுகிறது. அது எந்தப் பகுதியில் எந்தப் பெயரால் கொண்டாடப்பட்டாலும் சக்தி பூஜையே மையமாக இருக்கும். வங்காளிகள் கொண்டாடும் துர்க்கா பூஜை குறிப்பிடத்தக்கது. அதுதான் அவர்களின் தேசிய பண்டிகையாகும்.

தான் படைத்த ஜீவராசிகளுக்கு, அசுரத்தனங்களால் ஏற்படும் அல்லல்களை அழித்து, எல்லா நலங்களையும் வளங்களையும் வழங்கும் தத்துவ விளக்கங்களைக் கொண்ட நவராத்திரி மக்கள் விழா என்பதில் சந்தேகம் இல்லை.

நவராத்திரி விரதத்தை இராமபிரானும் அனுஷ்டித்ததாக, வியாசமா முனிவரின்தேவி பாகவதம் கூறுகிறது. நாரதர் உபதேசத்தின்படி, இராமன் நவராத்திரி விரதம் இருந்து, இழந்த சீதையையும் ராஜ்யத்தையும் பெற்றானாம். விஜயதசமிநாளில்தான்இராவணனுடன்போரிட, இராமன் வானர சேனைகளுடன் புறப்பட்டான். வெற்றியும் கண்டான். கௌரவர்களின் கொடுமையை அழித்து மீண்டும் விடிவு காண, பஞ்சபாண்டவர்கள் சபதம் மேற்கொண்டதும் அதே விஜயதசமி நாளில்தான். சத்ரபதி சிவாஜி இந்து சாம்ராஜ்யம் அமைக்க விஜயசதமி நாளில்தான் புறப்பட்டானாம். சிவபெருமானே நவராத்திரி விரதத்தை மேற்கொண்டுதான் திரிபுரத்தை எரித்ததாகப் புராண வரலாறு கூறுகிறது. திருமால், இந்திரன் உட்பட தேவாதி தேவர்கள் எல்லாம் சக்தி பூஜையான நவராத்திரி விரதமிருந்து தான் அசுரர்களை அழித்திருக்கிறார்கள். நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்துத்தான் பல்வேறு முனிவர்களும் தெய்வீகப் பேறு பெற்றார்கள்.

இந்த நவயுகத்துக்கும் நவராத்திரி விழா பொருந்துகிறது. காலங்கள் பல கடந்தாலும் நவராத்திரி மகிமை அன்று போல் இன்றும் இருக்கிறது. மனிதன் நாகரிக ஏணியில் எத்தனை படிகள் ஏறி மேலே போனாலும் நவராத்திரி விழாவின் தத்துதவத் தேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் குறையவில்லை. அதனால் தானே என்னவோ அது புராணப் பழைமைக்கும் கலியுகப் புதுமைக்கும் பொற்பாலமாக அமைந்திருக்கின்றது.

அன்னை துர்க்காதேவி, சிங்கத்தின் மீது ஏறிப் புறப்பட்டுச் சென்று செய்த மகிஷாசுர வதம் இன்னும் முடியவில்லை. அது கால தேசங்களை எல்லாம் கடந்து தொடர்ந்து நடந்து வருகிறது. நவராத்திரி அடியும் முடியும் தெரியாத தொடர் கதை. நவராத்திரி லட்சியம் ஈடேறப் போகும் நாள் எந்நாளோ? அறியாமை, கல்லாமை, பொறாமை, இல்லாமை போன்ற பல்வேறு தீமைகளின் உருவமான மகிஷாசுரன் போன்ற அசுரர்கள் வதம் முடிந்து விட்டது என்று புராணம் கூறுகிறது. எனினும் அந்தத் தீமைகள் ஏதோ ஒரு ரூபத்தில் இன்னும் உலகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகத்தைத் தனது குழந்தையாகப் பாவித்து மடியில் கிடத்திக் கொண்டிருக்கும் ஆதிசக்தியின் ஆவேசம் எப்படித் தணியும்? தாயின் வதம் தொடர்கிறது.

கல்லாமையை ஒழித்து, அறியாமையை அழித்து இல்லாமையைத் தீர்த்து, பொறாமையைப் பொசுக்கி, உண்மையை நிலைநாட்ட, நேர்மையைப் பாதுகாக்க, தர்மத்தை நிலைநிறுத்த ஆன்றோரும் சான்றோரும் ஒருவாறு மகிஷாசுர வதம் செய்து கொண்டிருக்கிறார்கள். நவராத்திரியின் தத்துவப் போராட்டம் தொடர்கிறது. இறுதியில் துஷ்ட நிக்ரகம் நடக்கும். தேவியின் தர்மாவேசம் வெல்லும். அது பொய்மையின் கொலுவோ பொம்மையின் கொலுவோ அல்ல! அம்மையின் கொலுவேதான்!

**தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா**
**மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா**
**இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே**
**கனம் தரும் பூங் குழலாள், அபிராமி, கடைக்கண்களே,**

பொருள் : ஏ. அபிராமி! மேகம் போலும் அடர்ந்த கூந்தலையுடையவளே! நின்னுடைய அருள் பெருக்கும் கடைக்கண்களை வணங்கினாலே போதும். அக்கண்களே அடியார்களுக்குச் சிறந்த செல்வத்தைத் தரும். நல்ல கல்வி தரும். சோர்வடையாத மனத்தைத் தரும். தெய்வீக அழகைத் தரும். நெஞ்சில் வஞ்சம் கலவாத உறவினர்களைத் தரும். நல்லன எல்லாம் கிட்டும்.

-அபிராமி அந்தாதி (69)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியில் சக்தி பீடங்கள்

டாக்டர் டி.பி. சித்தலிங்கம்

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்று கூறுவது சைவம். இறைவனின்அருளே சக்தி வடிவமாய் விளங்குகிறதுஎன்பது இதன் பொருள். இறையருளே மலம்நீக்கி முத்தி தருவது. அவ்வருள் அன்னை வடிவில் காசியில் நிலைகொண்டுள்ள இடங்களைக் காண்போம்.

**1. அன்னபூரணி :** காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்பது தமிழ் நாட்டு வழக்கு. இதனைத்தென்னிந்தியாவின் பிற மாநிலங்களிலும் கேட்கின்றோம். எனினும், காசியிலும், வடஇந்தியாவிலும் விசுவநாதரின் தேவியாக– காசிநகர்த் தலைவியாக, அன்னபூரணியையே குறிப்பிடுகின்றார்கள்.

விசுவநாதர் கோயிலுக்கு அருகிலுள்ளது அன்னபூரணி கோவில். இறைவனுக்கே அன்னமிட்டவள் இத்தேவி. இத்திருக்கோலத்தைத் தீபாவளி நாளில் காணலாம். வட இந்திய உணவு வகைகள் அனைத்தும் அன்னையின் முன் படைக்கப்பட்டிருக்கும் (துளசி மானச மந்திர் என்னும் கோவிலில் அன்னை அன்னமிடும் காட்சியை எப்போதும் காணலாம்).

நவராத்திரியில் எட்டாம் நாளன்று இந்தத் தேவியைச் சிறப்பாக வழிபடுபவார்கள். வளர்பிறை அட்டமியில் இக்கோவிலை வலம் வருவது, காசிநகர் வலம் செய்த புண்ணியத்தை அளிக்கும் என்று காசி காண்டம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது.

ஆதி சங்கரர் 'அன்னபூர்ணாஷ்டகம்' இயற்றியது இத்தேவியின் மீதுதான்.

**2. விசாலாட்சி :** தென்னாட்டு வழக்குக்கேற்ப, காசியில் விசாலாட்சி சந்நிதி வேண்டுமென்று எண்ணி, நகரத்தார் அமைத்துள்ள கோவில். அழகொழுகும் திருமுகமுடைய வடிவம். நவராத்திரியில் சிறப்பாக பூசையும் விழாவும் உண்டு. பத்தாம் நாள் (விஜயதசமி) அன்னை வேட்டையாடும் காட்சியை இங்கே காணலாம். உற்சவ மூர்த்தியும் நவக்கிரகங்களும் இந்தக் கோவிலில் உள்ளன. இந்தத் தங்கத் திருவுருவை (விசாலாட்சி உற்சவர்) தீபாவளி நாளில் நகரத்தார் சத்திரத்தில் அலங்காரம் செய்து வைக்கின்றார்கள். விசாலாட்சி கோவில் நகரத்தார் நிர்வாகத்தைச் சேர்ந்தது. இது, விசுவநாதர் கோவிலுக்கருகிலேயே உள்ளது.

**3. துர்க்கை :** காசியின் தென் எல்லையாகக் கருதப்படும் அஸ்ஸி நதிக்கருகே இக் கோவில் உள்ளது. வேண்டு வரம் தரும் சந்நிதி. நவராத்திரியில் நான்காம் நாள் இதனைத் தரிசிப்பர். இக் கோவிலில் பத்திர காளி, இலட்சுமி, சரஸ்வதி சந்நிதிகளும் உண்டு. பத்திரகாளி, தில்லையிலுள்ள எல்லை காளி போலத் தோற்ற மளிக்கும்.

நவராத்திரியின் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவியாக ஒன்பது தேவியரைக் காசி நகரத்து மக்கள் சென்று வணங்குகிறார்கள். அக்கோவில்களாவன:

**4. சைலபுத்திரி (முதல் நாள்) :** மலைமகள் என்பது இதன் பொருள். காசிக்கு எல்லை வகுக்கும் வருணை நதிக்கருகில், அலைபூர் என்னும் இரயில் நிலையத்துக்கருகே இக் கோயில் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பிரம்மச் சாரிணி (இரண்டாம் நாள்) :**

'துர்க்கா காட்' எனும் பெயருடைய படித்துறைக்கருகே உள்ள கோவில்.

**6. சித்திர கண்டா (மூன்றாம் நாள்):**

'சௌக்' கடைத் தெருவுருக்கருகே உள்ளது.

**7. கூஷ்மாண்டா (நான்காம் நாள்) :**

துர்க்கையின் மற்றொரு பெயர். மேலே துர்க்கை பற்றிய பகுதியில் விவரம் காண்க.

**8. ஸ்கந்த மாதா (ஐந்தாம் நாள்):**

வாகீசுவரிதேவி என்றும் கூறுவார்கள். 'ஜைத்புரா" என்னும் பகுதியில் கோவில் உள்ளது.

**9. காத்தியாயினி (ஆறாம் நாள்):**

ஆத்ம விசுவேசுவரர் கோவிலில் ஒரு சுவரில் பதித்துள்ள திருவுருவம். அளவில் சிறியதாயினும் அழகுடையது. சங்கடாதேவி கோவிலுக்குப் பின்புறம் இதன் நுழைவாயில் இருக்கின்றது.

**10. காளராத்திரி (காளி : ஏழாம் நாள்) :**

இது 'காளிகா கலி" யில் இருக்கின்றது.(கலி–சந்து).விசுவநாதர் கோவிலிருந்துசெல்லாம். துர்க்கை கோவிலில் உள்ளபத்திரகாளியைப் போலவே இந்தத் திருவுருவும் அச்சம் தருவதாய் அமைந்துள்ளது.

**11. அன்னபூரணி (எட்டாம் நாள்):**

மேற்குறிப்பிற் காண்க.

**12.சித்திதாத்திரி (ஒன்பதாம் நாள்):**

சங்கடாதேவி கோவிலுக்கருகே உள்ளது. சித்தேசுவரி, சித்தி மாதா என்றும் வழங்குவர். கோவில் சிறியதாயினும் அழகும் தூய்மையும் உடையது. அமைதிமிக்கது. ஒரு மாடத்தில் தேவியின் திருவுருவம் அமைந்துள்ளது. கீழே, வெள்ளித்தொட்டியில் சிவலிங்கமே இருக்கின்றது.இக்கோவிலில் சந்திரகூபம் என்னும் கிணறு உண்டு. இதில் பார்த்தால் முகத்தின் நிழல் தெரியும். அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் இறக்க இருப்பவர்களின் நிழல் தெரியாது என்று கூறுகின்றார்கள்."புலா நலா" என்னுமிடத்திலிருந்தும் இங்கு செல்லலாம். இவ்வனைவரும் நவராத்திரி தேவியர் வேறு பல சந்நிதிகளும் காசியில் இருக்கின்றன.

**13. சங்கடாதேவி :**

சங்கடங்களை (துன்பங்களை)த் தொலைப்பவள். (கேட்ட வரம் தருபவள் என்பது பொருள். சங்கடஹரண விநாயகர், சங்கடமோசன ஆஞ்சநேயர் என்னும் பெயர்களும் இப் பொருளையே தருகின்றன. கம்பீரமான திருமுகம், பொதுவாக, மற்றத் தேவியர்களின் உடற்பகுதியைக் காண இயலாது. விசாலாட்சியும் இவ்வாறே. சங்கடாதேவியின் முழுத் திருவுருவத்தையும் திருவடிகளையும் காணலாம். வெள்ளிக்கிழமை சிறப்பான நாள். வேண்டியவற்றைக் கொடுக்கும் அன்னை.

**14. சித்தியாவாசினி :**சங்கடாதேவி கோவிலின் வாயிலுக்கெதிரில் உள்ளது.காசியிலிருந்து 72 கி.மீ. தொலைவில் விந்தியாசலம் என்னும் தலம் உண்டு. அங்குள்ள விந்தியவாசினி யின் புகழ். தேவி பக்தர்கள் அனைவர்க்கும் தெரியும். அவ்வன்னையின் மறுபதிப்பே இந்த விந்தியவாசினி என்பர்.

**15. அசானக் மா :** மா–அன்னை. 'அசானக்" என்பதற்கு அறியாதவாறு, எதிர்பாராதவாறு என்பது பொருள். நாமறியாதவாறே நமக்கு நன்மை செய்பவள் என்பது இதன் கருத்தாய் இருக்கலாம். இரட்டைப் பிள்ளையார்களைப் போன்று இரட்டைத் தேவியர். இருவரும் ஒரே திசையை நோக்க வில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் கிழக்கே நோக்க, மற்றவர் தெற்கு நோக்கியிருக்கின்றார். அழகிய சிறுதிருவுருவங்கள்.

**16. சந்தோஷி மா :**

சந்தோஷம் – திருப்தி. எளிதில் மன மகிழ்பவள் அல்லது எளிதில் மகிழ்ச்சி தருபவள் என்னும் கருத்தில் இவ்வாறு வழங்குகின்றார்கள். பெண்களே மிகுதியாக வழிபடுகிறார்கள். வெள்ளிக்கிழமை சிறப்பான நாள். அன்று முழுவதும் உணவேயின்றியிருந்து வழிபடுவர். உப்பு, புளி முதலியவற்றைத் தொடவும் கூடாது. பூசைமுடித்த பிறகு சந்தோஷிமா வரலாற்றைப் படிக்கின்றனர். இக்கோவிலிலும் ஒருவர் படிக்க, பலர் அவரைச் சூழ்ந்து இருந்து கேட்கின்றார்கள். பெரும்பாலும் கன்னிப் பெண்கள் இவ் விரதத்தை மேற்கொள்கின்றனர். கடலை, வெல்லம் இரண்டும் நிவேதனப் பொருட்கள்.

**17. பகளாமுகி :**

பகைவரை செல்வதற்கு உதவி செய்பவள்; பிறரை வசியம் செய்யவும் சித்திகள் பெறவும் இவ்வன்னை வழிபாடு உதவும் என்று மக்கள் நம்புகின்றார்கள் (வங்காளத்தில் இத்தேவி உபசரணை மிகுதி) பகளாமுகி, பீதாம்பர் தேவி இரண்டும் இரட்டைச் சந்நிதிகளாக ஒரே இடத்தில் இருக்கின்றன.

**18. பீதாம்பரதேவி :**

சங்கடாதேவியின் கோயில் மதிலை ஒட்டி உள்ள ஒரு கோவில். 15 படிகளை ஏறிச் செல்ல வேண்டும். இத் தேவி, வழக்குகளில் வெற்றியைத் தருபவள் என்பது நம்பிக்கை.

**19. காமாச்சா தேவி :**

காமாச்சா என்னும் பகுதியில் உள்ள கோவில். காமாட்சி சந்நிதி இந்தியாவில் இரு இடங்களில் தான் முதலில் இருந்தது. ஒன்று காஞ்சிபுரம், மற்றையது அஸ்ஸாம் மாநிலத்தில். அங்குள்ளவர்கள் தமது மொழியின் இயல்புக்கேற்ப காமாட்சியை, 'காமாக்கியா" என்றழைப்பர். காசியில் எல்லாத் தெய்வங்களுக்கும் கோவில்கள் இருக்கின்றன. காமாட்சி தேவிக்கும் கோவில் வேண்டுமென் றெண்ணிப் பிற்காலத்தில் எழுப்பிய கோவில், இங்குள்ள மொழியின் இயல்புக் கேற்ப, 'காமாச்சா" எனப்பட்டது.

**20. சீதளாதேவி :**

தென்னாட்டில் மாரியம்மன், அம்மை நோயின் தேவதையாக விளங்குவதைப் போல, சீதளாதேவியை வடக்கே வாழ்பவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.சீதளா தேவிக்கென நான்கு கோவில்கள் தசாசுவமேதக் காட்டிலும் (படித்துறை),பைரவநாதர் கோவிலுக்கு அருகிலும், இராஜமந்திர் பகுதியிலும், சித்தேசுவரிகோவிலுக்கருகிலும் இருக்கின்றன. கேதாரகட்டத்தில்,கௌரிசந்நிதிக்கு வெளியிலும் சீதளாதேவியின் திருவுருவைக் காணலாம். தசாசுவமேதத்தில் இருப்பதே சிறப்புடையது. தனிக்கோவில். விசாலமான மேடையின் மீது அமைந்துள்ளது.கங்கையில் வெள்ளம் பெருகும்போதுஇக்கோவில் மூழ்கிவிடும். நீர் வடிந்த பிறகுவழிபாடு தொடரும். ஊரில் அம்மை நோய் பரவும் போதுஇவ்வன்னைக்குத் தயிர், பால் அபிடேகம் செய்வர்.

**21. (கேதார) கௌரி :**

கேதார கட்டத்தில் கேதார நாதர் கோவிலில் உள்ள சந்நிதி. அழகிய திருவுரு. வெள்ளிக்கிழமைகளில் பூப்பாவாடை அணி விப்பார்கள். அது கண்கொள்ளாக் காட்சியாகும். தென்னாட்டு முறைப்படி பூசை, நின்ற திருமேனி. கேதாரநாதர் கோவில் திருப்பனந்தாள் மடத்து நிர்வாகத்தில் உள்ளது.

கேதார கட்டத்தில் கௌரி குண்டம் எனும் குளம் இருக்கின்றது. அதில் மூழ்கி, கேதார நாதரை வழிபடுவர். மழைநாளில் கங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம் அதை மூடிவிடும்.கேதாரநாதர் கோவிலில் மீனாட்சி சந்நிதி உள்ளது. இதுவும் நகரத்தார் திருப்பணியாம்.

**22. பவானி :**

'பஞ்சக் குரோச யாத்திரை" என்பது காசி நகரைச் சுற்றிவலம் வருவது. 'நித்திய யாத்திரை" என்பது ஒவ்வொரு நாளும் வணங்க வேண்டிய முறை. பத்து இடங்களை வழிபடவேண்டும். அவையாவன :

1. விசுவேசுவரம்
2. மாதவம் (பிந்து மாவதர்)
3. துண்டி (விநாயகர்)
4. தண்டபாணி
5. பைரவம்
6. வந்தே காசி
7. குகா (குகை)
8. கங்கை
9. பவானி
10. மணிகர்ணிகை

பவானியென்பது அன்னபூரணியையே குறிக்கும்.

**23. லலிதா :**

விசுவநாதர் கோவிலிலிருந்து வெளிவந்து இடப்புறம் திரும்பிச் சென்றால் இக் கோவிலைக் காணலாம். கோவில் மிகச் சிறியது. பளிங்கில் அமைந்த திருவுருவம். சிறியதாயினும் அழகியது. சக்தி மிக்கது.

**24. வாராகி :**

காசி விசாலாட்சி கோவிலிலிருந்து வெளி வந்து இடப் புறம் திரும்பிச் சென்றால் இக்கோவிலைக் காணலாம்.கோவில் மிகச் சிறியது. பளிங்கில் அமைந்தது. சூரியன் உதிப்பதற்கு முன்பு பூசையும் வழிபாடும் நடைபெறுகிறது.தரைமட்டத்துக்குக்கீழே அம்மன் சிலை.உயரே தூக்கிய முகம். அச்சமூட்டும் நிலையில் இருக்கின்றது. கீழே இறங்கித்த ரிசிக்க இயலாது. முன்பு அதை அவமதித்து வந்தார்களாம். தேவி உக்கிரம்மிகுந்தவளாதலின் சிலர் உயிரிழக்கநேரிட்டது. எனவே கீழேயிறங்கி, தேவிக்கு நேரே நின்று தரிசிப்பதைத் தடைசெய்து விட்டார்கள். பார்வைக்குப் பயங்கரமாகத் தோற்றளித்தாலும் அன்பர்க்கு எளிதில் அருள் வழங்கும் திருமேனி. நின்ற நிலை.

**தங்கச் சிலை கொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து, மத**
**வெங் கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்**
**கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்**
**செங் கைக் கரும்பும், மலரும், எப்போதும் என் சிந்தையதே.**

-அபிராமி அந்தாதி (62)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி விசாலாக்ஷி

மு.அருணாசலம்

முழுமுதற் கடவுளைச் சைவமக்கள் சிவ பரம்பொருள் என்று போற்றுகின்றார்கள். சிவ வழிபாடு, தென்னாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் சிறப்பாக உரிய தனிக்கடவுள் நெறி. பிரபஞ்சம் எங்குமே இந்த ஒரே பொருளின் ஆட்சி நிலவுகின்றது என்பது சைவப் பெருமக்கள் கருத்து. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவனுக்கு, ஆயிரம் திருநாமம் சொல்லி மக்கள் பரவுவது. அவனுடைய சர்வ வியாபகத் தன்மையையும் மனிதனுடைய வரையறையுடையதாகிய ஏகதேசத் தன்மையையும் காட்டுவதாகும். யார் எந்தப் பெயரால் எங்கு எந்தத் தெய்வத்தையும் வழிபட்டாலும், அந்த வழிபாடுகளெல்லம் முழுமுதற் பொருளாகிய சிவ பரம்பொருள் ஒன்றினுக்கே செல்கின்றது என்பது சைவர் கொள்கை. இதையே மாணிக்கவாசகர் தென்னாடுடைய சிவன் எந்நாட்டுக்கும் இறைவனாய் உள்ளான் என்று தமது பாடலில் குறிப்பிட்டார்.

பரத கண்டத்தின் ஒருமைப்பாட்டிற்கு அடையாளம் காசித் தலம். இமயம் முதல் சேது வரை என்று சொல்வதை "ஆசேது ஹிமாசலம்" என்று வடமொழியில் சொல்வார்கள். தமிழ்நாட்டில் பல்லாயிரம் சிவாலயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெருமையோடு விளங்குகின்றன. ஆனால் விரிந்த வடநாடு முழுமையிலும் சிறப்பான ஒரு நூறு கோயில் கூடக் காணக் கிடைப்பதரிது. இருப்பினும், வடநாட்டில் கங்கைக் கரையிலுள்ள காசித் தலமே தலங்கள் அனைத்திலும் புனிதமானது என்ற கரத்து வடநாட்டு மக்களிடத்திலும் தமிழ்நாட்டு மக்களிடையிலும் நிலவி வரு கின்றது. இது இந்திய நாட்டின் பண்டைய ஒருமைப்பாட்டுணர்வின் விளைவேயாகும்.

காசியில் எழுந்தருளியுள்ள பெருமான் திருநாமம் விசுவநாதர், விசுவேசர், அகிலேசர் என்பது. இவர் பூலோகத்துக்கு மட்டும் அல்லாமல், அகிலப் பிரபஞ்சத்துக்கும் நாதர் என்பது இதன் பொருளாகும் (விசுவம் – பிரபஞ்சம்).

உருவம் இல்லாத பரம்பொருள், மக்கள் உய்யும் பொருட்டு அவர்கள் மனத்தில் நினைக்கத்தக்கதாயும் கண்ணால் காணத் தக்கதாயும் உருவங்கொண்டு வருகின்ற நிலையை மூர்த்தி என்று சொல்லுகின்றார்கள். பரம்பொருள் நிலையை நாம் மூன்றாகச் சொல்லுவோம். முதலாவது அருவம். முன்னே சொல்லப்பட்டது போல இது மனம் வாக்குக்கு அப்பாற்பட்டது. அவனருளால் இந்த நிலையை ஓர் ஆன்மா தனக்குள்ளே அவன் உணர்த்த உணரலாமே அன்றி, கருவிகரணங் கொண்டு காணவியலாது. அடுத்து உயிர்களுக்கு அருள் செய்யும் கருணையோடு அந்தப் பொருள் காட்சிதருகின்ற கோலம் சிவலிங்கத் திருமேனி. இது கண் முன்னே காண்கின்ற திடமான வடிவங் கொண்டிருப்பது உண்மை; இலிங்க வடிவம் நீண்டுருண்ட கல்லாக இருக்கின்றது. ஆனால், சந்திரசேகரர் நடராசர் மூர்த்திகளுக்கு இருப்பதுபோல இந்தத் திருமேனிக்கு எந்த உறுப்புக்களும் இல்லை. உறுப்பில்லாமையால் அருவம்; வடிவம் இருப்பதால் உருவம்; ஆகவே இதை ஆன்றோர் அருவுருவம், ரூபாரூபம் என்பார்கள். ஆலயத்தில், நாம் கண்ணால் கண்டு வழிபடத் தக்கவாறு உருவம் உடைய மூர்த்திகள் – கணபதி, முருகன், நடராசர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், பிட்சாடனர், அர்த்தநாரீசுவரர் ஆகியோர் எல்லாம் – உருவத் திருமேனிகள். இந்த மூன்றுக்கும் வேறுபாடு இல்லை. உருவமாகிய மூர்த்தியைக் காணும் போதும், அருவுருவமாகிய சிவலிங்கத்தைக் காணும்போதும், நாம் இவற்றுக்கு மூலமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவப் பொருளையே சிந்திக்க வேண்டும். வழிபாட்டு முறைகளும் சாத்திரங்களும் தோத்திரங்களும் போதிப்பது இதுவே.

பரம்பொருளை அப்பனும் அம்மையுமாக நினைப்பது ஒருவகை. அம்மையும் அப்பனும் இந்த உலகத்தில் மக்களுக்கு ஆதரவு தருபவர்கள். ஆன்ம உலகில் அருவப் பொருளாய் உள்ள இறைவனை அப்பனாகவும் அம்மையாகவும் கற்பனை செய்து துதிப்பதில் மக்களுக்கு நம்பிக்கையும் ஆர்வமும் ஆறுதலும் பிறக்கின்றது. இஃது இயல்பே, இதை விரித்துரைப்பது அவசியமில்லை. தந்தையும் தாயுமாகி, அப்பன் நீ, அம்மை நீ, அம்மையே அப்பா ஒப்பில்லாமணியே என்பன போன்ற திருமுறைப் பாசுரங்களும் இதையே நமக்கு எடுத்துரைக்கின்றன.

கோயில்கள் இதை வடிவத்தில் காட்டுகின்றன. பிற்காலத்தில் சிவாலயங்களில் அம்பிகைக்குத் தனிக்கோயில் அமைக்கப்பெற்று, சக்தி வழிபாடு பெருகியது இந்த நினைவினால் தான். தாயுமான மூர்த்தியும் இதை விளக்குவதே. சிவம் சக்தி என்ற பேதம் இல்லாத போயினும் கூட, அவனுடைய கருணைக்குத் தனி உருவம் கொடுத்து 'அம்மா" என்று அழைத்து வழிபடுவதில் சிற்றறிவுடைய மக்கள் மனநிறைவு பெறுகின்றார்கள். தமிழ்நாட்டில் கிராமம்தோறும் ஏற்பட்டுள்ள அம்பிகை கோயில் இந்த மன நிறைவினால் எழுந்த ஒரு சின்னமேயாகும். அம்பிகையைத் தனித்தனியே வழிபடுவதனால் அம்பிகை வேறு என்பது பொருளல்ல. ஒன்று என்று காட்டவே அர்த்தநாரீசுவரர் வடிவமும் அதுபற்றிய கதைகளும் எழுந்தன. கோயில்களில் அம்பிகை கோயில் அமைத்து இருப்பது தமிழ் நாகரிகத்தின் சிறப்பான விளைவு. ஒவ்வொரு கோயிலுக்கும், அங்குள்ள சிவலிங்கத் திரு மேனிக்கும், அம்பிகையின் திருமேனிக்கும், தனியாகப் பெயர்கள் சூட்டப்பட்டன. அப்பெயர்கள் யாவும் அந்த அந்தத் தலத்துக்கும், ஆங்காங்குப் பக்தர்களுக்குச் சிவபெருமான் அருள்புரிந்த வரலாற்றுக்கும் தொடர்புடையன. இத்தொடர்பை இங்கு விளக்கில் பெருகும்; இது எல்லோரும் நன்கு அறிந்தது.

காசித்தலத்தில் பெருமான் திருநாமம் விசுவநாதர் என்பது. இதன் பொருள் முன்னே சொல்லப்பட்டது. அம்பிகையின் திருநாமம் விசாலாட்சி. இறைவன் சகல பிரபஞ்சங்களுக்கும் நாதன் என்ற முறையில், அவனுடைய தேவி சகல பிரபஞ்சத்திலும் உள்ள ஜீவராசிகள் அனைத்தையும் தன் கண்ணால் கண்டு அருள் சுரக்கின்றாள். அது பற்றியே அவள் கண்கள் அனைத்தையும் தழுவிக் காணும் பொருட்டு விசாலமாயுள்ளாள் என்ற கற்பனை எழுந்தது. அவள் பெயர் விசாலாட்சி. தமிழ்ப்புலவர்கள் அம்மையை "பெருந்தடங்கண்ணம்மை" என்று சொல்லி மகிழ்வார்கள். விசாலாட்சி என்ற பெயர் காசிக்கே சிறப்பானது. இது பொதுவாக முன்சொன்னபடி, தமிழ்மக்கள் இறைவனைக் குறித்துக் கொண்ட அம்மை அப்பர் ஆகிய கற்பனையில் விளைந்த திருவடியாகும்.

லலிதா சகஸ்ரநாமங்களில் விசாலாக்ஷ்யை நம! என்பதும் ஒன்று; இந்த சகஸ்ரநாமங்கள் வேதங்களையடுத்துத் தொகுக்கப்பட்டவை. காலத்தால் மிகவும் பழையவை.

காசி, இந்திய மக்கள் அனைவருக்குமே சிறந்த புண்ணியத் தலமாதலால், அதனிடத்து மிக்க ஈடுபாடுகொண்ட தமிழ் மக்கள், எல் லோரும் காசிக்குச் சென்று வழிபட இயலாத நிலையை மனத்தில் கொண்டு, தங்கள் தங்கள் ஊரில் உள்ள ஆலயத்திலும் காசி விசுவநாதரைப் பிரதிட்டை செய்து கொண்டார்கள். ஆலய நிர்மாணத்தில் முதல் பிரகாரத்தில் வாயு மூலையில் திருமாளிகைப் பத்தியிலோ தனிக் கோயிலாகவோ காசி விசுவநாதரைப் பிரதிட்டை செய்யவேண்டுமென்ற விதியும் வழக்கும் ஏற்பட்டிருக்கின்றன. சில கோயில்களில் இவ் விசுவநாதரோடு கூட விசாலாட்சி அம்மையையும் பிரதிட்டை செய்திருப்பது உண்டு.

தமிழ்நாட்டில் பாடல் பெற்றனவும் பெறாதனவும் அல்லாமல், புதிதாகச் சைவப் பெருமக்கள் கோயில் கட்டியிருக்கின்றார்கள். அப்படிக் கட்டியவற்றுள் சிலவே அவ்விடத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பான பெயர்களைப் பெற்றிருக்கும். பெரும்பான்மையானவை மீனாட்சி சுந்தரேசர் கோயில், கயிலாயநாதர் திரிபுரசுந்தரி கோயில், விசுவநாதர் விசாலாட்சி கோயில் என்றே பெயரிடப்பட்டிருக்கக் காணலாம்.

குடந்தைக் காரோணம் என்பது கும்ப கோணம் நகரில் உள்ள பாடல் பெற்ற மூன்று தலங்களில் ஒன்று. இத்தலம் சம்பந்தர் பதிகமுடையது. இங்கு சுவாமி காசி விசுவநாதர், அம்பிகை காசி விசாலாட்சி என்றே இன்றும் வழங்கப்பெறும்.

நம் நாட்டில் ஆங்காங்கு பல தலப் பெயர்களையும் சுவாமி பெயர்களையும் பல காரணம் பற்றி ஒரு தொடராகச் சேர்த்து வழங்கும் வழக்கம் உண்டு. அவ்வாறு வழங்கும் ஒரு தொடர் காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்பது.

காசிக்குரிய பெயர்களில் மகா ஸ்மசானம் என்பது ஒன்று. மயானம் என்பது எல்லாம் சாம்பலாகும் இடம். உடல் சாம்பலாவது ஊர்தோறுமுள்ள மயானத்தில் (சுடுகாட்டில்). ஆனால் உடலைவிட்டு உயிர்பிரிந்த பிறகும் கூட, உயிரைப் பற்றியிருந்த ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் உடலோடு எரிந்துபடுவது இல்லை; உயிரைத் தொடர்ந்தே வருகின்றன. இதனால்தான் உயிர்கள் மீண்டும் பிறவி எடுத்து, பின் இறந்து, பிறப்பு இறப்பு என்ற சுழலில் சிக்கி, அவதியுறுகின்றன. இந்த அவதி காசியில் நீங்குகின்றது. மகாஸ்மசானம் என்பதன் பொருள் இதுவே. இங்கு உயிரை வாட்டுகின்ற மலங்கள் சாம்பலாவதால் இது மகாஸ்மசானம் எனப்பட்டது. இந்த மயானத்தில் இறந்தவருக்குப் பின் மலங்கள் இல்லை. ஆகவே, பிறவி இல்லை, பின் முத்திதான் என்பது பொருளாகும். மயானம் என்ற இந்தக் கருத்தில் தமிழ் மக்களுக்கு ஈடுபாடு மிகுதி உண்டு. கச்சி மயானம், கடவூர் மயானம் நாலூர் மயானம் என்ற தலப்பெயர்களைக் காண்க. கடவூர் மயானம் மகாஸ்மசானம் என்று கருதப்பட்டதுபோலும். அதனால்தான் அங்கு சுவாமிக்குப் பெரிய பெருமான் அடிகள் என்ற பெயர் தேவாரத்தில் வழங்குகின்றது. சம்பந்தர் இங்கு "ஆசை தீரக் கொடுப்பார்" என்று சொல்கின்றார். அப்பர் சுவாமிகள் "தன்னை நோக்கித் தொழுது எழுவார்க்கெல்லாம் பின்னை என்னார் பெருமான் அடிகளே" என்றார். சுந்தரமூர்த்தி "எல்லார்க்கும் இல்லை என்னாது அருள் செய்வார்", "பீடை தீர அடியாருக்கு அருளும்பெருமான்" என்றெல்லாம் பாடுகின்றார். இவை எல்லாம், முன்னதே மலங்களைப் போக்கி முத்தி அளிப்பதால் மயானம் என்ற பெயர் வந்தது என்று முன்கூறிய கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கவை.

இனி, காசியாகிய தலத்தில் இறந்தவர்கள் முத்தி பெறுவார்கள் என்பது சாத்திரத்தின் கூற்று. 'காசியில் இறக்க முத்தி' என்பது பழமொழி. காசியில் இறப்போருக்கு, பிறவித் துன்பத்தால் வந்த களைப்பு நீங்கிடுமாறு விசாலாட்சி அம்மையார் தமது முன்றானையால் விசிற விசுவநாதப் பெருமான், அவர் உயிர்பிரியுந் தருணத்தில், அவர் செவியில் தாரக மந்திரத்தை உபதேசம் செய்து பரமுத்தியளிப்பார் என்று புராணங்கள் கூறும்; பின்வரும் காசி காண்டப் பாடல் (அகத்தியர் விந்தவரையடைந்தது, 15) காண்க;

"இத்தலை எய்த இறக்குநர்
யாரும் இளைப்பாற
உத்தரிகங்கொடு மாதுமைவீசிட
உமையோர்பால்
வைத்த அரும்பொருள்
மேவருதாரக மறையோதி
முத்தி அளித்திடும்
இப்பதியார் விடமுயல்வாரே."

அம்மையார் ஒண்தொடித் தடக்கையின் வீசு துண் துயில் தோகையிற் பிறந்த தென்றல் மோகமும்தளர்ச்சியும்தாகமும்தணிப்பதென்பது, திருவருள் என்ற சத்திநிபாதம் விளையவே, அந்த அருள் நிழலிலே தங்கிய ஆன்மா வினைகளின் பந்தமும் மலப்பிடிப்பால் விளைந்த பிறவி வெம்மையும் தீர்ந்து முத்திபெறுகின்றது என்பது குறிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஞ்சி காமாட்சி

ரா.கணபதி

காஞ்சிபுரத்தில் வாரத்தில் ஒவ்வொரு தினத்திலும் ஸ்நான விசேஷம் உள்ளதாக ஏழு தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் சுக்ரவார தீர்த்தமாக (தேவிக்கு உகந்தது வெள்ளிக்கிழமை தானே?) இருப்பது காமகோட்டத்துப் பஞ்ச கங்கை தான்.

சிதம்பரம், திருவொற்றியூர், திருப்பழனம், கோயிலாடி, திருக்காட்டுப்பள்ளி, அவிநாசி, விஜயமங்கலம், திருப்பாலைவனம், வல்லம், ஹஸ்திகிரி முதலிய பல ஆயக் கல்வெட்டுக்கள் அந்தந்த க்ஷேத்ர அம்பாள் ஸந்நிதியைக் 'காம கோட்டம்" என்றே வர்ணிக்கின்றன.

திருஞானசம்பந்தர் திருவிருப்பூளை (ஆலங்குடி) ஈசன் "கச்சிப்பொலி காமகோடியுடன் கூடி" இலங்குவதாகப் பாடுவதில் இருந்து அத்தல அம்பாளும் காமகோட்டியாக எண்ணப்பெற்றது தெரிகின்றது. ஆயினும் மூல காம கோட்டம் காஞ்சியே என்று தெளிவுபடுத்துகின்றார் பாலறாவாயர், 'கச்சிப் பொலி" எனக் கூறுவதால்.

கரிகாற் சோழன் இமயவரையில் புலிக் கொடி பொறித்தான் என்று பூரிக்கின்றோம் அல்லவா? அவன் ஸ்ரீ காமாட்சியிடம் தனது திக்விஜயத்துக்கு அருள்கோரி வந்தான்.

இந்நிகழ்ச்சியை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார மேற்கோளாகத் தரும் வெண்பா குறிப்பிடுகின்றது.

கச்சி வளைக்கைச்சி
காம கோட்டம் காவல்
மெச்சி இனிதிருக்கும்
மெய்ச் சாத்தன் கைச்செண்டு
கம்பக் களிற்றுக்
கரிகாற் பெருவளத்தான்
செம்பொன் கிரி
திரித்த செண்டு

குலசேகரப் பாண்டியன் காஞ்சிக்கு க்ஷேத்ராடனம் வந்தான். தேவியின் சித்தத்தால் விக்கிரமனின் மகளைக் கரம்பிடித்து அரியணை ஏறினான்.

சல்லியாபிதனைப் போரில் பொருது வென்றான் குலசேகரன். சோணாட்டை மாமனாருக்கே ஈந்து மன்னராக மீண்டும் ஆக்கினான். அவனது திருப்திக்காகவே அரசேற்ற விக்ரமன் சிறிது காலத்தில் யாரும் விரட்டாமல் தானாக ராஜ்யபாரம் துறந்து காமேச்வரியிடமே வந்தான். திருப்பணி செய்தான். துறவு பூண்டு முக்தி பெற்றான்.

இம்மை மறுமை இரண்டும் தருவாள் அன்னை என்பதற்கு இக் கதை அழுத்தமான சான்று. குலசேகரனைச் சோழர்குல மகளிடம் காமுற வைத்தவளே சோழ மகாராஜனைத் துறவியுமாக்கியிருக்கின்றாள்.

சந்திரசேகரத் திருநாமம் கொண்ட அறுபத்து இரண்டாம் பீடாதிபதிகள் கண்ணன் – ராதையின் சிருங்கார காவியமான 'கீத கோவிந்த'த்தை அடியொற்றி ஏகம்பன் – காமாட்சியின் பிரேமை லீலைகளை 'சிவ கீதி மாலிகா" என்று அருளியுள்ளார்.

மாளிகையாம் காமகோட்டத்தையும் காஞ்சி ஜகத்குரு அவர்கள் அவ்வப்போது புதுப்பித்துள்ளனர். ஏனெனில் இது ஸ்ரீமடத்துக் கோயிலாகவே, பீடாதிபதிகளை பாரம்பரிய தர்மகர்த்தராகச் சட்டப்படி கொண்டதாகவே இருந்து வந்திருக்கின்றது.

அரசர்களான ஹரிஹரராயர் போன்றவர் மட்டுமன்றி ஆசாரியர்களும் காமகோட்டத் திருப்பணி செய்ததற்கு சாஸனங்கள் உள்ளன. 1761 இல் கூட ஓர் ஆசாரியர் ( இவரும் சந்திர சேகர நாமத்தவர்) செய்திருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942இல் தற்போதுள்ள பூஜ்யஸ்ரீ சந்திரசேகரப் பெருமான் திருப்பணியும் குடமுழுக்கும் செய்ததோடு அம்பாளுக்கு ஸ்ரீ சக்ராகாரமான வெள்ளி ரதமும் செய்வித்தார். காமகோட்டத்தில் சூனியமாயிருந்த பங்காரு காமாட்சி சந்நிதியில் பாதப்பிரதிஷ்டை செய்து பூரணமாக்கினர் . பின்னர் ஸஹஸ்ரநாமம் பொறித்த ஆயிரம் பொற்காசு கொண்ட ஹாரமும் செய்து தேவிக்கு அணிவித்தார். இவர்களையும் காமாட்சியையும் இணைபிரிக்க முடியாமலே தான் ஆஸ்திகருலகம் தொழுது வருகின்றது. தேவியின் புகழைப் பேச்சும் மூச்சும் அவள் பாலே படுத்திய ஸ்ரீ பெரியவர்கள் எங்கும் பரப்பியிருக்கின்றார்.

பூஜ்யஸ்ரீ ஜயேந்திரப் பெருந்தகையின் பொற்கை மூன்று ஆண்டுகளுக்கு முன் காம கோட்டத்திற்குக் கும்பாபிஷேகம் செய்தது. தற்போது ஹரிஹரராயர் சன்மத்துப் பிறகு மறைந்துவிட்ட தாமிர விமானத்திலும் சிறப்புள்ள பொன் விமானம் நிர்மாணிக்கின்றார்.

தமிழ் மக்களுக்கு உயிரானவள் காமாட்சி. கச்சி மூதுர் என்று காஞ்சியின் தொன்மை யைச் சங்ககாலப் பெரும் பாணாற்றுப் படையே கூறுகின்றதெனில், சங்கப் பெண் புலவர் ஒருவருக்கு க் காமக் கண்ணியார் நப்பசலையார் என்று பெயருள்ளது. காமாட்சி என்பதன் நேர்த்தமிழே காமக்கண்ணி.

தேவார மூவரும் நாவாரக் காமாட்சி நலனைப் பாடியதும் பார்த்தோம். இசையின் மும்மூர்த்திகளாகத் தமிழகத்தே தோன்றிய தியாகையர், தீக்ஷிதர், சியாமசாஸ்திரிகள் ஆகிய வர்களும் நம் காமகோட்டியைப் பாடியுள்ளனர். ( மீனாட்சிக்கும் அகிலாண்டேச்வரிக்கும் கூடத் தியாகையரின் கானாஞ்சலி கிடைக்கவில்லை!) இவர்களில் சியாம சாஸ்திரிகள் காமாட்சியின் அர்ச்சகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

தமிழ் மக்கள் பித்துக்குளி காமாட்சி, அசட்டுக் காமாட்சி, பேய்க் காமாட்சி என்று எல்லாம் ஸ்வாதீனமாக அன்னையை அழைத்தாலும், பேற்றுக் காலத்தில் அவளே ஆதீனம் என்று கொண்டு 'காமாட்சியம்மா, கண் பாரம்மா" என்று கூவிக்கூவிப் புதுப் பிரஜையை உலகுக்கு அழைப்பதும் வழக்கமாயுள்ளது.

சிவாலயங்களுக்குத் தில்லை கோயி லாகவும், விஷ்ணு ஆலயங்களுக்கு அரங்கம் கோயிலாகவும் இருப்பது போல, அம்பிகையின் ஆலயங்களுக்கெல்லாம் காம கோட்டமே கோயில் என்பது தமிழ் மக்களின் துணிபு. சாஸனங்களில் பிற தலச் சக்தி சந்நிதிகளும் காமகோட்டமாக வர்ணிக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டோம். 'திவாகரம்" என்ற புகழ்பெற்ற தமிழ் நிகண்டு தேவியின் பெயர்களைச் சொல்கையில் காமகோட்டி என்பதையே முதற் பெயராகக் குறிப்பிடுகின்றது.

மணிமேகலையில் காஞ்சி தொடர்பு கொள்கின்றது எனில் சிலப்பதிகார உரை யிலோ காமகோட்டச் சாத்தன் இடது இடம் கொள்கின்றான்.

'அபிராமி அந்தாதி"யில்

துணையும் தொழும் தெய்வமும்
பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதி கொண்ட
வேரும் பனி மலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென்
பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுரசுந்தரி
யாவ(து) அறிந்தனமே.

என விரியும் தித்திக்கும் தேன் தமிழ் வர்ணனை காமாட்சியின் திருவுருவம் தான்.

ஸ்ரீ காமாட்சி சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் மாயையாம் திரோதனம், மாயா நீக்க மன மோஸீ அநுக்கிரஹம் ஆகிய ஐந்தொழில்களைப் புரிகின்றாள். ஐம்புலன்களை வசப்படுத்தப் பஞ்சபாணம் தரித்திருக்கின்றாள். 'பஞ்சமீ" என்றே ஸஹஸ்ர நாமத்தில் அவளுக்கொரு பெயர்.

கர்மம் – பக்தி–யோகம்–ஞானம்– தந்த்ரம் என்று ஆன்மநெறிகள் ஐந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமகோட்டத்தில் எண்ணான்கு (32) அறம் இயற்றிய அன்னபூரணியே கர்மம். காமாட்சியை வழிபட்டுக் குரூபம் நீங்கி ஸௌந்தர்ய லட்சுமியான திருமகள்– பக்தி குண்டலினி, நாகவடிவமாக விளங்கும் முருகன் – யோகம். இந்த ஸந்நிதியை 'ஆதிசேஷன்" என்பர். புருஷாக்ருதியில் இறைவனின் புருஸாகாரமாக விளங்கும் ஸ்ரீசங்கர பகவத்பாதர்–ஞானம். ஸ்ரீசக்ரம்தான் தந்த்ர சாதனை என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

ஐங்கோசங்களில், அன்னபூர்ணி அன்ன மயம், நாகஸ்கந்தர் ப்ராணமயம். அஷ்டபுஜ வீணாதாரிணியாக ஸகல கலைகள் மூலம் மனோரஞ்சனமூட்டும் ராஜச்யாமளை மனோமயம். ஹயக்ரீவ அகஸ்த்ய துர்வாஸாதிகள் விஞ்ஞானமயம். ஜகன்மாதா ஸ்ரீமூல காமாட்சி ஆனந்தமயம்.

மூல காமாட்சி, தபஸ் காமாட்சி, ஹோம காமாட்சி (இன்று பாதுகா வடிவில் மட்டும்), பிலம், ஸ்ரீசக்ரம் என்பதாக அம்பாளே இங்கு ஐந்து ரூபங்களில் பிரகாசிக்கிறாள். மூல காமாட்சியானவள் திரிபுரை, ராஜ ராஜேச்வரி, மஹாகாமேச வல்லபை, காமாட்சி, காமகோடி என்ற ஐந்து பெயர்களையும், தபஸ் காமாட்சி இவ்வாறே, தபஸ்வினி, கனச்யாமா, ஸர்வனவோலயேச்வரி, காளி என்ற பஞ்ச நாமங்களும் கொண்டு பஞ்சபாண நிகேதனத்தில் உறைகின்றனர்.

ஆதி சங்கரர் ஞான அநுபவம், பக்தித் துதி, வைதிக கர்ம வழிபாட்டு முறை, யோக சந்திரமௌளீசன், தந்த்ர ஸ்ரீ சக்ரம் என்ற ஐந்தையும் இங்கு இழைத்துவிட்டுத் தமது ஐந்தாவதான ஸ்ரீ மடத்தை இங்கு ஸ்தாபித்திருக்கின்றார்.

பஞ்சமீ தேவிக்கு 1976இல் பஞ்சமி யிலேயே குடமுழுக்கு நடந்தது. 1979இல் ஸ்வர்ண விமான முதல் கட்டம் முடிந்து வஸ ந்த பஞ்சமியில் கும்பாபிஷேகம் நடத்தியது எவ்வளவு பொருத்தம்?

ஐந்து கண்ட மக்களும் ஐம்புலன்களை அறநெறிப்படுத்த அன்னை காமாட்சி கடாக்ஷி!

**சுபம் (மங்களம்)**

**நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச**
**சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு**
**வாய் அகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று**
**ஆய கியாதியுடையாள் சரணம்-அரண் நமக்கே.**

**பொருள் :** ஏ அபிராமியே! நீயே உலக நாயகி. பிரம்ம சக்தியும், விஷ்ணு சக்தியும் நீ. நீயே ஒய்யாரமாக ஐவகை மலர் அம்புகளைக் கையிலேந்தியவள். சம்புசக்தி, சங்கரி, எழிலுடையாள், நாகபாணி, மாலினி, உலகளிக்கும் வராகி, சூலி, மாதங்க முனிமகள் என்றெல்லாம் பல வடிவானவள்! நீயே ஆதியானவள். ஆகவே, உன்னுடைய திருவடியையே வணங்கினோம். அதுவே எமக்குப் பாதுகாவல்.

-அபிராமி அந்தாதி (50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்சி

மா. சந்திரமூர்த்தி
எம்.ஏ

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே, நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறும்
சுவையே! அகந்தைக் கிழங்கை, அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே, வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமின் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பாத்திருக்கும்
உயிர் ஓவியமே, மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையுத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே, வருக, வருகவே!

என்று மீனாட்சியம்ம பிள்ளைத்தமிழ் பாடுகின்றது. பாடியவர் காசித் தலத்தில் பெரும் புகழ் பெற்று, அத்தலத்தைப் பற்றிய இலக்கியங்கள் பலவற்றைப் படைத்த குமரகுருபரர். நாட்டுப் பாடல்களிலும் மீனாட்சி அம்மையின் பெருமை பேசப்படுகின்றது. இதோ ஒரு சான்று :

வெள்ளிமலை விராலிமலை
விறகெடுக்கும் நாகமலை
பஞ்சம் தாங்கும் மதுரைக்கோட்டை
படிபோடும் மீனாட்சி

மதுரையின் சிறப்பை, ஒரு பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

"மங்கையின் மீனாட்சி
மாப்பிள்ளையில் சொக்கலிங்கம்
பொங்குமிகும் இலையழகில்
பொற்றா மரை வாவி
சங்கத் தமிழ் மணக்கும்
சதுர நிலைக் கோபுரமும்
எங்கள் மதுரைக் கிணையாய்
இன்னொரு ஊர் இல்லையடா!

தலைசிறந்த எழுத்தாளராகிய சாமர் சட்மாம Razor's Edge என்னும் தம் இணையற்ற படைப்பில் மீனாட்சி கோயில் இந்துக்களின் உயிர்நாடியான கொள்கைகளை உணர்த்த வல்லது என்று தம் மதுரைப் பயணத்தினை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருக்கின்றார்.

மீனாட்சியம்மனுக்கே இக்கோயிலில் முதன்மைஉண்டு. கோயிலேஅவள்பெயரால்தான் வழங்குகின்றது. மதுரை மாநகர்க்கு மீனாட்சி பட்டினம் என்றும் பெயருண்டு. இறைவனின் திருமணம், மீனாட்சி கல்யாணம் என்றே இந்நகரில் குறிப்பிடப்படுகின்றது. மதுரையின் பெரிய திருவிழாவாகிய சித்திரை விழாவின் முக்கிய நிகழ்ச்சி இம் மணச் சடங்கே, வலக் கையில் கிளியுடன் கூடிய ஒரு செண்டு ஏந்தி மீனாட்சியம்மன் நிற்கின்ற கோலம் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் தன்மையது. கருணை பொழியும் கண்களை இமையாது மக்களைக் காக்கும் அருள் உடையவள் அன்னை மீனாட்சி; தடாதகை, அங்கயற்கண்ணி மட்டுமன்றி, வெள்ளைக்கார 'கலெக்டர்' துரைகளும் அன்னை மீனாட்சியின் அருளை உணர்ந்து அணிகலன்களை அள்ளி வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சியும் காமாட்சியும் கோயில் கொண்டுள்ள நகர்களைப் போலவே, மீனாட்சி பட்டினமாகிய மதுரையும் பெண்களின் ஆடைக் கலைக்குப் புகழ்பெற்றது. காசிக்குப் போய்க் கங்கையில் நீராடாமல் வந்தாலும் வருவரே தவிர, பெண்கள் காசிப் பட்டாடை வாங்காமல் வரமாட்டார்கள். காஞ்சியில் சென்று காலாட்டிக்கொண்டு வாழலாம் என்று சொல்லும் அளவுக்கு நெசவுத்தொழிலால் ஏற்றம் பெற்றது காமாட்சி பட்டினம். திருமண நாள் முடிவாகிவிட்டால் காஞ்சிக்குச் சென்று பட்டுச்சேலைகளை வாங்குவது வழக்கமாகிவிட்டது. மதுரை மாநகரும் இவ்வாறே சிலவகை நெசவுத்துறைகளில் ஈடு இணையற்று விளங்குகின்றது. தையற் கலையிலும் மதுரை புகழ்பெற்றது. தையற்கடைகளைத் தொகுப்பாகக் காணக்கூடிய இடம் மதுரைப் புதுமண்டபம். மகளிரின் நகைப்பித்து நாடறிந்தது. சிலப்பதிகாரக் காலத்திலேயே, காற்சிலம்பை விற்க விரும்பிய கண்ணகி, நகை வாணிகச் சிறப்புடைய மதுரை நகருக்குக் கோவனுடன் எழுந்தருளினாள். இன்றும் தங்கம் முதலியவற்றில் நகைகளைச் செய்யும் தொழிலில் மதுரை தலைமையிடம் வகிக்கின்றது.

ஆடை, நகை ஆகியவற்றுக்கு அடுத்தபடி மங்கையர் விரும்புவது மணம் நிறைந்த மலர்கள். அவற்றைப் பயிரிடுவதிலும் மதுரையின் சுற்றுப்புறம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தியாவெங்கும் மதுரை ஆகாய விமான நிலையத்திலிருந்து மலர்கள் அனுப்பப்படுகின்றன.

**பதிப்பாசிரியர் குறிப்பு**

» மீனாட்சி கோயில் திருப்பணியில் 19, 20–ஆம் நூற்றாண்டுகளில் நகரத்தார் பங்கு பெரிது. மீனாட்சியிடம் ஈடுபாடுடைய நகரத்தார் காசியில் கேதாரநாதர் கோயிலில் மீனாட்சி சந்நிதி நிறுவியுள்ளனர்; காசி விசுவநாதரையும் விசாலாட்சியையும் விக்கிரக வடிவில் மதுரையில் சுவாமி கோயிலின் பெரிய பிரகாரத்தில் அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் நிலைநாட்டியுள்ளனர்.

» விசாலாட்சி – விசாலமான கண்களை உடையவள். மீனாட்சி – மீன் போன்ற கண்களை உடையவள்.

» மீனாட்சியும் விசாலாட்சியும் சக்தி தத்துவத்தின் சிறப்புக்குச் சான்றாக உள்ளனர்.

**நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து,**
**நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய், நின்னை உள்ளவண்ணம்**
**பேயேன் அறியும் அறிவு தந்தாய், என்ன பேறு பெற்றேன்.**
**தாயே, மலைமகளே, செங்கண் மால் திருத் தங்கைச்சியே.**

-அபிராமி அந்தாதி (61)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமொழியில் சக்தி தோத்திரங்கள்

**பெ.திருஞானசம்பந்தன்**

'ஆதி அனாதியும் ஆய பராசக்தி', திருமூலர் கூறியவாறு ...

தன்னுளும் ஆகித் தரணி முழுதுங்கொண்டு
என்னுளும் ஆகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும் நீர் அனல் காலுளும் வானுளும்
கண்ணுளும் மெய்யுளம் காணலும் ஆமே.

அனைத்திலும் கலந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற சக்தி தத்துவத்தை ஆதி சங்கரர், அபிநவ காளிதாசன், பாணபட்டன், மூக கவி, நீலகண்ட தீட்சிதர் போன்ற பெருமக்கள் பலர் வடமொழியில் பாடிப் பரவியிருக்கின்றனர். அவர்கள் தந்தருளிய தோத்திர நூல்களுள் ஒரு சிலவற்றுள் ஒரு சில சுலோகங்களையே கீழே விளக்கியுள்ளேன்.

ஆதி சங்கரர், அத்வைதத்தை நிறுவியவர் என்ற போதிலும் சக்தி வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார் என்ற கருத்து உண்டு. அவர் பாடியுள்ள தோத்திர நூல்களில் சௌந்தர்ய லஹரி மிகவும் பிரசித்தமானது.

தேவியின் அவயவ சௌந்தர்யத்தை வருணிக்கின்றபோது ஸ்ரீ சங்கரர் அம்மையின் திறந்த கண்களைப் போற்றுகின்றார். தேவி கண்ணைத் திறந்தால் உலகம் தோன்றுகின்றதென்றும், மூடினால் உலகப் பிரளயம் ஏற்படுகின்றதென்றும் புராணங்கள் கூறுகின்றன. தேவியின் அருட்கண்கள் உலகைத் தோற்றுவித்தன என்பது உண்மைதான். அருட்சக்தியாக இருக்கின்ற அன்னை உலகத்தை அழிக்க ஒருபோதும் உடன்படமாட்டாள். தன்னால் படைக்கப்பட்ட குழந்தைகள் அழிவதைப் பார்ப்பாளா? அவர்களை உய்விக்க வேண்டும் என்றுதான் எந்தத் திருக்கோயிலில் பார்த்தாலும் அன்னையின் அருட்கண்கள் ஒளிவீசிக்கொண்டு திறந்தவண்ணம் இருப்பதைப் பார்க்கின்றோம்.

– சௌந்தர்ய லஹரி, 55

ஆதிசங்கரரின் தோத்திர நூல்களில் இடம்பெற்றுள்ள மற்றொரு தோத்திரம் 'மீனாட்சி பஞ்சரத்னம்" எனப்படுவது. இது மீனாக்ஷியைப் பற்றிய ஐந்தே சுலோகங்களைப் பெற்றதால் இப்பெயர் பெற்றது. அதில் ஒன்றைப் பார்ப்போம்.

மீனாக்ஷி, ஸ்ரீ வித்யா சொரூபிணியாக இருப்பவள்.சிவனுடைய இடப்பாகத்தை இருப்பிடமாக்க கொண்டவள். ஹ்ரீம் என்ற மந்திரத்தில் பிரகாசிக்கின்றவள். ஸ்ரீ சக்கரத்திலுள்ள பிந்து மத்தியில் வசிப்பவள்; சபாநாயகனான நடராசப் பெருமானின் துணைவி; ஆறுமுகன், விக்கினேசுவரன் ஆகியோரின் தாயார்; அவளை ஜகன்மோஹினி என்றும் அழைப்பர். கருணைக் கடலாகிய அம்மீனாக்ஷியம்மையை நான் இடையறாது வணங்குகின்றேன்.

– மீனாக்ஷி பஞ்சரத்னம், 3.

காசியில் அருள்பாலிக்கின்றாள் அன்ன பூர்ணாதேவி. ஆதிசங்கரர் இத்தேவியிடம் ஞானபிக்ஷை கேட்கின்றார். அன்னபூர்ணாஷ்டகம் என்ற இத்தோத்திரத்தில் எட்டு சுலோகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்.

ஞானரூபிணியாக அருவமாக இருக்கின்ற அன்னை உலகரூபமாக நமக்கு நிறைந்து காட்சியருளுகின்றாள். அவள் எவ்வித வேறுபாடுமின்றி எந்நிலையிலிருப்பினும் அனைவரையும் நெறிப்படுத்திச் செல்லும் ஈச்வரியாக விளங்குகின்றாள். அவள் அருள் துணைகொண்டு செயற்படும்போது வெற்றியைத் தருகின்றாள். தாயான அவள் கருணைக்கடல் என்று சொல்லவும் வேண்டுமா? கருங்கூந்தலைத் தரித்திருக்கும் அவள் என்றும் வேண்டுவார் வேண்டியாங்கு அன்னம் முதலானவற்றை அளித்து வருகின்றாள். அவளே நேரே நின்று நமக்கு முக்தியருள்கின்றாள் என்றும் நமக்கு நல்லனவற்றையெ செய்து வருகின்றாள். அந்த காசியம்பதியில் வாழும் அன்னபூர்ணேசுவரித் தாயார் கருணையெனும் ஊன்றுகோலை பக்தர்களுக்கு அளிக்கின்றாள். அதைச் சிக்கெனப் பிடித்து நாம் ஈடேற வேண்டும் என்பதற்காக ஆதி சங்கரர் 'பிச்சையிடு தாயே" என்று தேவியை வேண்டுகின்றார்.

– ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம், 7.

ஊமையாக (மூகன்) இருந்த ஒருவர் காஞ்சி காமாட்சியின் அருளால் கவிதா சக்தி பெற்று கவி பாடத் தொடங்கி விடுகின்றார். ஐந்நூறு பாடல்களைக் கொண்ட இத்தோத்திர நூலுக்கு "மூகபஞ்சசதீ" என்று பெயர். ஆர்யாம்பிகை, அன்னையின் பாதாரவிந்தம், அன்னை துதி, கடாக்ஷம், மந்தஹாசம் ஆகிய ஒவ்வொன்றையும் பற்றி நூறு பாடல்களைக் கொண்டது இத்தோத்திர நூல். காமாக்ஷி தேவியின் புன்முறுவலின் பெருமையை ஒரு பாடலில் கூறுகின்றார்.

தூய்மையின் எல்லையாக விளங்கும் தேவியின் புன்முறுவலின் ஒரு கீற்று. மாசில்லா மனம் படைத்த மக்களிடையே தூய அன்பைப் பெருக்குகின்றது. வினை தேய்கின்றது; அம்பிகையை சேவிக்கின்றவர்களின் நற்புகழ் பெருகுகின்றது. வாக்கு நலம் சிறக்கின்றது.

(மூகபஞ்சசதீ, மந்தஸ்மித சதகம், 89).

அபிநவ காளிதாசன் என்ற ஒரு புலவனால் 'தண்டகம்' என்ற செய்யுள் வகையில் 'சியாமளா தண்டகம்" என்றபெயரில் ஓசை நயமும் பொருள்நயமும் கொண்ட தோத்திரநூல் இயற்றப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியைக் காண்போம்.

'தேவர் கோனாகிய இந்திரன், வக்ஷ்மீ காந்தனான விஷ்ணு, பூதகணங்களுக்குத் தலைவனான சிவன், கடலதிபதியாகிய வருணன், வேதமோதும் பிரமன், யமன், அரக்கர் தலைவனான திருதி, யக்ஷர் தலைவனான குபேரன், வாயு, அக்கினி இவர்களுடைய மாணிக்கக் கற்களால் இழைக்கப்பட்ட முடிகளின் ஒளி, தேவியின் திருவடித் தாமரைகளில் படர்ந்து செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றது. செம்மை நலம் வாய்ந்த தேவியின் அத்திருவடித் தாமரைகள் நன்மையே பயக்கும்.

உமையே! செந்தாமரையில் வீற்றிருப்பவளே! ரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சிங்காசனத்தில் இருப்பவளே! சங்கநிதி பதுமநிதிகளால் சேவிக்கப்பட்டவளே! புகழ்பெற்றவளே! எல்லாத் தீர்த்தங்களையும் தன்னுள் கொண்டவளே! எல்லா மந்திரங்களாய் இருப்பவளே! எல்லாத் தந்திரங்களின் உருவே! எல்லா யந்திரங்களாயும் விளங்குபவளே! எல்லா பீடங்களிலும் அதிட்டித் திரிபவளே! எல்லாத் தத்துவங்களிலும் பொருந்தியருப்பவளே! எல்லாச் சக்தி சொரூபமாய் இருப்பவளே! எல்லா வித்யைகளின் திருவுருவே! எல்லா யோகமாய் இலங்குபவளே! எல்லா ஒலிவடிவானவளே! ஒலியெலாம் ஆனவளே! எல்லாச் சொற்களாகவும் திகழ்பவளே! எல்லா எழுத்துக்களாயும் இலங்குபவளே! எல்லா உலகமாய்த் தோன்றுகின்றவளே! எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தவளே! உலகத்தின் அன்னையே! என்னைக் காப்பாயாக; என்னைக் காப்பாயாக. ஓ தேவியே! உனக்கு வணக்கம்; உனக்கு வணக்கம்.

– சியாமளா தண்டகம், 5.

ஸ்ரீ ராஜராஜேவரியைப் பற்றிய எட்டு சுலோகங்கள் கொண்ட ஸ்ரீ ராஜராஜே வர்யஷ்டகம் என்ற தோத்திர நூல் ஒன்று வட மொழியில் உண்டு.

அதில் ஐந்தாவது சுலோகத்தில் ஈசுவரியின் சொரூபமும் வருணிக்கப்படுகின்றது. அன்னை சூலம், வில், பாசம், அங்குசம் ஆகியவற்றைக் கையில் ஏந்தியிருக்கின்றாள். சிரசில் அரைச் சந்திரன், வராஹாவதாரத்தில் அப்பெருமானின் சக்தியாக வாராஹி என்ற பெயரில் தோன்றினாள். மது, கைடபன் என்ற கொடிய அரக்கர்களை அழித்தாள். சரஸ்வதி, லக்ஷ்மி ஆகியோரால் என்றும் சேவிக்கப்படுகின்றாள். மல்லர்களாகிய அசுரர் கூட்டத்தையும், மூகாசுரனையும் அழித்தவள். மஹேசுவரனின் மனைவியான இவள் உலகுக்கெல்லாம் அன்னையாக விளங்குகின்றாள். அவள் ஞானசொரூபிணி, மேலான தெய்வம், மகிமை மிக்கவள். அந்த ஸ்ரீ ராஜராஜேவரியைப் போற்றுவோம்.

– ஸ்ரீ ராஜராஜேவரி அஷ்டகம், 5.

திரிபுரசுந்தரியைப் பற்றிய எட்டு சுலோகங்களடங்கிய ஸ்தோத்திரத்தை ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸ்தோத்ரம் என்று அழைப்பார்கள். அதில் ஒன்றைக் காண்போம்.

அன்னை திரிபுரசுந்தரி மண்ணிலும் விண்ணிலும் எங்கும் வியாபித்திருப்பவள். ஆகேவ கவி அவளை கடம்பவன மத்தியில் வசிக்கின்றவளாகவும், பொன்மயமான சூரிய மண்டலத்தின் மத்தியில் வசிக்கின்றவளாயும் காண்கின்றார். புறத்தே மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் இருக்கின்ற மூலாதாரம் முதலான ஆறு ஆதார கமலங்களில் அவள் வீற்றிருக்கின்றாள். சக்தி படைத்த யோகிகளுக்கு அவள் அங்கே மின்னல் ஒளியாக விளங்கக் காட்சி தருவாள். செம்பருத்தியின் காந்தியை ஒத்த நம் அன்னை ஒளிவிடும் சந்திர கலையைத் தலையில் அணிந்துள்ளாள். சூர்யன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்கள் படைத்த நம் ஈசுவரனுக்கு இல்லத்தரசியாக இருந்து குழந்தைகளாகின்ற நம்மைக் காப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றாள். அந்த திரிபுரசுந்தரியை சரணடைகின்றேன் என்கின்றார் கவிஞர்.

– ஸ்ரீ திரிபுரசுந்தரி ஸ்தோத்ரம், 4.

பாணபட்டன் என்ற கவிஞன் சண்டீசதகம் என்ற நூலில் மஹிஷாசுரனை வதம் செய்த சண்டிதேவியை நூறு பாக்களில் பரவிப் போற்றியிருக்கின்றான். அதில் கவிதை நயம் பொலிவதை ஒவ்வொரு பாடலிலும் காணமுடியும். ஒன்றை மட்டும் காண்போம்.

பிரமன் முதலான தேவர்களும் மகிஷாசுரனைக் கண்டு அஞ்சினர். பார்வதிதேவி அந்த மகிஷாசுரனைத் தன் சூலத்தால் குத்தினாள். ரத்தப் பிரவாகம் பெருக்கெடுத்தோடியதாம். பூமியில் பெருகியோடிய இப்பெரும் ரத்தவெள்ளம் விண்ணையும் சிவப்பாக்கிவிட்டதாம். சிவந்த வானத்தைக் கண்டதும் சந்தியாகாலம் வந்துவிட்டது என்று தேவர்கள் எண்ணினார்கள்! பிரதோஷ காலம் தொடங்கிவிட்டது என்று திரிபுராந்தகனான சிவனும் எண்ணி, தாண்டவமாடத் தொடங்கிவிட்டாராம். மறுகணமே உண்மையை உணர்ந்த சிவபெருமான் சிரித்துக்கொண்டே 'உன் வெற்றியைப் பாராட்டவே நடனமாடுகிறேன்' என்று சொல்லிச் சமாளித்தாராம். பார்வதியைத் தழுவியவாறே மீண்டும் நடனமிடத் தொடங்கிவிட்டார். இதற்குக் காரணமாக இருந்த அந்த பார்வதிதேவி நம்மையெல்லாம் காக்கட்டும் என்று பாணகவி வேண்டுகின்றார்.

– பாணரின் சண்டீ சதகம், பா.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலாண்டேசுவரியைப் பற்றிய ஒரு தேவி ஸ்தோத்ரம் உள்ளது. அதில் ஒரு சுலோகத்தைக் காண்போம்.

'அன்னை அகிலாண்டேசுவரி ஸ்ரீ சக்ரம் பொறிக்கப்பட்ட அணியின் ஒளியினால் பிரகாசிக்கின்ற முகத்தை உடையவளாயிருக்கின்றாள். அவளை ஸ்ரீ ராஜராஜேவரி என்றும் இங்கே பக்தர் போற்றுகின்றார். ஸ்ரீ கண்ட சிவனின் உடலில் பாதிபங்கினள். ஜம்புநாதப் பெருமானின் நாயகி, லக்ஷ்மீகாந்தனுடைய சோதரி, மக்கள் வாழ நன்மனம் படைத்தவள், ஸ்ரீபிந்து பீடத்தில் பிரியம் கொண்டவள். அந்த அகிலாண்டேசுவரியின் திருவடித் தாமரைகளை அடியேனாகிய நான் வணங்குகின்றேன்.

– அகிலாண்டேசுவரி ஸ்தோத்ரம், 3.

நீலகண்ட தீக்ஷிதர் ஆனந்தசாகரஸ்தவம் என்ற தோத்திர நூலில் அம்பிகையின் கருணையைப் போற்றுகின்றார். அம்பிகையின் கடாட்சம் உலகத்தைத் தோற்றுவித்தும், காத்தும், விழித்தும் வருகின்ற பெருமை உடையது என்பது உண்மைதான். இருந்தாலும் கடாட்சமாகின்ற கண்வீச்சு நிலையாக நிற்பதல்லவே. கண்நோக்கு எப்போதும் சலனத்துடன் காணப்படுவதால் அதை நான் எப்படி நம்பிச் சாரமுடியும் என்று வேடிக்கையாக வினவுகின்றார். பின் எதை நம்பிச் சார்வது என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு விடை பகர்கின்றார். இக்கண்நோக்கு எதன் அடிப்படையில் ஏற்படுகின்றது? அம்மையின் அருளல்லவா? ஆதனால் தானே அருள்நோக்கு என்றும் திருவருட்பார்வை என்றும் கூறுகின்றோம். அந்த அருட்கருணையை 'அநுகம்பா' என்று வடமொழியில் கூறுவர். அது என்றும் ஒரே தன்மையதாய் சலனமற்று இருப்பது,. இக்கருணையைச் சார்ந்தே அருள்நோக்கு அமைந்திருப்பதால் அவ்வருட் கருணையையே நான் நம்புகின்றேன். தேவியே நின்கருணையை வேண்டுகின்றேன் என்கின்றார் நீலகண்ட தீக்ஷிதர்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தோத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. நிமேஷோன்மேஷாப்யாம்
ப்ரலயமுதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹு: ஸந்தோ
தரணிதரராஜன்ய தநயே
த்வதுன்மேஷாத் ஜாதம்
ஜகதிதம் அசேஷம் ப்ரலயத:
பரித்ராதும் சங்கே பரிஹ்ருத
நிமேஷாஸ் தவ த்ருச:
– சௌந்தர்யலஹரீ, 55

2. ஸ்ரீவித்யாம் சிவவாமபாக நிலயாம்
ஹ்ரீங்காரமந்த்ரோஜ்வலாம்
ஸ்ரீசக்ராங்கிதபிந்துமத்யவயதிம்
ஸ்ரீமத்ஸபாநாயகீம்
ஸ்ரீமத் ஷண்முக விக்னராஜஜனனீம்
ஸ்ரீமஜ்ஜகந் மோஹினீம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்யவாராம் நிதிம்.
– மீனாக்ஷி பஞ்சரத்னம், 3.

3. உர்வீ ஸர்வஜனேச்வரீ ஜயகரீ
மாதர் க்ருபாஸாகரீ
நாரீநீலசமானகுந்தல தரீ
நித்யான்னதானச்வரீ
ஸாக்ஷான் மோக்ஷகரீ
ஸதா சுபகரீ காசீபுராதீச்வ? ரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ
மாதான்னபூர்ணேச்வரீ
– ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம் ,7

4. பும்பிர் நிர்மலல்லானஸைர் விதததே
மைத்ரீரஸம் நிர்மலம்
கர்தும் கர்மலயம் ச நிர்மலதமாம்
கீர்திம் லாந்தேதராம்
ஸூக்திம் பக்ஷமலயந்தி நிர்மலகுணாம்
யத்தாவகா: ஸேவகா:
தத் காமாக்ஷி தவ ஸ்மிதஸ்ய
கலயா நைர்மல்யஸீமாநிதே:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ப்ரஹ்வதேவேச–லக்ஷ்மீச–பூதோ–
தோயேச–வாகீச–கீனாச–தைத்யேச
யக்ஷேச–வாய்வக்னி–மாணிக்ய
சங்க்ருஷ்ட–கோடீரபாலாதபோத்தாம
லாக்ஷாரஸாருண்ய – லக்ஷ்மீ
க்ருஹிதாங்க்ரிபத்மே–ஸு•பத்மே–உமே.
ரத்ன பத்மாஸனே, ரத்னஹிம்ஹாஸனே,
சங்கபத்மத்வயோபாச்ரிதே விச்ருதே!

ஸர்வதீர்த்தாத்மிகே : ஸர்வமந்த்ராத்மிகே :
ஸர்வதத்ராத்மிகே : ஸர்வயந்த்ராத்மிகே :
ஸர்வபீடாத்மிகே : ஸர்வதத்வாத்மிகே :
ஸர்வாக்த்யாத்மிகே: ஸர்வவித்யாத்மிகே :
ஸர்வயோகாத்மிகே : ஸர்வநாதாத்மிகே :
ஹேஜகந்மாத்ருகே : பாஹிமாம் பாஹிமாம்
பாஹிமாம். தேவி : துப்யம் நமோதேவி : துப்யம்
நமோ, தேவி! துப்யம் நம:

– ச்யாமளா தண்டகம், 5

6. அம்பா சூலதனு: கசாங்குசதரீ
அர்தேந்துபிம்பாதரி
வாராஹீ மதுகைடப ப்ரசமனீ
வாணீரமாஸேவிதா
மல்லாத்யாஸு•ர மூகதைத்யதமனீ
மாகேச்வரீ அம்பிகா
சித்ரூபி பரதேவதா பகவதீ
ஸ்ரீ ராஜராஜேச்வரீ.

– ஸ்ரீ ராஜராஜேச்வரீ அஷ்டகம், 5.

7. கதம்பவனமத்யகாம்
கனகமண்டலோபஸ்திதாம்
ஷடம்புருஹவாஸினீம்
ஸததஸித்த ஸௌதாமினீம்
விடம்பித ஜபாருசிம்
விகசசந்த்ர சூடாமணிம்
த்ரிலோசனகுடும்பினீம்
த்ரிபுரஸு•ந்தரீம் ஆச்ரயே.

– ஸ்ரீ த்ரிபுரஸு•ந்தரீ ஸ்தோத்ரம், 4.

8. சூலப்ரோதாத் உபாந்தப்லுதமஹி
மஹிஷாத் உத்பதந்த்யா ஸ்ரவந்த்யா
வர்த்மன்யாரஜ்யமானே சபதி
மகபுஜாம் ஜாதசந்த்யாப்ரமோஹ:
ந்ருத்யன் ஹாஸேன மத்வா விஜய
மஹம் அஹம் மானயாமீதி வாதி
யாம் ஆச்லிஷ்ய ப்ரந்ருத்த:
புனரபி புரபித் பார்வதீ பாது ஸா வ:

–சண்டீசதகம் .16

9. ஸ்ரீ சக்ராங்கித பூஷணோஜ்வலமுகே
ஸ்ரீ ராஜராஜேச்வரி
ஸ்ரீ கண்டார்த சரீர பாகநிலயே
ஸ்ரீஜம்புநாதப்ரியே
ஸ்ரீகாந்தஸ்ய சஹோதரே
ஸு•மனஸே ஸ்ரீ பிந்துபீடப்ரியே
தாஸோஹம் தவ பாதபத்மயுகளம்
வந்தே (அ)கிலாண்டேசுவரி.

– அகிலாண்டேசுவரி ஸ்தோத்ரம்.3

10. விச்வம் ஸ்ருஜதி அவதி
ஹந்தி ச யத்கடாக்ஷா
விச்வஸ்யதாம் கதமஸௌ
சபலஸ்வபாவ
ஏஷோபி யாமநுஸரந்
பதே யசாம்ஸி
தாமவே விச்வஸிமி
தேவி தவாநுகம்பாம்.

– ஆனந்தஸாகரஸ்தவம், 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அருள்வழவங்கள்

புலவர் ஏறு ந.ரா.முருகவேள்
எம்.ஏ.எம்.ஓ.எல்

**முன்னுரை**

'பொருள் ஒன்றே உள்ளது; அதனை அறிஞர்கள் பலவாகக் கூறுவர்' (ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி) என்பது வேதமொழி. அம்முறையில் சக்தி என்பது ஒன்றேயாயினும், அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். 'சக்திதான் பலவோ? எனில், தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்' என்பது சிவஞானசித்தியார். திருவாசகத்தில் வரும் திருவெம்பாவைப் பாடல்களை அனைவரும் அறிவர்.

திருவெம்பாவை என்பது மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரதமனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரவுத்திரி. சேட்டை, வாமை என்னும் நவசக்திகளின் செயலைக் குறிக்கின்றது என்பர். அதனாலேயே 'சக்தியை வியந்தது' என அதற்கு நுண்பொருள் தலைப்புக் கொடக்கப் பெற்றிருக்கின்றது. சக்தி ஒன்றே பலவேறு வடிவ பேதங்கள் கொண்டு வெவ்வேறு தொழில்களை இயற்றி உயிர்கட்கு நலம்புரியும் என்பது தாற்பரியம். இந்நவ சக்திகளின் இயல்புகள் செயல்கள் வருமாறு :

**நவசக்திகள் :**

1. **மனோன்மணி** : பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும்.
2. **சர்வபூததமனி :** உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன்கலந்து நின்று, அவற்றின் புண்ணிய பாவங்களை அகற்றுவிக்கும்.
3. **பலப்பிரதமனி :** சூரியனிடத்தில் பதித்து நின்று தீய கிருமிகளை அழித்து, நல்ல பொருள்கள் பெருகி வளர்வதற்கு ஆக்கம் அளிக்கும்.
4. **பலவிகரணி:** சந்திரனிடத்தில் நிலைபெற்று அமுதத் துளிகளைச் சொரிவித்துப் பயிர் பச்சைகளும் உயிர்த்தொகுதிகளும் தழைத்துச் செழித்தோங்க உதவி செய்யும்.
5. **கலவிகரணி :** வானத்தில் இருந்து எல்லாப் பொருள்களையும் ஏற்று நின்று அவைகள் தன்னிற் கலந்து இணைய இடம் தந்து நிற்கும்.
6. **காளி :** காற்றின்கண் கலந்து, பிராண மயமாய் விளங்கி, உயிர்க்கு நலம் விளைவிக்கும்.
7. **இரவுத்திரி :** நெருப்பின் கண் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும்.
8. **சேட்டை :** நீரில் நிலைபெற்று அதற்குக் குளிர்ச்சியையும் சுவையையும் உண் டாக்கும்.
9. **வாமை :** மண்ணில் விளங்கி ஐம் பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்யும்.

**சத்தமாதர்கள்**

உலகை இயக்கி ஐந்தொழில்கள் புரிந்துவரும் அருளாற்றலாகிய சக்தியானது, தனக்கென்று ஒரு பெயரும் வடிவமும் இல்லாததாயினும், அன்பர்களின் பொருட்டுப் பல பெயர்களையும் வடிவங்களையும் கொள்ளும். இம்முறையில் பிராமி, மாகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் சத்த மாதர்களாகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங் கொண்டு, சக்தி ஒன்றே நிகழ்வதும் உண்டு. இவ் எழுவருடைய இயல்புகளையும் செயல்களையும் இலக்கியங்கள் ஆங்காங்கே சிறப்புறக் குறிக்கும். யானைத் தோலைப் போர்த்தவள் மாகேசுவரி. வானரங்கள் குவித்த மலைகளால் கடலை அடைத்தவள் நாராயணி. கடலின் வயிறு கிழியும்படி வேற்படையை ஏவியவள் கௌமாரி. கற்பக மலரைக் கூந்தலில் அழகுறச் சூடியவள் இந்திராணி. சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள் காளி. வேதங்களால் மிகவும் புகழ்ந்து சிறப்பிக்கப் பெறுபவள் பிராமி. பிரளயத்தினின்று உலகை மீட்டருளியவள் வராகி எனப் பலவகைகளில் சக்தியின் வடிவ பேதத்தைச் சாத்திரங்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தில் சக்தி வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கொற்றவை, பிடாரி. பத்திரகாளி, காளி. துர்க்கை ஆகிய சக்தியின் வடிவ பேதங்கள். சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாற்றால் இற்றைக்கு ஏறத்தாழ 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்ட, மிகப் பழங்காலத்திலேயே தமிழ்நாட்டில் சக்தி வழிபாடும், சக்தியின் வடிவ பேதங்களும் பரவிப் பெருகியிருந்தமை தெரியலாம்.

சக்தி வழிபாட்டை விளக்கும் சாக்தேய சமயத்தின் தந்திர நூல்களில் சக்தியின் வடிவ பேதங்கள் பற்பல கூறப்பெறுகின்றன. அவற்றுட் சிலவற்றைப் பற்றிய தியான சுலோகங்களின் குறிப்புக்களை மட்டும் இங்கு இயன்றவரையில் காண்போம்.

**1. பாலாம்பாள் :**

நான்கு திருக்கைகளை உடையவள். அவற்றில் முறையே அக்கமாலை, புத்தகம், அபயமுத்திரை. வரதமுத்திரை என்பன வற்றைக் கொண்டிருப்பவள். நீலோற்பல மலரில் வீற்றிருப்பவள். செந்நிற மேனி யினள். ஆகமங்களில் இவளுக்கு 14 வகையான திருவுருவ அமைப்புக்கள் கூறப் பெற்றிருக்கின்றன. இவளது மூலமந்திரம் மூன்று அல்லது ஆறு எழுத்துக்களைக் கொண்டது.

**2. லலிதாம்பாள் :**

சிந்தாமணி என்னும் சிறப்புமிக்க நவமணித் திரளால் அமைந்த மாளிகையில். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், ஈசுவரன் என்னும் நால்வரையும் நான்கு கால்களாகக் கொண்ட கட்டிலில் காமேசுவரரின் மடியில் வீற்றிருப்பவள். பதினாறு வயதினள். பாசம், அங்குசம். பஞ்ச பாணம், கரும்புவில் ஏந்தியவள். தலையில் பிறைசூடி இருப்பவள். செந்நிற மேனியள். இவளது மூலமந்திரம் 15 எழுத்துக்களைக் கொண்டது. அது 12 வகைகளில் வெவ்வேறாக அமையும்.

பதினாறு (ஷோடசம் 16) எழுத்துக்களைக் கொண்ட இவளது மூலமந்திரம் ஷோடசி எனவும், 18 எழுத்துக்களைக் கொண்டது சௌபாக்கிய வித்யை எனவும் வழங்கப்பெறும். அனந்த பைரவம், அயக்கிரீவம், தட்ணாமூர்த்தம் என இவளை வழிபடும் நெறிகள் மூன்று வகைப்படும். இவள் அனைத்துலகுக்கும் பேரரசி நிலையிற் பிறங்குபவள். இராஜமதங்கி. மந்திரிணி ஆகியோர் இவளது அமைச்சர்களாவர். காஞ்சி காமாட்சியம்மையே ஸ்ரீலலிதா தேவியாகக் கருதப்படுகின்றாள்.

**3. இராஜராஜேசுவரி :**

இவள் லலிதா தேவியைப் போன்றே திரு வுருவம் உடையவள். இவளது மூலமந்திரம் 28 எழுத்துக்கள் கொண்ட மகாஷோடசி எனப்படும். ஸ்ரீவித்யையே இப் படிவங்களுக்கெல்லாம் உரிய பொதுவான சாத்திரமாகும்.

இராஜராஜேசுவரி ஞானத்தின் முழுநிறைவைக் குறிக்கின்றாள். இவள் 40 வயதினள். சித்திரை மாதத்தில் வரும் வசந்த நவராத்திரி விழா, இராஜராஜேசுவரிக்கு மிகவும் சிறப்பானதாகும்.

**4. நவாட்சரிபாலா**

இத்தேவி, பாலாம்பாளின் வடிவத்தையே கொண்டவள். ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மூலமந்திரத்தை உடையவள். அங்கம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாங்கம், பிரத்தியங்கம் என்னும் மூன்றனுள், லலிதாதேவியின் அங்கமாகத் திகழ்பவள்.

**5. அன்னபூரணி :**

லலிதாதேவியின் உபாங்கமாகத் திகழ்பவள். வலக்கையில் பொன் அகப்பையும், இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலசத்தில் பாற்சோறும் ஏந்தி, உயிர்களுக்கெல்லாம் உணவு வழங்கும் தாயாக விளங்குபவள். பொன் நிறம் வாய்ந்தவள். பொற்கலனும் பூமாலைகளும் அணிந்திருப்பவள். காசி க்ஷேத்திரத்தைத் தனக்கே உரிய சிறப்புத் தலமாகக் கொண்டவள்.

**6. அசுவாரூடாம்பாள்**

லலிதாதேவியின் பிரத்தியங்கமாகத் திகழ்பவள். சிவந்த மேனியுடன் சிவப்புநிற ஆடைகளும் சிவந்தநிற அணிகலன்களும் தரித்துச் சிவப்புநிறக் குதிரையில் இவர்ந்து வருபவள். ஒளிமுகமும் முக்கண்களும் கொண்டவள். தனது நான்கு கைகளிலும் முறையே பல்லம் (சவுக்கு) என்னும் படையும், சர்ப்பாத முத்திரையும், பகைவரைப் பிணிக்கும் பாசமும், தீயவரை அச்சுறுத்தும் பொற்பிரம்பும் ஏந்தியிருப்பவள்.

**7. இராஜமதங்கி**

கடம்பமலர் சூடியவள்; அமிழ்தக் களிப்பில் திளைப்பவள். மடியில் வீணையை வைத்துக்கொண்டு வாசிப்பவள். செந்நிற ஆடை உடுப்பவள். நெற்றியிற் கஸ்தூரி திலகம் அணிந்தவள். பிறை சூடியவள். காதில் சங்கக்குழை தரித்தவள். புன்புறுவல் பூத்த முகத்தினள். கலைகளின் அறிகுறியாகக் கிளியை ஏந்தியிருப்பவள். மரகதமணியின் நிறம் வாய்ந்தவள். இராஜராஜேஸ்வரியின் அறிவியல்கலையியல்ஆற்றலாக விளங்குபவள். புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி விழா இவளுக்கு உரியது. மதுரை மீனாட்சியம்மையை இராஜமதங்கியாகவே பெரியோர்கள் கருதுவர்.

**8. லகுஷியாமா**

மதங்க முனிவரின் மகள். வைரமணிகள் பதித்த வீணையை வாசிப்பவள். அமிழ்தக்களிப்பு உடையவள். இந்திர நீலநிறம் கொண்ட ஒளிமேனியளாய்ப் பேரழகுற்றுத் திகழ்பவள். இராஜமதங்கியின் அங்க தேவதை.

**9. வாக்வாதினி**

வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள். பாரதி என்னும் பெயரினள். தன் இரு கைகளிலும் எழுதுகோலும் புத்தகமும் ஏந்தியவள். இளம் பிறை சூடியவள். வெண்ணிறம் உடையவள். உலக வாழ்வின் அச்சத்தைப் போக்குபவள். இராஜமதங்கியின் உபாங்கதேவதை. இவளைக் கலைமகளின் கூறாகக் கருதுவர்.

**10. நகுளி**

இராஜமதங்கியின் ப்ரத்யங்கதேவதை. முத்துப்போன்ற முறுவலள். பகைவராகிய நாகங்களின் நாக்கை அறுப்பவள். பக்தர்களுக்குப் பரிந்து உதவி புரிபவள்.

**11. வராகி**

லலிதாதேவியின் படைத் தலைவி. தண்டினி எனவும் வழங்கப்படுவாள். ஜம்புகேச்வரம் என்னும் திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேசுவரி தண்டினியாகவே கருதப்படுகின்றாள். இவளது இருக்கை தாமரை மலர். கார்கால மேகத்தின் நிறம் கொண்டவள். தன்பால் அடைக்கலம் புகுந்த அடியவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி அருள்பவள்.

**12. புவனேசுவரி**

தேவி பாகவதம் என்னும் நூலில் மிகவும் புகழ்ந்து போற்றப் பெறுபவள். உதயசூரியன் போன்ற ஒளி நிறம் உடையவள். திருமுடியில் பிறையும், காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும்தரித்தவள். தனது நான்கு கைகளிலும் முறையே பாசம், அங்குசம், அபயம், வரதம் என்பனவற்றைக் கொண்டவள்.

சாக்த வழிபாட்டின் தலைமைத்தெய்வம் புவனேசுவரியே ஆவள். ஸ்ரீவித்யையின் பஞ்சதசாட்சரி மந்திரம் இவளுக்கு உரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் முற்றுணர்வும் பேரின்பமும் எய்துவர்.

### 13. சண்டி

மின்னல் ஒளியுடையவள். சிங்க ஊர்தியினள். ஒன்பது மாதர்களாற்சூழப்பட்டவள். முக்கண்ணும்பிறைமுடியும் உடையவள். சண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம், கதை, வாள், கேடயம், அம்பு, வில், பாசம், கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். இவளது மூலமந்திரம் ஒன்பது எழுத்துக்கள் கொண்டது.

### 14. துர்க்கை

பராசக்தியின் காவற்படைத் தலைவி. ஆபத்துக் காலத்தில், அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள்புரிபவள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுக முடியாமல் செய்வதுபோல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாத வகையிற் காத்தலால், இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். அரசர்க்கும் வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வம். புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில், கௌரி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவருக்கும் சேர்ந்த ஓருருவாகத் திகழ்பவள் துர்க்கை.

அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்னும் முக்கூறும் தன்பாற் கொண்டவள். ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி, துர்க்கருக்தம் என்னும் மந்திரம் ஓதி, அருச்சனை செய்து வழிபட்டால், எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு, சக்கரம், வில், அம்பு ஏந்தியிருப்பாள். தலையில் முடியும் பிறையும் சூடி இருப்பாள். சிங்க வாகனமும் பசும்புல்லின் நிறமும் கொண்டவள். மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

### 15. மகிஷாசுரமர்த்தினி

இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத் தலையை உடையவனாக இருந்த மகிஷன் என்னும் கொடிய அரசனை வென்று கொன்றதனால், இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்தில் பல கோயில்களிலும் மகிஷாசுரமர்த்தியின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம், கங்கைகொண்ட சோழபுரம், நாமக்கல் முதலிய இடங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புத சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில், இளங்கோவடிகள் மகிஷா சுரமர்த்தினியின் திருவுருவத்தினை சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

அவள் யானைத்தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கின்றாள். வானோர்கள் வணங்க மறைமேல் மறையாகி, ஞானக் கொழுந்தாய் விளங்குகின்றாள். வளையல்கள் அணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்றாள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி, அரன், அயன் என்னும் மூவரின் இதயமலர்களில் சோதி விளக்காகச் சுடர்வீசித் திகழ்கின்றாள்.

அவளது தாமரை போன்ற கைகளில் சங்கும் சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின் மீது இவர்ந்து வருகின்றாள். சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை, வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணிகின்றன.

### முடிவுரை

இங்ஙனம் இன்னும் எத்தனையோ பற்பல வெவ்வேறான திருவுருவங்களைக் கொண்டு திகழும் இறைவனின் அருளாட்சியாகிய சக்தி என்னும் அம்மையின் அரிய பெரிய சிறப்புக்களையுணர்ந்து, நாம் அனைவரும் அவளை அன்புடன் துதித்து வழிபட்டு உய்ய முயலுவோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்திசைக் கோபுர அடிக்கல் நாட்டுதல் - 24.01.2016















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்திசைக் கோபுர கும்பாபிஷேக நிகழ்வுகள் - 09.02.2017













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெற்குவாசற் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மார் எழுவர் வழிபாடு

நடன. காசிநாதன் எம்.ஏ

**த**மிழகத்தில் தாய்மார் எழுவர் வழிபாடு பல்லவர் காலம் தொட்டு இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகின்றது. தாய்மார் எழுவரின் உருவ அமைப்புகள் சில காலகட்டங்களில் சிலவித மாறுதல்கள் பெற்றிருக்கின்றன. இவர்கள் வழிபாடு தாய் வழிபாட்டின் ஒரு அங்கமாகவே இருத்தல் வேண்டும்.

தாய் வழிபாடு தமிழகத்தில் இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கின்றது என்பதற்கு ஆதிச்ச நல்லூரில் கிடைத்துள்ள தாய்த் திருமேனி தக்கதொரு சான்றாக அமையும். தமிழகத்தில் நிகழ்ந்துள்ள அகழ்வாய்வுகளிலும் சில தாய் உருவ சுடுமண் பொம்மைகள் கிடைத்திருக்கின்றன. சிலம்புகூறும் கண்ணகி வழிபாடு கூட தாய் வழிபாட்டின் ஒரு கூறேயாகும் என்று கருதுவாரும் உளர்.

ஆகவே அவைகளின் தொடர்ச்சியே தாய்மார் எழுவர் வழிபாடும் என்று கருதினால் தவறாகாது. தாய்மார் எழுவரின் தோற்றத்துக்கான காரணத்தைப் புராணங்கள் கீழ்வருமாறு கூறுகின்றன.

"காஸ்யப முனிவருக்குத் திதி மூலமாக இரு ஆண்மகவுகள் பிறக்கின்றன. ஒருவன் ஹிரண்யாக்ஷன்; மற்றொருவன் ஹிரண்யகசிபு. திருமால் வராஹ அவதாரம் எடுத்து ஹிரண்யாக்ஷனையும், நரசிம்மாவதாரம் எடுத்து ஹிரண்யகசிபுவையும் கொன்றுவிட்டார். ஹிரண்பாக்ஷனின் மகன் விஷ்ணு பக்தனாக மாறி அரச வாழ்க்கையைத் துறந்தான். அவனுக்குப்பின் ஆட்சிசெய்த அந்தகாசுரன். தமது ஆழ்ந்த தவத்தின் பலனாகப் பிரமாவிடமிருந்து பலவித வரங்களைப் பெற்றான்.

அதன் காரணமாக அகங்காரம் அடைந்த அந்தகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தலானான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவன் அவர்களது முறையீடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கவில்லையே. அந்தகாசுரனும் பார்வதியைத் தூக்கிச் செல்வதற்காக கைலாயத்துக்கு வந்துவிட்டான். சிவன் மிகவும் கோபமுற்று அந்தகாசுரனை அழிப்பதற்கு தமது பூதகணங்களுடன் முற்பட்டார். திருமாலும் மற்ற கடவுளர்களும் சிவனுக்கு உதவியாகச் சென்றனர். போரில் திருமாலும் மற்ற தெய்வங்களும் புறமுதுகிட்டோடினர். சிவன் மட்டும் தனித்து நின்று அசுரன் மீது அம்பு மாரிகளைப் பொழிந்தார். அம்புகள் அசுரனது உடலைத் துளைத்தன. இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. இத்தத்தின் ஒவ்வொரு துளியும் மண்ணில் விழ விழ, பல அந்தகாசுரர்கள் தோன்றினர்.

சிவன் தமது திரிசூலத்தால் உண்மை அந்தகாசுரனைக் கொன்றார். திருமால் சக்கராயுதத்தால் பிற அந்தகாசுரர்களைக் கொன்றொழித்தார். அந்தகாசுரனின் உடலில் இருந்து பீறிட்டெழுந்த இரத்தம் மண்ணில் விழுவதைத் தடுப்பதற்காக சிவன் தமது வாயிலிருந்தெழும் தீயிலிருந்து யோகேஸ்வரி என்னும் சக்தியை உருவாக்கினார். அதே காரணத்திற்காக இந்திரன் முதலானவர்களும் தங்களது சக்திகளை அனுப்பினர். அவர்களே பிராமணி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டா ஆகியோர் ஆவர். இவர்கள் முறையே பிரமன், மாகேஸ்வரர், குமரன், விஷ்ணு, வராஹர், இந்திரன், எமன் ஆகியோரின் மனைவியர்களாவர். மேலே கூறப்பட்டவைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மார் எழுவரின் தோற்றம் பற்றிப் புராணங்களில் குறிக்கப்படுவதாகும்.

ஆனால் வராஹ புராணம் மட்டும் தாய்மார்கள் எண்மர் என்று குறிப்பிடுகின்றது. சிவன் தோற்றுவித்த யோகேஸ்வரியையும் இது சேர்க்கின்றது. தாய்மார் எண்மர் கொண்ட சிற்பம் ஒன்று திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் 'அஷ்டமாத்ரிகா' என்று அழைக்கப்படுகின்றது.

"வராஹ புராணம் மேலும் குறிப்பிடு கையில் இந்தத் தாய்மார் எண்மரும் எட்டு வகையான குணநலன்களைச் சித்திரிப்பவை என்று கூறுகின்றது. யோகேஸ்வரி காமத்தையும், மாகேஸ்வரி க்ரோதத்தையும்,வைஷ்ணவி லோபத்தையும், பிராமணி தற்பெருமையை யும், கௌமாரி மோகத்தையும், இந்திராணி மாத்சர்யத்தையும், சாமுண்டா பொய்மை யையும், வாராஹி அசூயையும் குறிப்பதாகத் தெரிவிக்கின்றது.

கூர்ம புராணம் தாய்மார்ரைப் பற்றி மேலும் சில செய்தியை அறிவிக்கிறது. அந்தகாசுரனை அழித்தொழித்த பிறகு சிவன் பைரவரையும், மாத்ரிகர்களையும பாதாள லோகத்துக்குச் சென்று உறையுமாறு ஆணையிடுகிறார். அவர்களும் அவ்வாறே பாதாளலோகம் சென்று விடுகின்றனர். சில நாட்களில் பைரவர் திரும்பி வந்து சிவனோடு ஐக்கியமாகிவிடுகிறார். மாத்ரீகர்களுக்கு உணவு தேும் கிடைக்காத காரணத்தால் கண்ணில் பட்டதையெல்லாம் உட்கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர். உடன் பைரவர் விஷ்ணுவிடம் முறையிட்டு மாத்ரீகர்களின் கொடூரத்தன்மையை நீக்கிவிடும்படி வேண்டுகின்றார். விஷ்ணுவும் அவ்வாறே செய்து விடுகிறார்.

சுப்ரபேதாகமம், இத்தாய்மார் எழுவரும் நிர்ரிதா என்பானை அழிப்பதற்காகப் பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டார்கள். என்று கூறுகிறது. இவ் வெழுவரும் தங்கள் கணவன்மார்கள் தரித்திருக்கும் படைக்கலன்களையே கொண்டு விளங்குவர் என்று அவ்வாகமம் தெரிவிக்கிறது.

பொதுவாக இவ் வெழுவர் உருவங் களும் பத்மாசனத்தில் அமர்ந்தநிலையில் நான்கு கரங்கள் கொண்டு காணப்படும். மேலிருகரங்களில் அவைகளுக்குரிய படைக் கலன்களையும், கீழிரு கைகள் அபய, வரத நிலையிலும் இருக்கும். இடக்காலை மடக்கி ஆசனத்தின் மீது வைத்து, வலக்காலைக் கீழே தொங்கவிட்ட நிலையில் காணப்படுவர்.

இவ்வெழுவர் உருவங்களோடு சிவ னது உருவம் யோகேஸ்வரராக அல்லது வீரபத்ரராகவும் விநாயகரது உருவமும் காணப்படும். தாய்மார் எழுவரும் அமர்ந்திருக்க, அவர்களின் வலப்பக்கம் கடைசியில் வீரபத்ரரும், இடப்பக்கக் கடைசியில் விநாயகரும் அமர்ந்து இருப்பர். இவர்கள் தாய்மார் எழுவருக்கும் பாதுகாவலர்கள் ஆவர்.

ஹரப்பா நாகரிகக் காலத்தைச் சார்ந்த முத்திரைத் தகடு ஒன்றில் தாய்த் தெய்வத்தின் உருவமும், அத்தோடு ஏழு துணைப்பெண் தெய்வங்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருப்பதாக வரலாற்று அறிஞர் களால் கருதப்படுகின்றது. இந்த ஏழு துணைப் பெண் தெய்வங்களும் தாய்மார் எழுவரையும் குறிப்பதாகக் கொள்ளலாம் என்றும் பேசப் படுகின்றது. ரிக் வேதத்திலும் தாய்மார் எழுவர் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. ஆனால் அவர்களது பெயர்களைக் குறிப்பிடவில்லை. வேதகாலத்துக்குப் பிறகுதான் அவர்களது பெயர்கள் கூறப்படுகின்றன.

இத்தாய்மார் எழுவரின் உருவங்கள் இந்தியா பூராவும் பரவலாகக் காணப்படுகின்றன. முதன் முதலில் சாளுக்கியர்கள் காலத்தில்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கி.பி. 6–ஆம் நூற்றாண்டு) இவ்வழிபாடு முக்கியத்துவம் பெற்றதாகத் தெரின்கிறது. அவர்களது கலைப்படைப்புக்களான ஐஹொளே, எல்லோரா போன்ற இடங்களில் தாய்மார் எழுவரின் உருவங்கள் மிக்க வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளன. முற்காலச் சாளுக்கியர்கள் தங்களைத் தாய்மார் எழுவரால் (சப்தயோகமாத்ரு) வளர்க்கப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. சாளுக்கியர்களின் செப்புப் பட்டயங்களில் தாய்மார் எழுவருக்கு வணக்கம் கூறப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர மன்னர் ஆகிய எல்லா அரசர்களுடைய காலத்திலும் இவ்வழிபாடு இருந்து வந்ததற்கான சான்றுகள் நிரம்பக் கிடைத்துள்ளன. தாய்மார் எழுவரின் உருவ அமைப்புக்கள் பலவிதங்களில் காணப்படுகின்றன.

தாய்மார் எழுவரில் சாமுண்டாவுக்குப் பதிலாக சில இடங்களில் 'நாரசிம்ஹ' காணப் படுகின்றது. வழக்கமாகக் காணப்பெறும் பிராமி, மாகேஸ்வரி கௌமாரி, வைணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்ற வரிசையில் சில நேரங்களில் சில மாற்றம் காணமுடிகின்றது. அம்மாற்றத்துக்குச் சில காரணமும் கூறப்படுகின்றது. எதிரிகளை முறியடிக்க வேண்டுமெனில் பிராமி நடுவில் அமைக்கப்படுதல் வேண்டும்; ஊரில் மக்கள் தொகை அதிகரிக்க வேண்டுமெனில் சாமுண்டா நடுவில் வைக்கப்படுதல் வேண்டும்.

பொதுவாக அமர்ந்த நிலையில் காணப் படும்தாய்மார் உருவங்கள் சில இடங்களில் நின்ற நிலையிலும் காணப்படுகின்றன. சில இடங்களில் இரு கரங்களோடும், சில இடங்களில் நான்கு கரங்களோடும் உள்ளன. சிலவற்றில் எல்லா தெய்வங்களும் ஒரே மாதிரியான முகத்தையும், சிலவற்றில் அவ்வவற்றுக்குரிய முகத்தோடும் தோற்றமளிக்கின்றன. ஒரே மாதிரியான முகம் காணும்போது அவைகளின் படைக்கலன்களைக் கொண்டும், வாகனங்களைக் கொண்டும்தான் அவை எவையெவை என்று அடையாளம் கூறமுடியும்.

சில தாய்மார் எழுவர் சிற்பங்களில், எல்லாத் தெய்வமும் மும்மூன்று தலைகளோடு காணப்படுகின்றன. அப்பொழுதும் படைக் கலன்களைக் கொண்டும், வாகனங்களைக் கொண்டும்தான் அவை எவையெவை என்று கண்டுபிடிக்க இயலும்.

தாய்மார் எழுவர் சிற்பங்களில் முற் காலத்தவை (கி.பி. 7–ஆம் நூற்றாண்டு) சில தங்கள் வாகனங்கள் மீதே அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. சில பீடத்தில் அமர்ந்திருக்க புடைப்புச் சிற்பமாக வாகனங்கள் செதுக்கப்பட்டும் தோன்றுகின்றன. சில தெய்வங்களுக்கு இவ்வாகனங்கள் சில இடங்களில் மாறுபட்டுக் காணப்படுகின்றன. வழக்கமாக இடக்காலை மடித்து ஆசனத்தில் வைத்து வலக்காலைக்கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் நிலையில்தான் காணப்படுவர். கருநாடக மாநிலத்தில் உள்ள வேலூரில் இரு கால்களையும் மடித்து வைத்து யோகாசன நிலையில் அமர்ந்து காணப்படுகின்றனர். திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயிலிலுள்ள தாய்மார் எழுவர் சிற்பங்கள் வலக்காலை மடக்கி ஆசனத்தில் வைத்து இடக்காலைக் கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கின்றன.

எல்லோராவில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்களில் மற்ற சிற்பங்கள் இடக்காலை மடித்து ஆசனத்தில் வைத்து, வலக்காலைக் கீழே தொங்கிவட்டு அமர்ந்து இருக்க பிராமணி மட்டும் இரு கால்களையும் கீழே தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறாள்.

சில இடங்களில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் தங்கள் தலைகளுக்குப்பின்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபையோடு காணப்படுகின்றன. பல இடங்களில் தாய்மார் எழுவரும் தனித்தனிச் சிற்பமாகத் தோற்றத் தர, சில இடங்களில் ஒரே கல்லில் எழுவரும் புடைப்புச் சிற்பமாகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

தாய்மார் எழுவருடன் சிவபெருமான் நாட்டியமாடுவது போன்றும் சில சிற்பங்கள் காணப்படுகின்றன. திருப்பரங்குன்றத்தில் ஆனந்தத் தாண்டவமாடுகின்ற நடராஜப் பெருமானின் இடப்புறத்தில் தாய்மார் எழுவர் நாட்டியமாடும் காட்சி பிற்காலத்தில் கட்டப்பட்ட சுவரால் மறைக்கப்பட்டு சிறிதளவே தெரிகின்றது. கூர்ஜாபிரதிகாரர் கலைப்பாணியில் கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பத்தில் சிவனும், கணேசரும் சப்தமாதர்களுடன் நடனம் ஆடுவது போன்று காணப்படுகின்றது. இது தற்போது அலஹாபாத் அருங்காட்சியகத்தில் உள்ளது.

பூரியில் காணப்படும் அன்னையர் எழுவரின் சிற்பங்கள் தனித்த சிறப்புடையாக உள்ளன. எழுவரும் 'அர்த்தபர்யங்க' நிலையில் அமர்ந்திருக்க ஒவ்வொருத்தரின் மடியிலும் குழந்தை காணப்படுகின்றது. அவர்கள் உயிர்களைக் காக்கும் அன்னையர் என்பதைச் சித்திரிக்கு முகத்தான் அவர்கள் மடியில் குழவிகள் காட்டப்பட்டுள்ளன. பாட்னா அருங்காட்சியகத்தில் உள்ள அன்னையர் எழுவர் சிற்பங்களிலும் , அவைகளின் இடது தொடையின் மீது குழந்தைகள் காணப்படுகின்றன. இவை கி.பி. 12–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தமிழகத்தில் இதுவரையில் சப்த மாதாக்கள் குழந்தைகளை வைத்திருப்பது போன்று காணப்படவில்லை. ஒருவேளை இங்கு சப்த கன்னிகளாகத்தான் (மணமாகாதவர்கள்) அவர்களை வழிபட்டார்களோ என்று எண்ண இடமேற்படுகின்றது. புவனேஸ்வரத்திலுள்ள பரசுராமேஸ்வரர் கோயிலின் வடக்குச் சுவரில் வடமேற்கு மூலையில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் காணப்படுகின்றன. முக்தேஸ்வரர் கோயிலில் விதானத்தில் விரிந்த தாமரை மலரில் தாய்மார்கள் அமர்ந்திருப்பதாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வங்காளத்திலும் தாய்மார் எழுவர் சிற்பங்கள் கிடைக்கின்றன. குறிப்பாகச் சாமுண்டி, ரூபவித்யா, சித்தயோகேஸ்வரி, தந்துரா என்ற உருவங்களில் சிறப்பாக வழிபடப்படுகின்றன.

தமிழகத்தில் இதுவரையில் கிடைத்தி ருக்கின்ற சப்த மாதர்களின் (தாய்மார் எழுவர்) சிற்பங்களில் செங்கற்பட்டு மாவட்டம், குன்றத்தூரில் கிடைத்திருப்பதுதான் மிகவும் பழைமையானதாகும். இவை கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவையாகும். இவை மணற்கல்லினால் உருவாக்கப்பட்டவை. இதற்கு அடுத்த நிலையில் காஞ்சி கயிலாயநாதர் கோயிலில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்களைக் குறிப்பிடலாம். இவை கி.பி. 8–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டி, திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கம் ஆகிய இடங்களில் காணப்படுவது கி.பி. 9–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்ததாகும்.

இவைகளையடுத்து செங்கற்பட்டு மாவட்டம் திருநின்றவூர், திருத்தணிகை, சீமாவரம், வட ஆர்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம், மதுரை மாவட்டம் கீழ்மாத்தூர் ஆகிய இடங்களில் காணப்படும் தாய்மார் எழுவர் சிற்பங்கள் கி.பி. 9, 10–ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை.

முற்காலச் சோழர் கலைப்பாணியிலும் பல இடங்களில் தாய்மார் எழுவர் சிற்பங்கள் நிரம்ப கிடைத்துள்ளன. ஆனாலும் இந்தக் காலக்கட்டத்தில் அச்சிற்பங்களோடு வாகனங்கள் செதுக்கப்பட்டிருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில் அவைகளுடன் கொடிகள் காணப்படுகின்றன.

பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர மன்னர் காலங்களைச் சார்ந்த தாய்மார் சிற்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏதும் இக்காலகட்டத்தில் இல்லை. மிகவும் பிற்காலத்தில் எழுவருக்கும் சிற்பங்கள் செதுக்குவதற்குப் பதிலாக ஏழு செங்கற்களை வைத்து வழிபட்டிருக்கின்றனர். தற்காலத்திலும் அவ்வாறு வழிபட்டு வருகின்றனர்.

தாய்மார் எழுவர் சிற்பங்கள் பொதுவாக கோயிலின் உட்பிரகாரத்தில், கருவறைக்கு நேரே தென்பகுதியில் காணப்படும். முற்காலச் சோழர் காலத்தில் சப்தமாத்ரிகர்களுக்குப் பரிவாரச் சிற்றாலயம் எடுப்பிக்கப்பட்டிருக்கின்றது. திருச்சி மாவட்டம் திருக்கட்டளை, பழுவூர் ஆகிய இடங்களில் இன்றும் காணலாம். பிற்காலங்களில் இவைகளுக்காகத் தனிக் கோயில் எடுப்பிக்கப்பட்டு வழிபட்டு வந்திருக்கின்றது. அம்மாதிரி தனிக்கோயில்களாகக் காணப் படுவனவற்றைத் தற்பொழுது செல்லாண்டி யம்மன், பொன்னியம்மன், பிடாரி கோயில் என்று மக்கள் கூறுகின்றனர். இத் தனிக்கோயில்கள் பெரும்பாலும் ஊரின் புறத்தேயே காணப்படுகின்றன.

தாய்மார் எழுவரின் செப்புத்திருமேனிகள் இதுவரை தமிழகத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் வட இந்தியாவில் இமத்பூர் என்ற இடத்தில் சப்தமாதர்களின் செப்புத் திருமேனிகள் கிடைத்து இப்பொழுது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் செப்புத் திருமேனிகள் பிராமணி, கௌமாரி, வைஷ்ணவி ஆகிய மூன்று மட்டுமே உள்ளன. தாய்மார் எழுவருக்கென தனிக்கோயில்கள் சில இருந்தமையும் அவை களுக்குக் கொடையளிக்கப்பெற்றமையும் சில கட்வெட்டுக்கள் மூலமாகவும் தெரியவருகின்றன.

திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கத்திலுள்ள செல்லியம்மன் கோயில் சப்தமாதர்களுக்காக அமைக்கப்பட்ட கோயில் என்பது அங்குக் காணப்படும் கல்வெட்டு மூலம் புலனாகின்றது. அக்கோயில் திருவொற்றியூரன் என்னும் இராயர் அலங்காரப்பிரியன் என்பவனால் கட்டப்பட்டதெனவும், அக்கோயில் செலவு களுக்காக அவன் நிலக்கொடை அளித்தான் எனவும் அக்கல்வெட்டு கூறுகின்றது. சப்த மாதர்களுக்காகத் தனிக்கோயில் காணப்படுவதில் இதுவே மிகவும் பழைமையானதாகும்.

தென் ஆர்க்காடு மாவட்டம், எறும்பூரிலுள்ள கடம்பவனேஸ்வரர் கோயிலில் அஷ்டபரிவார கோயில் எடுப்பிக்கப்பட்ட செய்தி கல்வெட்டால் உணரமுடிகின்றது.

» ஸ்வஸ்தி ஸ்ரீமதிரை கொண்ட கோப்பரகேசரிவர்மற்கு யாண்டு இரு பத்தெட்

» டாவது வடகரை நல்வாயலூர்க் கூற்றத்துத் தேவதானம் உறுமூர்ச் சிறுத் திருக்கோயில்

» பெருமானடிகளுக்கு ஸ்ரீ விமானக் கற்றளி எடுப்பித்து அஷ்ட பரிவார கோயில்

» செய்வித்து உடையார் சோழப் பெருமானடிகள் ஸ்ரீ பராந்தகவ தேவர்க்கு இளங்கோளவ

» ன் குணவன் அபராஜிதன் விண்ணப்பம் செய்ய.....

முதலாம் பராந்தகச் சோழனின் 28-ஆம் ஆட்சி ஆண்டில் உறுமூர் (எறும்பூர்) சிறுத் திருக்கோயில் பெருமானடிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவன் குணவன் அபராஜிதன் என்பான் ஸ்ரீ விமானம் கற்றளியாக எடுப்பித்ததையும், எட்டு பரிவாரக் கோயில்கள் அமைத்தமையும் மேலே காணப்படும் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. எட்டு பரிவாரத் தெய்வங்களாவன சூரியன், சப்தமாதர்கள், கணபதி, முருகன், ஜேஷ்டாதேவி, சந்திரன், சண்டேஸ்வரர், பைரவர். எனவே எறும்பூரிலும் சப்த மாதர்களுக்குக் கோயில் இருந்தமை தெரியவருகின்றது.

சென்னையை அடுத்துள்ள வேளச்சேரியில் இன்றும் சப்தமாதர்களுக்கென ஒரு தனிக் கோயில் உள்ளது. இது செல்லியம்மன் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் தெற்குப் பக்கச் சுவரில் பார்த்திவேந்திராதிபதிவர்மனின் பத்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அதில் சோழநாட்டு மல்லநாட்டிலுள்ள திருவெட்பூரைச் சேர்ந்த திருவெட்பூருடையான் தேவடிகள் சப்தமாத்ரிகளுக்காக நிலக்கொடை அளித்தது குறிக்கப்பட்டுள்ளது. மேலும் அந் நிலக்கொடை 'மாத்ரு சிவர்' என்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறுகின்றது. அக்கல்வெட்டு,

» ஸ்வஸ்திஸ்ரீ கோப்பபார்த்தி வேந்த்ரா திபதி பன்மற்கு யாண்டு பத்தாவது புலீயூ

» ர் கோட்டத்து வேளச்சேரி மஹா ஸ பையோம் எம்மூர் சப்தமாத்ரிகரு

» க்குச் சோழநாட்டு மழநாட்டுத் திருவெட் பூர்த்திருவெட்பூருடையான் தேவடி

» கள்அர்த்தசந்த்ர காலமுநிச்ச, படி வைத்த திருவமிர்து ஒன்று இதனுக்கு இவ

» ன்விலைகொண்டு வைத்த பூமி இவ்வூர்த் தென் கழனிப் பூதி பாக்கள்

» .... தடி நாவினாலூரிய கிணற்றுக்குழி இரண்டேற்றிக் குழி ஐஞ்ஞாற்று

» முப்பத்தொன்றரையே..... காணியாலும் எப்பேர்ப்பட்ட இறையும்

» ஒழியப் பணித்து இறை இழிச்சுக் குடுத்தோம் மஹா ஸபையோம்.

» இ பூமி நாங்களே கொண்டு நிசதம் ஒரு திருவமிர்து செய்விக்கக் கடவோம் இ ஸ்ரீ கோ

» யிலுடைய மாத்ருசிவரோம் – டைக்குடி வேட்டுவிச்சார் கரியபட்டி என்று எழுதப்பட்டுள்ளது.

**இலக்கியங்களில் தாய்மார் எழுவர்**

தமிழிலக்கியங்களில் முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் சப்தமாதர்கள் குறிக்கப் படுகின்றனர். அன்னை பராசக்தியைக் குறிக்குமிடத்தில், இளங்கோவடிகள்,

"அறுவர்க்கிளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூருடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்"

என்று வருணிக்கின்றார்.

முதலாம் குலோத்துங்கச் சோழனின் கலிங்கப் போரைப் பரணியாகப் பாடிய சயங் கொண்டார், கடவுள் வாழ்த்துப் பகுதியில் தாய்மார் எழுவரையும் அவர்களது கொடி களுடன் குறிப்பிடுகின்றார்,

"மேதி புள்ளலகை தோகை யேறுவனம்
வேழம் என்ற கொடி ஏழுடைச்
சோதி மென்கொடிகள் ஏழின் ஏழிருது
ணைப் பதந் தொழ நினைத்துமே"

என்பதாக.

திருமூலரின் திருமந்திரம் கன்னிமார் எண்மர் என்று குறிப்பிடுகின்றது.

"பூரித்த பூவிதழ் பட்டினுக் குள்ளேயோர்
ஆரியத் தாளுண்டங்கு எண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சக்தியைத் தாங்கள் கண்டாரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருந்தனர் சக்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் குழு எதிர்ச் சக்கரத்தே
இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே"

என்னும் பாடல் வரிகளில் காணலாம்.

சப்த மாதர்களில் ஒருவராகிய வாராகியைப் பற்றி,

"ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுவடை ஏந்திய வெண்ணகை
ஊனம் அறவுணர்ந் தாருவத் தோங்குமே"

என்றும் திருமந்திரம் தெரிவிக்கின்றது.

கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தர், சக்தி வழிபாட்டை மையமாக வைத்தே தம் தக்கயாகப் பரணியைப் பாடினாரென்பர். அத் தக்கயாகப் பரணியில் தாய்மார் எழுவரையும்,

"எறிபடை விசயை
யிசைகெழு தெய்வமகளிர்
எழுவரும் வெள்ளை முளரி
யினிதுறை செல்வ மகளும்

மறிகடல் வையமகளு
மலர்கெழு செய்ய திருவும்
வரவிரு மெல்லவுரகன்
மணியணி பள்ளியருகே"

என்று கூறிச் செல்கின்றார்.

திருவிளையாடற் புராணம், திருநகரங்கண்ட படலத்தில் பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் சப்த மாதாக்களை மதுரையில் தெற்குத் திசையில் காவல் தெய்வமாகப் பிரதிட்டை செய்து வைத்தது கீழ்க்காணுமாறு குறிக்கப்பட்டுள்ளது.

"பார் சொக்கநாதனுரைப்படி
கீழ்த்திசை பாங்கரரி
அரபுத்திரன் சப்தமாதாக்கள்
தென்திசையக் குடபாற்
கருணைப் புயலுத்தரங்காளி
கூடலைக் காத்தளிக்கப்
பாரினிற் பிரதிட்டை செய்தான்
குலசேகரப் பாண்டியனே"

இதே செய்தி பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திலும், திருநகரங்கண்ட படலத்தில்,

"கீட்டிசைக் கரிய சாத்தனும் தென்சார்
கீற்று வெண்பிறை நுதற்களிற்று
கோட்டிளங் களபக் கொங்கை
யன்னையரும் குடவயின் மதுமடை
-யுடைக்கும்
தோட்டிவந் தண்ணந்துழாயணி
மௌலித் தோன்றலும் வடவயிற்றோடு
நீட்டிரும் போந்தினிமிர்
குழவெண்டோனீலியுங் காவலா நிறுவி"
என்று கூறப்பட்டிருக்கின்றது.

**சமணமதத்தில் சப்தமாதர் :**

கந்தகிரி மலையிலுள்ள சத்கரகுகையில் தாய்மார் எழுவர் உருவங்கள் சமண மதத்தின் அடிப்படையில் வழிபடப்படுகின்றன. இவ்வுருவங்களில் சில பத்துக் கைகளோடும் சில நான்கு கரங்களோடும் காணப்படுகின்றன. முதல் ஐந்து உருவங்களும் அவை தரித்துள்ள படைக்கலன்களின் அடிப்படையில், பிராமணி, வைஷ்ணவி, இந்திராணி, மாஹேஸ்வரி, கௌமாரி ஆகிய உருவங்களை நினைவூட்டுகின்றன. ஆறாம் உருவமும் ஏழாம் உருவமும் சமணமதச் சார்புடைய பத்மாவதி, அம்பிகா ஆகிய உருவங்களாக இருக்கலாம் போன்று தெரிகினறது. இவைகளில்மூன்று, ஐந்து, ஏழாம் உருவங்கள் கைகளில் குழந்தையை ஏந்தியுள்ளன. இவற்றில் ஐந்தாம் உருவத்தைத் தவிர மற்றவற்றை சமண மத அடிப்படையில் சக்ரேஸ்வரி, அஜிதாதேவி, துரிதாரி அல்லது ப்ரஞாப்தி, கௌரி அல்லது மானவா, பத்மாவதி, அம்பிகா என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி வழிபாடு பற்றிய அடிப்படையான நூல்கள்

ஜி. நாராயணன்

**வே**தகாலம் முதல் நமது நாட்டில் தொன்றுதொட்டு வருவது சக்தி வழிபாடு. நான்கு வேதங்களிலும் உபநிஷத்தங்களிலும், தந்திரங்களிலும், ஆகமங்களிலும் சக்தியின் பெருமையைப் பரக்கக் காணலாம். ஸ்ரீ சூக்தம், துர்கா சூக்தம், தேவி உபநிஷத், த்ரைபுர சூக்தம், த்ரிபுரோபநிஷத், பாவனோபநிஷத், அருணோபநிஷத் முதலியன இதற்குத் தக்க சான்று பகரும்.

வேதங்களில் சுருக்கமாகவும் மறைவாக வும் கூறப்பட்ட சக்தி தத்துவத்தை விரிவாக விளக்கக் காலப்போக்கில் நூற்றுக்கணக்கில் நூல்கள் எழுந்தன. இவற்றைப் பொதுவாகத் தந்திரங்கள் என்பர். இவை. துதி, வழிபாடு, மந்திர சாஸ்திரம், தத்துவம் என்னும் பெரும் பிரிவுகளைத் தம்முள் கொண்டு விளங்குவன. தக்ஷிணம், வாமம், கௌலம், சமயம் என்னும் நான்கு உட்பிரிவுகளையும் இவற்றுள் காணலாம். இந்த நான்கு மார்க்கங்களுள் ஒன்றிற்கொன்று ஏற்றத் தாழ்வில்லை. இந்தத் தந்திரங்களுள் முக்கியமானவையாக அறுபத்துநான்கு தந்திரங்களைக் கணக்கிட்டுள்ளனர். இவற்றின் பெயர்களில் சிற்சில மாறுபாடுகளுண்டு.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த சக்தி வழிபாடு, சாக்தம், தாந்த்ரீகம், ஸ்ரீவித்யை என்னும் பெயர்களால் வழங்கப்படுகின்றது. இதன் வழிபாட்டு முறைகளையும், தத்துவங்களையும் விளக்கும் நூல்கள் எண்ணிறைந்தன. இருந்தபோதிலும், முக்கியமாக ஸ்ரீவித்யோபாசகர்கள் பின்பற்றுவது மூன்று நூல்களாகும். அவற்றை "ஸ்ரீவித்யா ப்ரஸ்தான த்ரயம்" என்று வழங்குவர் அவை.

1. ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமமும் அதன் பாஷ்யமாகிய ஸௌபாக்ய பாஸ்கரமும்
2. ஸ்ரீநித்யா ஷோடசிகார்ணவமும் அதன் வியாக்யானமாகிய ஸேதுபந்தமும்
3. வரிவஸ்யாரஹஸ்யமும் அதன் குறிப்புரையாகிய பிரகாசமும் ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நூல்களைப் பற்றி ஆராயப் புகுமுன், அவற்றிற்கு விரிவுரை செய்த மகானாகிய ஸ்ரீபாஸ்கர ராயரைப் பற்றியறிதல் மிகவும் இன்றியமையாதது. அப்பெரியார் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் மகாராஷ்டிர தேசத்தில் பாகா என்னும் ஊரில் ஸ்ரீகம்பீரராயர் என்னும் பண்டித சிரோமணிக்கும் கோனமாம்பா என்னும் பெண்மணிக்கும் பிறந்தார். இளம் வயதிலேயே ஸ்ரீ ந்ருஸிம்ஹானந்தநாதர் என்பவரிடம் பதினெட்டு வித்யைகளையும் பயின்று பெரும் பண்டிதரானார். பிறகு ஸ்ரீ சிவதத்த சுக்லா என்னும் யோகியாரிடம் ஸ்ரீ வித்யா பூர்ணாபிஷேகம் பெறறுச் சாக்த மதத்தைப் பரப்பினார். இவர் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 50 ஆகும். வேதாந்தம், வியாகரணம், காவியம், மீமாம்சை, மந்திர சாஸ்திரம் முதலிய பல துறைகளிலும் அவரது நூல்கள் விளங்குகின்றன. அவரது நூல்களுள் மும்மணியாக மிளிர்வன ஸௌபாக்யபாஸ்கரம், ஸேதுபந்தம், வரிவஸ்யாரஹஸ்யம் என்பனவாகும். இப்பெரியார் தமது வாழ்நாளின் இறுதிக் காலத்தைத் திருவிடைமருதூரில் கழித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது சிஷ்யர்களுள் சிறந்தவராகிய ஜகந்நாத பண்டிதராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ உமாநந்தநாதர் என்பவர் 'நித்யோத்ஸவ நிபந்தம்" என்னும் தேவீ பூஜாகல்பத்தை இயற்றித் தமது குருவாகிய பாஸ்கரராயரின் ஆமோதத்தைப் பெற்றார். இவர் பாஸ்கரராயரது வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் "பாஸ்கர விலாஸம்" என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

இப்பொழுது தேவி வழிபாட்டு முறையில் மும்மணிகளாகிய ப்ரஸ் தான த்ரயத்தை ஆராய்வோம்.

**1. லலிதா ஸஹஸ்ர நாமம்**

இதற்கு "ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரம்" என்ற பெயருமுண்டு. இந்த ஸஹஸ்ர நாமம் தேவியின் புகழைக் கூறும் ஆயிரம் திருநாமங்களின் தொகுப்பாகும். இது பிரம்மாண்ட புராணத்தின் உத்தர பாகத்தில் லலிதோபாக்யானத்தில் ஹயக்ரீவர் அகஸ்தியருக்கு உபதேசம் செய்வதாக உள்ளது. இது வசின்யாதிவாக் தேவதைகளால் அருளிச் செய்யப்பட்டது என்று அறிகின்றோம்.

இந்நூல் பூர்வபாகம், நாமபாகம், பலச்ருதிபாகம் என்னும் மூன்று பிரிவுகளையுடையது. முதல்பாகமாகிய பூர்வபாகத்தில் இந்த ஸஹஸ்ரநாமம் தோன்றிய வரலாறும் அதனது மஹிமையும் கூறப்பட்டுள்ளன. இது அகத்திய முனிவர் கேட்க ஹயக்ரீவர் கூறுவதாக அமைந்துள்ளது. இதற்குத் தியானச்லோகமாக உள்ளது. 'ஸிந்தூராருண விக்ரஹாம்' எனத் தொடங்கும் ச்லோகமேயாகும்.

இரண்டாவது பாகமாகிய நாமபாகம் தேவியின் அரிய ஆயிர நாமாக்களைக் கூறுவது. இந் நாமாக்களில் தேவியின் உருவ வருணனை, வழிபாட்டு முறைகள், தத்துவங்கள் முதலியவற்றைக் காணலாம்.

கடைசியிலுள்ள பலச்ருதி, இந்த ஸஹஸ்ர நாமத்தின் பெருமை, இதைக் கீர்த்தனம் செய்வதால் ஏற்படும் பயன்கள், கீர்த்தனம் செய்யும் முறைகள் முதலியவற்றை விரிவாக எடுத்துரைக்கின்றது.

இந்த ஸஹஸ்ர நாமத்தைப் பற்றிச் சிறிது விரிவாக விளக்குவோம். வேதத்தின் ருக்குகளுக்கும் வாக்கியங்களுக்கும் ஸர்வானுக்ரமணிகை ஏற்பட்டுள்ளதோ, அவ்வாறே இந்த ஸஹஸ்ர நாமத்திற்கும் 'சலாக்ஷர சூத்ரம்' என்னும் ஓர் அநுக்ரமணிகை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூத்ரங்களை இயற்றிய பெரியார் யாரென்று தெரியவில்லை.

இந்தச் சூத்ரங்கள் மொத்தம் இருபத்து நான்கு. இவற்றுள் சில, தேவியின் ஆயிரம் நாமங்கள் இத்தனை இத்தனை நாமாக்கள் இன்ன இன்ன எழுத்துடன் தொடங்கப்பட்டன என்று தீர்மானிக்கின்றன. இந்த நாமாக்களைத் தொடங்கும் எழுத்துக்களின் எண்ணிக்கை மொத்தம் முப்பத்திரண்டு என்பது அறியத்தக்க ஒன்று. இத்தகைய ஒவ்வோரெழுத்திற்கும் இத்தனை நாமாக்கள் என்றும் சூத்ரம் அளவிடுகின்றது.

இந்த ஆயிரம் நாமாக்களும் மந்த்ராத்மகமானவை. ஆதலின் ஒவ்வொரு மந்த்ரமும் (நாமாவும்) இத்தனை இத்தனை எழுத்துக்களுடன் கூடியவை என்றும் இந்தச் சூத்திரங்கள் நிச்சயிக்கின்றன. இவற்றுடன், நாமாக்களின் வரிசைக் கிரமமும் குறிப்பிடப்படுகின்றது. ஆதலின் நாமாக்களின் வரிசையை மாற்றவோ, புது நாமாக்களை நுழைக்கவோ, உள்ள நாமாக்களை வேறுவிதமாக மாற்றவோ முடியாது.

இந்த ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தின் நாம பாகத்தைக் கூர்ந்து ஆராய்வோமாயின், அதில் எத்தனை அரிய விஷயங்கள் பொதிந்துள்ளன என்பது விளங்கும். தேவியின் உருவ வர்ணனை, காமகலையின் ஸ்வரூபம், குண்டலினீ சக்தி, மற்ற மதங்களின் கண்டனம், நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகளிலும் உள்ள ஜீவர்களது அதிஷ்டானத் தன்மை, மந்த்ர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரம், யோகம், அத்வைத சாஸ்திரம், பக்தி சாஸ்திரம், சமயம், கௌலம், மிச்ரம் முதலிய அவாந்தர மதபேதங்கள் முதலான பற்பல விலை மதிப்பற்ற மாணிக்கங்கள் உள்ள பேழையாக இந்த ஸஹஸ்ர நாமம் விளங்குகின்றது.

பலச்ருதி பாகமானது, இந்த ஸஹஸ்ர நாமத்தை ஒரு தரம் கீர்த்தனம் செய்வதாலேயே ஏற்படும் புண்ணியப் பயன் அளவிடற்கரியது என்று கூறுகின்றது. விஷு, ஸங்க்ராந்தி, ஜன்ம நக்ஷத்ரம், அயனம், சுக்லபக்ஷ நவமி, சதுர்த்தசி, சுக்ரவாரம் முதலிய நாட்களில் அவசியமாகப் பாராயணம் செய்ய வேண்டும் என்று வகுக்கின்றது. இதில் ஆயுஷ்கர ப்ரயோகம், விஷஹர ப்ரயோகம், புத்ரபரத ப்ரயோகம், மாதன ப்ரயோகம், ராஜவச்ய ப்ரயோகம், ஸர்வமோஹன ப்ரயோகம், சத்ருஹர ப்ரயோகம் முதலிய பிரயோகங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் இந்த ஸஹஸ்ர நாமத்தை நாடோறும் பக்தியுடன் எவன் கீர்த்தனம் செய்கின்றானோ அவனுக்குப் பொருள், புகழ், உடல்நலம், கல்வி, பெரிய பதவிகள், ஞானம் ஆகிய யாவும் கிட்டும் என்பதில் ஐயமில்லை என்று உத்தரபாகம் கூறுகின்றது.

இத்தகைய உயரிய ஸஹஸ்ர நாமத் திற்கு ஸ்ரீபாஸ்கர ராயர் "ஸௌபாக்ய பாஸ்கரம்" என்னும் சிறந்த பாஷ்யத்தை இயற்றியுள்ளார். அவர் தமது பாஷ்யத்தைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு 'கலை'யின் பெயரை வைத்துள்ளார். முதல் பாகமாகிய பூர்வ பாகத்திற்கு 'தபினீகலா" என்றும், நாம பாகத்திலுள்ள ஆயிரம் நாமங்களை நூறு நூறாகப் பத்துப் பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் வரிசையாகத் 'தாபினீகலா" 'தூம்ரிககலா" 'மரீசீகலா', 'ஜ்வாலினீ கலா','ருசிகலா" 'ஸுஷும்னாகலா' 'போகதாகலா' 'விச்வாகலா' 'தாரிணீகலா' என்றும், இறுதியிலுள்ள பலச்ருதி பாகத்திற்கு 'க்ஷமாகலா' என்றும் பெயரிட்டுள்ளார்.

மேலும் பாஸ்கர ராயர் தமது வித்யா குருவாகிய ஸ்ரீந்ருஸிம்ஹானந்தர் இந்த ஸஹஸ்ர நாமத்திற்கு வகுத்துள்ள, சலாக்ஷர சூத்ரங்களின் 'பரிபாஷா' ச்லோகங்களுக்கும் உரிய இடங்களில் பாஷ்யம் செய்துள்ளார். பாஸ்கரராயரது உரையின்றேல் இந்தப் பரிபாஷா ச்லோகங்களைப் புரிந்து கொள்வது என்பது அத்துணை எளிதல்ல என்பதை மறுத்தல் இயலாது.

**2. நித்யா ஷோடசிகார்ணயம்**

இது வாமகேச்வர தந்திரம் என்றும் பூர்வோத்தர சதுஸ்ஸதீ என்றும் வழங்கப்படுகின்றது. இது, "ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதலம் அவாதீதரதிதம்" என்று ஸௌந்தர்ய லஹரியில் ஸ்ரீசங்கரபகவத்பாதர் கூறியுள்ள 'ஸ்வதந்த்ரம்' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது என்று பாஸ்கரராயர் தமது பாஷ்யத்தில் கூறுகின்றார்.

இந்தத் தந்திரத்தில் மொத்தம் எட்டு விச்ராமங்கள் உள்ளன. முதல் விச்ராமம் ஸ்ரீசக்ரம், நியாசங்கள் முதலியவற்றைப் பற்றியும், இரண்டாவது புரச்சரணம் முதலியவற்றையும், மூன்றாவது முத்திரைகளையும், நான்காவது ஆயுதங்கள், சக்ரபூஜை முதலியவற்றையும், ஐந்தாவது ஜபம், மாலா, ஹோமம் இவற்றின் விதிகளையும், ஆறாவது அந்தர்யாகம், சக்ரசங்கேதங்களையும், ஏழாவது மந்த்ர சங்கேதம் பஞ்சதசியின் அர்த்தங்களையும், இறுதி விச்ராமம் ஷோடாந்யாசம், நவாவரணத்யானம் முதலியவற்றையும் விரிவாகவும் கூறுகின்றன.

இந்தத் தந்திரத்தின் இறுதி மூன்று விச்ராமங்களைத் தனியாகப் பிரித்து அதற்கு 'யோகினீஹ்ருதயம்' என்று பெயரிட்டு அதைத் தனி நூலாகக் கூறுவோருமுளர். இதற்கு 'நித்யா ஹ்ருதயம்' என்று மற்றொரு பெயருமுண்டு. இந்த ஹிருதயத்திற்கு 'அம்ருதானந்தர்' என்னும் பெரியார் 'தீபிகை' என்னும் சிறந்ததொரு வியாக்யானத்தைச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெருமைகள் படைத்த இந்தத் தந்த்ரத்திற்குச் சிவானந்தயதி என்பவர் "ருஜ்விமர்சனீ" என்ற வியாக்யானத்தையும், வித்யானந்தர் என்பார் 'அர்த்தரத்னாவளீ' என்ற வியாக்யானத்தையும் செய்துள்ளார்கள். இவர்கள் முதல் ஐந்து விச்ராமங்களுக்கே உரை வகுத்துள்ளார் என்பதை அறிக. இவ்விருவரும் யோகினீ ஹ்ருதயத்தைத் தனிநூலாகக் கொண்டுள்ளனர் என்பது அறியத்தக்கது.

ஆயினும் ஸ்ரீ பாஸ்கரராயர் முழு நூலுக்கும் அதாவது எட்டு விச்ராமங்கட்கும் 'சேதுபந்தம்' என்றதொரு அரிய பாஷ்யத்தை அருளிச் செய்துள்ளார். நூல் முழுமையும் கூர்ந்து பார்ப்போர் ஸ்ரீ பாஸ்கரராயரது உரை விளக்க ஆற்றலையும், அவரது அறிவின் ஆழத்தையும் கண்டு வியக்காமல் இரார். ஆங்காங்கு சம்பிரதாயத் தெளிவுரைகளும், புதிய கருத்துக்களும், மறைபொருள் விளக்கங்களும் மிளிரக் காணலாம். இந்தப் பாஷ்யத்திற்கு இணையாக மற்றொன்றில்லை என்பதை யாரும் மறுத்தல் இயலாது.

### 3. வரிவஸ்யா ரஹஸ்யம்

இந்நூல், வடிவிற் சிறியதாயினும் பெருமையில் அளவிடற்கரியது. பாஹ்ய பூஜையைக் காட்டிலும் ஆந்தர பூஜை சிறந்தது என்பதும், மந்திரமே தேவியின் ஸ்வரூபம் என்பதும் இந்நூலில் வெள்ளிடை மலையாகக் காட்சி அளிக்கின்றன.

இந்த நூலில் மொத்தம் 114 ச்லோகங்கள் உள்ளன. இஃது இரண்டு அம்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் அம்சத்தில் பிரகாச விமர்சங்களின் வர்ணனையும், காயத்ரியும் ஸ்ரீவித்யையும் ஒன்றே என்னும் கொள்கையும், பஞ்சதசியின் உத்தாரம், உச்சாரண காலம், உற்பத்தி, ஜபகாலத்தில் பாவிக்கத்தக்க அவஸ்தா பஞ்சகம், சூன்யஷட்கம், விஷுவசப்தகம் என்பனவும் மிகவும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது அம்சத்தில் பஞ்சதசியின் பதினைந்து விதமான அர்த்தங்களும், அந்தர்யாக பூஜனத்தின் மேன்மையும், பிற விஷயங்களும் உள்ளன. இந்நூலின் ஆசிரியராகிய ஸ்ரீபாஸ்கர ராயர் தாமே இதற்கு 'பிரகாசம்' என்னும் பெயரிய குறிப்புரையொன்றும் இயற்றியுள்ளார். அவ்வுரை மூல நூலிலுள்ள கடினமான பதங்களுக்குச் சுருக்கமான விளக்கங்கள் கூறுவதாகும்.

இதுவரை கூறப்பட்ட மூன்று நூல்களுள் தேவி வழிபாடு சம்பந்தமாகக் கூறப்படாத விஷயமே இல்லை எனலாம். இந்த மும்மணிகளும் தேவி வழிபாட்டில் ஈடுபட்டோருக்கு மிகமிக இன்றியமையாதன. அவர்கள் மனமுருகிப் பாடி புகழ்வதற்குத் தேவியின் திருநாமங்களின் தொகுப்பாக லலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரமும், வழிபாடு செய்ய அம்முறைகளை விளக்கும் நித்யாஷோடசிகார்ணவமும், அவற்றின் தத்துவங்களை அறிந்துய்ய வரிவஸ்யா ரஹஸ்யமும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

இம்மூன்று நூல்களுள் முதலிரு நூல்கட்கு விரிவுரையும், மூன்றாவது நூலுக்கு (மூலமும்) குறிப்புரையும் அருளிச்செய்த ஸ்ரீபாஸ்கர ராயருக்குத் தேவி வழிபாட்டில் ஈடுபட்டோர் நன்றிக் கடன்பட்டுள்ளனர். ஆதலின் அவர் காட்டிய வழிநடப்பதே நமது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்கர வழிபாட்டின் மகிமை

**சுந்தர. செந்தில்ராஜ சிவாச்சார்யார்,**
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ சக்கர மகாமேரு என்பது சிவசக்தியின் ஒன்பது கட்டு அரண்மனை. ஸ்ரீலலிதா மகா திருபுரசுந்தரியின் மகா சாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில் சூரியன், கணபதி, மகாவிஷ்ணு, பரமேஸ்வரன், முருகன் என அனைத்து தெய்வங்களும் உண்டு. ஸ்ரீ சக்கர வழிபாட்டில் அனைத்து தெய்வங்களையும் ஒருங்கே வழிபடமுடியும். ஸ்ரீசக்கரத்தின் மத்தியில் ஸ்ரீலலிதாம்பிகை வாசம் செய்கின்றாள். ஸ்ரீ சக்கரத்தின் பெருமைபேசும் நூல்கள் லலிதா சகஸ்ரநாமம், சௌந்தர்ய லஹரி, தேவி மகாத்மியம், தேவி நவரத்னமாலை, அபிராமி அந்தாதி. ஸ்ரீ சக்கரத்தில் ஒன்பது ஆவரணங்கள். முதலாவது ஆவரணத்தில் தேவி வியாழபகவானின் சொரூபியாக 28 யோகினியாக வீற்றிருக்கின்றாள். கிரகங்களில் பெரியது வியாழன். எல்லா தடை நீக்கம், விஞ்ஞானக்கல்விச் சிறப்பு, செல்வம், பசு, வாகனம் சேரும். இரண்டாவது ஆவரணத்தில் தேவி சனி பகவான் சொரூபியாக பதினாறு யோகினிகளாக அருள்புரிகின்றாள். ஆரோக்யமான நீண்ட ஆயுள், வாகனாதி போகபாக்யம்.

மூன்றாவது ஆவரணத்தில் சுக்கிரனின் சொரூபியாக அஷ்ட சித்திகளாக எட்டு தாமரை இதழில் வாசம் செய்கின்றாள். பொருள் பண்டம், தனம் தான்யம், நல்ல வாழ்க்கைத்துணை. நான்காவது ஆவரணத்தில் சந்திரனின் சொரூபியாக பதின்நான்கு யோகினிகளாக அருளுகின்றாள். சலனமற்ற கூர்மை அறிவு, அழகு, முகவசீகரம். ஐந்தாவது ஆவரணம் தேவி செவ்வாய் சொரூபியாக கணித கல்வி பத்து யோகினிகளாக அருளுகின்றாள். அறுவைச் சிகிச்சை அற்ற ஆரோக்கியமான உடல், குழந்தைச் செல்வம். ஆறாவது ஆவரணத்தில் சூரியனின் கலை தொடர்பான கல்வி, சொரூ பியாக தெய்வங்களின் அருள், குலதெய்வ அருள், கூர்மையான கண், சூடு சம்பந்த நோய் இன்மை, கூர்மையான அறிவு. ஏழாவது ஆவரணத்தில் புதன்கிரக சொரூபியாக நல்ல கல்வி, ஆத்மஞானம். எட்டாவது ஆவரணத்தில் ராகு, கேது தோசத்தை நிவர்த்தி செய்பவளாக நான்கு யோகினிகளாக அருளுகின்றாள்.

ஒன்பதாவது ஆவரணத்தில் லலிதாம்பிகை அருள்புரிகின்றாள். மேலும் குலதெய்வம் தெரியாதவர்கள் ஸ்ரீ சக்கர வழிபாட்டால் குலதெய்வ தோசம், பரம்பரை தெய்வ தோசம், பிதுர் தோசம் என்பனவற்றிலிருந்து விலகிக்கொள்ளலாம் என்று சங்கராச்சார்ய சுவாமிகள் கூறுகின்றார். ஸ்ரீ சக்கர வழிபாட்டில் பஞ்சதசாக்சரி எனும் 15 அட்சரங்களைக் கொண்ட மந்திரம் முதன்மை பெறுகின்றது. வாக்பவகூடம், மத்யகூடம், சக்திகூடம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பஞ்ச தசாக்சரியில் சிவாட்சரங்களில் தொடங்கும் நாமங்களை தேவியும், சக்தி அட்சரங்களைக் கொண்டு ஆரம்பிக்கும் நாமங்களை, சிவனும், இரண்டும் அல்லாத அட்சரங்களை ஹயக்றீவரும் எழுதினார்கள். அதுதான் லலிதா திரிசதீ. இந்த திரிசதீ நாமங்களினால் ஸ்ரீசக்கரத்திற்கு குங்கும அர்ச்சனை செய்வது மிகச் சிறந்தது. பைரவப்பெருமானும் காளிதேவியும் ஸ்ரீ சக்கரத்திற்கு வலம் இடமாக இருக்கின்றார்கள். அத்தோடு அட்டதிக்கு பாலகர்கள் தேவியின் எண்கோணத்தில் காவல் செய்கின்றார்கள்.

அதனால் ஸ்ரீ சக்கர வழிபாட்டால் பில்லி சூனியம் எமக்குக் கிட்ட நெருங்க முடியாது. அதுமாத்திரமல்லாமல், தேசிக்காய் விளக்கோ அல்லது நெய் விளக்கோ ஏற்றி பதினைந்து அட்சரங்களோடு ஓம் என்ற அட்சரத்தையும் சேர்த்து பதினாறு அட்சரங்களாலே தேவிக்கு குங்கும அர்ச்சனை செய்வதால் பதினாறு செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழலாம்.

**"சர்வேஜனா சுகினோ பவந்து."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலங்குகிற கோபுரத்தை அமைத்து விட்டான்!

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

உலகமெலாம் தன் கருணைக் கண்களாலே
ஓய்வின்றிக் காக்கின்ற எங்கள் துர்க்கை
வளம் மிகுந்த தெல்லி நகர் மேவிநின்றாள்
வற்றாது அருள் சுரந்து அடியர் தங்கள்
உளம் மகிழத் தினம் தினமும் அறங்கள் மேவி
ஒப்பற்ற பெரும் புகழைத் தன்னதாக்கி
நிலம் முழுதும் வியந்திடவே ஓங்கி நல்ல
நிகரில்லா பெருமையொடு நிமிர்ந்து நின்றாள்.

அன்னையவள் தன்னினையே அகத்துள் வைத்து
அற்புதமாம் புதுநெறிகள் அமைத்து மண்ணில்
இன்னவிதம் செல்வதுதான் சமயம் என்று
ஏற்றமுற சைவமதை எழுச்சி செய்தாள்
தன்னையவள் முழுவதுமாய்க் கொடுத்துத் துர்க்கை
தாயவளின் அருளதனைப் பெற்று மண்ணில்
பெண்ணிவளோ! தெய்வமதோ! என்று மக்கள்
பேசிடவே சிவத்தமிழை நிலைக்கச் செய்தாள்.

தங்கம்மா என்கின்ற பெயரைப் பக்தர்
தம்முடைய மந்திரமாய் மனதுள் வைத்து
மங்காத அவர் தொண்டில் தாமும் சேர்ந்து
மகிமை பல செய்திட்டார் மண்ணில் மற்றோர்
எங்கேனும் காணாத அறங்கள் எல்லாம்
ஏற்றமுற ஆலயத்துச் சூழல் தன்னில்
தங்காதல் மனத்தோடு இயற்றி நின்ற
தாயவளை துறந்தறியாய் போற்றி நின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையவள் துர்க்கைதன்னின் அடிகள் சேர
யார் இனிமேல் அவர்தம்மின் பணிகள் தம்மை
முன்னெடுத்துச் சென்றிடுவார் என்று மக்கள்
முணுமுணுத்து நிற்கையிலே முளைத்து வந்தான்
எண்ணமெலாம் அறமதனை இணைப்பதன்றி
எதனையுமே அறியாத எங்கள் தம்பி
தன்னிகரில் திருமுருகன் தன்னை அன்னை
தன் பணிக்காய் அழைத்தேதான் தலைமை தந்தாள்.

மண்ணதனில் போர் முடிந்து மக்களெல்லாம்
மருண்டேதான் வாழ்கையிலே மனத்துள் தாயாய்
அன்னவரை அணைத்தவரின் அல்லலெல்லாம்
அகற்றிடுவேன் யாமிருக்கப் பயமேன் என்று
சொன்னதனைச் சொன்னபடி செய்து காட்டி
சோர்விலனாய் எறும்பெனவே ஓடி ஓடி
மண் முழுதும் சென்றே தன் மகிமைமிக்க
மங்காத வாக்கதனால் மனிதம் காத்தான்.

முதியவரைக் காப்பதற்காய் முனைந்து நல்ல
முறையாக இல்லமதை அமைத்துத்தந்தான்
கதியிழந்த குழந்தைகளைக் கனிவினாலே
கற்றவர்கள் வியந்திடவே காத்து நின்றான்
மதி குறைந்த பாலகரை ஏற்றுத் தன்னின்
மகிமைமிகு சிவபூமி இல்லம் சேர்த்து
விதியதனை மாற்றித் தன் அறிவினாலே
வேறுபல அறங்களையும் வீறாய்ச் செய்தான்.

பல்லோரும் தலைவரென ஓடி ஓடி
பகர்ந்தேதான் தம்வாழ்வு சிறந்து ஓங்க
பொல்லாத மனத் தோடு புன்மை செய்தார்
புண்ணியனோ அறம் வளர்த்து மக்கள் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளாத உடம்போடும் தாங்கி நின்றான்
தன்னிகரில் இவன் பெருமை மேலும் பொங்க
நல்லார்கள் வாழ்த்திடுவார் நலங்கள் சேரும்
நமதன்னைத் துர்க்கையவள் அருளும் செய்வாள்

இன்றே யாழ் மண்ணதனின் தலைவன் என்று
இவனைத்தான் சொல்லிடுவேன் அறங்கள் காத்து
நன்றான காரியங்கள் பலவும் செய்யும்
நாயகனை வாழ்த்திடவும் வார்த்தை உண்டோ!
ஒன்றாக அன்னையவள் அடிகள் தன்னில்
ஒரு மனத்தோடிவன் செய்யும் பணிகளெல்லாம்
குன்றாது வளர்வதனைக் கண்டு உள்ளம்
குளிர்ந்திடவே வாழ்த்துகிறேன் நலங்கள் சேர!

நேற்றுத்தான் ஆலயத்தின் தெற்கு வாசல்
நிமிர்ந்திடவே கோபுரத்தை அமைத்துத் தந்தான்
ஆற்றுதற்கு நேரமிலா அரிய மைந்தன்
அதற்குள்ளே வடக்கினிலும் அதிசயிக்க
தோற்றமதில் மலையெனவே உயர்ந்து நிற்கும்
துலங்குகிற கோபுரத்தை அமைத்துவிட்டான்.
ஏற்றியிவன் தனைப் புகழ வார்த்தை தேடி
இயலாது சோர்கின்றேன் இதயம் பொங்க!

சிவத்தமிழின் செல்வி அவர் சேர்த்து வைத்த
சீர் மிகுந்த அறமதுவும் செகத்தைக் காக்க
தவப்பயனாய் வல்லாளன் தன்னைக் கொண்டு
தன்னிகரில் செயல்கள் பல செய்ததாமோ?
பவம் மகிழ பல்லோரும் போற்றி நிற்க
பாரதனில் மென்மேல் தன் திறத்தினாலே
நவம் மிகுந்த நற்பணிகள் செய்ய ஐயன்
நாயகியாம் துர்க்கையவள் அருளி நிற்பாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குபேர வாசல் கோபுரம் கண்டனம்

பேராசிரியர் : எஸ்.சிவலிங்கராஜா

விண்ணளாவிய கோபுரம் துர்க்கையின்
வீதிதோறும் நிமிர்ந்தருள் செய்திடப்
பண்ணிசை பலதோத்திரப் பாடல்கள்
பாடி நின்று பக்தர் துதித்திட
எண்ணிலாத சேவைகள் செய்து எம்
இதயம் எங்கும் நிறைந்துள எங்களின்
கண்ணிகர்த்தவள் அன்னை தங்கம்மா
காலம் காலமாய் உன்பணி வாழ்த்துவம்

வீடு வாசல் இழந்தவர் தம்துயர்
விதியென்றெண்ணி வீழ்ந்திடா வாறுநீ
பாடுபட்டுப் பற்பல புண்ணியம்
பாதை செல்ல வழிகள் சமைத்துயர்
ஈடுபாட்டுடன் தெல்லி மாநகர்
இறைவி பேரினில் தருமம் வளர்த்துயர்
நீடுபொற்புகழ் பெற்ற எம் அன்னையாம்
தங்கம் மாவின் நினைவினைப் போற்றுவோம்

ஒன்று பத்து பல்லாயிரங் கோடியாய்
உண்மையோடு சேர்த்த பெரும்பொருள்
நின்று நித்தியம் போற்றித் துதித்திட
நிமிர்ந்து எங்கள் சைவம் தழைத்திட
குன்றுபோல உயர்ந்துள துர்க்கையின்
குபேர வாசல் கோபுரம் கண்டனம்
நன்று நன்றென நம்மடியார் தினம்
நாளும் போற்றி நம் அன்னையைப் பாடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேரவாயிற் கோபுர கட்டுமாணத் திருப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குபேரவாசற் கோபுர அடிக்கல் நாட்டுதல் - 30.06.2017













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிலங்கும் நெற்றியிற் துர்க்கையின்
    நித்திலம் என அர்ச்சனைக் குங்குமம்
பேறுபெற்று விளங்கிடும் பெற்றிதம்
    பெருமை தன்னை எடுத்து விளக்கிடும்
வீறுபெற்று நம்சைவம் தழைத்திட
    வேண்டும் தொண்டுகள் நாளும் புரிகிற
ஆறுசெஞ்சொற் திருமுருகன் தன்னை
    ஆக்கினாள் அன்னை தம்பணி தொட்டிட

வீதியோரம் விருட்சங்கள் விண்ணினை
    வெற்றிகொள்ள நினைந்து வளர்ந்திட
நீதிவாழ்வின் நிதர்சனம் என்றெமை
    நித்தம் நித்தம் நினைத்திடத் தூண்டிடும்
சோதிபெற்றுயர் கோபுரங்கள் மூன்றுள
    சொர்க்க வாயிற் படியென நின்றிடும்
ஆதிஅந்தமில்லாத நம் துர்க்கையின்
    அருளை எண்ணி வாழ்த்தி வணங்குவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் குளிர்ந்திடக் கூடுங்கள்

கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு

வடதிசைக் குபேர வாசலில் கோபுரம்
வானுற எழுந்தது பாரீர்!– தெல்லியூர்
இடமிசை யுறையும் இறைவி துர்க்கையின்
இருப்பிடம் நோக்கியே வாரீர்!

ஏவிளம்பி யாண்டு இனியதைத் திங்களின்
நாவிளம்பு மேகாதசி நன்னாள் – தாயவள்
கோபுரக் கும்பா பிஷேகம் கண்டுமனம்
குளிர்ந்திடக் கூடுங்கள் ஒன்றாய்!

ஓராண்டு காலத்துள் உருவான கோபுரம்!
உத்தமர்கள் துணையினால் உயர்ந்திட்ட கோபுரம்!
சீராண்ட செஞ்சொற் செல்வருடன் நிர்வாக
சேவைசெய் அன்பர்களாற் சிறந்திட்ட கோபுரம்!

கோயிலுடன் மூலக் கோபுரம் நிமிர்ந்து,
கூடவே தென்றிசைக் கோபுரம் அமைந்து,
வாயிலாம் வடக்கில் வண்ணமா யின்று
வளர்ந்திட்ட கோபுரம்; வாழ்க்கையின் தரிசனம் !

புனித நீரினாற் பொலிவுறும் அபிஷேகம்!
பூக்கள் பாக்களாற் பூசிக்கும் மனநேசம்!
மனித உணர்வின் மகத்துவந் தனைப் பேசும்
மண்ணிற் கிடைத்ததே மாதவவரப் பிரசாதம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை துர்க்கையின் அடிபணிந் தேத்துவார்!
அல்லல் தீர்ந்திட அனுதினம் வேண்டுவார்!
முன்னை வினைப்பயன் முடிவுற வேகுட
முழுக்கினைக் கண்டு முழுப்பய னுறுகவே!

வேதிய ரோதிடும் வேத மந்திரம்!
விண்ணெழும் நாத சுரந்தரும் சங்கீதம்!
ஓதியே அன்பர்கள் உளங்கனி பண்ணிசை
ஓங்காளி துர்க்கையின் ஒளிர்கோயில் நல்லிசை!

அடியவர் மனவூஞ்சல் ஆடியே களிப்பவள்!
கொடியவர் மனச்செருக்குக் கொன்றிடத் துணிபவள்!
வடிவுள பஞ்சதள வடதிசைக் கோபுர
வரிசைகள் பெறுபவள்; வரந்தந்து காப்பவள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களி கூரும் இனிய நாள்!

கவிஞர் சோ. பத்மநாதன்

வெண்மணல் படுத்த வீதிகள் சூழும்
கோயிலின் தென்திசை மருங்கு
விண்தொட நிமிர்ந்தோர் கோபுரம் நிற்கக்
கண்டுமெய் சிலிர்த்திடும்; அடியார்
கண்களி கூரும் இனியநாள் கலசம்
புனித நீராட்டு நன்னாளாம்!
பண்களி கூரப் பரைபுகழ் பாடி
ஆடுவம் பக்தர்காள் வம்மின்!

துர்க்கையின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்த
துரந்தரி வழியினில் தொடர்ந்து
நற்பணி யாற்றும் திருமுரு கப்பேர்
நாவலன் முயற்சியால் பண்டை
சிற்ப நூல் தேர்ந்த வல்லுநன் புருஷோத்
தமன்தன தணியொடும் படைத்த
அற்புதம் பஞ்ச தளத்தொடும் எம்மை
ஆட்கொள வந்தது, தொழுமின்!

'போர்இடப் பெயர்ச்சி, இழப்பு என அலைந்தோர்
புகலிடம் துர்கதைதன் கோயில்'
ஊர் உலகறிந்த உண்மையீது. இந்து
மதநிறு வனங்களுள் உயர்ந்து
யாருமே போற்றும் பணிகள் முன்னெடுக்கும்
அறப்பெரும் நிலையமாய் ஓங்கி
வேரென – சைவர் கலங்கரை விளக்காய்
மிளிருக வையகம் வாழ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேர வாயிலை நோக்கியதாக
புதிதாக 28.01.2018 பிரதிட்டை செய்யப்படும்
ஸ்ரீ சக்கர மஹா மேரு இயந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்–பொன் வாசற் கோபுரம்

கவிஞர் த. ஜெயசீலன்

தெல்லியூர் உறையும் துர்க்கா
தேவியார்... ஆட்சி செய்து
தொல்லறம் காக்கும் கோவில்....
துயர்களைத் துரத்தும் தீ... வில்!
எல்லையில் எழில்கள் பூண்டு
இரண்டாம் பொற் கிரீடம் சூடிக்
கொள்வதாய்த் தெற்கு வாசற்
கோபுரம் படைத்த தின்றில்!

அன்று ஓர் காலம்.... இந்த
ஆலயப் பொன்னை எல்லாம்
கொண்டதோர் கூட்டம்; யுத்த
கோரத்தால் விளைந்த சோகம்!
"என்தான் புதுமை" என்றெம்
அன்னையை வியக்க... யாவும்
வந்தன மீண்டும்... இத்.... தென்
வாசலில்.... மகிமை பாரும்!

சென்ற தைப்பூச நாளில்...
திருவருள் கூட... நாட்டிக்
கொண்டனர் அடிக்கல்! ஆண்டுள்
கோபுரம் வியப்பாய்க் கட்டி
இன்று தைப்பூசத் தன்று
எழுப்பினர்! தளங்கள் ஐந்து
நின்றதைம் பூதம் போல...
'அறுபத்தோர்' அடிக ளாக...

காரணப் பெயரால்.... தெற்கு
வாசலின் அரணாய்.... காவற்
கூண்டுமாய்... தென்–பொன் வாசல்
கோபுரம் நிமிர்ந்த வேளை,
கூடி ஊர் குவிந்துயிர்த்துக்
கும்பாபி ஷேகம் காண
வாழ்த்தினோம்... சிற்பி மாரை!
வணங்கினோம்... பணி செய்தோரை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடமுழுக்கினால் உலகம் உய்யுமே!

கவிஞர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு

1. தெல்லிப்பழைத் துர்க்கா தேவியின் திருக்கோயில்
தென்றிசைக் கோபுரக் குடமுழுக்கு
தொல்புகழ் ஆண்டெனத் தோற்றி துர்முகி
தூயதைத் திங்களின் தைப்பூசம்
புல்லிய வளர்பிறை புலர்காலைப் பொழுதினில்
புண்ணிய காரியம் பொலிவுற
நல்லிசை வாத்தியம் நான்மறை முழங்கிட
நடைபெறத் திருவருள் நாடிற்றே!

2. தாயின் மடியினில் தழைத்திடு மழலைபோல்
தண்ணொளி வெண்ணிலா தருவபோல்
பாயும் அருவியின் பயன்விளை கின்றபோல்
பங்கய மென்மலர்ப் பான்மைபோல்
ஓய்விலா துழைத்திடும் உழவரின் உறுதிபோல்
ஒண்டமிழ் மொழியதன் உயர்வுபோல்
ஆயபே ரன்புசெய் அன்னையின் கோபுர
ஆகமகும் பாபிஷேகம் அமையுமே!

3. சின்னதாய் அமைந்து, சீரினாற் பொலிந்து
சிலபத்து ஆண்டின்பின் உயர்ந்து,
அன்னையார் தங்கம்மா அவர்தம் தலைமையில்
ஆலய அறங்காவல் சபையினர்
முன்னுயர் பணிகளால் மூச்சுடன் எழுந்து
மூலக் கோபுரம், மண்டபம்
இன்னறுந் தீர்த்தக் கேணியும் இயற்றி
இறைவியெம் துர்க்கா இருந்தனள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆதர வற்ற பெண்களின் நலனுக்

காளதேர் மகளிர் இல்லம்

தீதிலா அறிவைத் திரட்டியே நல்கத்

திகழ்ந்தது நூலக மொன்று

வாதனை செய்யும் வருத்தங்கள் போக்க

வந்தது ஔடத சாலை

சாதனை படைத்த சரித்திரம் துர்க்கா

சக்தியின் சந்நிதி யன்றோ!

5. துர்க்கை யம்மனைத் தொழுபவர் பசியால்

துவண்டிடக் கூடாதெனக் கருதி

அர்த்த மோடன்ன தான மண்டபம்

அமைத்தே அருஞ்செய லாற்றி

நர்த்தன மாடிடும் நளின சிங்கார

நாயகி ஆலயந் தன்னில்

மர்த்தன மிடுவாள் மலரடி பணிய

மலர்ந்தது மணிமண் டபமாம்

6. தெல்லியூர் நாடியே தெரிசனம் பெற்றிடத்

திசையெங்கு மிருந்து வருவார்

வல்வினை பொடிபட வரம்வேண்டித் துர்க்கையை

வாயாரப் பாடி மகிழ்வார்

அல்லதை ஆற்றிடும் அழுக்குறு மனத்தினில்

அமைதியை அன்பினை அருளப்

பல்வித மாகவே பரவியே தேவியைப்

பார்த்ததும் கண்ணீர் சொரிவார்.

7. இதுபோல ஒருதலம் ஈழத்தில் இலையென

இதயத்தாற் பேசும் மாந்தர்,

அதுபோல ஆயிரம் அறப்பணி ஆற்றிடும்

ஆயலம் உளதோவெனக் கேட்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவுண்ட வண்டாகி மகோற்சவ காலத்தில்
மண்ணுளோர் அன்னையைக் கண்டு
எதுவந்த போதிலும் எழில்துர்க்கை யிருக்கின்றாள்
எமக்கேது இனித்துயரம் என்பார்.

8. ஆறுகாலப் பூசையும் ஆன்மீக சேவையும்
அறப்பணி ஆற்றிடும் நன்மையும்
மாறுபடா மனத்தராய் மக்கள்வந் திறைஞ்சிடும்
மாட்சியும் துர்க்கையின் ஆட்சியும்
ஈறிலாப் பெருமாட்டி எங்கள்சிவத் தமிழ்ச்செல்வி
இணையற்ற அருட்பணியின் ஈகையும்
பேறினாலவர் பின்வந்த பெருந்தலைவர் திருமுருகன்
பேணுகின்ற பெருந்தவமும் பெருகவே

9. விரைகமழ் மலர்கள் விரவிய சூழல்
விண்ணுற வோங்கிய தருக்கள்
தரையெலாம் வெண்மணல் தடவிய கோலம்
தாவிடும் நாதஸ்வர கானம்
நிரைநிரை யாய்வரும் அடியவர் நேர்த்தி
நின்றொளிர் கோபுரக் கீர்த்தி
உரையுணர் விறந்து அன்பர் அன்னையை
உள்ளத்தால் வணங்குவர் உண்மையாய்.

10. உலகெங்கும் உன்னதச் சைவர்கள்
உவந்தநல் லுதவிக ளோடு
நிலைபெற்ற துர்க்கையின் நீடிய பணியொன்று
நிறைவேற அன்னையருள் புரிந்தனள்
கலைநின்ற பஞ்சதளக் கவினுறு கோபுரம்
காலத்தைக் கடந்து நிற்கவே
சிவபாத முயற்சியால் செய்தே முடித்தனர்
செஞ்சொற் செல்வரின் தலைமையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கொண்டவூ ரென்றும் வாழும்

மூபுர மெரித்த முன்னோன் தேவி

மூல மூர்த்தமாய் ஆனகோயில்

மாபுரம் துர்க்கா வெனமாறிய மண்ணில்

மகா கும்பா பிஷேகம்

சீபுரத் தென்றிசைக் கோபுரம் காணவே

சிந்தை குளிர்ந்து சிறக்குமே!

12. அந்தணர் அருமறை மந்திரம் ஓதிட

ஆலய மணிகள் ஓசையிட

சிந்தைகொள் திருமுறைப் பனுவல்கள் ஒலித்திடச்

சீருடன் வாத்தியம் முழங்கிட

வந்தனை செய்து வாழ்த்திடு மடியார்

வாயினு மனத்தினும் பக்தி

முந்துறத் துர்க்கை தென்கோ புரக்குட

முழுக்கினா லுலகம் உய்யுமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயத்தில் இலக்கம்

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்த வையகத்திலுள்ள பல சமயங்களிலே இலக்கங்கள் ஏதோ சிறப்பு மிகு கருத்துகளை உணர்த்துவனவாக அமைந்து உள்ளன. வழக்கமாக நாம் எண்கணிதம் அல்லது அளத்தல், எண்ணுதல் மற்றும் கணக்கிடல் போன்ற நாளாந்த செயற்பாடுகளுடனேயே எண்கள் பற்றி எண்ணுகின்றோம். ஆனால் சமயங்களில் அவற்றினுடைய வகிபாகம் சிறப்பாக அமைந்துள்ளது.

இந்துசமயத்தில்,இலக்கங்கள்சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இலக்கம் அரை எந்தச் சமயத்திலும் சிறப்பிடம் பெறுவதாயில்லை. ஆனால் இந்துசமயத்தில் கடவுள் ஆண் அரைவாசி வடிவத்தினையும்(சிவன்) பெண் அரைவாசி வடிவத்தினையும்(சக்தி) பெற்றுள்ள நிலை பற்றி நாம் அறிவோம். இறைவனை இந்துசமயம் 'அர்த்தநாரீசுவரனாக' காண்கின்றது. 'அர்த்த' என்றால் அரை; 'நாரீ' என்றால் 'பெண்'; 'ஈசுவரன்' என்றால் 'கடவுள்'. அரைவாசி பெண்ணை உடைய கடவுள் எனப் பொருள்படும். இறைவன் சக்தியுடன் அரைவாசியாக இருந்தாலும் அவன் ஒருவனே எனக் கொள்வதை,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என்று திருமூலரும்,

"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க"

என்று

மாணிக்கவாசகப்பெருமானும் கூறுவதனூடாக அறிகின்றோம். எண் அரையும் ஒன்றும் இந்து சமயத்தில் பெறும் இடத்தை இவை நமக்கு உணர்த்துகின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய திருக்கேதீச்சரப் பதிகத்திலே இடம்பெறும்

"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட
-நன்னகரில்"

என்னும் அடிகள் இலக்கம் இரண்டு,மூன்று என்பன பெறும் சிறப்பினை வெளிப்படுத்துகின்றன. 'மூவர்' என்பது பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுளரையும் குறிக்கும். அம்மூவருள் சிவன் முக்கண்ணுடையவனாகத் திகழ்கின்றான். இருவர் என்பது சிவனையும் சக்தியையும் குறிக்கும். அவர்கள் இருவரும் அரைவாசி அரைவாசியாக ஓருருவாக இருப்பினும் அவனும் அவளும் இரு தனித்துவமான தெய்வங்களாகத் திகழ்வர்.

இலக்கம் நாலு (நான்கு) இந்து சமயத்தில் பல்வகைச் சிறப்புகளைக் கொண்டு அமைகின்றது. பிரம்மதேவனுக்கு நான்கு முகங்கள் உள்ளன. இந்துசமயத்தின் மிகப் பழைய வேத இலக்கிய நூல்கள் இருக்கு, யசுர், சாம, அதர்வண என நான்கு வகையாகும். இந்துசமயத்துடன் தொடர்பான சோதிடம் வானவியல் ஆகியவற்றில் பெருமளவு பயன்படும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனப்படும் நான்கு திசைகள்; சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு சமய குரவர்களாகிய நாயன்மார்கள்; மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நான்கு சந்தான குரவர்கள்; சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய என்னும் நான்கு முத்திநிலைகள் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய சமயத்திலே எண் நான்கு பெறும் இடத்தினைச் சுட்டுகின்றன. இலக்கம் நான்கினுடைய உயர் சிறப்பு, அது "நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று குலசேகராழ்வார் குறிப்பிடும் 'நாராயணா' என்னும் திருப்பெயர் நான்கு எழுத்துகள் கொண்டதாக அமைவதே. இலக்கம் ஐந்து நம்முடைய புலன்களையும் பொறிகளையும் குறிப்பனவாக அமைகின்றன. இவற்றை அடக்கி நாம் வாழவேண்டும் என்பது பற்றி இந்துசமய சாத்திர நூல்களும் தோத்திர நூல்களும் கூறுகின்றன. ஐம்பொறிகளையும் ஆஞ்சநேயருடைய இலங்கைப் பயணத்தோடு சேர்த்துக் கூறும் கம்பராமாயணப் பாடல் ஒன்று உண்டு. அதுவருமாறு:

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சி லே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆருயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங் கைக் கண்டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்.

இப்பாடலில் ஐந்து என்பது 'அஞ்சு' என வழங்கப்படுகின்றது. ஐந்து அஞ்சுகள் வருகின்றன. ஐம்பொறிகளில் ஒன்றானது வாயு. அநுமன் வாயுவின் மகன் ('அஞ்சிலே ஒன்று பெற்றான்'). ஐம்பொறிகளில் ஒன்று நீர். அநுமன் நீர் நிறைந்த கடலைத் தாவிச் செல்கிறான் ('அஞ்சிலே ஒன்றைத் தாவி'). ஐம்பொறிகளில் ஒன்று ஆகாயம். அநுமன் ஆகாய வழியாக செல்கின்றான் ('அஞ்சிலே ஒன்று ஆறாக'). ஐம்பொறிகளில் ஒன்று நிலம். நிலமகள் பெற்ற சீதையை அநுமன் இலங்கையிலே காணுகின்றான் ('அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு'). ஐம்பொறிகளிலே ஒன்று தீ. அநுமன் அயலூராகிய இலங்கையிலே தீயை வைக்கிறான் ('அயலார் ஊரில் அஞ்சிலே ஒன்றை வைத்தான்'). விநாயகப் பெருமானுக்கு ஐந்து கரங்கள் உள்ளன. திருமந்திரம் காப்புச் செய்யுளில், "ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை, இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" எனப் பாடப்படுகின்றது. திருக்கோயிலோடு தொடர்புடைய இன்னொரு ஐந்து வடமொழிச் சொல்லான 'பஞ்சாமிர்தம்' என்பதாகும். பஞ்ச என்றால் ஐந்து ஆகும். ஐந்து அமிர்தங்களான மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், தேன், நெய் ஆகியவற்றின் சேர்க்கையே பஞ்சாமிர்தம் ஆகும். திருக்கோயில் உருவத் திருமேனிகளுக்குத் திருமுழுக்குச் செய்யும்போது இது பயன்படுத்தப்படும். இலக்கம் ஐந்தினுடைய மிகுந்த உயர்வு பெற்ற சிறப்பு, அது "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று திருநாவுக்கரசர் குறிப்பிடும் 'நமசிவாய' என்னும் சிவத்திருப் பெயர் ஐந்து எழுத்துக்களால் அமைவதேயாகும்.

மேலைநாட்டு கணித மேதைகளான பைதகொறியன்ஸ் இலக்கம் ஆறு ஒரு நிறை வான இலக்கம் என்பர். ஏனெனில் அதன் வர்க்கங்களைக் (1, 2, 3) கூட்டினால் அவை இலக்கம் ஆறாக அமையும். இந்து சமயத்தில் அது அறுவகைச் சமயங்களான சைவம், வைக்ஷ்ணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகியனவற்றைக் குறிக்கும். முருகனுடைய அருள் வேண்டி நோன்பு செய்யும் விரதம் 'கந்தக்ஷக்ஷ்டி' எனப்படும். 'க்ஷக்ஷ்டி' என்றால் ஆறு ஆகும். இந்த விரதம் ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்படும். திருமாலுக்கு நான்கெழுத்துத் திருப்பெயர் போலவும், சிவனுக்கு ஐந்தெழுத்துத் திருப்பெயர் போலவும் முருகப் பெருமானுக்கு 'சரவணபவ' என்னும் ஆறு எழுத்துக்கள் கொண்ட திருப்பெயர் அமைகின்றது.

இந்துசமயத்தில் ஏழு கடல்கள், ஏழு ஆறுகள், ஏழு மலைகள், ஏழு கதிரவன்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு நிறங்கள் என்னும் குறிப்புகள் இலக்கம் ஏழு அச்சமயத்தில் பெறும் சிறப்பினைக் காட்டுகின்றன. பண்டைய பாபிலோனியர்கள் வானத்தில் உள்ள வின்மீன் கூட்டங்களிலே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழு மட்டும் வேறுபட்ட முறையிலே நகர்வதைக் கண்டுகொண்டனர். இந்துசமயக் கணக்கரும் சூரிய, சந்திர, பூமிசுதோ, புத, குரு, சுக்ர, சனி என ஏழு நாள் கொண்ட கிழமையினை வகுத்துக்கொண்டனர். இலக்கம் எட்டுத்திசைகளைக் குறிக்கின்றது. சிவபெருமான் 'எண் குணத்தன்' எனப்படு கின்றான். இலக்கம் ஒன்பது சூரிய, சந்திர, பூமிசுதோ, புத, குரு, சுக்ர, சனி, ராகு, கேது எனப் பெயர்கொண்ட கோளங்களை இந்துசமயம் பண்டைக் காலத்திலேயே அறிந்திருந்தது. இலக்கம் பத்து மனித உறுப்புகளான தலை, கண், மூக்கு, வாய், தோள், கை, முதுகு, அரை, கால், அடி என்னும் பத்தினையும் குறிப்பதாக மாணிக்கவாசகப்பெருமான் 'திருத் தசாங்கம்' என்னும் திருவாசகப் பாடலை அமைத்துள்ளார்.

இந்துசமயத்தில் ஒன்று தொடக்கம் பத்து வரையிலான இலக்கங்கள் எவ்வாறு அமைகின்றன அவை என்ன கருத்துகளை உணர்த்துகின்றன என்பதை இச்சிறிய கட்டுரை சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றது. இவற்றை விரித்து எழுதுவதற்கான பல தகவல்களும் கருத்துகளும் இந்து சமயத்திலே உள்ளன.

**நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது**
**ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம்: எனக்கு உள்ளம் எல்லாம்**
**அன்றே உனது என்று அளித்து விட்டேன்:- அழியாத குணக்**
**குன்றே, அருட்கடலே, இமவான் பெற்ற கோமளமே.**

**பொருள்** : ஏ, அபிராமி! அழியாத குணக்குன்றே! அருட்கடலே! மலையரசன் பெற்றெடுத்த அழகிய கோமள வல்லியே! எனக்கு உரிமை என்று எப்பொருளும் இல்லை. அனைத்தையும் அன்றே உன்னுடையதாக்கி விட்டேன். இனி எனக்கு நல்லதே வந்தாலும், தீமையே விளைந்தாலும், அவற்றை உணராது விருப்பு, வெறுப்பற்றவனாவேன். இனி என்னை உனக்கே பரம் என்று ஆக்கினேன்.

-அபிராமி அந்தாதி (95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





துர்க்காபுரம் மகளிர் இல்ல விடுதிகள்





துர்க்காதேவி வீட்டுத் திட்ட வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சைவப் பண்பாட்டில் ஆடைகள்

முனைவர், மனோன்மணி சண்முகதாஸ்

ஈழத்தமிழர் பண்பாடு பற்றிய தேடல்களும் உசாவல்களும் இப்போது முனைப்புப் பெற்று வருகின்றன. இதற்கு ஒரு தேவையும் ஏற்பட்டுள்ளது. ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளுக்கும் சென்ற தமிழர் தமது பண்பாட்டைப் பேணும் முயற்சியிலே ஈடுபட்டுள்ளனர். அதிலும் குறிப்பாகச் சைவத்தமிழ்ப் பண்பாடு பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் அறிவதில் மிகவும் ஆவலாக உள்ளனர். குறிப்பாகத் திருக்கோயில் தொடர்பான பண்பாட்டு நடைமுறைகளைத் தேடுகின்றனர். இளைய தலைமுறையினரைப் பண்பாட்டு நெறியிலே ஆற்றுப்படுத்துவதற்குப் பல செய்திகள் அவர்களுக்குத் தேவைப் படுகின்றன. இக்கட்டுரை அத்தகைய ஒரு தேடலை நெறிப்படுத்துவதாகவே கட்டமைக்கப் பட்டுள்ளது.

ஈழத்தின் சைவப்பண்பாடு பற்றி எண்ணும் போது 19ஆம் நூற்றாண்டு குறிப்பிட வேண்டிய காலமாக அமைகின்றது. ஈழத்தின் வரலாற்று தொடக்க காலத்திலேயே சைவப்பண்பாடு இனங்காணப்பட்ட போதும் 19ஆம் நூற்றாண்டு சைவப் பண்பாட்டின் பேணுகைக் காலமாக விளங்குகின்றது. குறிப்பாக நாவலர் காலத்தில் சைவத்தமிழ் பண்பாடு பற்றிய எண்ணம் எழுச்சி பெற்றது எனலாம். சைவத்தின் காவலராக அன்று நாவலர் செய்த பணியே இன்றும் சைவ பண்பாட்டை நிலைபெற வைத்துள்ளது. தென்னாட்டிலே சமண பௌத்த மதங்களின் செல்வாக்கால் சைவம் அழிநிலையை எதிர் கொண்ட போது அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் போன்ற சமய குரவர்கள் சைவத்தை மேம்படுத்தினர். அதுபோலவே ஈழத்திலும் மேலைத்தேயத்திலிருந்து வந்த கிறிஸ்தவ மதம் சைவத்தை அழிக்க முற்பட்ட போது நாவலரே அதனைப் பாதுகாத்தார். எனவே ஈழத்துச் சைவப்பண்பாடு யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் காலத்தில் எவ்வாறு பேணப்பட்டது என்பதை மீண்டும் நோக்க வேண்டியுள்ளது.

சைவபண்பாட்டின் நிலைக்களங்களாக திருக்கோயில்கள் அமையவேண்டும் என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி நாவலர் செய்த பணிகள் பல வழிபாட்டு நடைமுறைகளில் தூய்மையும், எளிமையும் பேணப்பட வேண்டுமென் ஒரு வரையறை அக்காலத்திலே வலியுறுத் தப்பட்டது. நாவலர் எழுதிய சைவ வினாவிடை, சைவப்பண்பாட்டு வாழ்வியல் நடைமுறைகள் பற்றிய பல்வேறு ஐயங்களையும் தெளிவுபடுத்தும் சிறு கைநூலாக அமைந்திருந்தது. அத்தோடு நாவலர் தொடக்கிய "பிரசங்கம்" எனும் உரை ஆற்றும் நடைமுறை சைவப்பண்பாடு பற்றிய கற்பித்தல் நெறியாக விளங்கியது. புராணங்களிலே, செய்யுட்களிலே கூறப்பட்ட விடயங்களை நாவலர் உரைநடையிலே விளக்கிக் கூறிய போது அது மக்களுக்கு ஒரு தெளிவைக் கொடுத்தது.

## பிற மத செல்வாக்கால் ஏற்பட்ட மாற்றம்

ஈழத்திலே பிறமதமாகிய கிறிஸ்தவ மதம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றபோது அவர்களது பண்பாட்டு நடைமுறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. வழிபாட்டு நடைமுறைகளிலும், உடைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. கிறிஸ்தவ மதம் ஆங்கிலக் கல்வியை அளித்து உத்தியோகம் எனும் புதிய பொருளீட்ட முறையையும் அறிமுகம் செய்தது. இதனால் ஈழத்தமிழரின் பண் பாட்டில் அடித்தளமாக இருந்த இரு தொழில்கள் பெரும் சிக்கலுக்கு உள்ளாகின. நில வேளாண்மை கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை என்ற இரு வேளாண்மைகள் ஈழத் தமிழரின் பொருளீட்டத்திற்கு துணையாக இருந்தன. இத் தொழில்களுக்கு உறுதுணையாகவே ஏனைய கைத்தொழில்கள் விளங்கின. கிறிஸ்தவ மதம் ஆங்கில மொழிக்கல்வியை கிறிஸ்தவராக மதம் மாறும் சைவருக்கு இலவசமாக வழங்கியது. ஆங்கிலமொழிப் புலமை பெற்றோர் அரச பணிகளில் இணையும் வாய்ப்புப் பெற்றனர். அதனால் பராம்பரியமாகச் செய்யப்பட்ட தொழில்கள் நாகரிகம் அற்ற தொழில்களெனவும் கருதப்பட்டன. பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டதால் மேலைத்தேய ஆடைகளும் அறிமுகமாயின. உத்தியோகம் என்ற தொழில்நிலைச்சீருடை என்ற பயன்பாட்டில் மேலைத்தேய காற்சட்டை, சேட், தொப்பி, கழுத்துப்பட்டி, சப்பாத்து, காலுறை என்பவற்றை அணிய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஈழத்திலே மரபான தமிழ்க்கல்வி கற்பிப்போர் மரபான ஆடையையே அணிந்தனர். வேட்டி, சால்வை என்பன ஆண்களின் மரபான ஆடையாக இருந்தது. சேலை பெண்களின் ஆடையாக விளங்கியது. இவையே தமிழரின் பாரம்பரிய ஆடையாக இருந்தன.

### ஆடைப்புனைவும் ஈழத்தமிழர் பண்பாடும்

ஈழத்தமிழர் பண்பாட்டில் ஆடைப்புனைவு பருவநிலைக்கு ஏற்றவாறு செயற்படுத்தப்பட்டது. ஆண்கள் சிறுவர், இளையவர், முதியோர் எல்லோருமே வேட்டி அணிவது வழக்கமாக இருந்துள்ளது. நான்கு முழம், எட்டு முழம், துண்டு, சால்லை என ஆண்களின் ஆடைகள் பெயரிடப்பட்டிருந்தன. தொழில் செய்யும் போது நான்கு முழம் அல்லது துண்டு ஆண்களின் ஆடையாக விளங்கியது. கோவணம், கொடுக்கு என்னும் சொற்கள் ஆண்களின் கீழாடையாகப் பயன்படுத்தப்பட்டன. எட்டுமுழம் சிறப்பான நிகழ்வுகளின் போது அணியும் ஆடையாக விளங்கியது. சால்வையும் அவ்வாறே பயன்பட்டது. வெப்பமான பிரதேசமாக இருந்தமையால் ஆண்களின் மேற்சட்டை பயன்பாட்டில் இருக்கவில்லை. குளிரான காலங்களில் உடலைப் பாதுகாக்கப் போர்வையைப்பயன்படுத்தினர். தோட்ட வேலை செய்யும்போதும் ஏனைய கைத்தொழில்களைச் செய்யும்போதும், ஆண்கள் கொடுக்குக்கட்டியே அவற்றைச் செய்தனர். கோவணம் ஆண்கள் எல்லோருக்கும் மானத்தை மறைக்க அணியும் பொதுவான ஆடையாக விளங்கியது. இன்னும் மாப்பிள்ளையின் ஆடையில் பட்டுவேட்டியும் பட்டுச்சால்வையும் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் சரிகை வைத்த தலைப்பாகையும் அணியும் வழக்கமிருந்தது. இசைக்கருவிகளை இசைக்கும் ஆண்கள் மாறுகரை வேட்டியும் மாறுகரைச் சால்வையும் அணிந்தனர். மாறுகரையென்பது வேட்டியின் மேற்கரையும் கீழ்க்கரையும் வேறுபட்ட வண்ண நூல்களால் நெய்யப்பட்டிருப்பதாகும்.

ஆனால் இத்தகைய ஆண்களின் ஆடைப்புனைவில் 19ஆம் நூற்றாண்டிலே மாற்றம் ஏற்பட்டது. ஆங்கிலப் பண்பாட்டின் ஊடுருவலால் ஆண்களின் ஆடைப்புனைவிலே ஒரு தகுதிப்பாடு பேணும் நிலை தோன்றியது. வேட்டிக்குப் பதிலாகக் காற்சட்டை கோற் அணியும் பழக்கம் உருவாகியது. ஆங்கிலக் கல்வி கற்ற நில வேளாண்மை மரபிலே வந்தவர்கள் இவ்வாடைப்புனைவை ஒரு கல்வியறிவுக் கோலப் புனைவாகப் பேணினர். அதனை மேலும் விளம்பரப்படுத்த தலையிலே ஒரு உயர்ந்த தலைப்பாகை அணிவதையும் இணைத்துக் கொண்டனர். இத்தலைப்பாகை மதவேறுபாடில்லாத கல்விப் புலமையின் சின்னமாக இருந்தது. சி.வை. தாமோதரம்பிள்ளை, திரு.பொ.நடேசபிள்ளை, ஆர்ணல்ட் சதாசிவம் பிள்ளை, சேர். பொன்.இராமநாதன் போன்ற கல்விப் புலமை பெற்றோர் இவ்வாறு தலைப்பாகை அணியும் வழக்கமுடையோராக இருந்துள்ளனர். தென்னகத்திலே நீண்டகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்த சி.வை. தாமோதரம்பிள்ளை 'ராவ்பகதூர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகவும் நீதிபதியாகவும் இருந்தமையால் இவ்வாடைப்புனைவு அவரோடு இணைந்து கொண்டது. எனினும் ஈழத்திலிருந்து தென்னகம் சென்று வாழ்ந்த ஆறுமுகநாவலர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர் போன்றோர் மரபான வேட்டி சால்வையையே அணிந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஈழத்திலே ஆங்கிலமொழிப் புலமை பெற்று அரச பணியிலே சேவையாற்றியவர்கள் மேலைத்தேய ஆடைப்புனைவை ஏற்றுக் கொண்டனர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்று. சைவப் பண்பாட்டிலே வாழ்ந்த பலர் மேலைத்தேய ஆடைப்புனைவை ஏற்று தமிழர் மரபான ஆடைப்புனைவையம் மாற்றிவிட்டனர். ஆனால் சைவசமய வழிபாட்டு நடைமுறைகளை மேற்கொள்ளும் போது இயன்றவரை வேட்டி அணிவதை மரபாகப் பின்பற்றினர்.

பெண்களைப் பொறுத்தவரையில் ஈழத் தமிழர் பண்பாட்டு ஆடைப்புனைவில் ஒரு வரையறை இறுக்கமாக முன்னர் பேணப்பட்டது. சிறுவயதில் பெண்கள் பூப்படையும் வரை சிற்றாடை அணிந்தனர். சிற்றாடை என்பது அகலமும் நீளமும் குறைந்த சேலையாகும். இடுப்பைச்சுற்றி அணியப்படுவது. பெண் பூப்படைந்த பின்னர் மாறாட்டி அணிய வேண்டுமென்ற கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட்டது. 'மாறாடி' என்பது நீண்ட புடைவையாகும். இடுப்பைச் சுற்றி வந்து மேலே மார்பகங்களையும் மறைக்கும் படியாக அணியப்படுவது. இந்த ஆடையைப் பின்னர் தாவணி என்றும் அழைத்தனர். அக்காலத்தில் பெண்கள் மேற்சட்டை அணியும் வழக்கம் இருக்கவில்லை. ஈழத்தில் மேலைத்தேயப் பண்பாடு பரவிய போது இங்கு வந்த மேலைத்தேயப் பெண்கள் நீளமான மணிக்கட்டு வரையான கைகளையுடைய மேற்சட்டைகளையும் அணிந்தனர். அதனை அடியொற்றியே ஈழத்தமிழ்ப் பெண்களும் 'இறவுக்கை' என்னும் மேற்சட்டை அணியும் வழக்கத்தை மேற்கொண்டனர். இப் பெயரே தற்போது மருவி 'இரவிக்கை' என வழங்கப் படுகின்றது. சேலை, சட்டை எனச் சிறப்பாக அணியப்பட்டது. மேலைத்தேயப் பெண்கள் நீண்ட பாவாடைகளையும் மேற்சட்டையையும் இணைத்து ஒரு ஆடையாக அணியும் வழக்கமுடையோராய் இருந்தனர். அந்த ஆடை அமைப்பை இரு கூறாக்கிப் பாவாடை, சட்டை, எனப் பள்ளிக்குச் செல்லும் பெண்கள் அணிந்தனர். இவ்வாடைப்புனைவு தமிழர் பண்பாட்டில் சிறுமியருக்குரிய ஆடையாகப் 19ஆம் நூற்றாண்டிலே பயன்படுத்தப்பட்டது. பொருள் வள நிலையிலும் சிறப்பு நிகழ்வு நிலையிலும் பட்டுப்பாவாடை, சட்டை பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. பாவாடை, புடைவை அணியும் போது உள்ளே அணிகின்ற உட்பாவாடை எனவும் அணியப்பட்டது. இன்னும் நீளப்பாவாடை, அரைப்பாவாடை, உட்பாவாடை, சுருக்குப்பாவாடை குடைப்பாவாடை எனப் பல்வேறு வடிவங்களிலும் வண்ணங்களிலும் அமைக்கப்பட்டது. எனினும் இப்போது வயது வந்த பெண்களும் பாவாடை அணிகின்றனர். புடைவை அணியும் பருவ நிலையில் இன்னொரு மாற்றாடையும் உருவாகியுள்ளது. பாவாடை, சட்டை, தாவணி என மூன்று கூறாகப் புடைவையை மாற்றி அணிந்தனர். பெண் பூப்படைந்து திருமணம் செய்யும் வரை இவ்வாடைப்புனைவு கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் பெண்கள் பூப்பெய்திய பின்னர் புடவையணிய வேண்டும். என்ற பாரம் பரிய முறையைப் பேணும் நிலையில் பூப்பு நீராட்டு என்னும் சடங்கு இன்றும் நடைமுறையிலுள்ளது. அன்று பெண்ணை நீராட்டிப் புடைவை அணிவிப்பர். ஆனால் இன்று இச்சடங்கு பிறநாடுகளில் வாழும் தமிழர் புதிய மரபுநிலை உருவாக்கமாக "Saree Day" எனவும் பெயர் பெற்றுள்ளது. குறிப்பாக ஆங்கிலம் பேசும் நாடுகளில் இத்தகைய பெயர் வழங்கப்படுகின்றது.

**சைவப்பண்பாட்டில் ஆடை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சைவப்பண்பாடு திருக் கோயில்களை நிலைக்களனாகக் கொண்டது. வழிபாட்டிற்குச் செல்லும் போது உடல் தூய்மையும் ஆடைத் தூய்மையும் பெரிதும் பேணப்பட்டன. திருக்கோயிலுக்கு வழிபடச் செல்வோர் அங்குள்ள தீர்த்தங்களிலே நீராடுவர். அவ்வாறு நீராடிய பின் தமிழர் மரபான வேட்டி, புடைவையை அணிந்தே வழிபடச் செல்வர். குறிப்பாக ஆண்கள் வேட்டி கட்டி அதன் மேலாக அரையிலே சால்வையையும் இறுகக் கட்டுவர். வழிபாட்டு நடைமுறைகளில் ஆடை அவிழாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு சால்வை கட்டப்பட்டது. சுவாமி காவுதல், தேரிழுத்தல், அன்னதானம், காவடி எடுத்தல் போன்ற நடைமுறைகளில் இடர்ப்பாடு நேராதிருக்க இம்மரபு பேணப்பட்டது. சைவ வழிபாட்டு மரபில் ஆண்கள் மேலாடை அணியும் நடைமுறை இருக்கவில்லை. ஆனால் பிற பண்பாட்டுச் செல்வாக்கால் ஆண்கள் சேட் அணியும் நடைமுறை ஏற்பட அது திருக்கோயிலுக்குச் செல்லும்போது அணியும் ஆடையாகவும் மாறத் தொடங்கியது. இதனால் திருக்கோயில்களிலே "ஆண்கள்" மேற்சட்டை அணிவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற அறிவித்தல் செய்யும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. குறிப்பாகப் படிப்பறிவுடைய ஆண்கள் மேலைத்தேய ஆடைகளை அணிந்து வருவதையே விரும்புகின்றனர்.

திருக்கோயில்களுக்கு வழிபடச் செல்லும் பெண்கள் புடைவைஅணிந்து செல்வதே பாரம்பரியமாக இருந்தது. இன்னும் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை குறிப்பாகப் பூப்படைந்த பெண்கள் திரு மணமாகும் வரையாழ்ப்பாணத்திலே திருக்கோயிலிகளுக்குச் சென்று வழிபடும் வழக்கம் இருக்கவில்லை. ஆனால் நிலவேளாண்மை செய்த பொருள்வளமும் நிலவளமும் பெற்றிருந்தவர்கள் சிலர் தமது பூப்படைந்த பெண்களை வில்வண்டியிலே வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் செல்லும் நடைமுறை இருந்துள்ளது. அவர்கள் புடைவை அணிந்தே வழிபடச் சென்றதை அக்கால நாவலாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

பெண்கள் திருமணம் முடிந்த பின் திருக் கோயில் வழிபாட்டுக்கு முதன் முதலாகச் செல்லும் போது கூறைப்புடைவையை அணிந்து செல்லும் வழக்கம் இருந்துள்ளது. ஆண்களும் அப்போது பட்டு வேட்டி சால்வை அணிவர். இன்னும் வழிபாட்டு நடைமுறைகளிலே பங்குகொள்ளும் போது எல்லோரும் மரபான ஆடைகளையே அணியும் வழக்கம் இறுக்கமாகப் பேணப்பட்டது.

இந்த மரபான ஆடை அணியும் நிலை மேலைத்தேய ஆடைகளால் பெரிதும், மாற்றமடைந்தது. "சைவப் பண்பாட்டு ஆடை என்ற வரையறையும் வழக்கிழந்தது. கிறிஸ்தவ சமயப்பிரசாரம் மக்கள் மனதைக் கவர்ந்தது. பலர் மதம் மாற நேர்ந்தது. கடல் வேளாண்மை செய்தோர் பெரும்பாலும் கிறிஸ்தவமதச் செல்வாக்கால் மரபான வழிபாட்டு முறைகளைக் கைவிட்டனர். ஈழத்தில் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சி நடைபெற்ற போது இந்நிலை அவர்களுடைய கெடுபிடிகளாலும் ஏற்பட்டது.

சைவ வழிபாட்டுத் திருக்கோயில்கள் பல இடித்தழிக்கப்பட்டன. அந்த இடங்களிலே கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டன. யாழ்ப் பாணம் நல்லூர்க் கோவில் வரலாறு இதற்குச் சான்றாக உள்ளது. இந்த நிலையால் தமிழர் வழிபாட்டு மரபில் சைவம், கிறிஸ்தவம் என இரு பிரிவுகள் தோன்றின. ஆங்கிலக்கல்வியும் அரசபணியும் கிறிஸ்தவ சமயத்தால் மக்களுக்கு உடனடியாகக் கிடைத்தன. சைவ வழிபாட்டால் இத்தகைய உடனடியா பயன் கிடைக்காது என மக்கள் நம்பினர். அதுவே தமிழர் சமயம் மாறுவதற்கு வழிவகுத்தது. அந்தச் சமய மாற்றம் சைவப்பண்பாட்டு ஆடைப் பாரம்பரியத்தை உடனடியாக மாற்றி ஒரு கிறிஸ்தவ பண்பாட்டு ஆடை மரபு தோன்ற இடமளித்தது. குறிப்பாக வழிபாட்டுக்குத் திருக்கோயில்களுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் போது சிறப்பாக ஆண்கள் மேலைத்தேய ஆடை அணியும் வழக்கம் மேற்கொள்ளப்பட்டது. கிறிஸ்தவக் கோயில்களின் அமைப்பும் இதற்கு வாய்ப்பாக இருந்தது. காற்சட்டை, சேட், கழுத்துப்பட்டி, கோற் என்பவற்றை முறைப்படி அணிந்து செல்லும்போது காலணியும் அணிந்து செல்லும் நிலையும் ஏற்பட்டது. இதனால் பெண்களை விட ஆண்களே சைவமரபான ஆடைப்புனைவை விரைவாக மாற்றியவர்களெனலாம். இந்த ஆடை மாற்றம் கிறிஸ்தவ ஆண்களிடமிருந்து சைவ சமயத்தைக் கடைப்பிடித்த ஆண்களிடமும் பரவியது. ஆங்கில மொழியைக் கற்றுப் புலமை பெற்று அரசபணி செய்த ஆண்களுக்கு இது ஒரு வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. காற்சட்டை, சேட் அணிந்த பின்னர் மீண்டும் வேட்டியை அணிவது அநாகரிகமான செயற்பாடு எனப் பலர் கருதினர். அவர்கள் மேலைத்தேய ஆடையுடன் சைவக் கோயில்களிலே உள்ளே சென்று வழிபாடு செய்வதில் என்ன தவறு? என்ற வினாவை எழுப்பினர்.

**சைவப்பண்பாட்டில் ஏற்பட்ட சிக்கல்கள்**

ஈழத்துச் சைவப் பண்பாடு என ஒரு பண்பாடு எப்படி உருவாக்கப்பெற்றது என இன்று மீள்பார்வை செய்ய வேண்டியுள்ளது. சைவசமயம் சிவனை முழுமுதற் கடவுளாக நினைந்து வழிபாடு செய்யும் வாழ்வியல் நெறியை உணர்த்துவது. அதனால் பிற சமயங்களைப் போல கருத்து நிலையாக அன்றி அன்றாட வாழ்வு நெறியாக அமைந்தது. சைவவாழ்வு நெறி ஒரு பண்பட்ட நெறியாகப் பல்லாண்டு காலப் பழமையான நெறியாகும். மனித உடலையும் உள்ளத்தையும் தூய்மையாகப் பேண வழிகாட்டும் ஒரு சிறந்த நெறியாகவும் இருப்பதால் தனித்துவமான ஒரு பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.

உடல் தூய்மைக்கு உறுதுணையாக ஆடை அமைவதைச் சைவப் பண்பாட்டு நுட்பமாகப் பேணி வருகிறது. சிறப்பாகத் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளில் ஆடை சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. பருவ காலத்திற்கு ஏற்பவும் உடல் வளர்ச்சி நிலைக்கு ஏற்பவும் ஆடைகள் பயன்படுத்தப்பட்டன. பருத்தியாடையும் பட்டாடையும் இவ் வேறுபாடுகளுக்கு ஏற்ற வகையில் அணியப்பட்டன. பூசை செய்யும் பணியில் ஈடுபட்டோர் சிறப்பாகப் பஞ்சகச்சம் அல்லது தாறுபாய்ச்சிக் கட்டுதல் என அழைக்கப்படும் வேட்டி கட்டும் முறையைப் பேணினர். வேட்டிக்கு மேல் சால்வையை இறுக்கமான முறையில் கட்டினர். தோளிலே சால்வையை சிறு மடிப்பாக்கிப் போட்டனர். பட்டு, பருத்தி என்னும் இருவகை வேட்டிகளும் இவர்களால் பயன்படுத்தப்பட்டன. மேலும் இத்தகைய வேட்டி, சால்வை என்பன ஆண் தெய்வ உருவங்களுக்கும் பயன்படுத்தப்பட்டமையால் இந்த ஆடைப்பண்பாடு பண்டைய மரபு என்பதும் உணரப்படுகின்றது. பல்லவ சோழர் காலங்களிலே கட்டப்பட்ட திருக்கோயில்களில் உள்ள சிற்பங்களும் ஓவியங்களும் இதற்குச் சான்றாகவுள்ளன. இதே போலப் பெண் தெய்வ உருக்களுக்கும் புடைவை அணிவிக்கும் மரபு பேணப்பட்டு வந்துள்ளது. திருவிழா நடைபெறும் போது இன்றும் தெய்வ உருவங்களுக்கு இம்மரபான ஆடைகளே அணிவிக்கப்படுகின்றது.

எனினும் இப்பண்பாட்டுப் பாரம்பரியமான ஆடைப்புனைவு 21ஆம் நூற்றாண்டில் பெருஞ்சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. சைவப்பண்பாட்டு ஆடை என ஒரு புனைவை அடையாளம் காணமுடியாதபடி மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெண் தெய்வ உருவங்களுக்குப் புடைவை அணிவிக்காமல் பாவாடை போலப் புதிய புனைவு ஒன்றைச் செய்யும் வழக்கம் வந்துவிட்டது. ஆண் தெய்வ உருக்களுக்கும் மேலங்கி போன்ற புதிய புனைவு ஒன்று செய்யப்படுகிறது. சில தெய்வ உருவங்களுக்கு வேட்டி, சால்வையைப் பயன்படுத்தாமல் துண்டுகளை அணிவிக்கும் நடைமுறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விட்டது. சைவப்பண்பாட்டில் ஆடை ஒரு பண்பாட்டு அடையாளமாகப் பேணப்பட்ட நிலை இதனால் மாற்றம் அடைந்து விட்டது. இம்மாற்றம் மக்களிடையேயும் நடைமுறைக்கு வந்துவிட்டது. திருக்கோயில்களுக்கு வழிபாடு செய்யச் செல்லும் போது எந்த ஆடையையும் அணிந்து செல்லலாம் என்ற கருத்தத் தோன்றிவிட்டது. குறிப்பாக இளைய தலைமுறை இக்கருத்தைப் பெரிதும் வரவேற்கின்றது. அவர்களுக்கு வாய்ப்பாகப் பிறசமய நடைமுறைகள் உள்ளன. கிறிஸ்தவ சமயிகள் போல மேலைநாட்டு ஆடை அணிந்து வருவது தவறில்லை என அவர்கள் வாதிடவும் செய்கிறார்கள் தமது சைவப் பண்பாடு இக்கால வாழ்க்கை நடைமுறைகளுக்குப் பொருத்தமற்றது.எனவும் எண்ணிச் செயற்படுகின்றனர். இந்த ஆடை மாற்றம் ஏனைய இடங்களிலும் செல்வாக்குப் பெறத்தொடங்கியுள்ளது. திருமணம், பூப்பு நீராட்டு என்னும் நிகழ்வுகளிலும் மேலைநாட்டு ஆடை அணியும் வழக்கம் பெருகி வருகின்றது. இந்த மாற்றத்தை எவ்வாறு தடுப்பது என்பது பெரும் சிக்கலாக உள்ளது.

கோயில் வழிபாட்டுக்குச் செல்லும் போதும் மேலைநாட்டு ஆடைகளைத் தமிழர் அணிந்து செல்வது வழக்கமாகிவிட்டது. பெண்களும் புடைவையை விடுத்து அரைப்பாவாடை சட்டை, சுடிதார் போன்ற ஆடைகளை அணிந்து செல்கின்றனர். அவர்கள் அவ்வாறு அணிந்து செல்வதை நாகரிகமாகச் கருதுகின்றனர. இளைய தலைமுறையும் இதனைப் பின்பற்றப் பெரியோர் தமது செயற்பாடுகள் மூலம் வாய்ப்பு அளிக்கின்றனர். அவர்களை சீர்மியம் செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் கடமையாக உள்ளது. மேலும் புடைவை அணிந்து திருக்கோயிலில் வழிபாட்டுக்கு வரும் பெண்களும் மணிகள் நிறையப் பொருத்தப்பெற்ற பளபளப்பான புடைவைகளை அணிந்து வருகின்றனர். அப்புடைவைகள் தோய்த்து அணிவதற்கு உரியவை அல்ல. அதனால் தூய்மையற்ற புடைவைகளை அணிந்து திருக்கோயிலுக்குச் செல்வதும் வழக்கமாகி விட்டது.

### சிக்கல் தீர்வதற்கான வழிகள்

சைவப் பண்பாட்டில் ஆடைப்புனைவில் ஏற்பட்டுள்ள சிக்கல் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். ஈழத்தமிழர் இப்போது ஈழத்தில் மட்டுமன்றி வையகத்தில் பல நாடுகளிலும் வாழ்கின்றார்கள். அவர்கள் வாழும் நாடுகளில் எல்லாம் வழிபாடு செய்வதற்காகத் திருக்கோயில்களைக் கட்டியுள்ளனர். அப் பணியின் மூலம் தமது தலைமுறையினரும் சைவப்பண்பாட்டைப் பின்பற்றவும் பேணவும் வழிசெய்துள்ளனர். அவர்களுடைய இலக்கு இந்த ஆடைப்புனைவு மாற்றத்தால் நிறைவேறாமல் போகக்கூடிய நிலை தோன்றியுள்ளது. எனவே ஈழத்தமிழர் ஆறுமுக நாவலரைப் போல ஆடைப்புனைவிலும் சில வரையறைகளைப் பேணுவதன் புலத்தில் வாழும்தமிழர் இளைய தலைமுறையினருக்கும் சிறந்த வழிகாட்டிகளாக அமையமுடியும்.

ஈழத்துச் சைவப்பண்பாட்டில் ஆடைப்புனைவின் இன்றியமையாமை எடுத்துரைக்கப்பட வேண்டும். இப் பணியைத் திருக்கோயில் பூசகரும் திருக்கோயில் நிர்வாக சபைத்தலைவரும் பொறுப்பேற்றுச் செயற்படுத்த வேண்டும். ஈழத்தில் சில வழிபாட்டு மன்றங்கள் ஆடைப்புனைவை வரையறை செய்து செயற்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே சைவத் திருக்கோயில்களின் நிர்வாக சபையினர் திருக்கோயில்களுக்கு வழிபாடு செய்ய வருகின்றவர்கள் தமிழரது மரபான ஆடையை அணிந்து வரவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து அதைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்.ஆனால் அத்தகைய வேண்டுகோளை விடுத்தால் திருக்கோயில் வழிபாட்டுக்கு வருபவர்களுடைய தொகை குறைந்து விடும். அதனால் திருக்கோயில்களுக்குரிய வருமானம் கிடைக்காமல் போய்விடும் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுகின்றார்கள். அதனால் சைவப்பண்பாட்டு ஆடையை வற்புறுத்தாமல் கண்டுங்காணாமலும் இருக்கின்றார்கள். ஆனால் இந்த நிலை மாறவேண்டும். இல்லாவிட்டால் சைவமரபான ஆடை மாற்றமடைவது மட்டுமல்லாமல் இல்லாமலும் போய் விடலாம். விரைவாக இந்நிலை புலத்தில் வாழும் தமிழர்களால் ஏற்பட வாய்ப்புண்டு.

ஈழத்தமிழர்கள் சைவப் பண்பாட்டைக் காலங்காலமாகப் பேணிவந்த நிலையில் மேலைநாட்டுச் சமயத்தின் செல்வாக்கால் அவர்கள் தளர்ச்சியடைய நேரிட்டது. அதை மீண்டும் உயர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் சைவத்திருக்கோயில்கள் மீண்டும் ஆடைப்புனைவிலே மரபான வரையறையைச் செயற்படுத்த வேண்டும் வழிபாடு செய்ய வருபவர்கள் எவ்வாறு வர வேண்டும் என்பதை விளக்கமாக எடுத்துக் கூறுவதற்கு உரையாற்றலைச் செய்ய வேண்டும். இந்தப்பணியை ஈழத்திலே முன்னெடுத்தவர் நாவலர் பெருமான். அவர் வழியிலே இன்று திருக்கோயில்களிலே உரையாற்றுகை செய் பவர்கள் சைவப் பண்பாட்டு ஆடை பற்றிய செய்திகளை எடுத்துரைக்க வேண்டும் . வழிபட வருகின்றவர்களுக்கு உள்ளத்தில் பதியும்வண்ணம் மட்டுமன்றி, அதைச் செயற்படுத்தும் மன உறுதி பெறும் வகையிலே விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். இளையோர்களையும் இப்பணியிலே நெறிப்படுத்த வேண்டும். இதுவே சைவப்பண்பாட்டு ஆடை மரபைப் பேணச் சிறந்த வழியாகும்.

**வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்**
**செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே**
**அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து-**
**வெவ்விய காலன் என்மேல் வரும்போது-வெளி நிற்கவே.**

**பொருள் :** அபிராமித் தாயே! என் அகப்பற்று, புறப்பற்று ஆகிய பாசங்களை அகற்றி, என்னை ஆட்கொண்டு அருளிய நின் பொற்பாதங்களோடு, எந்தை எம்பிரானோடு இரண்டறக் கலந்திருக்கும் அர்த்த நாரீஸ்வரர் அழகும், தனித்தனி நின்று காட்சி தரும் திருமணக்கோலமும், கொடிய காலன் என்மேல் எதிர்த்து வரும் காலங்களில் காட்சியருள வேண்டும்.

-அபிராமி அந்தாதி (95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் புலப்படுத்தும் மனிதநேயச் சிந்தனைகள்

**பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்,**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழாகமம் என்று கூறப்படும் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமூலரின் திருமந்திரம் சைவ வாழ்வியலுக்கு ஓர் அடிப்படையான நூலாக விளங்குகின்றது. இந்நூலில் சைவப்பண்பாட்டுக் கூறுகள் பல காணப்படுவதுடன், சமூக நல்லிணக்கத்திற்கு அடிப்படையான மனிதநேயச் சிந்தனைகள் பலவும் இடம்பெற்றுள்ளதாகக் கருத முடிகின்றது. 'மனிதநேயம்' என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள 'நேயம்' என்பதற்கு 'அன்பு' என்பது பொருளாகும். இவ்வகையில் நோக்கும் போது ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் செலுத்தும் உண்மையான அன்பே மனிதநேயம் என்று கொள்ளப்படும். மனிதனிடம் மட்டுமன்றி ஏனைய உயிர்களிடம் காட்டும் அன்பும், பரிவும் மனிதநேயமாகவே கருதப்படும். திருமந்திரத்தில் அன்பே கடவுள், உலகிற்கு உரு தெய்வம், அனைவருக்கும் அன்னமிடல், உயர்வு தாழ்வு பாராட்டாமை, மாதா, பிதா, குரு என்போரை தெய்வமாக மதித்தல் போன்ற பெறுமானம் மிக்க மனிதநேய விழுமியச்சிந்தனைகள் இடம்பெற்றுள்ளமை தெளிவாகத் தெரிய வருகின்றது. சமுதாய நல்லிணக்கத்திற்குத் திருமந்திரம் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை விபரண ஆய்வுமுறையில் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:**

திருமந்திரம், மனிதநேயம், நல்லிணக்கம், அன்பு, அறம்.

**அறிமுகம்**

மனிதநேயச் சிந்தனைகளைப் புலப்படுத்தும் சைவத் திருமுறைகளுள் தனிச்சிறப்புடைய திருநூலாக விளங்குவது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு இறுதியில் அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த திருமூலர் இயற்றிய திருமந்திரமாகும்.[1] இந்நூலில் இடம்பெற்றுள்ள மூவாயிரம் பனுவல்களும் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திர மானது சைவ சமயத்தின் தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் சைவ வாழ்வியல் நூலாகவும் திகழ்கின்றது. சமுதாய மேம்பாட்டிற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் திருமந்திரம் கூறும் மனித நேயச் சிந்தனைகளை விபரணஆய்வு முறையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனிதநேயம்**

மனிதநேயம் என்பது மனிதனோடு தொடர்புடைய ஒரு தத்துவக் கோட்பாடாகும். மனிதநேயக் கோட்பாட்டினை மனித இன நலக் கோட்பாடு என்றும், மக்கள் நலக்கொள்கை என்றும் வழங்குவர்.[2] மனிதநேயம் என்பது ஆங்கிலத்தில் "ஹியுமானிஸம்" (HUMANISM) என அழைக்கப்படும். இதனை மானுடம், மானிடம், மானுஷிகம் எனவும் வழங்குவர். தெறென்ஸ் (Terence) என்னும் இலத்தீன் புலவர், " நான் மனிதன். மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை" எனக்கூறிய கூற்று மனிதநேயக் குறிக்கோளை சுட்டி நிற்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டார் போற்றுவர். மனிதனை அல்லது மக்கள் நலத்தைப் பேணவேண்டும் என்பதை மையமாகக் கொண்ட எந்த நோக்கினையும் மனிதநேயம் (ஹியுமானிஸம்) எனக் கொள்வது மேநாட்டு மரபாக இன்று விளங்குகின்றது.[3] "மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை– இந்த மானுடமு... போலொரு மெய்மையும் இல்லை" என்ற உலோகாயுத சித்தரின் பாடல் வரிகள் மனிதநேயத்தின் மாண்பினைப் புலப்படுத்துகின்றன. மனிதநேய வாழ்வு என்பது முழுக்க முழுக்க மனிதனை மையமாகக் கொண்ட வாழ்வியல் தத்துவம் என்பர். " கடவுளை மற. மனிதனை நினை" என்ற மனிதநேயக்கோட்பாடு கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்டது என்றும் சிலர் குறிப்பிடுவர். சைவத்தின் மனிதநேயம் கடவுட் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்தவகையில் திருமந்திரம் கூறும் மனிதநேயம் "கடவுளை நினை. மனிதனை நினை" என்ற மாண்பினைக் கொண்டு விளங்குகின்றது."

ஒருவர் மற்றவருக்கு சமமானவர் என எண்ணும் உயரிய மனப்பான்மையே மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடாகும். ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு மதிப் பளிப்பதும், உதவுவதும் மனிதநேய நேயத் தின் புலப்பாடெனலாம். இவ்வகையில் மனித நலமேம்பாட்டிற்கு உதவக்கூடிய அறக்கருத்துக்களையும் மனிதநேயச் சிந்தனையாகக் கருதலாம். பரந்த நோக்கில் நோக்கும் போது மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடு ஆன்மநேயத்தில் மிளிர்வதைக் காணமுடியும். திருமந்திரம் மனிதநேயத்தை மட்டுமன்றி ஆன்மநேயத்தையும் சிறப்பாகச் சித்தரிக்கும் சைவத்தமிழ் இலக்கியமாக விளங்குகின்றது. மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மற்றவர்கள் பால் அன்பு செலுத்த வேண்டும். அன்பின் அடிப்படையில் தோன்றிய இக் கோட்பாட்டினை, ஃபிரோலோவ் (Frolov) "மனிதநேயம் என்பது மனிதனது பெருமையையும், உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்ததொரு கோட்பாடு. மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும் அவனது மனங்களைப் பேணிவரவும், சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் துணைபுரிவது இக்கோட்பாடு. சமயம் மற்றும் இன வெறிக் கொடுமை, சமயக் காழ்ப்பு, மாற்றுக் கோட்பாட்டை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்புகளையும் களைவது இதன் நோக்கம்." என்று குறிப்பிடுவர்.[4]

**சமூக சமத்துவம்**

உலகில் தோன்றிய அனைவரையும் சாதி, சமய, மொழி வேறுபாடின்றி சமமாகக் கருதுவது மனிதநேயக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாகும். புறநானூற்றில் காணப்படும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற வரி மனிதநேயத்தின் அடிவேராகும். இச்சமூக சமத்துவநோக்கு சைவத்தின் சிறப்பம்சமாகும். இதனையே திருமூலர், "ஒன்றே குலம்"[5] என மொழிந்துள்ளார். சைவநெறியில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற குல வேறுபாடு இல்லையென்பதனை " குலமில்லை"[6] என்ற திருமந்திரக் குறிப்பு மேலும் சுட்டி நிற்கின்றது. இம்மரபு சைவ சித்தாந்தத்திலும் இடம்பெற்றிருப்பதை சிவஞானசித்தியார் "குலமில்லை" என்று குறிப்பிடுகின்றது. மறைஞானசம்பந்தர் நெசவாளர் வீட்டில் கஞ்சி பெற்றுக் குடித்ததாகவும், அது அவரது முழங்கை வழியாக ஒழுகியபோது அதனைத் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் பருகியதாகவும், பெத்தான்சாம்பனுக்கும், முள்ளிச்செடிக்கும் உமாபதிசிவாச்சாரியார் முத்தி கொடுத்ததாகவும் கூறப்படும் செய்தியானது சைவசித்தாந்த வாழ்வியற் தத்துவத்தில் திருமந்திரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சமத்துவம் ஏற்கப்பட்டதை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. மேலும் திருமந்திரம் கூறும் "ஒன்றே குலம்" என்ற மனிதநேயச் சிந்தனையை விளக்க எழுந்ததே சேக்கிழாரின் பெரிய புராணம் என்றும் கூறலாம். "குலம் ஒன்று" என்ற மனிதநேயச் சிந்தனை திருமூலர் வழிவந்த சித்தர் பாடல்களில் நன்கு வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

## உலகிற்கு ஒரு தெய்வக்கொள்கை

"சமூக சமத்துவம்" என்ற மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகவே சைவ நெறியில் "உலகுக்கு ஒரு தெய்வம்" என்ற ஓர் இறைக்கொள்கை தோன்றிற்றெனலாம். இந்திய கடவுட் சிந்தனை வரலாற்றில் "மெய்யறிவாளர் பல பெயரிட்டழைத்தாலும் "மெய்ப்பொருள் ஒன்றே"[7] என்றகடவுட்கொள்கை காணப்படுகின்ற மரபில் திருமூலரும் சகலருக்கும் ஒரு தெய்வம் இருந்தால் போதும் என்றநோக்கில், "உலகுக்கொரு தெய்வம்" என்ற கடவுட் கோட்பாட்டினைக் குறிப்பிடுகின்றமை மனிதநேயத்தின் சமூக நல்லிணக்க வெளிப்பாடாகும். இதனைத் திருமந்திரம், "ஒன்று கண்டீர் உலகுக் கொரு தெய்வம்"[8] எனக் குறிப்பிடுவதால் அறியலாம். உலகம் தழுவிய ஒரு கடவுட் கோட்பாட்டினைக் கூறுவதன் மூலம் கடவுட் கோட்பாட்டினூடாகவும் திருமூலர் மனிதநேயத்தையே வற்புறுத்துவது குறிப்பிடற்பாலதாகும். "தெய்வம் ஒன்று" என்ற மனித நேயஉணர்வின் வெளிப்பாட்டினை "ஒருவனே தேவன்"[9], "ஒன்றெனக் கண்டே யெம் ஈசன் ஒருவனை"[10] என்ற திருமந்திர வரிகளும் விளக்கி நிக்கின்றன. 'உலகுக்கொரு தெய்வம்' என்ற திருமூலரின் மனிதநேயச் சிந்தனையை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது இன்று கேள்விக்குரிய ஒன்றாகும். இறை வழிபாடு முறைகளிலும் கூடத் திருமந்திரம் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது. எந்த மனிதனும் இலை அல்லது மலர் அல்லது தண்ணீர் கொடுத்து இறைவனை வழிபடமுடியும். இவ் எளிய வழிபாட்டு மனிதநேயத்தையே திருமந்திரம், "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை"[11] என்றும், "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"[12] என்றும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

## அன்புடைமை

மனிதநேய உணர்வுகள் அனைத்திற்கும் அன்பு நெறியே அடிப்படையாகும். நாம் கடவுளிடத்தில் காட்டும் பக்திக்கு மட்டுமன்றி ஏழைகள் மேல் செலுத்துகின்ற இரக்கத்திற்கும், உயிரினங்களிடத்துக் காட்டும் ஜீவகாருண்யத்திற்கும் அன்பே ஆதாரமாக விளங்குகின்றது. சைவத்தமிழ் நூல்களுள் திருமந்திரமே கடவுளை முதன்முதலில் அன்பு வடிவமாக வர்ணிக்கின்றது. இதனை "அன்பே சிவம்"[13] எனற திருமூலர் வாக்கால் அறியலாம். சிவனை மட்டுமன்றி சீவனையும் அன்பு வடிவமாகக் கண்டு சிவனைப் போன்று சீவனும் அன்புக்குரியதெனக் காட்டுவதே திருமந்திரத்தின் உட்கிடை எனலாம். இதன் காரணமாக "அன்பே சிவம்" எனக்கூறும் திருமந்திரம் "சீவன் சிவன்" எனவும், "சீவன் சிவலிங்கம்" எனவும் குறிப்பிடுகின்றது. சீவனையும் சிவனையும் ஒன்றாகக் காணும் நோக்கு மனிதநேயத்தின் சிறந்த வெளிப்பாடாகும். இந்தநோக்கில் நோக்கும்போது சிவனிடத்து மட்டுமன்றி சீவனிடத்து அன்பு செய்தவரைச் சிவன் அறிவன் என்பதையே திருமந்திரம்,

"கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே"
– 14

என மொழிந்து நிற்கின்றதெனலாம். இவ்வாறு "அன்பே கடவுள். கடவுளே அன்பு" என்று சைவசமயம் கூறும் மனிதநேய மாண்பினை திருமந்திரத்தில் காணமுடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனைவருக்கும் இன்பமான வாழ்வு

உலகில் உள்ள அனைவருக்கும் இன்ப வாழ்வு கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் ஓர் உன்னத மனிதநேயக் கருத்தாகும். தன்னைப் போன்று மற்றவர்களையும் மதிக்கும் இம் மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகவே திருமந்திரம், "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"[15] எனக் குறிப்பிடுகின்றது. இச் சிந்தனையும் உலக நோக்குடையதாகக் கூறப்பட்டிருப்பது திருமந்திரம் கூறும் மனித நேயத்தின் தனிச்சிறப்பாகும்.

### மனிதரைத் தெய்வமாக மதித்தல்

மனிதரைத் தெய்வமாக மதிக்கும் மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடாகவே அடியவர்களுக்குக் கொடுப்பதே ஆண்டவனுக்குச் சேரும் என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இதன் காரணமாகவே ஆண்டவனுக்குக் கொடுப்பது ஆண்டவனுக்குப் போய்ச் சேரா தென்றும், அடியவர்களுக்குக் கொடுப்பதே ஆண்டவனுக்குச் சேருமென்றும் திருமந்திரம் மொழிகின்றது. இதனை,

"படமாடக் கோயிற் பகவற் கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காக
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயிற் பகவற்கதாமே"16

என்ற திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்கி நிற்கின்றது. மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை என்ற மனிதநேயச் சிந்தனையின் உட்பொருளை மேற்படி திருமந்திரப் பாடல் நன்கு புலப்படுத்துகின்றது. கடவுட் கோட்பாட்டினையும், திருக்கோயில் வழிபாட்டையும் சிறப்பாகச் சித்தரிக்கும் திருமந்திரத்தில் கோயிற் தெய்வத்தைவிட மனிதன் என்ற தெய்வமே மேலானவர் என்ற மனிதநேயச் சிந்தனை வற்புறுத்தப்பெற்றிருப்பது, சைவசமயத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

### அனைவருக்கும் அன்னமிடுதல்

அனைவருக்கும் அன்னமளிக்க வேண்டுமென்ற எண்ணமானது திருமூலரின் மனிதநேய உணர்வினை நன்கு பிரதிபலிக் கின்றது. சாதி, சமயம், இனம் என்ற வேறுபாடோ அல்லது உயர்ந்தவர்,தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை என்ற வேற்றுமையோ பாராது அனைவருக்கும் உணவளிப்பது மனிதநேய உணர்வின் மிகவுயர் சமூக நல்லிணக்க வெளிப்பாடாகும். அதனைத் திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

" ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின்பழம் பொருள்
–போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை
–உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே"
–17

காகமானது தனக்குக் கிடைத்த உணவைத் தான் மட்டும் உண்ணாது தன் இனத்தவரையும் அழைத்து பகிர்ந்து உண்பது போல, மனிதனும் தன் குலத்திற்கும் பகிர்ந்து கொடுத்துண்ண வேண்டுமென்பது திருமந்திரம் காட்டும் சிறந்த மனிதநேயமாகும். இச்சிந்தனை பின்வரும் திருக்குறள் பாக்களிலும் எதிரொலிக்கின்றது.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"
– 18

"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"
–19

"வயிற்றுக்கு சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்ற பாரதியாரின் மனிதநேயச் சிந்தனையும் இங்கு ஒப்புநோக்கற்பாலதாகும். மேலும், நாம் உண்ணும்போது அதில் ஒரு கைப்பிடியளவு உணவினை அல்லது ஓர் அகப்பை அன்னத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்கும் கொடுத்துண்ணுதல் எல்லோராலும் முடிந்த ஒன்றாகும். இம் மனிதநேய உணர்வினை, "யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி"[20] என்றும், "உண்ணும்போதொரு தவ்விக் கொடுண்மின்"[21] எனவும் திருமந்திரம் குறிக்கப்படுகின்றது. ஞானி ஒருவருக்கு ஒருவேளை பகலுணவு கொடுப்பதனால் கிடைக்கும் பலன் நிகரற்றது என்பது திருமந்திரத்தில், "பகரு ஞானி பகலூண் நிகரில்லை என்பது நிச்சயந்தானே"[22] என வரும். அத்துடன் மனிதர்களுக்கு மட்டுமல்லாது உயிரினங்களுக்கும் எல்லோராலும் இயலக்கூடிய உணவளிக்கும் உயிரிரக்க ஜீவகாருண்ணியத்தை திருமந்திரம் "யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை"[23] எனக் கூறுவது குறிப்பிடற்பாலதாகும். இவ்வகையில் மனிதநேயமும் ஆன்மநேயமும் ஒன்றென உணர்த்துவதே திருமந்திரத்தின் உட்கிடை எனலாம்.

## இன்சொல் உரைத்தல்

எல்லோரிடத்திலும் இனிமையாய் பேசுதல் மனிதநேயத்தின் உயரிய வெளிப்பாடாகும். இது சமூக நல்லிணக்கத்திற்கும் பெரிதும் உதவும். இதுவே திருமந்திரத்தில்,

"யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"
-24

என்று வருகின்றது.

## சமய சமரசம்

மனிதநேயத்தின் ஒரு வெளிப்பாடாகவே சமய சமரச உணர்வு ஏற்படுகின்றது. இறைவனை எவ்வண்ணம் ஏத்தினாலும் அவ்வண்ணத்தில் அவன் அருள்புரிவான் என்ற சைவத்தின் சமய சமரச மனிதநேயத்தைத் திருமந்திரம்.

"எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
ஆப்பரிசீசன் அருள் பெற லாமே"
-25

எனக் குறிப்பிடுவதால் அறியலாம். இம் மனிதநேயம் சைவசித்தாந்தத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

## தருமம் செய்தல்

மனிதநேய உணர்வின் ஓர் உன்னதமான வெளிப்பாடு தருமம் செய்தலாகும். தருமம் செய்வதால் ஏற்படுகின்ற இன்பத்தையும், தருமம் செய்யாதவருக்கு ஏற்படுகின்ற துன்பத்தையும் திருமந்திரம் சிறப்பாகச் சித்தரிக்கின்றது. இதனை,

"இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்
உருமிடி நாகமு ரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகிலாவே"
-26

என்ற திருமந்திரப் பாடல் நன்கு விளக்கி நிற்கின்றது. திருமந்திரம் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை மென்மேலும் வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக சமய ஸ்தாபனங்களிலும், கல்வி நிலையங்களிலும் அற நிலையங்களை ஏற்படுத்துவது காலத்தின் தேவை எனலாம்.

## நடுவுநிலை நிற்றல்

ஒரு தலைச் சார்பின்றி எல்லோரிடத்திலும் நடுநிலை நிற்றல் மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகும். மனித நேயத்தை நேசிப்பவர்கள் எப்போழுதும் நடுவுநிலை நிற்பவராக விளங்குவர். இம்மனித நேய உணர்வினைத் திருமந்திரம்.

" நடுவுநின்றார் நல்ல தேவருமாவர்
நடுநின்றார்வழி யானும் நின்றேனே"
-27

எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நடுவுநின்றார் சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு யானும் நின்றேனே"
-28

எனவும் மொழிதலால் அறியலாம். நடுநிலை நிற்றலாகிய மனிதநேயக்கோட்பாட்டில் எல்லோரும் நமக்குச் சமநிலையிலுள்ளவர்களென்ற சமநீதிக் கோட்பாடும் சமூக நல்லிணக்கமும் உள்ளுறையாக மிளிர்வது குறிப்பிடற்பாலதாகும். இம்மனிதநேயச் சிந்தனையைத் திருக்குறள்,

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்
-தியார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை"
-29

எனக் குறிப்பிடுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**பெரியோரைப் பிழையாமை.**

பெரியோரைப் பேணுவது மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகும். பெரியோர்களது மனம் கலங்குவதைக் கூட மனிதநேய உணர்வுடைய எவரும் அனுமதிப்பதில்லை. பெரியோர்களின் மனம்கலங்கினால் பொருளும், உயிரும் போவது மட்டுமல்லாது, தேசமும் நாடும், அரசும் அல்லற்படும் என்பதைத் திருமூலர்,

"பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
ஆத்தமும் ஆவியும் ஆண்டொன்றில்
-மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே"
-30

"ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர்பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி யாணையே"
-31

எனக் குறிப்பிடுகின்றார்.

**குருவைத் தெய்வமாகப் போற்றுதல்**

மாதா, பிதா, குரு என்போரைத் தெய்வமாகப் போற்றுவது சைவம் கூறும் மனிதநேயத்தின் தனிச் சிறப்பாகும். திருமூலர் குருவைத் தெய்வமாகப் போற்றும் மனிதநேய உணர்வினரென்பதை "குருவே சிவம்"[32] என்ற திருமந்திரக் குறிப்பால் அறியலாம். குருவினுடைய திருமேனியைக் காண்பதும், அவருடைய பெயரைக் கூறுவதும், அவரது வார்த்தைகளைக் கேட்பதும், அவவுருவத்தைச் சிந்திப்பதும் சிறப்பளிக்குமென்பது திருமூலர் கருத்தாகும். இதனை,

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.
-33

என்ற திருமந்திரத்தால் அறியலாம். நமக்குப் போதித்த குருவை நிந்தை செய்வோர் பூமியில் மிகவும் துன்பப்படுவார் என்பதை பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்கி நிற்கின்றது.

"ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங்
-கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர்
-மண்ணிலே"
-34

எனவே, "மனிதரில் மனிதனாக" நாம் வருவதற்கு காரணமாக விளங்கும், குருவுக்கு மதிப்பளிக்கின்ற மனிதநேயப் பண்பாட்டை வளர்த்தெடுப்பது சமூகநல ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லதெனலாம்.

**பெற்றோரைப் பேணுதல்**

பெற்றோரைப் பேணுதல் எம் எல்லோரதும் தலையாய கடனாகும். சமுதாயத்தில் மனித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தை வளர்த்தெடுப்பதற்கு இது உதவும். இது எல்லோரிடத்திலும் இருக்க வேண்டிய மனிதநேயப் பண்பாகும். தம்மைப் பெற்ற தாய் தந்தையரைப் பேணாதவர்களைக் "கயவர்கள்" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

"பெற்றிருந்தாரையும் பேணா கயவர்கள்"
–35

என்ற திருமந்திரவரி சுட்டி நிற்கின்றது. திருமூலர் காலத்தில் இப்பண்பு குறைந்து காணப் பட்டதாலேயே பெற்றோரைப் பேணாதவர்கள் கயவர்கள் என்று குறிப்பிடுகின்றார் எனலாம்.

**பிறன்மனை நோக்காத பேராண்மை**

இல்வாழ்வுக்குரிய மனிதநேயம் பிறன்மனை நயவாமையாகும். சைவ வாழ்வியலில் பிறன்மனை நோக்காப் பேராண்மை. உயர்ந்ததோர் மனிதநேயப் பண்பாகக் கருதப்படுகின்றது. "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற சைவ ஒழுக்க நெறியினை மறந்து பிறன்மனை நயக்கின்றவர்களைத் திருமூலர் மிகவும் குறைவாக இழித்துரைக்கின்றார். இதனை,

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக்காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே"
–36

என்ற திருமந்திரப் பாடல் விளக்கி நிற் கின்றது. பிறன்மனை நோக்கப் பேராண்மை யினைத் திருக்குறளும்,

"பிறன்மனை நோக்காத பேராண்மை
–சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"
–37

என்று குறிப்பிடுவது ஒப்புநோக்கப்பால தாகும்.

எனவே பிறன்மனை நயத்தல் என்பது அவளுடைய கணவனுக்கு மட்டுமன்றி, அவன் வாழ்கின்ற சமுதாயத்தின் மனித நேயத்தையே மாசுபடுத்தும் ஒரு சமூகக் குற்றச் செயல் எனக் கொள்ளலாம்.

**பஞ்சமா பாதகங்களைப் புரியாமை**

பஞ்சமா பாதகங்களான கொலை செய்தல், களவெடுத்தல், கள்குடித்தல், காமத்தில் ஈடுபடுதல், பொய்யுரைத்தல் என்ற ஐந்தும் குறிப்பிடப்படுகின்றன. இப்பஞ்சமா பாதகங்கள் மனிதநேயத்தை மாசுபடுத்தும் என்பது சைவத்தின் நிலைப்பாடாகும். இதைத் திருமந்திரம்,

"கொலையே களவுகட்காமம் பொய்கூறல்
மலைவான பாதகமாம்"
–38

என விளக்கி நிற்கின்றது. மனித நேயத்தை வளர்த்தெடுக்க விரும்புகின்றவர்கள் "உன்னைத் திருத்து உலகம் திருந்தும்" என்பதற்கேற்ப இப் பஞ்சமாபாதகங்களைப் புரியாதிருத்தல் இன்றியமையாததாகும்.

**முடிவுரை**

மனிதநேயச் சிந்தனைகளைக் கூறும் சைவத் தமிழ் இலக்கியங்களுள் திருமந்திரம் தொன்மைச் சிறப்புடையதாக விளங்குகின்றது. மனிதனுக்கு மேலொரு தெய்வமுமில்லை என்ற மனிதநேயக் கோட்பாட்டினைத் திருமந்திரம் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. மனிதநேயத்தின் உயிர்நாடி அன்பே என்பது திருமூலரின் கருத் தாகும். எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற மனிதநேயம் திருமந்திரத்தின் உட் பொருளாகக் காணப்படுகின்றது. திருமந்திரம் காட்டும் மனிதநேயச் சிந்தனைகள் உலக நோக்குடையதாகவிருப்பது குறிப்பிடற் பாலதாகவுள்ளது. மேலும் திருமூலர் கூறும் சமய சமரசம், தருமம் செய்வதன் அவசியம், நடுநிலை நிற்கும் மனநிலை, மாதா, பிதா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு, பெரியோர் முதலானவர்களைப் போற்றுதல், எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசுதல், பிறன்மனை நோக்காமை, பஞ்ச மாபாதகங்களைப் புரியாமை போன்ற மனிதநேய விழுமியச் சிந்தனைகளும் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதற்குப் பெரிதும் உதவுமெனக் கொள்ளலாம். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, மனிதநேயச் சிந்தனைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் தொன்மை யான சைவத் தமிழ் நூல் திருமந்திரம் என்பதும் அந்நூல் கூறும் மனிதநேயச் சிந்தனை களை வளர்த்தெடுப்பதன் மூலம் சமூக மேம் பாட்டையும், சமூக நல்லிணக்கத்தையும், உலக சகோதரத்துவத்தையும் உருவாக்க முடியுமென்றும் உறுதியாகக் கூறலாம்.

**அடிக்குறிப்புகள்**

» வெள்ளைவாரணன்.க, 1962, பன்னிருதிருமுறை வரலாறு பகுதி 2, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், பக்.17–18

» இராகுலன்.வே, 2006, மனிதநேயம், வான்முகில் வெளியீடு, சென்னை, ப.53

» மேலது, ப.26

» Frolov.I, (Ed.), 1984, The Dictionary of Philoshophy,

» Progres Pubishers,Mosco, p.178

» குமரகுருபரன் பிள்ளை, டி.எம்., (ப.ஆ.),1968, திருமூலநாயனார் அருளியது,

» திருமந்திரமாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம், ஶ்ரீகுமரகுருபரன் சங்கம், சென்னை,

» திருமந்திரம், பா.2104

» மேலது,2957

» இருக்குவேதம், 1:164:46

» மேலது, பா.2962

» மேலது, பா.2104

» மேலது, பா.1775

» மேலது, பா.252

» மேலது, பா.1828

» மேலது, பா.270

» மேலது, பா.280

» மேலது, பா.85

» மேலது, பா.1857

» மேலது, பா.250

» திருக்குறள், 527

» திருமந்திரம், 322

» மேலது, பா.252

» மேலது, பா.196

» மேலது, பா.1824

» மேலது, பா.252

» மேலது, பா.252

» மேலது, பா.36

» மேலது, பா.263

» மேலது, பா.320

» மேலது, பா.322

» திருக்குறள், 541

» திருமந்திரம், பா.532

» மேலது, பா.534

» மேலது, பா.1581

» மேலது, பா.139

» மேலது, பா.531

» மேலது, பா.530

» மேலது, பா.201

» திருக்குறள், 148

» திருமந்திரம், பா.200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிற் கட்டடக்கலை மரபில் கோபுரம் சிவாகமங்களையும், சிற்பசாஸ்திரங்களையும் அடிப்படையாகக்கொண்டது.

**கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,**
முதுநிலை விரிவுரையாளர், தரம்-1,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**அறிமுகம்.**

திருக்கோயில்கள் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை ஆகும். அவை ஒருநாட்டு மக்களின் பண்பாட்டை கலையுணர்வை, சமூக ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கின்றன. திருக்கோயிற் கட்டடக்கலை பன்னெடுங்காலமாக படிமுறை வளர்ச்சிபெற்ற இந்து அறிவியலின் ஒரு முக்கியகூறாக விளங் குகின்றது. நிறைவான வளர்ச்சி பெறுகின்ற போது அவை சாஸ்திர மரபையும், கலை மரபையும் ஆன்மிகத்தோடு இணைத்து நிற்கும் சாதனமாகவும் விளங்குகின்றது. கோயில் என்னும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் குறிப்பதன்று. அது தேர்வு செய்து வரையறுக்கப்பெற்றநிலப்பகுதி, அதில் கட்டப்பெறும் விமானம், மண்டபங்கள், திருச்சுற்று, பரிவாராலயங்கள்,மதில்கள், கோபுரங்கள் எனப் பல்வேறு அங்கங்களை உள்ளடக்கியதாகும். அத்தகைய திருக்கோயில்கள் தன்னகத்தே கொண்டுள்ள பிரதான கூறுகளில் கோபுரம் உயர்ந்த தத்துவமும், உட்பொருளும், அளவுப்பிரமாணங்களும் கொண்டு விளங்குகின்றன. கோபுரங்கள் கட்டடக்கலைத் திறத்தை மட்டும் வெளிக்காட்டு பவையல்ல. அங்கு சிற்பக்கலை செழிக்கின்றன. நாட்டியக்கலை பரிணமிக்கின்றன. இசையும் ஓவியமும் இழையோடுகின்றன. வரலாற்று நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. அத்தகைய சிறப்புடைய கோபுர அமைப்பு விதிமுறைகளை சிவாகமங்களையும், சிற்ப சாஸ்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுத்துக்கூறுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

சிவாகமங்கள் கூறுகின்ற நான்கு பிரிவுகளாகிய கர்க்ஷணம், பிரதிக்ஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகியவற்றில் முதலாவதாக இடம்பெறுகின்ற கர்க்ஷ ணம் என்று சொல்லப்படுகின்ற பிரிவு புதிய கோயில் ஒன்றினை உருவாக்கு வதற்கு ஏற்ற வழிமுறைகளை வகுத்துக் கூறுகின்றன. தென்னாட்டிலும், இலங்கையிலும் பன்னெடுங்காலமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற திருக்கோயில்கள் பெரும்பாலும் இத்தகைய சிவாகம ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி வந்துள்ளமையை அறியலாம். சிவாகம மரபு ஒன்று நிலவிவருவதற்கு இத்தகைய திருக்கோயிற் கட்டடக்கலை ஒன்றே சிறந்த சான்றாக அமைகின்றது.

**திருக்கோயிற் கோபுர அமைப்பு விதி முறைகள்.**

திருக்கோயிற் கோபுர அமைப்பு விதி முறைகள் பற்றி காமிகாகமம்[1], பூர்வ காரணாகமம்[2], உத்தரகாரணாகமம்[3], சுப்பிரபேதாகமம்[4] ரௌரவாகமம்[5] எனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களும் ஸ்ரீகாசியப்ப சில்பசாஸ்திரம்[6], மயமதம்[7] எனும் சிற்பசாஸ்திரங்களும் எடுத்தியம்புகின்றன.

கோபுர அமைப்பு விதிகளை நிலத்தேர்வில் தொடங்கி புனிதப்படுத்துதல், பதவிந்யாசம், ஆத்யேக்ஷ்டகம், கர்பநியாசம், கட்டுமானம், மூர்தேக்ஷ்டகம், கலசஸதாபனம் எனப் பல் வேறு நிகழ்வுகளுக்கான வரையறைகளை ஆகமங்களும், சிற்பசாஸ்திரங்களும் எடுத்துக் கூறுகின்றன. கோபுரக் கட்டுமானம் என்பது காப்பு அல்லது உறுதித்தன்மை, உயரம், அலங் காரம் எனும் மூன்று அடிப்படைக் கூறுகளை மையமாகக் கொண்டது.[8] இதில் காப்பு என்பது கோபுரமாகிய கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள், கட்ட டம் அமைந்துள்ள இடத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமையும். கோபுரம் கட்டப்பெறும் இடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை ஆகமங்களும், சிற்ப சாஸ்திரங்களும் விபரிக்கின்றன. கோபுர உயரம் என்பது எந்த காரணத்திற்காக ஒரு கோயில் எடுக்கப் பெறுகின்றதோ அதன் அடிப்படையில் அமைவதாகும். மேலும் அக் கட்டடத்தைக் கட்டுவதற்கு யார் மூல காரணமாக விளங்குகின்றாரோ அவரது கைவிரல் அங்குலியோ அல்லது மூலமூர்த்தியின் உயரத்தையோ அடிப்படையாகக் கொ ண்டு மானாங்குலமாகவோ அல்லது மந்திராங்கு லமாகவோ வகுத்து அக்கோயிலில் கட்டு மானங்கள் நிர்மாணிக்கப்பெறுவதால் கோபுர உயரமும் அதற்கேற்ப அமையும்[9] சோபா என சிற்பநூல்கள் கூறும் மூன்றாவது கூறு கட்டுமான நூல்கள் கூறும் வரையறைகளை மீறாமல் சிற்பி ஒருவனால் தனது படைப்புத் திறமைக்கும், கற்பனைத் திறனுக்கும் ஏற்ப அமைப்பதாகும். பெரும்பாலும், சிற்பியின் படைப்பாற்றல் தோரண வேலைப்பாடுகள், சிற்ப அலங்காரங்கள் வாயிலாகவே வெளிப்படும்.

முதலில் திருக்கோயிற் கோபுரங்களை நிர்மாணிப்பதற்குரிய நிலத்தைத் தேர்ந்தெ டுப்பது பற்றியும் நிலத்தினுடைய பாகுபாடு பற்றியும் ஆகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் கூறுகின்ற கருத்துக்களை நோக்கலாம். காமிகாகமம்,

"ஒரு குறிப்பிட்ட இடத்தை ஆலய நிர் மானத்திற்கு தேர்ந்தெடுப்பதாக இருந்தால் மங்கலகரமான ஒரு காலநிர்ணயத்தை தெரிந் தெடுக்க வேண்டும்."[10]

அடுத்து, நல்ல சகுனம் பார்த்து நற்காரியம் ஆற்றவேண்டும் எனவும் சிவாகமங்கள் கூறுகின்றன.

"நல்ல காலத்தைத்தேர்ந்தெடுத்தபின் நன்நிமித்தங்களையும் அறிந்த பின்னரே நற்காரியங்களை செய்ய வேண்டும்." என காமிகாகமம் கூறுகின்றது.

சிவாகமம் கூறுகின்ற திருக்கோயில் அமைப்பில் அடுத்து இடம்பெறுவது பூமி பரீக்ஷையாகும்.

பூமியானது அதன் கண்ணுள்ள மரங்க ளாலும், செடி, கொடிகளாலும், அதில் வாசம் செய்யும் மிருகங்கள் பட்சிகளாலும் மண்களின் நிறத்தாலும், வாசனையாலும், உருசிகளாலும் பன்னிரு பேதங்களாக காமிகாகமம் வகுத்துக் கூறுகின்றது.[12]

இவற்றுள்ளே சிவாலயம் அமைவதற்கு ஏற்ற மங்கலகரமான இடம் சைவபூமி என்றும் அதேபோன்று எல்லா நன்மைகளும் தரக்கூடிய நிலம் ஒன்றினை ஆலயம் அமைப்பதற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கின்ற போது அதற்கு பிரமபூமியென்றும் வழங்கப்படுகின்றது. அக் காலத்தில் மக்கள் ஆலயம் ஒன்றினை சிறப்பாக அமைப்பதற்கு நிலங்கள் எவ்வாறு நுட்பமாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கு இத்தகைய விபரம் சான்றாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிலம் திருக்கோயில் அமைப்பதற்கு ஏற்றதா என்பதை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு சில பரீட்சை முறைகள் கைகொள்ளப்படுவதை சிவாகமங்கள் புலப்படுத்துகின்றன. பூமி சருணப் பரீட்சை, ஜலபூக்ஷ்ப பரீட்சை, தானிய பரீட்சை எனும் மூவகைப்பரீட்சைகள் இடம்பெறுகின்றன என்பதனை காமிகாகமம் குறிப்பிடுகின்றது.[13] இவ்வாறு பரீட்சித்து வெகு குணங்களோடு கூடினதாகிய பூமியை கிரகித்தபின் பூமிக்குப் பிரவேசிக்கும் காலத்தில் அந்நிலத்தைப் புனிதப்படுத்தவதற்காக பல சமயக்கிரியைகள் நடாத்தப்படுகின்றன. அக்கிரியையினைப் பிரவேசபலியெனக் காமிகாகமம் கூறுகின்றது.[14] இவ்வகையில் கட்டடம் கட்டத் தேர்வு செய்யப்பெற்ற பூமியை பூபரிக்கிரஹம் செய்வது முதற்பணியாகும். பலியிட்ட பின்னர் பூமியைக் கைக்கொள்ள வேண்டுமாதலால் அடுத்ததாக பூபரிக்ரஹக் கிரியை செய்ய வேண்டும் எனக் காமிகாகமம் கூறுகின்றது.[15] மேற்கூறியவாறு பலவழிகளில் பரீட்சித்து நல்ல பூமியைத் தெரிந்தெடுத்த பின் உழுதலை ஆரம்பிக்க வேண்டும் எனக் காமிகாகமம் குறிப்பிடுகின்றது.[16] அந்நிலத்தை எருதுகள் பூட்டப்பெற்ற கலப்பை கொண்டு உழுது கோமயம் கலந்த விதைகளை அங்கு விதைக்க வேண்டும். அந்த விதைகள் முளைத்து நிலம் பசுமையாக இருக்கும்போது அங்கு காளைகளுடனும், கன்றுகளுடனும் கூடிய பசுக்களை வசிக்கும்படி செல்லவேண்டும். பசுக்களினால் சஞ்சரிக்கப்பட்டு அவைகளின் காலடிகள் பட்டதும், அவைகளால் முகர்ந்து பார்க்கப்பட்டதுமான பூமியானது பரமப வித்திரமாகி பூஜிக்கத்தக்கதாகின்றது. இவ்வாறு பசுக்களினால் புனிதம் பெற்ற நிலத்தில் புனிதநதிகளின் நீரைத் தெளித்து மேலும் புனிதப்படுத்திய பிறகே கட்டுமானத்திற்குரிய பணிகளைத் தொடங்கவேண்டும் என்று மயமதம் கூறுகின்றது.[17] அடுத்து நிகழவேண்டியதுதிக்பரீட்சை அல்லது சங்குஸ்தாபனம் எனச் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன.[18] கோபுரவாயில்கள் சரியான திசைகளிலே இருத்தல் வேண்டும். குறிப்பாக கிழக்கு கோபுரம் மிகத்துல்லியமான கீழ்த்திசைக்கோட்டில் அமைதல் வேண்டும். இதற்கென திக்நிர்ணய விதிகளை நூல்கள் மிகச்சிறப்பாக கூறுகின்றன.

"சூரியகதியின் அடிப்படையில் கிழக்கு மேற்கு ஆகிய திசைகளைக் குறித்தல் வேண்டும். மூலமூர்த்தியின் பார்வையும் கோபுர வாயில்களும் சரியான திசை நோக்கி அமையத் திசைக்காணும் (திக்பரிச்சேதனம்) எனும் முறையை மயமதமும், காசியபமும் எடுத்துக் கூறுகின்றன".[19]

திருக்கோயில் கட்டுவதற்குரிய இடத்தைத்தேர்ந்தெடுத்து திசைகளை அறிந்தபின் அந்த இடத்தில் வசிக்கும் தேவதைகளை திருப்திப்படுத்தும் வகையில் அடுத்து நிகழ்த்தப்படுவது வாஸ்து பூசையாகும். அந்த இடத்திற்கு காவலனாக இருப்பவன் வாஸ்துப்புருக்ஷன் என்ற காரணத்தினால் அவனுக்கென நிகழ்த்தப்படுகின்ற வழிபாடாக இது அமைகின்றது. வாஸ்து பூசைக்காக அப்புனிதநிலத்தை பாகுபடுத்தல் வேண்டும். அதற்குப் பதவிந்யாசம் என்று காமிகாகமம் கூறுகின்றது.[20] பதங்கள் அடிப்படையில் தான் கோபுரம், விமானம், மண்டபங்கள், பரிவாராலயங்கள் அனைத்தும் வகுக்கப்பெறும். இறுதியாக வாஸ்துசாந்தி செய்யப்படும். மேற்கூறியவற்றை கிரியாபூர்வமாகச் செய்த பின்னரே பதவிந்யாசத்தில் திக்கு அல்லது அதிக்குகளில் உள்ள பதங்களில் மட்டுமே கோபுரங்கள் அமைக்கப்பெறவேண்டும் என சிற்பசாஸ்திரங்கள் இலக்கணம் வகுத்துள்ளன[21].

திருக்கோயில் கட்ட ஆரம்பிக்கும்போது முதல் இடம்பெறும் கிரியை இக்ஷ்டக நியாசம் ஆகும்.[22] கட்டடம் கட்டுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தை அகழ்ந்தபின் அகழ்ந்த இடத்தில் நிகழ்த்தப்படுவது கர்ப்பநியாசம் எனும் கிரியை ஆகும்.

"கர்ப்பநியாசத்தோடு கூடிய இடம் அனைத்து செல்வங்களையும் கொடுப்பதாகும். கர்ப்பநியாசம் இல்லாத இடம் நாசத்தைக் கொடுப்பதாகும். ஆகையால் புத்திமான் அனைத்து முயற்சியுடன் கர்ப்பநியாசத்தை ஸ்தாபிக்க வேண்டும்".[23]

எனக் காமிகாகமம் கூறுகின்றது. பொன், வெள்ளி அல்லது செம்பு ஆகியவற்றில் ஏதாவதொரு உலோகத்தாலோ அல்லது தகுந்த மரத்தாலோ ஒரு பேழை செய்து அதில் வளமுள்ள பொருட்கள் வைத்து பூசித்தபின் நிர்மாணக்கோபுரத்தின் வலதுபுற நிலைக்கால் அமைக்கப்படும் இடத்திற்கு கீழாக கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கும் வண்ணம் வைக்கவேண்டும். அதன்பின்பே கற்களை இணைத்து கட்டுமானம் தொடங்கப்படும். உபபீடம், அதிஷ்டானம், பித்தி போன்ற அங்கங்களுடன் கோபுரக்கட்டுமானம் நிகழும்போது துவாரவாயிலில் ஸதம்பம் என்னும் நிலைக்கால் வைப்பதற்கு முன் கர்ப்பவிநியாசம் செய்ய வேண்டுவது அவசியமெனக் கூறப்படுகின்றது.[24] கர்ப்பநியாசம் நிகழ்ந்தபின் கோபுரத்தை அமைக்கும் காரியம் தொடங்கும். திருக்கோயிற் கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெறும்போது உரிமையாளரான ஆலயப் பணிகளைச் செய்ய விரும்புகின்ற யஜமானன், ஆலய அமைப்பு விதிகளை நன்கு அறிந்த சிற்பி சிவாச்சாரியார் என்பவர்கள் பிரசன்னமாக இருத்தல் வேண்டும் என காமிகாமம் கூறுகின்றது[25]

**கோபுர இலட்சணம்.**

சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் அமைப்பானது பிராசாதம் எனப்படும் கர்ப்பக்கிருகத்தை மையமாகக் கொண்டது. உயிரினங்களின் தோற்றத்திற்கு எப்படி கர்ப்பம் முக்கியமானதோ அதேபோல தெய்விகம் மிளிர்வதற்கு புனிதமான மையப்பகுதியாகக் கர்ப்பக்கிருகம் கொள்ளப்படுகின்றது. இதனை சுப்பிரபேதாகமம்,

"திருக்கோயில் அமைப்புக்கள் பிராசாதத்தை அடிப்படையாகவும், பிராகாரங்களை விரிவாகவும், மண்டபங்களையும், பரிவாரங்களையும் அங்கங்களாகவும், திட்டமிட்ட மக்கள் குடியிருப்பைச் சூழ்ந்ததாகவும், கிராமம் போன்ற திட்டமிடப்பட்டவடிவமாக விளங்கும் அதேவேளை, திருக்கோயிலின் விரிவானது பிராசாதம் முதல் கோபுரம் வரையாக விரிவடைந்து அதனையே ஆலயத்தின் எல்லையாகவும் கொண்டு விளங்குகின்றது." என்கின்றது.[26] திருக்கோயிலுக்குரிய பிரகாரங்கள் எவ்விதம் பிராசாதத்தின் மானத்திலிருந்து அகன்று பரந்து செல்லுகின்றதோ அதேபோன்றே கோபுரங்களும் பரந்து விரிந்து செல்லுகின்றன. பிராகாரம் எவ்வெவ்வாறு தமது நிலைகளுக்கு ஏற்ப பெயர்மாற்றம் பெறுகின்றனவோ அவ்வாறே கோபுரங்களும் வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றன. இவற்றினை சிவாகமங்களும், சிற்பசாஸ்திரங்களும் தமக்கேயுரிய பாணியில் விளக்குவதனைக்காணலாம். துவாரசோபை, துவாரசாலை, துவாரபிராசாதம், துவாரகர்ம்யம், துவாரகோபுரம் (மகாகோபுரம்) என ஐந்து வகையான கோபுர அமைப்புக்களைத் துவரசோபாதி பஞ்சகம் எனக் குறிப்பிடுகின்றன.[27]

"முதற்திருச்சுற்றின் மதிலில் மூன்று தளங்கள் வரை அமைவது துவாரசோபை என்பதாகும். இரண்டாம் திருச்சுற்று மதிலில் இரண்டு முதல் நான்கு தளங்கள் வரை அமையும் கோபுரம் துவாரசாலை என்பதாகும். மூன்றாம் திருச்சுற்று மதிலில் மூன்று முதல் ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்கள் வரை அமையும் கோபுரம் துவார பிராசாதம் என அழைக்கப்பெறும். நான்காம் திருச்சுற்றில் ஐந்து முதல் ஏழு தளங்கள் வரை விளங்குவது துவாரகர்மியம் என்றும் ஐந்தாம் திருச்சுற்றில் ஐந்து முதல் ஏழுநிலைகளுடன் திகழும் கோபுரம் மகாகோபுரம் என்றும் கூறப்பெற்றுள்ளன".[28] தொடக்ககாலத்தில் ஒரே திருச்சுற்றில் மதிலோடு கோபுரம் எடுக்கும் மரபு காலப்போக்கில் இரண்டு முதல் ஐந்து திருச்சுற்றுக்கள் எனக்கூடி இறுதியில் ஏழு. எட்டு திருச்சுற்றுக்களுடன், அவற்றின் நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் கட்டப்பெறுகின்ற ஒரு வளர்ச்சி நிலையை எய்தியது.

**கோபுரத்தின் அங்கங்கள்**

உபானம் முதல் ஸ்தூபி வரையிலான நுழைவாயிற் கட்டடமே கோபுரமாகும். அது உபபீடம், அதிக்ஷ்டானம், வேதிகை, பித்தி அல்லது கால், பிரஸ்தரம், சாலை, கூடு, கிரிவம், சிகரம், ஸ்தூபி (கலசம்) எனப் பல்வேறு அங்கங்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு அங்கமும் பல்வேறு உபாங்கங்களைக் கொண்டதாகத் திகழும். பதினாறு நிலை வரையிலான கோபுரங்கள் பற்றிக் கட்டடக்கலை நூல்கள் கூறுகின்றன.[29] இவற்றின் உச்சியிலே மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது, பதினொன்று ஆக பல எண்ணிக்கை கொண்ட மாடங்கள் காணப்படும். இவற்றின் உச்சியிலே மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது கலசங்கள் காணப்படும். கோயில்களை நிர்மாணிக்கப் பொருள் செலவிடும் கொடை வள்ளல்களின் சக்திக்கேற்பவும், கோயிற் கருவறையின் பிரமாணத்திற்கேற்பவும் கோபுரத்தின் உயரம் வேறுபடும்.

**கோபுர கட்டடப் பொருட்கள்**

"பொன்னாலோ, வெள்ளியாலோ, செப்பாலோ, கல்லாலோ அன்றில் பித்தளையாலோ, கலவையாலோ அல்லது மரத்தாலோ ஆலயத்தை உரிய லணப்படி செய்க" எனக் காரணாகமம் கூறுகின்றது.[30] எனினும் கோயிற் கட்டடங்களுக்கு நான்கு பொருட்கள் முக்கியமாகப் பயன்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை மரம், சுண்ணாம்பு, செங்கல், கல் என்பனவாகும். இவற்றுள் மரத்தால் அமைந்த கோயில்கள் மிகப் புராதனமானவை. கட்டடம் முதலிய ஆக்கவேலைகளை மரத்தைக் கொண்டே அமைத்தனர் என்பது இருக்கு வேதம் தருகின்ற செய்தியாகும்.[31] திருக்கோயிற் கட்டடக் கலைமரபில் சமகாலத்தில் திருக் கோயில்கள் கருங்கற்களினாலோ அல்லது செங்கற்களினாலோ அல்லது சீமெந்தினாலோ கட்டப்படுகின்றன. அந்நிலையில் அதிக்ஷ் டானம் முதல் வியாளவரிவரையாக கருங்கற் களினாலும் ஏனைய பகுதிகள் சீமெந்தினாலும் செங்கற்களைக் கொண்டும் அமைக்கும் மரபு கோபுரக் கலைமரபிற்கும் பின்பற்றுகின்றமை மனம் கொள்ளத்தக்கது. இதேவேளை கருங்கற்களால் அமையும் கட்டடமரபைத் தவிர ஏனைய பொருட்களைக் கொண்டு அமைக்கும் கோபுரம் முதலானவைகளுக்கு அழகியவர்ணம் தீட்டும் மரபும் காணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கருங்கற் கலைமரபில் அமையும் கோயிலை நிகர்த்ததாக மஞ்சம், தேர் என்பன கோபுரத்திற்கும், விமானத்திற்குமான பிரதி நிதித்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**கோபுர தத்துவம்.**

கோபுரம் என்பது ஒரு வேதிகையிலிருந்து எழுகின்ற தீப்பிழம்பின் உருவமாகக் கொள் ளப்பட்டது. உபபீடத்திலிருந்து பிரஸ்தரம் வரை உள்ள அங்கங்கள் அனைத்தும் ஹோமகுண்டத்தின் பகுதிகளாகவே கொள்ள ப்பெறுகின்றன. மேல் நிலைகளும் சிகரங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீச்சுவாலையின் வடிவாக கருதப்பெறுகின்றது. எரிகின்ற ஒரு தீப்பிழம்பு இரண்டாகப்பிளந்து நடுவே ஒரு வழியை ஏற்படுத்தினால் எவ்வாறு திகழுமோ அதுபோலவே அக்கோபுர வாயில்கள் திகழும். ஒருவர் தீப்பிழம்பாக விளங்கும் கோபுரத்தின் உள்ளே புகுந்து கோயிலுக்குள் செல்லும் போது அவர் உடலை பாவனைத் தீ தீண்டுவதால் தூய்மை பெறுகின்றார். அந்த தூயஉடலோடு இறையை நெருங்கும்போது ஆன்மா இறையின்பத்தை நுகர்கின்றது என்ற தத்துவ அடிப்படையில் தான் சுடர்விட்டு ஒளிரும் வேதிகையின் வடிவாக கோபுரங்கள் திகழ்வதாகக் கூறப்படுகின்றது. இதனை,

"கங்கைவார் சடையார் கபாலீச் சரத் தணைந்து
துங்க நீளசுடர்க் கோபுரந் தொழுது புக்கருளி"[32]

எனும் சேக்கிழாரின் பாடல் வழியாக கோபுரம் என்பது ஒளிவிடும் சுடரின் வடிவே என்பதனை அறியலாம்.

இராஜகோபுரத்தின் அமைப்பினை நோக்கும் போது அதில் எத்தனை வகையான சிற்பங்கள் தேவவடிவங்கள், தேவகணங்கள், தெய்வ வடிவங்கள், பட்சிஜாதிகள், மிருக ஜாதிகள், புராண இதிகாச வரலாறு, மானிட வடிவங்கள், மெய்யடியார்கள் மற்றும் ஏனைய வடிவங்கள் என்பன காணப்படுகின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவையாவுக்கும் இடம் உண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், மக்களினம், தேவர்கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் உள்ளார்கள். அண்டத்தில் இன்னது உள்ளது இன்னது இல்லை என்று எவராலும் பாகுபடுத்தமுடியாது எனும் கோட்பாட்டை இவ் இராஜகோபுரம் விளக்குகின்றது.

இராஜகோபுரத்தின்மேல்நிலைபொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இவ்வாறு அதில் அமைந்துள்ள நிலைகள் ஒன்றின் மேல் ஒன்றாக ஒற்றையெண்ணில் பெருகிக்கொண்டே போகும். இதில் மூன்று நிலைகள் ஜாக்கிரத, ஸ்வப்பன, சுழுத்தி என மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்து நிலைகள் ஐம்பொறிகளைக் குறிக்கும். ஏழுநிலைகள் ஐம்பொறிகளோடு மனம் புத்தி என இரண்டும் சேர்ந்து வரும். ஒன்பது நிலைகள் ஏழுநிலைகளுக்குரிய அம்சங்களுடன் சித்தம், அகங்காரம் எனும் இரண்டும் சேர்ந்து ஒன்பதாகின்றது. இவ்வகையில் பஞ்சேந்திரியங்களைக்கொண்டும் மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் அறிகின்றோம். புறஉலகை அறிகின்ற செயலை அப்படியே நிறுத்திவிட்டு மனதைத் துணை யாகக்கொண்டு பரம்பொருளிடத்திற் பயணம் போகவேண்டும் எனும் கோட்பாட்டை இராஜ கோபுர வாயிலினுள் பிரவேசம் செய்தல் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. கோபுரங்கள் நிலைகள் பல பெற்றிருப்பினும் மக்கள் தரையில் அமைக்கப்படும் வாயில் வழியாகத்தான் கோயிலினுள் செல்லமுடியும். இது மனம் ஒன்றே கடவுள் மீது நாட்டம்கொள்ள பயன்படும் என்பதனை விளக்குகின்றது.

ஆகம பிரமாணத்தின்படி அமைக்கப்பட்ட ஆலயமானது இந்துநாகரிகத்தில் அதிஉன்னத இடத்தினைப்பெறுவதற்குக் காரணமாக அமை வது அதனை உயிரோட்டமுள்ள புருக்ஷனாக உவமிக்கப்பட்டுள்ளமையேயாகும். அதா வது ஆலயம் வெறும் கட்டடமாகவன்றி உயிரோட்டமுள்ள புருக்ஷனாகவே கருதப் பட்டது. கர்ப்பக்கிருகத்தில் பிரதிக்ஷ்டை செய்யப்படும் மூலமூர்த்தியுடன் ஆலயம் இணைபிரியாத நெருங்கிய தொடர்புடையதாக உடல் – ஆலயம் என்றும், உயிர் – மூலவர் என்னும் பிரிவற்றதன்மை கூறப்பட்டுள்ளது. இத்தத்துவத்தினை திருமூலர் தமது திருமந்தி ரத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே"[33]

என்பதினால் அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும் புருஷனது கிடந்த கோலத்தில் ஆலயத்தின் அங்கங்களை தொடர்பு படுத்துகின்றபோது, கோபுரம்–பாதமாகவும், கோபுரஸ்தூபி பாதத்தின் விரல்களாகவும் உவமிக்கப்பட்டுள்ள தத்துவம் ஒப்பு நோக்கத் தக்கதாகும். கோபுரம் என்பது பூதாத்மா என்றும் கூறுவர்.

கிழக்கில் உள்ள கோபுரவாசல் மூலாதாரத்தில் உள்ள பிரமதுவாரத்தையும், மேலைக் கோபுரவாசல் ஆஞ்ஞையில் உள்ள பிரமரந்திரத்தையும் குறிக்கும். மேலைக் கோபுரவாசலைச் சொர்க்க வாசல் என்றும் கூறுவர். இதனுடைய தத்துவத்தை திருமூலர்,

"மூலத்துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத்துவாரத்து மேலுற நோக்கி முற்
காலுற்றுக் காலனைக் காயந் தங்கி யோகமாய்
ஞாலக் கடவுர் நலமாய் இருந்ததே"[34]

என்ற பாசுரத்தால் விளக்கியுள்ளார். இவ்வகையில் இந்துசமய தத்துவத்தின் உட்பொருளை கோபுரம் உணர்த்தி நிற்பதனை நோக்க முடிகின்றது.

**நிறைவுரை**

திருக்கோயில் மரபில் உயர்ந்த கலைப் படைப்பே கோபுரம் ஆகும். சிவாகமமரபிலும், சிற்பசாஸ்திர மரபிலும் உயர்ந்த நுட்பங்களுடன் இணைந்த விதிமுறைகள் கோபுரங்களை அமைக்கத்தக்க வரையறைகளாகின்றன. சமுதாய நிலையில் உயர்ந்து நிமிர்ந்த தோற்றமுடைய கலைவடிவமாகவும், சமயத்தின் அடையாளமாகவும், தெய்விக நிலையின் காட்சியாகவும், இறைத்தன்மையினுடையாளமாகவும் விளங்குவ தோடமையாது பாவங்களை நீக்கி புண்ணியங்களை வளர்க்கும் திறனுடைய தன்மையதாகவும் விளங்குகின்றன.

திருக்கோயில் அமைப்பில் நிறைவான தன்மையினையுணர்த்தும் அதேவேளை, பண்பாட்டின் அடையாளமாகவும் தெய்வீக வியாபகத்தின் சின்னமாகவும் விளங்கி கலையழகின் உயர் பரிணாமமாகக் காட்சிதருகின்றது.

படிநிலை வளர்ச்சி கொண்டு வளரும் ஆலய வளர்ச்சிப்பாதையில் காலத்தின் தேவை கருதியதும், சவால்கள் நிறைந்த சமுதாய மரபிற்குரிய உரைக்கல்லாக சமயத்தின் ஓங்கி உயர்ந்த கலங்கரை விளக்கமாக கோபுரங்கள் விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

**"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"**

**அடிக்குறிப்புகள்.**


1. காமிகாகமம் (பூர்வபாகம்) (தேவநாகரலிபி), 1975, பதி.செ.சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை. 1.75.
2. பூர்வகாரணாகமம் (கிரந்தலிபி) 1922, மயிலை அழகப்பமுதலியார் (பதி.) இரண்டாம் பதிப்பு, சிவஞானபோத யந்திரசாலை, சென்னை. 1.8 (பிராசாத லக்சணவிதி).
3. உத்தரகாரணாகமம் (கிரந்தலிபி) 1927, மயிலை அழகப்பமுதலியார் (பதி.) இரண்டாம் பதிப்பு, சிவஞானபோத யந்திரசாலை, சென்னை 11.5.94 (கோபுர பிரதிக்ஷ்டாவிதி)
4. ஸ/ப்ரபேதம் (ஆகமம்) (கிரந்தலிபி), 1907, பதி.செ.சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.31.

5. Rauravagama, VolI,II,III, 1961, 1972, 1988, N.R.Bhatt(Ed.), Institute Francars, Dindologic, Pondichery. Vol II.42

6. ஸ்ரீ காசியப்பசாஸ்திரம் (மதல்பாகம்), 1968, கே.எஸ்.ஸ/ப்ரமண்ய சாஸ்திரிகள், ஸரஸ்வதி மஹால், தஞ்சை. I-45.

7. மயமுனிவரின் மயமதம் (முதலாம் பாகம்) 1966, கே.எஸ்.ஸ/ப்ரமண்ய சாஸ்திரிகள், தமிழ்மொழிபெயர்ப்புடன், பதி.B.A.நாராயணஸ்வாமி அய்யர் (பதி.), ஸரஸ்வதி மஹால், தஞ்சை. 1 அத்.24.

8. பாலசுப்ரமணியன், குடவாயில்., 2004, கோபுரக்கலை, கோயிற்களஞ்சியம், தஞ்சாவூர், ப.62.)

9. (மயமதம், மானோபகரணம் பக்.20-26.

10. காமிகாகமம், 01, 01-11

11. காமிகாகமம், 1-10

12. காமிகாகமம், 1, 11, 1-11

13. காமிகாகமம், 1-11, 22, 23

14. காமிகாகமம் 01-12

15. காமிகாகமம், 1-13

16. காமிகாகமம், 1-14

17. மயபதம், 4 அத். பூபரிகிரஹம், பக்.14-19

18. காரணாகமம் 1, 03, காமிகாகமம், 1-15

19. காசியப்ப சில்பசாஸ்திரம், 1ஆவது படலம், திக்பரிச்சேதனம், ப.19, மயமதம், 6வது அத்தியாயம், திக்நிர்ணயவிதி, ப.29

20. காமிகாகமம், 1-17

21. மயமதம், 2ஆவது அத்தியாயம் பூபரிட்சை பக்.4-13 காசியப்பசில்ப சாஸ்திரம், முதல்பாகம், பக்.11-19

22. காரணாகமம், 1.04

23. காமிகாகமம், 1-31.02

24. மயமதம், அத்.9, கர்ப்பவிந்யாசம் ப.92

25. காமிகாகமம், 1-10.2

26. சுப்பிரபேதாகமம், கிரியாபாதம், 31.99

27. காசியபசில்பசாஸ்திரம் 45ஆவது படலம் 1-2

28. காசியபசில்பசாஸ்திரம் 45ஆவது படலம் 1-5

29. மானசாரம், 33ஆவது அத்தியாயம், சுலோகம் 93, 103

30. காரணாகமம் 1.70.2

31. இருக்குவேதம் ஓ 81.4.

32. பெ.பு., திருஞானசம்பந்தர் புராணம், 1077

33. தமிழ் மூவாயிரம் காலோத்தரம் 1823.

34. தமிழ் மூவாயிரம், காமிகம் 345.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி

**திருமுறை நெறிச்செல்வர், சித்தாந்த ரத்தினம்,**

**சிவஞானச்சுடர் கேசி கோணேஸ்வரன்**

"**ந**மக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது ஆறுமுகநாவலர் வாக்கு. முத்தி என்பது இறைவனின் திருவடிகளில் என்றும் பேரின்பத்தில் திளைத்து இருத்தல் என சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. முத்திபெற எமக்கு யார் துணைபுரிவர் என்று ஆராய்ந்து பார்த்தால், சிவனுடைய சக்தியே எனத் தெளிவாகின்றது. சுக்தி இல்லையேல் ஆன்மாக்களுக்கு முத்தி இல்லை.

உலக இயக்கத்திற்கு சக்தியே காரணம் என்பதை விளக்கும் வகையில் 'சக்தி இருந்தால் செய். இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்று சொல்லும் பழமொழி வழக்கத்தில் உண்டு. சாதாரண உலகியல் வாழ்க்கையிலே தாய் தான் குழந்தைக்கு தந்தையைக் காட்டுகின்றாள். இது ஆன்மீகத்திற்கும் கனகச்சிதமாகப் பொருந்து கின்றது. குழந்தைகள் செய்கின்ற குற்றங் களை மன்னித்து, வழிகாட்டி அன்புகாட்டி அர வணைப்பவள் தாய். ஆன்மாக்கள் செய்யும் பாவங்களை மன்னித்து, இறைவனை சேரத் துணைபுரிபவள் சக்தியே.

உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த திருவருட்பயன் என்ற நூலில் முதலாம் அதிகாரத் தில் 2ஆம் பாடல்

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் **சக்தி**
பின்னமிலான் எங்கள் பிரான்"

எமது தலைவனாகிய சிவபெருமான் தனது பிறப்பற்ற ஒப்பற்ற பெருநிலையை, எல்லா உயிர்களும் பெறவேண்டும் என்ற அளவிறந்த கருணையின் காரணமாக, தமது அருளாகிய பராசக்தியுடன், பேதமின்றி ஒன்றி நிற்கின்றான் என்பது இப்பாடலின் பொருள். அதாவது, அருவமும், உருவமும் இல்லாத இறைவன் தன்னில் பிரிவு இல்லாத அருளாகிய சக்தியால் ஐந்தொழில் நிகழ்த்தி, மன்னுயிர்கட்கு அருள்புரிதலை விளக்குகின்றது.

மெய்கண்டார் அருளிச்செய்த சிவஞான போதம் என்ற நூலின் 2ஆம் சூத்திரம்

அவையே தானே ஆய், இரு வினையிற்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

இங்கு ஆணை என்பது சக்தியைக் குறிக்கும். ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் என்பதற்குப் பொருள் இறைவன் தனது சக்தியினின்றும் பிரிப்பின்றி நிற்பான். இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் இயைந்து நிற்றலும், இயைந்து நின்று உயிர்களுக்கு இருவினைகளைக் கூட்டுவித்தலும், அவ்வினைகளுக்கு ஏற்ப ஆன்மாக்களை போக்குவரவு புரிவித்தலும் ஆகிய எல்லாச் செயல்களும் நடைபெறுவது அவனது சக்தியால் என்பதை இச் சூத்திரம் விளக்குகின்றது.

சக்தி என்பது குணமும், இறைவன் என்பது குணியும் ஆதலால் இறைவனுக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மிய சம்பந்தம் எனப்படுகின்றது. பொருள் ஒன்றாயும், செயற்பாட்டில் இரண்டாயும் இருத்தலே தாதான்மியம் எனப்படுகின்றது. இதனை ஒரு எடுத்துக்காட்டு மூலமாக விளக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனுக்கு இருநிலைகள் உண்டு. ஒன்று தானேயாய் நிற்கும் நிலை. அந்நிலையில் தன்னைத்தானே விளக்கிக் காட்டி கதிரவன், சூரியன், ஞாயிறு என்று பல பெயர்களை பெறுகின்றது. இரண்டாவது நிலை உலகத்தோடு இயைந்து, உலகப் பொருள்களை விளக்கி நிற்பது. அந்நிலையில் ஒளி, கதிர், வெயில் எனப் பெயர் பெறுகின்றது. இவ்வாறு தன்னிலையில் நிற்கும்போது, சூரியன் என்றும், உலகத்தோடு இயைந்து, உலகப் பொருள்களை விளக்கிக்காட்டும் போது ஒளி என்றும் இரு திறப்பட்டு நிற்றலைக் காணலாம்.

இறைவனும் சக்தியும் பொருளால் ஒன்றாயும், செயற்பாட்டால் இருதிறப்பட்டும் நிற்பர். இறைவன் தானேயாய் தன்னையே தான் விளக்கி நிற்கும் நிலை சிவம் எனப்படுகின்றது. ஆன்மாக்களோடும் பாசப் பொருட்களோடும் இயைந்து அவற்றைச் செயற்படுத்துகின்ற நிலை சக்தி எனப்படுகின்றது. சிவமும் சக்தியும் பொருளால் ஒன்றாய், தன்மையால் / செயற்பாட்டால் இரண்டாய் ஒன்றையின்றி மற்றொன்று இல்லாத நிலையினை மேற்படி சூத்திரம் விளக்குகின்றது.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரால் எழுதப்பட்ட திருக்களிற்றுப்படியார் என்ற நூலில் உள்ள 43ஆம் பாடல்

"அநாதி சிவனுடைமையால் எவையும் ஆங்கே

அநாதி எனப்பெற்ற அணுவை ஸ்ரீ அநாதியே

ஆர்த்த துயரகல அம்பிகையோடு எவ்விடத்தும்

காத்தல் அவன் கடனே காண்"

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் என்றும் உள்ளவை. அநாதி காலம் தொட்டே உலகம் சிவனுக்கு உடைமையாயும், உயிர்கள் சிவனுக்கு அடிமையாகவும் உள்ளன. அநாதி காலம் தொட்டே உயிர்களைப் பிணித்து நிற்கும் பாசங்களை, கேவலம், சகலம், சுத்தம் ஆகிய 3 நிலைகளிலும், திருவருட்சக்தியோடு கூடிநின்று, அகற்றுதல் சிவனின் கடமையாகும் என்பது இப்பாடலின் பொருள்.

உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவப்பிரகாசம் என்ற நூலில் 14ஆவது பாடல், பதியின் தடத்த லக்கணம் பற்றிக்கூறுகிறது.

"நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்

நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி

நாடரிய கருணைதிரு உருவ மாகி

நவின்றுபல கலைநாத விந்து வாதி

கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்

கொடுவினைகொள் தனுகரண புவன போகம்

பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கு மேனி

பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே."

நிலைபெற்ற மேலான பராசக்தி தனது வியாபகத்தால், இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் சக்திகளைத் தர, அந்தச் சக்திகளை நின்மலனாகிய சிவன் பொருந்தி, நாதம், விந்து முதலிய தத்துவங்கள் தோற்றுகின்ற சுத்த மாயையைப் பொருந்தி, வேதம், ஆகமம் முதலிய பல கலைகளை அருளிச்செய்து, அனந்ததேவரை அனுட்டித்து, பிரகிருதி மாயையிற் தனு, கரண, புவன, போகங்களையும், சீகண்டரை அனுட்டித்து, பிரகிருதி மாயையிற் தனு, கரண, புவன போகங்களையும் படைத்து நிறுத்தி ஒடுக்குவான் என்பதே இப்பாடலின் பொருள். இவ்வாறு ஆன்மாக்களின் பாசங்களை அகற்றி பிறவித் துன்பத்தை ஒழித்து, சிவனை அடைய உறுதுணையாய் நிற்பவள் சக்தியே.

திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியார் என்ற நூலில் 21ஆவது பாடல்

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா

–தனவுமங்(கு)

அல்லனாய் ஆனானென் றுந்தீபற

அம்பிகை பாகனென் றுந்தீபற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லினால் அளவுபடுத்திச் சொல்லத் தக்க வடிவம் முதலியனவாய் உள்ள பொருள் களும், சொல்லால் உரைக்கப்படாத, இல்லாத பொருள்களும், ஆகிய இவ்விருவகை பொருள் களும் அல்லாதவனுமாய், மனம், வாக்கைக் கடந்து நின்ற பதி ஞானத்தால் உணரத்தக்க, அருட்சக்தியான அம்பிகைக்கு நாயகனாகிய தலைவன் என்பது பொருள்.

அருணந்தி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியாரில் பல பாடல்கள் சக்தியின் தன்மை பற்றி விளக்குகின்றன. அவற்றுள் சில

"சக்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்." 1-69

இறைவன் இவ்வாறு சக்தியுஞ்சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே, பல்வேறு வகைப்பட்ட உயிர் வடிவங்களனைத்துங் குறியானுங் குணத்தாலும் ஆண் பெண்ணென அவ்வவியோனிக்குள் இருவேறு வகையாயடங்கித் தம் முட் கூடிக்களித்து வாழமுடிகின்றது.

"சக்தியாய் விந்து சக்தி யாய்மனோன் மனிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சக்தி யொருத்தி யாகும்
எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்." 2-75

சத்திபேதம், முறையே சக்திமுதல் வாணியீறாக ஏழு வகைப்படும். எம்மிறை வனாகிய பரமசிவன் சிவபேதம் ஏழினும் நின்று நடாத்துமாறெல்லாம் அவனோடு தாதான்மியமாய் நிற்கும் பராசக்தியும் இச் சத்திபேதம் ஏழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும்.

"சக்திதான் நாத மாதி தானாகுங் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகும் தரும்வடி வானவெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாங் சத்திதானே." 2-76

இறைவனும் சக்தியும் தாதான்மியமாய் நிற்றலை விளக்கிக் கூறுகின்றது இப்பாடல்

சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றிய உண்மைநெறி விளக்கம் என்ற நூலின் 3ஆம் பாடல் சக்தியின் தன்மை பற்றி விபரிக்கின்றது.

"எவ்வடி வுகளும் தானாம் எழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வமீண் டலகப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூப மாகு மன்றே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து உயிர்களிடத்தும் இறைவன் உயிர்க்கு உயிராய் விளங்கி நின்று, அவ் வுயிர்களை உய்விப்பதற்காக, தன்னுடைய திருவருளையேஎழிற்பரைவடிவமாக்குகின்றான். இறைவனது அருளே சக்தியாகும். இச்சக்தியே பாசங்களால் பீடிக்கப்பட்ட உயிர்களுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து, அவற்றால் பிறப்பு, இறப்பு முதலியவற்றுக்கு ஆளாக்கி, அச்செயல்களின் வழி பக்குவப்பட, உயிர்களுக்கு பிறவா நிலையை அளித்து, இறைவனிடம் சேர்க்கின்றது.

மனவாசகங்கடந்தார் அருளிச்செய்த உண்மை விளக்கம் என்ற நூலின் 38ஆவது பாடல்

"பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரைஉணர்வுக் கெட்டா ஒருவன் – வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு."

பராசக்தியாகிய திருவம்பலமிடமாக நின்று, வரைமகள்தான் காணும்படியே பாதியாகிய மலையரையன் மகள் காணும் படிக்கு, ஆடல்பேணுமவர்க்குப்பிறப்பு உண்டோ? திருக்கூத்தை விரும்பினவர்களுக்குப் பின்பு பிறவியில்லையாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகத்தில் பல இடங்களில் சக்தியின் தன்மை பற்றிக் கூறப்பட்டுள்ளது. மார்கழி மாதத்தில் அதிகாலையில் பாடப்படும் திருவெம்பாவையே சக்தியை வியந்து பாடியது.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"
"நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்"
"உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்"

என்ற திருவெம்பாவை வரிகள் சக்தியின் தன்மையை விளக்கி நிற்கின்றன.

மேலும் அச்சோ பதிகத்தில் இறுதிப்பாடல்

"செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே."

செம்மையான நல்வழி அறியாத, அறிவிலிகளோடு கூடித்திரிந்த என்னை, மும்மலங்களும் நீங்கும்படி செய்து, நாயேனைசிவிகையில் ஏற்றி, முதல்வனான சிவபெருமானை அறியும்படி, அம்மை எனக்கு அருளிய பேற்றை பெற வல்லவர் யார் என்கிறார் மணிவாசகர். சக்தியின் திருவருளை வியந்து போற்றிய பாடல் இது.

நல்வினை தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் பற்றற்ற வினையில் அனுபவித்து நான், எனது என்ற நிலைகளைக் கடந்து, எல்லாம் அவன் செயல் என்ற உணர்வோடு காரியங்களைச் செய்ய, இருவினை ஒப்பு ஏற்பட்டு, மலபரிபாகம் நிகழ்ந்து, திருவருட்சக்தி ஆன்மாவில் பதிய சக்திநிபாதம் நிகழும். இதுவே இறைவனின் திருவடியில் ஆன்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பேரின்பம் அனுபவிக்கும் நிலை. இவ்வண்ணமாகத்தான் சக்தி உயிர்களை சிவத்தோடு சேரச் செய்கின்றது என்கின்றது சைவசித்தாந்தம்.

**உசாத்துணை நூல்கள் :**

» சிவஞானபோதம் வழித்துணை விளக்கம்

» சிவப்பிரகாசம் திருவிளக்கம் உரை

» உண்மை விளக்கம் சுந்தரமூர்த்தி உரை

» திருவுந்தியார் சிவப்பிரகாசர் உரை

» திருக்களிற்றுப்படியார் வெள்ளை வாரணம் உரை

» திருவருட்பயன் சுந்தரமூர்த்தி உரை

» உண்மைநெறி விளக்கம் தெளிவுரை

» http://www.thevaaram.org

**கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன**
**மெய்க்கே அணிவது வெண் முத்துமாலை, விட அரவின்**
**பைக்கே அணிவது பண்மணிக் கோவையும், பட்டும், எட்டுத்**
**திக்கே அணியும் திரு உடையானிடம் சேர்பவளே.**

பொருள் : என் அபிராமி அன்னையே! நின் அருட் கரங்களில் அணிவது இனிய கரும்பும், மலர்க் கொத்துமாகும். தாமரை மலரைப் போன்ற மேனியில் அணிந்து கொள்வது, வெண்மையான நன்முத்து மாலையாகும். கொடிய பாம்பின் படம் போல் உள்ள அல்குலைக் கொண்ட இடையில் அணிவது பலவித நவமணிகளால் செய்யப்பட்ட மேகலையும் பட்டுமேயாகும். அனைத்துச் செல்வங்களுக்கும் தலைவனாகிய எம்பெருமான் எட்டுத் திசைகளையுமே ஆடையாகக் கொண்டுள்ளான். அப்படிப்பட்ட எம்பிரானின் இடப்பாகத்தில் பொலிந்து தோன்றுகின்றாய் நீ!

-அபிராமி அந்தாதி (37)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்



துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகமங்கள் கூறும் கிராம நகரத் திட்டமிடல் சிவாலயங்களை மையப்படுத்திய ஓர் நோக்கு

**திரு. ச. பத்மநாபன், B.A. (Hons.), PGD. Edu., M.Phil**

விரிவுரையாளர்,

சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் என இருவகைப்படும். மூலசிவாகமங்கள் இருபத்தெட்டும் உபாகமங்கள் இருநூற்றேழும் ஆகும். சிவாகமங்களும் சிற்ப சாஸ்திர நூல்களும், வாஸ்து சாஸ்திர நூல்களும்,கிராமநகரத் திட்டமிடலை நன்கு வலியுறுத்துகின்றன. சிவாகமங்களின் கர்க்ஷணம், விதிபடலங்கள் திருக்கோவிலை மையப்படுத்தி ஓர் நகரம், கிராமம் எவ்வாறு அமையவேண்டும் எனும் விதிமுறைகளையும் 'கோயில் நகரம்'' எனப் பெருமை பெறும் அளவிற்கு கூறி நிற்கின்றன. சிறப்பாக காமிகாகமம், காரணாகமம், அஜிதாகமம், சுப்ரபேதாகமம், அம்சுமத்பேதாகமம், அம்சுமத்காசியபம், கிரணாகமம் என்பன கர்க்ஷண விதி பற்றிக் கூறி சிவாலயம் அமையத்தக்க சமூக முக்கியத்துவத்தின் அமைவிடங்களை அளவுப் பிரமாணப்படி திட்டமிட்டுக் கூறி நிற்கின்றன. அதன் வகையில் சிவாகமங்கள் எவ்வாறு திருக்கோவிலை மையப்படுத்திய கிராம நகரத் திட்டமிடலை முன்வைக்கின்றன என நோக்குவதே இவ்வாய்வின் சாரமாகும்.

**திறவுச்சொல்:** சிவாகமம், வாஸ்துசாஸ்திரம், ஆயாதி, ஆயாமம், கர்க்ஷணம்.

சிவாகமங்கள் மூலசிவாகமங்கள், உபாகமங்கள் என இருவகைப்படும். மூலசிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரையாக இருபத்தெட்டாகும். உபாகமங்கள் இருநூற்றேழு ஆகும். சிவாகமங்கள் 'சிவனிடமிருந்து வந்தது'' எனப் பொருள்படுகின்றது. இச் சிவாகமங்கள் கர்க்ஷணம், பிரதிக்ஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு விடயங்களை மையப்படுத்தி சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களூடாக விளக்கி நிற்கின்றன. இவற்றுள் சிவாகமங்கள் திருக்கோவில் அமைப்பு முறைகளை மிக விரிவாகத் திட்டமிடுவது வியக்கத்தக்க விடயமாகும்.

திருக்கோவிலும் சமூகமும் இணை பிரியாத தொடர்பு உடையன. சமூக மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் வளமான பௌதிகச்சூழல் அவசியமாகின்றது. எத்தகைய பௌதிகச்சூழல் ஆலயம் அமைவதற்கும் சமூகம் வளமுடன்வாழ்வதற்கும்நிலைபெறுவதற்குமாக பல்வேறு படிமுறைகளைக் கூறி நிற்கின்றன. இவ் வகையில் திருக்கோவிலினை மையப்படுத்தியதும் வாஸ்து சாஸ்திர விதிப்படி அமைந்த சமூக வாழ்வியற் கட்டமைப்பும் மிக விரிவான முறையில் பேசப்படுகின்றன.

காமிகம் இது பற்றிய விளக்கங்களைக் கூறுமிடத்து கால நிர்ணயம் பற்றி காலவிதி படலமும் (I.6), சகுனம் பற்றிய நிகழ்வு பற்றி நிமித்தபரிணாவிதியும் (I.7) கூறி விளக்குவது மனங்கொள்ளத்தக்கது.

**கிராம நகர பேதங்கள்**

சிவாலயங்கள் அமைக்கத்தக்க இடங்களை திட்டமிட முற்படும் சிவாகமங்கள் கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களின் அடைவிடத்தில் திருக்கோயில்கள் பற்றியே வர்ணிக்கின்றன. அத்தகைய அமைவிடத்தைக் காரணாகமம் தருகையில் (I.3),

'அக்ரஹாரம், கிராமம், நகரம், ராஜதானி, பட்டணம், குட்டிமம், ஆவிகம், சேனாமுகம், எனக்கூறி அவை பற்றிய விளக்கங்களை தெளிவுபடுத்துகின்றது. சுப்ரபேதாகமம் (I.23), கிராமம், நகரம், பட்டணம், கர்வடம், புரம், கேடகம், குடிகம், சிபிரம், ராஜதானி, சேனாமுகம் எனக் கிரமமாகக் கூறப்படுகின்றது. இத்தகைய பற்றியதுமான கிராமங்களின் பகுப்பாய்வுகளைக் கூறி விளக்கமளிக்கையில்,

» கிராமம் : இவை சுமார் 15 பகுப்புக்காக மண்டன கிராமம், சதுர்முககிராமம், மங்கள கிராமம், விஸ்வேச கிராமம், நித்திய மங்களகிராமம், கர்வடகிராமம், வளிந்த கிராமம் என்பன முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

» நகரம் : பல்வேறு தொழிற்சாலைகளும், அரசாங்க நிர்வாக மாவட்டத் தலைமை அலுவலகங்களும், கலைச் செல்வங்களும், காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத் தலைநகரமாகும்.

» பட்டணம் :நதிகள், கடற்துறைமுகங்கள், வியாபார தலைமை நிலையங்கள், கருவூலங்கள், ஆபரணத் தொழிற்கூடங்கள், நெசவு சாலைகள், அயல்நாட்டு வர்த்தகர் தங்குமிடங்கள், மாவட்டத்தலைமை அதிகாரிகள், சுங்க அதிகாரிகள், தங்குமிடங்களுடன் கூடிய நகரைக் குறிக்கும்.

» கர்வடம்:சுமார்500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்களும் ஆறு, காடு, மலை, இவைகளின் சமீபத்தில் உள்ளதுமான இடமாகும்.

» புரம் :இது சாமான்யமாகவுள்ள சுமார் 200இற்கு மேற்படாத கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் வசிக்கும் இடம்.

» கடம் : ஆற்றங்கரை, மலையுச்சி இவைகளில் பிரிந்து பிரிந்து குடிசை கட்டி வாழும் மக்களின் இருப்பிடம்.

» குடிகம் : இது தாழ்ந்த குடிமக்கள் என்று முன்னாளில் கருதப்பட்டு வந்த ஹரி-ஜனங்கள் வசிக்கும் சேரிகளமைந்த இடம்.

» சிபிரம் :எப்பொழுதும்நாட்டுப் பாது காப்பிற்காக யுத்த வீரர்களை சேர்த்தும் தயார் செய்வித்தும் சேனாமுகத்தின் சுற்றுப்புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.

» ராஜதானி : அரசருடைய மாளிகையும் மற்றும் மந்திரிகள், பிரதானிகள், சேனாவீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களுடன் சுமார் இரண்டு லட்சம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட நால்வகை ஜாதியினரும் வாழுமிடம்.

» சேனாமுகம்: துர்க்கம், நாட்டின் பாது காப்பிற்காக உள்ள நான்கு பக்கங்களிலும் கோட்டைகள், பொறியியல் பத்திரங்கள், யுத்த தளபாட உற்பத்திசாலைகள், யுத்த வீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலியவற்றையுடைய ராஜதானியை அடுத்துள்ள இடமாகும். எனத் தெளிவுபடுத்துகின்றது. காரணாகமம், அக்ரஹாரம், குட்டிமம், ஆவிகம் என்பவற்றினைக் கூறுகையில்:

» அக்ரஹாரம்: அரசனுடையதும், மக்களுடையதுமான முக்கிய இருப்பிடத் தொடர் அக்ரஹாரம் எனப்படும்.

» குட்டிமம் : அரசனின் மாளிகையோடு கூடியதும் தனியாக நன்மக்களுடையதும் அவர்களுடையசெய்யத்தக்க செயல்களுக்குரிய அதிகாரிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடையதுமான வதிவிடம் குட்டிமம் எனப்படும்.

» ஆவிகம்:யானைகள்,பலரதங்கள் என்பன இருக்கும் சேனா முகத்திற்கு அமைந்த இடமாகும் எனக் கூறுகின்றது.

இத்தகைய அமைவிடங்கள் அமையத்தக்க பூமியை கர்ஷணம் செய்து வாஸ்து விந்யாஸம் செய்தபின் ஆலயம் அமையத்தக்கதாக மண்ணைப் பரிசோதித்து பூமியின் மண் தொடர்பான பரீட்சையினை நிறம், மணம், ருசி என்பவற்றினால் சோதித்து வகைப்படுத்தப்படுகின்றது.

"பூமியானது அதன் கண்ணுள்ள மரங்களாலும், செடி கொடிகளாலும் அதில் வாசம் செய்யும் மிருகங்கள், பரிகளாலும் மண்ணின் நிறத்தாலும், வாசனையாலும், ருசிகளாலும் சோதிக்கத்தக்கது".

எனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது. பூமியை நிமித்த பரியை மூலமாக சகுனங்கள் அபசகுனங்கள், சோகத்தைக் காட்டும் சகுனம், சகுனத்தையிட்டு செய்யத்தக்கன எவை எனும் விபரங்களை காமிகாமம் (I.10) தெளிவுபடுத்துகின்றது. தொடர்ந்து சுபசகுனம் பெறப்பட்டதாயின் பூமியின் பரியை செய்ய வேண்டும் என விபரித்துப் பன்னிரெண்டுவித பூமிகளாக பூமி லயணங்களைக் காமிகாகமம் (I.11) தெளிவுபடுத்துகின்றது. அந்நிலையில் பூமியின் குணமானது சைவம், பிரம்மம், வைஷணம், ஐந்திரம், ஒளிம், பௌதிகம், ஆசுரம், பைசாகம், ராசம், வாயவ்யம், வாருணம், ஆக்னேயம் என பன்னிரெண்டாகப் பகுக்கப்படுகின்றது. அவையாவன.

» சைவபூமி:கோங்குமரம், மருது, அரசு, விளா, அசோகமரம், ஆச்சாமரம், நிலத்தாமரை, துளசி, அறுகு, விஸ்ணு, கிராத்தி, எலிக்காத்துக்கீரை, இலவு, மலைதன்னாரி, புறா, கிளி, அன்னம் இவைகளால் வியாபிக்கப்பட்டது அவற்றைத்தரும் சைவ பூமியாகும்.

» பிரம்மபூமி:வில்வபத்திரம், முருக்கு, விஸ்வாமித்திரம், நாணல், மான் நல்ல வாசனையுள்ள ஹோமத்திரவியங்கள், அடைத்திருப்பதும்,சுபத்தைத்தருவதுமான பிரம்மபூமியாகும்.

» வைஷ்ணவீபூமி:தும்பைச்செடி, புளிய மரம், மூங்கில், பருத்தி, எருக்கு, செம் பருத்தி, அன்னபக்ஷி, சாமான்யபக்ஷி, மிருகங்கள் முள்ளில்லாத மரங்களோடு கூடியதும், மனிதருக்கு சூரத்துவ பராக்கிரமங்களைக் கொடுப்பதுமான பூமி விஷ்ணு பூமியாகும்.

» ஐந்திரபூமி:வாழை, பலா, மா, சுரப் புன்னை, மகிழமரம், பாதிரிமரம், நொச்சி, நெல்லி,கருநெய்தல் இவை களாலும் வைசியர், சூத்திர்களாலும் பரத்திருப்பது ஐந்திர (இந்திரன்) பூமியாகும்.

» ஔஷதபூமி :பாதிரி, அகில் இவைகளின் வாசங்கள் நிறைந்ததும், தன தான்யங்களின் சம்பத்தைத் தருவதும், அழிஞ்சல் விருக்ஷங்களாம் புன்னை, கீரிப்பிள்ளை, முயல், உடும்பு, சகோதரபக்ஷி, செந்நாய் இவைகளில் பரந்திருப்பதும், ஜனங்களுக்கு சம்பத்தைப் பூர்த்தியாகத் தருவதாகவும், சுகத்தையும், வீரத்தையும் தருவதுமாக உள்ளது ஔஷ (பசு) பூமியாகும்.

» பூதபூமி : பெருநொச்சி, குருக்கத்தி, அறுகு, அழிஞ்சில், முருக்கு, மல்லிகை, அலரி, இலுப்பைகளாலும் அவ்வாறே வீபூதி மணங்களோடு கூடிப் பரந்திருப்பதும், மனிதர்களுக்கு உணவையும், புஷ்டியையும் தருவதாக உள்ளது பூதபூமியாகும்.

» ஆசுரபூமி : செராமரம், பெரிய மரம்,துக்ஷ்டஜந்துக்கள், வெங்காயம், வேடர், மருதைமரம், பருத்து முதலிய துஷ்ட ஜந்துக்களோடும், கெட்ட மணங்களோடும் கூடியது. யுத்தத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதானது அசுரபூமியாகும்.

» பைசாசபூமி : இலவமரம், மகிழமரம், தான்றிமரம், நறுவிலி மரங்களாலும், கழுதை, ஒட்டகம், பன்றி, நரிகளாலும், சண்டாளர், வேடர்களாலும் பரந்திருப்பதும், துர்கந்தமுள்ளதாகவும், சவிட்டு நிலமாகவும் இருப்பது எல்லா சாஸ்திரங்களாலும் எல்லா நாசத்தோடும் கூடியது பைசாசபூமியாகும்.

» ராக்ஷதபூமி : சண்டாளம், விக்ஷம், திருடர், தலைநோய் முதலானவைகளாலும் மிளகு, கூழாங்கல், பரிமள வஸ்துக்களாலும் நிறைந்து குறைவை தருவது ராக்ஷத பூமியாகும்.

» வாயுபூமி : குள்ளநரிக் கூட்டங்களால் நிறைந்து சுவர்க்கோழி, பருக்காங்கற்களோடு கூடியதும், துக்க நிர்ப்பாக்கியத்தைத் தருவது வாயு பூமியாகும்.

» வருணபூமி : பாக்கு மரங்களால் சூழப்பட்டு ஸமஸ்த சித்தியைத் தருவது வருணபூமியாகும்.

» ஆக்னேயபூமி : சதுரக்கள்ளி, நறுவிலி முதலானவற்றோடும், முறட்டு பருக்காங்கற்களோடு கூடியதும், சவட்டு நிலமாயும் தண்ணீரில்லாததாயும் இருந்து எல்லாவவற்றையும் கெடுப்பது ஆக்னேய பூமியாகும்.

எனத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய பூமிகளில் சிவத்தின் பிரதேசத்தில் சிவபூமியும், விஸ்ணுவின் பிரதேசத்தில் விஸ்ணுபூமியும், பிரம்மன்ய பிரதேசத்தில் பிரம்ம பூமியுமாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பாகுபாடு செய்யப்படும் குணங்களால் உணரப்பட்ட வாழ்விடங்களுக்குரிய பூமியானது அநூபம், ஜாலங்கம் என இரு வகைப்படும் என காமிகாமகம் (I.11) வகுத்துக் கூறுகின்றது. மேலும் வாழ்வதற்கு இயைபான பூமியானது வெண்மை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு என நான்கு வகைப்படும் எனவும், இம்மண் ருசி, மணம் இவைகளால் சோதிக்கப்பட்டு நல்ல மல்லிகை, புன்னை, தாமரை, நெல், பாதிரி முதலிய வாசனையுள்ளதும், உயர்ந்ததும், எல்லாத் தானியங்களும் விளையக்கூடியதும் தேன், வெல்லம், எண்ணைச்சிக்கு, பிணம் முதலிய மணமுள்ளதுமானவை நீக்கத் தக்கதெனச் சுப்ரபேதாகமம் கூறுகின்றது.

**பூமி சருணபரிகைஷ**

பூமியைப் பள்ளம் செய்து அதே மண்ணைக் கொண்டு அந்தப் பள்ளத்தை நிரப்ப மண் மிகுதியானால் உத்தமம், சரியாக இருந்தால் மத்திமம், குறைந்தால் அதமம் என்றும், அதமம் பூமியை எடுக்கக்கூடாது.

**ஜலபுக்ஷ்பபரிகைஷ**

இத்தகைய பூ சருணம் பெறப்பட்ட பூமியில் ஓர் பள்ளம் செய்து குடங்களில் புக்களிட்ட ஜலங்கொண்டு அந்த புஸ்பஜலத்தை அப்பள்ளத்தில் விட்டால் அந்த ஜலம் அடங்கிய குமிழியுடன் வலமாகச் சுழன்றால் சிறப்பாகும். புக்ஷ்பம் நிமிர்ந்திருக்குமாயின் மிகச் சிறப்பாகும்.

**அக்குரபரிகைஷ**

ஜலபுக்ஷ்ப பரீகைஷயில் மிகச்சிறப்பான பூமியில் கடுகு அல்லது எள் விதைக்கப்பட்டு முளையானது முன்னிரவிற் சிறிதாக முளைக்குமாயின் அது மங்களகரமான பூமியாகும். என காமிகாமகம் (I.11) தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறான பரிகைஷகளுக்குட்படுத்தப்பட்ட பூமியில் எடுத்த பூமியில் அடுத்ததாகச் செய்ய வேண்டியது வாஸ்து விந்யாஸமாகும். அதற்கு முன்னதாகச் செய்ய வேண்டிய கிரியை பிரவேச பலியாகும்.

**பிரவேசபலி**

பரிசோதித்துப் பெறப்பட்ட பூமியினை ஒன்பது பாகமாக்கி பிரம்மஸ்தானம் முதல் ஒன்பது சந்திகளிலும் 'இந்தப் பூமியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிக்கின்றபூத, பிசாச, ராக்ஷஸகணங்கள்யாவும் சீக்கிரமாகத்தாமாகவே போகவேண்டும். இந்தப் பூமியை வாஸ்துவிற்காக எடுக்கப்போகிறேன்' எனப் பிரார்த்தித்து தயிர், நெய், பலகாரம் இவைகளோடு கூடிய சாதங்களால் அத் தேவதைகளுக்குப் பலியிட்டு சங்கீத வாத்ய வேதகோக்ஷங்களால் கோக்ஷிப்பிக்க வேண்டும் என காமிகாமகம் (I.11) தெளிவாகக் கூறுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் பின் பூமியைக் கிரகித்து (காமிகாமகம் I.13) உழவேண்டும். (காமிகாமகம் I.14) இவ்வாறு பூமியை உழுகின்றதையே கர்க்ஷணம் எனவும், கர்க்ஷணவிதி எனவும் பூமியைச் சோதித்து எடுப்பது முதல் உழுவது வரையாக காமிகாமகம் (I.14), காரணாகமம் (II.3), சுப்பிரபேதாகமம் (I.25), அம்சுதாகமம் (78) அம்சுமத் காசியபம் (1), அஜிதம் (க்ரியாபாதம் 7), கிரணாகமம் (III.24) ஆகியன மிக விரிவுபடுத்திக் கூறுகின்றன.

'கர்க்ஷணம் எனும் உழுதலின்போது கலப்பை முறிதல், கயிறு அறுதல் முதலியன ஏற்பட்டால் அதற்குப் பிராயச்சித்தமாக சாந்தி ஹோமம் செய்ய வேண்டும்' என காமிகாமகம் (I.14) கூறுகின்றது. மேலும் உழுத பிரதேசத்துப் பற்களை பசுக்களை மேயும்படியும், பசுக்களை அப்பிரதேசங்களில் தங்கும்படியும் செய்ய வேண்டும் எனவும் விபரிக்கின்றது.

**சங்குஸ்தாபனம்**

உழப்பட்ட பூமியைச் சமப்படுத்தி நடுவில் கட்டையடித்தலே சங்குஸ்தாபனம் ஆகும். இத்தகைய சங்கு (மரக்குச்சி) அது ஸ்தாபிக்கத்தக்க இடம், அளவுகோல் செய்யும்மரம், சங்குவின் பிரமாணம், அளவு, மண்டல உருவம், சங்குவின் தொகை, சங்குவில் ஊசி நாட்டிப் பூஜை செய்யும்முறைமைகள், பின்னர் சங்குஸ்தாபனம் என்பன பற்றி காமிகாமகம் (I.15), காரணாகமம் (I.3), மிருகேந்திரம் (கிரியாபாதம் 7), அஜிதாகமம் (கிரியாபாதம் 9) என்பன விரிவுபடுத்தித் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வாறாக சங்குஸ்தாபனம் செய்யப்பட்ட இடத்தில் அயனங்களின் போக்குகளைக் கழித்து காலை, மாலை சூரிய நிழல்களைக் கொண்டு திக்கு நிர்ணயம் பெறப்படுகின்றது.

திக்கு நிர்ணயம் செய்யப்பட்ட இடத்தில் அளவுகோல்களைக் கொண்டு பகுத்து அதனுடைய ஆயாதிப் பொருத்தங்களைப் பெறும் தன்மைகளைக் காரணாகமம், காமிகாகமம் ஆகியன கூறுகின்றன. அஜிதாகமம் கிராம, நகர தண்ட அளவுப் பிரமாணங்களினைத் தெளிவுபடுத்திக் கூறுகின்றது.

**வாஸ்துவிந்யாஸம்**

சிவாகமங்கள் எவ்விதம் பூமியைப் பரிக்ஷித்துப் பெற்றுக் கொள்வதற்குரிய படிமுறைகளைக் கூறுகின்றனவோ அதே போன்று காசியபசில்பம், மயமதம், வாஸ்து வித்வை முதலான சாஸ்திர நூல்களும் கூறு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிவாகமங்கள் பதவித்யாஸம் எனும் தன்மையில் பூமியின் பிரிப்புக்களைப் பதங்களின் எண்ணிக்கையால் வேறுபடுத்திக் கூறுகின்றது. இதனடிப்படையில் பூமியானது 32 வகையாக வகுக்கப்படுகின்றது. அவையாவன:

» 1 பதம் – சகளம்
» 4 பதங்கள் – பேசகம்
» 9 பதங்கள் – பீடம்
» 16 பதங்கள் – மஹாபீடம்
» 25 பதங்கள் – உபபீடம்
» 36 பதங்கள் – உக்ரபீடம்
» 49 பதங்கள் – ஸ்தண்டிலம்
» 64 பதங்கள் – மண்டூகம் / சண்டிதம்
» 81 பதங்கள் – பரமசாயிகம் / பரமீசம்
» 100 பதங்கள் – ஆசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» 121 பதங்கள் – ஸ்தானீயம்

» 144 பதங்கள் – தேசீயம்

» 169 பதங்கள் – உபயசண்டிதம்

» 196 பதங்கள் – பத்ரமஹாசனம் / பத்ராசனம்

» 225 பதங்கள் – பத்மகர்பம்

» 256 பதங்கள் – த்ரியுதம்

» 289 பதங்கள் – வ்ருத்தபோகம்

» 324 பதங்கள் – கர்ணாக்ஷ்டகம்

» 361 பதங்கள் – கணிதம் / கணிதபாதகம்

» 400 பதங்கள் – சூரியவிசாலகம்

» 441 பதங்கள் – சுசம்ஹிதம்

» 484 பதங்கள் – சுப்ரதீகாந்தம்

» 529 பதங்கள் – விசாலம்

» 576 பதங்கள் – விப்ரகர்பம்

» 625 பதங்கள் – விஸ்வேசம்

» 676 பதங்கள் – விபுலபோகம்

» 729 பதங்கள் – விப்ரதீகாந்தம்

» 784 பதங்கள் – விசாலக்ஷம்

» 841 பதங்கள் – விப்ரபுக்திலம்

» 900 பதங்கள் – விப்வேசாரம் / விஸ்வசாரம்

» 961 பதங்கள் –ஈஸ்வரகாந்தம்

» 1024 பதங்கள் –இந்திரகாந்தம்

என்பனவாகும்.

இவ்வாறு பகுக்கப்பட்ட பூமியில் வாஸ்து தேவதைகளுக்குப் பலியிடும் கிரியை வாஸ்து சாந்தி எனக் கூறப்படுகின்றது. பரமசாயிகம் எனும் 81 பதங்கள் கொண்ட வாஸ்து மண்டலத்தின் நடுவில் இருக்கும் ஒன்பது பதங்கள் பிரம்மபதம் ஆகும். இந்தப்பதத்தில் ஆலயங்கள், மடங்கள், சபைகள், பிரம்ம விகாரம் செய்யுமிடங்கள் வேதாகமாத்யயன மண்டபங்கள் இவைகள் அமைக்க வேண்டும். இப் பிரம்பபதத்திற்கு வெளியில் இருக்கும் பதினாறு பதங்கள் தைவிகபதம் ஆகும். இதிலும் ஆலயங்கள். பொதுநிலையங்கள், அக்ரஹாரங்கள் முதலியன கட்டப்படுதல் வேண்டும். தைவிகபதத்திற்கு வெளியிலுள்ள 24 பதங்கள் மானுக்ஷபதம் ஆகும். இதில் ஜனங்கள் வசிக்கும் வீடுகள், சாலைகள், வீதிகள், ராஜகிருதங்கள் முதலியன அமைதல் வேண்டும். அதற்கு வெளிச்சுற்றிலுள்ள 36 பதங்கள் (பைசாசபதம்) ஆகும். இதில் உட்பாதியில் வீடுகளும் தெருக்களும் அமைப்பதுடன் வெளிப்பாதியில் மயானம், துர்க்கை கோவில், குளங்கள், சலவை செய்யுமிடம், மத்ஸிய மாம்ச வியாபாரிகள் தங்குமிடம், வைத்தியசாலை, ஆயுதசாலை, கோட்டைகள் முதலியன அமைதல் வேண்டும். இவ்வாறு அமைக்கும் கிராமம், நகரம், பட்டணம் முதலியன அமைப்புக்கள் நூறு தண்ட அளவு முதல் 10,000 தண்ட அளவு வரையாகக் கூறப்படுகின்றன.

சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் அமைவானது மக்கள் வாழ்விடத்தைப் புறம் தள்ளாது பல்வேறுபட்ட சமூக அமைவுகளின் மத்தியில் திருக்கோயிலை மையமாகக் கொண்ட நகரம் போல விளங்கவேண்டிய முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. இதனடிப்படையில் திருக்கோவிலுள்ள தனித்துவம் காணப்படினும் கிராமம், நகரம், பட்டணம், வீடுகள் எனும் அமைப்புக்களிலிருந்து திருக்கோவில் அமைவைப் பிரித்தெடுக்க முடியாத தன்மைகள் கிராம விந்யாஸ விதிகள் மூலம் சிவாகமங்களில் சுட்டப்படுகின்றன. காமிகம் (I.24) தண்டிகாவிதி படலம் மூலமாக ஆலயங்களை மையமாகக் கொண்ட கிராம, நகர, பட்டண அமைவுகளைப் பன்னிரெண்டு விதங்களாகக் கூறுகின்றது. அவையாவன தண்டிகம், ஸ்வஸ்திகம், ப்ரஸ்தம், ப்ரகீர்ணம், சம்பத்கரம், பராகம், பத்மகம், ஸ்ரீபிரதிக்ஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், பத்மகம், ஸ்ரீபிரதிக்ஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், நத்தியவர்த்தம், கும்பம் என்பனவாகும்.

இவ்வாறு பன்னிருவகையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்ததும் சாஸ்திரோக்தமாகக் கூறப்பட்ட துமான கிராமம் முதலானவைகளின் பன்னிருவகை உருவ அமைப்புகளுக்குரிய வீதி ஒழுங்குகளை காமிகாமம் (I.25) கூறுகின்றது.

நகரம், கிராமம் முதலானவைகளின் அமைவுகளில் ஆலயத்தை மையப்படுத்திய கிராம அமைவு தெளிவு-படுத்தப்பட்டது. மேலும் காமிகாமம் (I.26) ஒரு கிராமத்தில் தேவதைகளை ஸ்தாபிக்கத்தக்க ஸ்தானங்களைக் கூறுகின்றன. இந்த ஸ்தானங்கள் வாஸ்து பதசூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதனைக் காமிகம் (I.26) விளக்குகையில் "பிரம்மதானத்திற்கு வாயு மூலையில் விஸ்ணுதானம் கூறப்பட்டது. மேற்குத்திக்கில், வாஸ்துவின் சூத்திரத்திற்கு வடக்குத் தேசத்தில் பிரமாவானவர் இருக்க வேண்டும். கிராமத்தின் மத்தியில் ஈசான்யத்திற்கு முதலான எட்டுத்திக்குககளிலும் சிவஸ்தாபனம் கூறப்பட்டது. விஸ்ணு உருத்திரரோடு கூடிய வாஸ்து சாதாரணம் பரமசிவத்தோடு கூடிய மற்றயாவும் இக்ஷ்டம் போலாகும். இந்தச் சாத்திரத்தில் அவைகளின் ஸ்தானம் கூறப்படுகின்றது.

மேற்குத்திக்கிலும் கிழக்குத் திக்கிலும் அவ்வாறன்றிக் கிழக்கு வடக்குகளின் மத்தியிலும் சூரியஸ்தானமாகும். இந்திரருக்கும் அவ்விடத்திலேயே ஸ்தானமாகும். வாயு மூலையிலும், கிழக்குத்திக்கிலும் தெற்கு, தென் கிழக்கு, தென்மேற்கு, சுக்கிரிவரென்கின்ற மேற்கு திக்கு க்ஷண்முகருக்கிடம் கூறப்பட்டது. மேற்குத்திக்கிலும் தென்மேற்குத் திக்கிலும், கிழக்குத் திக்கிலும் சாஸ்தாவினிடம் கூறப்பட்டது. மேற்கு அல்லது தென் மேற்கிலாவது, வடமேற்கு வடக்குத் திக்குகளின் நடுவிலாவது வேறிடத்திலாவது இந்த (காமிக) ஆகமத்தில் கணேசரின் ஸ்தானம் கூறப்பட்டது. தெற்கு அல்லது தென்மேற்கு அல்லது வாயுதிக்கு அல்லது இந்திர திக்கின் நடுவிலாவது தென் மேற்கு தெற்குப் பாகத்தின் நடுவிலாவது துர்க்கை ஸ்தானம் கூறப்பட்டது.

மேற்குத்திக்கில் லஷ்மி, சரஸ்வதி ஆகிய இருவரின் ஸ்தானம் கூறப்பட்டது. வட கிழக்கிலும், வடக்கிலும் அவற்றின் மத்தியிலும் சப்த மாதாக்களின் ஸ்தானமாகும். தென்கிழக்கில் மோடியின் ஸ்தானம். அவ்விடத்திலேயே காமதேவருக்குரிய இடமாகும். குளக்கரையிலாவது அதற்குப் புறத்திலாவது மற்றவிடத்திலாவது ஜ்யேக்ஷ்டா தேவியின் ஸ்தானம் கூறப்பட்டது. மன்மதன் சூரியன் ஆகிய இருவருக்கும் க்ஷண்முகருக்கு உரிய இடம் (மேற்கு) கூறப்படுகின்றது. க்ஷண்முகருக்கு ஸப்தமாதாக்களுடைய (ஈசானம்/வடக்கு) ஸ்தானம் ஆகும். மற்றவர்களுக்கு இக்ஷ்டம் போல் ஆகும்.

என விளக்கி தொடர்ந்து இத்தேவதைகளின் பூஜாபலன் கூறப்படுகின்றது. கிராமத்தை மையமாகக் கொண்ட ஆலய அமைவில் திருமால் (விஸ்ணு) சிவன் ஆகிய இருவரும் முக்கிய பங்கு வகிப்பதனை சிவாகமங்கள் எடுத்தியம்புகின்றன. இது பற்றி காமிகாமம் (I.26) விளக்கிக் கூறுகையில் '(கிராமத்தின்) வடகிழக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமானது மத்யமமாகக் கூறப்பட்டது. கிராமத்தின் நடுவில் விஸ்ணுவின் ஸ்தானமானது உத்த மமாகக் கூறப்பட்டது. மேற்குத்திக்கில் மத்யமமாகவும் மற்றைய பிரதேசத்தில் ஸ்தானத்தில் ஆதமமாகவும் அறியத்தக்கது', எனக் கூறுவது மனங் கொள்ளத்தக்கது. இது பற்றிய விபரங்களை சுப்ரபேதாகமமும் (க்ரியாபாதம். 23) கூறுகின்றது.

## திருக்கோவிலும் கிராமத்திட்டமிடலும்

சிவாகமங்களுள் காரணாகமம் (II.6) (கர்ப்பக்கிரஹம்) ஐந்து பிரகாரங்களால் சூழப்பட்ட கிராமம் பெரும் நகரம் போன்று திட்டமிட்ட அமைப்பினைக் கூறுகின்றது. பேராசிரியர் க.கைலாசநாதக் குருக்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

கோவில்களுக்கு அழகைக் கொடுப்பவை பிரகாரங்கள். இப்பிரகாரங்கள் வள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் பொழுது கோவிலைச் சுற்றித் திட்டமிட்ட மைக்கப்படும் நகரம் ஒன்று பலவனப்புக்களுடன் உருவாகின்றது. சிற்ப நூல்களும் ஆகமங்களும் கூறும் இந்தத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு விரிந்த நகரத்திற்கு எடுத்துக்காட்டு, பாண்டி நாட்டின் சிகரமாக விளங்கும் மதுரை மாநகரம். இந்நகரம் ஆலயத்தை நடுவகமாய் கொண்டு விரிந்தது. பல பிரகாரங்களைக் கொண்டது. நாகரிகப்போக்கில், விதிகளைக் கடைப்பிடிக்கும் முறை தளர்த்தப்பட்டிருக்கக் காண்கின்றோமெனினும், கோவில் அடிப்படை யிலேயே தோன்றி பிரகாரங்களாக விரிந்து பெரும் நகரம் உருவாகி அழகு பொலிந்து விளங்குவது கவனிக்கற்பாலது.

இதுபற்றி விரிவான முறையில் கார ணாகமம் கூறுகையில்:

அந்தர் மண்டபத்தையடுத்து முதல் பிரகாரமும், இரண்டாவதாக அந்தரிதுவாரத்தையடுத்து இரண்டாம் பிரகாரமும், மத்யஹாரம் மூன்றாவது பிரகார மாகவும், மர்யம் நான்காம் பிரகாரமாகவும், மஹாமர்யம் ஐந்தாம் பிரகாரமாகவும் அமையும். இவற்றின் அளவை தனித்தனி ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறப்பட்டுள்ளது. பிரகாரங்களைச் சுற்றி சுவர்கள் அமையும். இச்சுவர்கள் பித்தி என்றும், மதில் என்றும் பெயர் பெறும். ஐந்து பிரகாரங்களையாவது அல்லது ஒரு பிரகாரத்தையாவது கொண்டு கோவில் அமையலாம். ஒவ்வொரு பிரகாரத்திற்கும் தனித்தனி கோபுரம் அமைவதே முறை. இவ்வாறு நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் எழும் பொழுது அவற்றின் எண்ணிக்கை பெருகும். இவ்வாறு அமையும் பிரகாரங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் நகரம் விரிந்துருவாவதை நோக்குவோம். அக்கினி திக்கில் அமைவது பவனாலயம். இரண்டாம் பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு இடம்பெறும். கிழக்குக்கும் வடகிழக்குக்கும் நடுவில் இருக்க வேண்டுவது வாத்யசாலை. கிழக்குக்கும் தென் கிழக்குக்கும் நடுவில் பொக்கிஷசாலையை நிர்மாணித்தல் வேண்டும். தெற்குக்கும் தென் கிழக்குக்கும் இடையில் புஷ்ப மண்டபம் இடம்பெறும். தெற்குக்கும் தென் மேற்குக்கும் இடையில் குளிப்பதற்கென அமைக்கப்பட்ட திருக்குளம் இருத்தல் வேண்டும். தென் மேற்குக்கும் மேற்குக்கும் இடையே விளங்குவது தர்ம சிரவண மண்டபம். மேற்குக்கும் வட மேற்குக்கும் நடுவில் ஆயுத மண்டபம் இருக்கும். வட மேற்குக்கும் வடக்குக்கும் நடுவில் பள்ளியறை அமையும். வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடையில் யாக மண்டபம் இடம்பெறும். கோவிலின் முன்பு நடுவதாக அமைவது ஆஸ்தான மண்டபம்.

வெளிப்பிரகாரத்திற்குப் புறத்தே சிவா சாரியாரின் வாசஸ்தானம் இடம்பெறும். மேற்கே இருக்க வேண்டுவது பரிசாரகரின் வீடு. தெற்குப் பக்கத்தில் வைத்தியருக்கு இடம் உண்டு. இதையடுத்துச் சோதிடம் வல்லோரும் இடம் பெறுவர். வாத்தியம் வசிப்பவர்கள் கிழக்கே வசிப்பர். சைவ மகாசனங்கள் வசிப்பதற்கும் கிழக்கு சிறந்த இடமாகக் கூறப்படுகின்றது. மகாவிரதிகளுக்கு உரிய திக்கு தென்கிழக்கு: பாசுபதர்களுக்கு தெற்கு காளமுகர்களுக்குத் தென் மேற்கு பௌத்தர்களுக்கு மேற்கு ஆருகதர்களுக்கு வட மேற்கு பூர்வமீமாம்சர்களுக்கு வடக்கு ஞானநெறி நிற்போருக்கு வட கிழக்கு, கிழக்குக்கும் தென்கிழக்குக்கும் நடுவே இடம்பெறுவது இன்னொரு கிணறு. தெற்கிலும், வடமேற்கிலும் கேணி அமையும். தெற்கிற்கும் தென்மேற்குக்கும் இடையில் மாட்டுத் தொழுவம்; தென்மேற்குக்கும் மேற்குக்கும் இடையில் பிரசவசாலை; மேற்குக்கும் வடமேற்குக்கும்இடையில் நோய் தீர்க்கும் நிலையம் ; வடக்கில் பாடசாலை; வடக்குக்கும் வடகிழக்குக்கும் நடுவில் நெற்களஞ்சியம் ; வட கிழக்குக்கும் கிழக்குக்கும் நடுவில் வேதாத்யயன மண்டபம்; அதற்குப் புறத்தே வெளியே உருத்திர கணிகையருக்குரிய இடம். அவ்விடத்திலே பூ, எண்ணெய் ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் விற்கும் வணிகர் உறைவதற்கு இடம் உண்டு. குயவர்கள், சேணியர், மாமிசம் புசிப்பவர், நாவிதர். இடையர், காவல் புரிவோர் இதையடுத்து இடம் பெறுவர். ஈசானத்தில் இருப்பது சுடலை. வடக்கில் இன்னம் வெளியே தச்சர். வண்ணார் முதலியோருக்கு இடம் வகுக்கப்பட்டுள்ளது. இவையனைத்திற்கும் வெளியே சண்டாளர்கள் வகிக்கும் இடம் இருக்கும்.

### கிராமத்தினது அங்கங்களும் திட்டமிடலும்

கிராமத்தின் முக்கியத்துவமுடைய எட்டு அணிகலன்கள் காமிகாமத்தில் (I.30) முன்வைக்கப்படுகின்றன. அதனை நோக்குவோம்.

"இப்பொழுது கிராமத்தின் அங்கங்களை யடுத்துப் பிழைப்பவர்களின் ஸ்தானங்களைக் கூறப்போகின்றேன். சோதிடர், கணக்கர், வைத்தியர், அம்பட்டர், மருந்து கொடுப்பவர், விக்ஷத்தைப் போக்குகிறவர், தொழிலாளி, தெய்வங் கொண்டாடுவோர் இவ்விதமாகக் கிராமத்தினங்கம் எண்விதமாகும்.

வைசியர், குயவர், அம்பட்டர், புக்ஷ்ப விற்பனையால் ஜீவிப்பவர், வாத்யக்காரர், பிராணிகளால் ஜீவிப்பவர், பண்டிக்காரர், வைதேக வர்த்தகர், சேணியர், கூலிவேலைக்காரர், வண்ணார், சண்டாளர் என்கிற இப் பன்னிருவரும் அங்கத்தையடுத்தப் பிழைப்பவர்கள்.

### ஸ்தான நிர்ணயம்

மேற்குத் திக்கில் வர்த்தகருக்கு இடம் அவ்வாறன்றி கிழக்குத் திக்கிலாவது ஆகும். ஈசான்யத் திக்கிலாவது வடக்குத் திக்கிலாவது கிழக்குத் திக்கிலாவது குயவரிருக்குமிடம், நாவிதர்கள் அக்னிமூலையிலாவது கிழக்குத் திக்கிலாவது அவ்விரண்டு திக்கிலாவது இருக்க வேண்டும். ஈசான்யத்தில் புக்ஷ்பவிற் கிரயக்காரர்கட்கு இடம் இந்தச் சாஸ்திரத்தில் இச்சிக்கப்படுகிறது. வாத்ய க்காரர்களுக்கிடம் வடக்குத் திக்கில் ஏற்படுத்தப்பட்டது. மேற் குத் திக்கில் அவ்வாறன்றி வாயு திக்கில் அல்லது நிருதி திக்கில் பிராணிஜீவனம் பண்ணுகிறவர்களுக்கும்; தெற்கிலாவது வடக்கிலாவது வண்டிக்காரர்களுக்கும் இடம் இச்சிக்கப்படுகின்றது. இந்தச் சிவாகமத்தில் வைதேக வர்த்தகர்கட்கு வாயு திக்கில் இடம் கூறப்பட்டது. சேணியர்கட்கு இடம் தெற்குத் திக்கில் இருப்புக் கூறப்படுகின்றது. உயர்ந்தவருக்கு வசமாகவே யுக்தியாய் ஸ்தானத்தைச் சேர்க்க வேண்டும். உயர்ந்த வர்கட்கு அருகாமையிலும், தாழ்ந்தவர்கட்கு தூரத்திலும் இடம் இருக்க வேண்டும்.

அக்னிதிக்கிலும் வாயு திக்கிலும் நூறு தண்டப் பிரமாணம் போக்கிக் கூலி வேலைகாரர்கட்கு இரும்பிடம் இருக்க வேண்டும். வண்ணார்களுக்கு அதன் புறம்பாக இருப்பிடம் இருக்க வேண்டும். சண்டாளர்களுக்குக் கிழக்குத் திக்கிலும், விதிக்குகளிலும் செய்யத் தக்கது. சண்டாளர்க ளுக்குக் கெட்டாரங்களை (குரோச) எண்ணாயி ரமுழ தூரத்திற்குப் புறம்பாகச் செய்ய வேண்டும்.

ஈசான்யத் திக்கிலாவது வாயுத் திக்கி லாவது கிழக்குத் திக்கிலாவது வடக்குத் திக்கிலாவது ஆறு முதலானவை இருந்தால் அந்நதிக்கரையில் மயானம் கூறப்படுகின்றது. கிழக்கிலாவது மேற்கிலாவது வாயுவிலாவது ஈசான்யத்திலாவது அவ்வாறன்றி வடக்கிலாவது குளம் அல்லது கிணற்றைச் செய்விக்க வேண்டும். வேறு திக்குகளிலும் வர்ஜிக்க வேண்டும். தென் பாகத்தில் பசுக்களின் சாலை, அவ்வாறே வடக்குத் திக்கில் புக்ஷ்பத் தோட்டம்.

அவ்வாறன்றி ஸமஸ்த திக்குகளிலும் நடைபாவி கிணறு, குளங்கள் இருக்கலாம். வைசியர்களுக்கு இருப்பிடம் நான்கு பக்கத்திலும், சூத்திரர் தென்திசையில் இருக்கவேண்டும்.இழிதொழிலையுடைய சண்டாளர் கூலி வேலைகாரர்கட்கு இருப்பிடம் மயானத்திலும், வடக்குப் பிரதேசத்திலும் இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருக்ஷ விசேக்ஷம்**

விசேக்ஷமாக கிராமத்தினங்கட்கும், தேவாலயம், வீடு முதலானவைகட்கும், மார்க்கத்திற்கும், சம்சயமான மாார்க்கத்திற்கும், சூன்யமாகிய பிரதேசத்திற்கும் மேற்கூறப்போகின்ற விருக்ஷங்களை ஸ்தாபிக்க வேண்டும்.

நறுவில்லி, ஆல், சடகம், அத்தி, கொன்றை அவ்வாறே அரசு வேம்பு கல்லால் இவற்றை ஈசான்ய முதலான எட்டுத் திக்குகளிலும் பிரதக்ஷணக் கிரமமாக விருத்தி செய்ய வேண்டும். வாஸ்துவிற்குப் புறம்பாகவே விருக்ஷங்கள் ஸ்தாபிக்கத் தக்கவை. இவை மேடையோடு கூடிய விருக்ஷங்களாக இருக்க வேண்டும். இவை விசேக்ஷமாகக் கிராமாதிகளின் குற்றங்களைப் போக்கும்.

ஆயிரத்தைப் பார்க்கிலும், அதிகமாக விபரஸ்தானத்தில், அந்தணரின் சக்தியால் தோக்ஷத்தை அடையமாட்டாது. மங்கள விதிக்குப் புறத்தில் அரைக்கால் கால் அறையாக விருத்தி செய்க. இதரவர்ண வீட்டுத் தோட்டங்களால் மறைக்கப்பட்ட தேவாலயத்தையுடையதாகவும், நான்கு முதல் நான்கைந்து தண்டமும் அதிற் பாதி பாதியுமாக அடைவிப்பித்து வீட்டிற்குத் தக்கபடி பிரகாரத்துடன் தேவாலயமானது செய்யத்தக்கது. இவ்வாறு உருத்திர சம்பந்தமான தேவர்களுக்கு ஆலயத்தைச் செய்விக்க வேண்டும்.'

**நிறைவுரை**

சிவாகமங்களின் வாஸ்து சாஸ்திரவிதி முறைப்படி வளமான சமூக மேன்மைக்கு பௌதிக வளத்தினதும், அடைவிடத்தினதும், இயல்புகளினதும் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி திருக்கோவிலை மையப்படுத்திய கிராம நகரத் திட்டமிடலை மிக விரிவாகக் கூறுகின்றன. 'கோயில் நகரம்' எனும் பெருமைக்கேற்ப சமூக ஒழுங்கமைவும், சமூக விருத்தியின் மேம்பாடும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளும், புரிந்துணர்வுகளும் ஒன்றுபட்ட தன்மையில் கிராம நகரத்திட்டமிடல் அம்சரிகள் திருக்கோவிலை மையப்படுத்தி சிவாகமங்களில் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன.

**உசாத்துணை நூல்கள்**

**மூல நூல்கள்**


» அஜிதாகமம் :Vol. I, II, III, Ed.N.R.Bhatt, Institute Francais D'Indologic, Pondichery, - 1964, 1967, 1991

» காமிகாமகம்: (பூர்வபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1978.

» -----------:(உத்தரபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1988.

» -------(க்ரியா பாகம், பூர்வபாகம்) முற்பகுதி தமிழ் சந்திரிகையுடன் ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1975.

» காரணாகமம் (பூர்வபாகம்) 1ம் பாகம், மயிலை அழக்கபா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5023 (1921).

» -----(உத்தரபாகம்) 2ம் பாகம், மயிலை அழக்கபா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5029 (1927).

» ரௌரவாகமம:Vol. I, II, III, Ed.N.R.Bhatt, Institute Francais D'Indologic, Pondichery, - 1961, 1972, 1988.

» சுப்ரபேதாகமம்:மயிலை அழக்கபா முதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை, கலி. 5009 (1907).





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» மகுடாகமம் :(பூர்வபாகம்) சி. சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1997.

» பரிபாக்ஷா மஞ்ஜரி

» 10) வேதஞானரின் சிவாகம

» Ed.Bruno Dagens, Institute Francais D'Indologic, Pondichery, - 1979.

» ஶ்ரீமத் கிரணாகம

» மஹாதந்திரம்

» சிவாகம சித்தாந்த பரிபாலன ச்கம், தேவ கோட்டை, 1932.

» விஸ்வநாதரின் உபயவேதாந்தி

» சித்தாந்த சேகரம்

» ஶ்ரீ.மு. சீதாராம கிருக்ஷ்ண சோமயாஜி (பதி.), ஶ்ரீ மனோன்மணி க்ரந்தமாலை. மைசூர், 1971.

» ஶ்ரீமத் காச்யப சில்ப சாஸ்திரம்

» (பூர்வ பாகம்), கே.எஸ்சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1968.

» மயமுனிவரின் மயமதம்

» (பூர்வபாகம்), கே. எஸ் சுப்ரமண்ய சாஸ்திரிகளின் தமிழ் மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

» --------------------(உத்தர பாகம்), கே. எஸ். சுப்ரமண்ய சாஸ்திரிகளின்தமிழ்மொழிபெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1966.

» அகஸ்தியரின் சகளாதிகாரம்

» ஶ்ரீ.கே.வாசுதேவ சாஸ்திரிகளின் தமிழ்மொழி பெயர்ப்புடன், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1996.


**மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணி புனைந்த**
**அணியே, அணியும் அணிக்கு அழகே, அணுகாதவர்க்குப்**
**பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெரு விருந்தே.-**
**பணியேன், ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்தபின்னே.**

**பொருள் :** அபிராமித்தாயே! மணியாக விளங்குபவளே! அம் மணியில் உண்டாகும் ஒளியாகவும் விளங்குபவளே! ஒளி பொருந்திய நவமணிகளால் இழைக்கப்பட்ட அணியாகவும், அந்த அணிக்கு அழகாகவும் திகழ்பவளே! நின்னை அணுகாதவர்க்குப் பிணியென நிற்பவளே! நின்னை அண்டிவரும் பாபாத்துமாக்களின் பிணிக்கு மருந்தாகவும் நிற்பவளே! தேவர்களுக்கு பெரும் விருந்தாய்த் தோன்றும் அன்னையே! நின் அழகிய தாமரை போலுள்ள சேவடியைப் பணிந்த பின்னே, வேறொரு தெய்வத்தை வணங்க மனத்தாலும் நினையேன்.

-அபிராமி அந்தாதி (24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்பண்பாட்டு மரபில் விருந்தோம்புதல்

# இளையான் குடிமாற நாயனார் புராணத்தினூடாக ஓர் நோக்கு.

**திரு.சி.ரமணராஜா,**
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்:**

திருத்தொண்டர் பெருமையை அறிவுறுக்கும் பெருங்காப்பிய நூலாக சைவசமயப் பண்பாட்டு மரபில் பெரியபுராணம் தனித்தன்மை பெற்றுத் திகழ்கின்றது. தமிழர் பண்பாடு தன்னுட்கிடையாகக் கொண்டிருந்த மனித இனநல மேம்பாட்டிற்கான உயர்சிந்தனைகளைக் காலந்தோறும் தமிழ்ப் பண்பாட்டு மரபிலெழுந்த இலக்கியங்கள் பலவும் பொருண்மையாக விளக்கி வந்துள்ளன. இப்பின்னணியில் தென்னிந்திய அரசியலில் பாரிய மாற்றங்களூடாக தனித்த அடையாளத்தைப் பெற்றிருக்கின்ற சோழர்காலப்பரப்பில் எழுந்த இருபெரும் புராணங்களில் ஒன்றாக பெரியபுராணம் சிறப்புப் பெறுகின்றது. அறுபத்து மூன்று தனியடியார்களினதும் ஒன்பது தொகையடியார்களினதும் சரிதங்களினூடாக உயர்ந்த சமூக வாழ்வியலை நூல் கட்டமைத்திருக்கின்றது. மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் சேக்கிழார் பேரார்வம் காட்டியதனாலேயே அவ்வாறு சமூகத்தில் சிறந்தமுறையில் வாழ்க்கை நெறியினைக் கைக்கொண்டொழுகிய சங்கம கூட்டத்தினரின் வாழ்வியலை தன் நூலுக்கான பொருண்மையாக எடுத்தாண்டுள்ளார்.

சைவப்பண்பாடு இல்லற வாழ்வியலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளமை சிறப்பான அம்சமாகும். வரலாற்றுக் காலந்தொடக்கம் விருந்தோம்புதல் என்னும் நெறிமுறை சார்ந்த பண்பு தமிழர் சமுதாயத்தில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும், இல்வாழ்க்கையின் தலையாய பண்பியல்பாகவும் இருந்து வருகின்றது. இல்லற வாழ்வியலுக்கான உயிரோட்டமும் இருப்பியலும் விருந்தோம்பும் பண்பிலேயே தக்கவைக்கப்பட்டுள்ளது. இத்தகைய உயர்ந்த இல்லறம் சார்ந்த வாழ்வியல் செல்நெறி காலந்தோறும் மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பின்னணியில் இளையான்குடிமாற நாயனார் வாழ்வியலினூடாக அதியுச்சநிலையடைந்திருந்த சமூக வரலாற்றை சேக்கிழார் பெரியபுராணத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு சேக்கிழாரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சமூக வரலாற்றினூடாக புலப்பட்டுத் தெரிகின்ற இல்லறவியல் சார்ந்த நெறிமுறைக் கூறுகளையும், அதன் தனித்தன்மைகளையும் இளையான்குடி மாறநாயனார் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு உற்றுநோக்குவதற்கு இக்கட்டுரை எத்தனம் செய்கின்றது.

**பண்பாடு**

ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் தனித்த அடையாளமாக – அதன் இருப்புக்கான எச்சங்களாக இனங்காணப்படுகின்ற பண்பாடு குறித்த வரைவிலக்கணங்கள் பல்வேறுபட்ட துறைசார்ந்த அறிஞர்களால் காலந்தோறும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. பண்பாடு பற்றிய வரையறைகளை அறிய விழைவோர் குரோபரும் (kroeber), குளுக்கானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(kluchonhn) எழுதிய நூலினைப் படிக்க வேண்டும் எனக் கூறும் பக்தவத்சலபாரதி, பண்பாடு பற்றிய வரையறைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதனையும் எடுத்துக் கூறியுள்ளார்.1 இன்று பண்பாடு என்பதனை எவ்வாறு பொருள் கொள்கின்றோமோ அதே வகையில் இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் எட்வர்ட் பர்னட் டைலர் என்பவரே. இவர் தனது தொன்மைப் பண்பாடு (Primitive Culture) என்னும் நூலில், 'பண்பாடு அல்லது நாகரிகம் என்பதனை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பின்வருமாறு சொல்லலாம்: பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலான வற்றை உள்ளடக்கியதாகும். கூடவே மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங் களும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தொகுதியாகும்"2 எனப் பண்பாடு பற்றிய வரையறையை விபரித்துள்ளதாகவும் அவர் எடுத்தாண்டுள்ளார்.

சுருக்கமாகக் கூறின், சமுதாயத்திலிருந்து ஒருவர் கற்றுக் கொள்ளும் நடத்தைக் கோலங் களை பண்பாடெனக் கூறலாம். பண்படு என்ற சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டதே பண்பாடு ஆகும். ஆங்கிலத்தில் Culture என்று சுட்டுவதற்கு நேராகவே பண்பாடு என்னும் சொல் எடுத்தாளப்படுகின்றது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதல் எடுத்தாண்ட பெருமை டி. கே. சிதம்பரநாத முதலியாருக்கே உரியது என்பர்.3 மக்கள் சமூகத்தினுடைய வாழ்க்கை முறைகள், அணியும் உடைகள், ஆபரணங்கள், வாழும் உறைவிடம், உண்ணும் உணவுகள், பழக்கவழக்கங்கள், பயன்பாட்டுக் கருவிகள் போன்றன யாவும் பண்பாட்டின் வெளிப்பாடுகளேயாகும்.

இதனடிப்படையில் சமுதாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதும், அச்சமூகத்தில் இழையோடியுள்ள தனித்த அடையாளங்கள், மதிப்புகள், செயற்பாடுகள் போன்றவற்றைக் கடத்தக்கூடியதும் பண்பாடு ஆகும் என பொதுவாகக் குறிப்பிடலாம். இப்பண்பாடு பற்றிய பர்மியம் மொழி, இனம், மக்கள் மற்றும் பிராந்தியம் சார்ந்ததாக அமைந்துள்ளதென்பர். பண்பாடானது எண்ணற்ற பல அம்சங்களை வெளிப்படுத்தும் பன்முகங்களை உடையதாகக் காணப்படினும், பண்பியல்புகள், கூட்டுத்தன்மை, தொடர்ச்சி, உள்ளடக்கமும் வடிவமும் என்னும் நான்கு அடிப்படையான முகங்களைப் பண்பாடு கொண்டிருக்கின்றது எனவும் மானிடவியலாளர் எடுத்துரைப்பர்.

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (Material Culture), பொருள் சாராப் பண்பாடு (Non–Material Culture) என இருவகையாகவும் எடுத்தாள்வர்.[5] மக்கள் தங்களின் தேவைகளின் பொருட்டு பயன்பாட்டில் கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். பொருள்சாராப் பண்பாட்டில் பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். இவற்றை முறையே உருவப் பண்பாடு, அருவப் பண்பாடு என்றும் சுட்டிக் கூறுவர். இவையிரண்டும் தனித்தவையாகவன்றி ஒன்றுடனொன்று அறுபடாத் தொடர்புடையனவாகவும் விளங்குகின்றன. இவ்விரு பண்பாடுகளும் இளையான்குடிமாறநாயனார் வாழ்வியலில் புலப்படுவதனை நுட்பமாக அவதானிக்கலாம். சான்றாக வணக்கம் செலுத்திய முறைமை, முன்னுரை செய்தமை, ஆசனத்தில் அமரச் செய்தமை, கலந்துரையாடல்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழி பாட்டு முறைகள், நெறிமுறைகள் என்ற வகையில் பொருள்வடிவம் பெறாதனவற்றை பொருள்சாராப் பண்பாட்டிலும், உழவுக்குப் பயன்படுத்திய பொருட்கள், கருவிகள், இல்லறப் பாவனைப் பொருட்கள், விதைத்த நெல்லை வாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவரப் பயன்படுத்திய கூடை, விருந்தினர் இருக்கை முதலியனவற்றை பொருள்சார் பண்பாட்டிலும் உள்ளடக்கி நோக்கலாம்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம்பெற்று உள்ள கூறுகள் பல்வேறு தன்மை வாய்ந்தவை. இருப்பினும் அவற்றின் பண்புகளைத் தொகுத்துக் காணும் போது, பொருள்சார் கூறுகள், அறிதல்சார் கூறுகள், நெறியியல்சார் கூறுகள் என மூன்று நிலைகளாக வரிசைப்படுத்திக் கூறுவர். மக்களின் பயன்பாட்டிற்காக ஏற் படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருட்களும் பொருள்சார் கூறுகளாகவும், அப்பண்பாட்டைச் சார்ந்தவர்களின் அறிதிறன் கூறுகளைக் குறிப்பனவற்றை அறிதல்சார் கூறுகளாகவும், அத்தகைய பண்பாட்டிற்குரிய மக்களின் வாழ்வினை நெறிப்படுத்தும் கூறுகளை நெறியியல் கூறுகளாகவும் எடுத்தாள்வர்.

**நெறியியல் கூறுகள்**

சமுதாயத்தில் ஒருவன் எவ்வாறு வாழவேண்டும்? எவற்றைச் செய்ய வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? ஏன் செய்யக் கூடாது? எவ்வாறு செய்தல் வேண்டும்? போன்ற விதிமுறைகளோடு தொடர்புடைய கூறுகளே நெறியியல் கூறுகளாகும்.[7] பண்பாட்டுக் கூறுகளுள் நெறியியல் சார் கூறுகளே பண் பாட்டுப் பெறுமானத்தைத் தீர்மானிக்கவும் நிலைநிறுத்தவும் துணை புரிகின்றன. விழுமியங்கள், நெறி முறைகள், விதிகள், குடிவழக்குகள், வழக்கடிபாடுகள், மரபாண்மைகள், தடை விதித்தல், வழக்கங்கள், பழக்கங்கள் முதலா னவை முதன்மையான நெறியியல் சார் கூறுகளாக எடுத்தாளப்படுகின்றன. மாறனார் சைவப்பண்பாடு சார்ந்த வாழ்வியலுக்கு அவசியமான செயல்களையும், நடத்தை முறைகளையும் கொண்டிருந்தாரெனக் கொள்ளுமிடத்து, அவற்றை அவரிடமிருந்த விழுமியங்களாகவும், இவரின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தப்பட்ட நெறிமுறைகளாகவும், இயல்பாய் அதேவேளை சிந்திக்காமல் அவரது பழக்கத்தால் நிகழ்ந்தனவற்றை குடிவழக்குகளாகவும் இனங் காணலாம்.

**சமுதாய மதிப்புக்கள்**

அருவப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக சமுதாய மதிப்புக்கள் காணப்படுகின்றன. மேற்கூறியவண்ணம் நெறியியல் சார் கூறுகளில் விழுமியங்களாகவும், நெறிமுறைகளாகவும் இனங்காட்டப்பட்டவற்றை சமுதாய மதிப்புகளாக எடுத்தாளலாம். உயர் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எவை உயர்வானவை, எவை இழிந்தவை, எவை புனிதமானவை, எவை நகைப்பிற்குரியவை என்பதனை மக்கள் கற்பித்துக் கொள்கின்றனரோ அத்தகைய அடிப்படையான உணர்வுகளை சமுதாய மதிப்புக்கள் எனலாம். இளையான்குடிமாறநாயனார் சைவப் பண்பாடு சார்ந்த வாழ்வியலுக்கான கருத்தியல் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும், நடத்தை முறைகளையும் கொண்டிருந்தார் என உற்றுநோக்குமிடத்து அவற்றை அவரிடமிருந்த சமுதாய மதிப்புகளாகக்கூறலாம். பெரும்பாலான சமுதாய மதிப்புக்கள் பண்பாட்டு பூர்வமாகவே உருவாக்கப்படுகின்றன எனக் கருதப்படுகின்றது.

சமுதாய மதிப்புக்களின் அடிப்படையில் பண்பாட்டினை, உண்மைப் பண்பாடு (True Culture), கருத்துப் பண்பாடு (Ideal Culture) என இரு நிலைகளில் வகைப்படுத்திக் காண்பர். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி வாழ்கின்றனர் என்பதனை உண்மைப் பண்பாடும், மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதனை கருத்துப் பண்பாடும் காட்டுவனவாக சமூகவியலாளர்கள் கருதுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பண்பாட்டையும் மதிப்புக்கள் மூலம் விளக்கிக்காட்ட முடியும் எனவும் கூறுகின்றனர். இதனடிப்படையில் சமுதாய மதிப்புக்கள் வாழ் வியற் பண்பாட்டின் இன்றியமையாத பகுதி யாக உள்ளன எனலாம்.

பெரியபுராணம் கட்டமைத்துக் கூறி யிருக்கின்ற சைவமக்களின் சமூக வரலாற்றினூ டாக இத்தகைய உண்மைப் பண்பாடு மற்றும் கருத்துப் பண்பாடு குறித்த சிந்தனைகளை அறிந்து கொள்ளவியல்கின்றது. பெரியபுராணத்தின் பொருண்மைப் பகுதியாகவுள்ள இறைவன் – அடியவர்கள் – அவர்களைச் சார்ந்தவர்கள் – பெண்கள், இவர்களுக்கிடையே நிகழ்ந்த சரித்திர பூர்வமான நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சைவ வாழ்வியற் பண்பாட்டின் கூறுகளை பலதளங்களினூடாக வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒவ்வொரு அடியவர் சரித்திரத்தினூடே சைவ வாழ்வியற் பண்பாடு வெளிக்கொணரப்பட்டு சமுதாய மதிப்புக்கள் உயர்வதற்கான செயற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. சைவ இலக்கியங்கள் இத்தகைய நிகழ்வு களூடாக சமுதாய மதிப்புக்களை உயர்த்த முயன்றன. இதன் தொடருறு நிலையிலே யே சேக்கிழாரும் பெரியபுராணம் என்னும் பெருங்காப்பியத்தில் அடியவர்களின் அன்பு – தொண்டு என்பவற்றால் உயர்ந்த சான்றோர் வரலாற்றினூடாக சைவ வாழ்வியற் பண்பாட்டை வெளிக்கொணர்ந்துள்ளர்.

பெரியபுராணம் கூறும் அடியவர்களை வெறும் பக்தர்கள் என்ற அடையாளத்துடன் நோக்குவது பொருத்தமானதல்ல. இவர்கள் இறைவனை நாடிச்செல்லும் ஆன்மிக இன்ப வியலாளர்கள். இதுவே இவர்களின் உயரிய இலக்குமாகும். மெய்ப்பொருளை நாடிச் செல்பவர்களை மிஸ்ரிக்ஸ் (Mystics) என மேநாட்டார் குறிப்பிடுவர். அந்தச் சொல்லின் நேர்ப்பொருளுடையதாகவே அடியார்கள் என்ற சொல்லைக் கருதவேண்டும்.[9] பல்வேறு வாழ்க்கை முறைகளை மேற் கொண்டு வாழ்ந்த நாயன்மார்களுடைய வரலாற்றினை சேக்கிழார் கூறியிருப்பினும் அவ்வடியார்களின் வாழ்க்கையின் அடித்தளத்தில் நிற்பது தொண்டுள்ளமே என்பதனையும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும்
நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும்
இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருநாளும்
மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம்
குணமிக்கார்"10

என்று தொண்டர்களின் இயல்பினைச் சுருக்கமாக விளக்கியுள்ளார். மனிதனின் உணர்வுகள் தடைப்படும் போது அவனின் சிந்தனை ஆற்றலும் அவற்றின் வெளிப்பாடுகளான செயற்பாடுகளும் தடைப்பட்டுவிடுகின்றன. இங்கு 'குன்றாத உணர்வு' என்பதனால் தொண்டர்களின் சிந்தனைப் போக்குகளும், சமுதாய உணர்வு நிலையும் சேக்கிழாரால் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிந்தனை களும் உணர்வோட்டங்களும் தொண்டு நெறிக்கு வழிப்படுத்துகின்றது. தொண்டு செய்வதற்குத் தேவையான அன்பும் இதிலே அடங்கிவிடுகின்றது. "...பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார் ஈர அன்பினில் யாதும் குறைவிலர்" என்றும், "... ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி..." என்றும், அன்பு மற்றும் அதன் விளைவாகிய திருத்தொண்டினது சிறப்புகள் கூறப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது.

இந்தவகையில் இளையான் குடிமாற நாயனார் வாழ்வியலூடாகவும் உயர்ந்த சைவ வாழ்வியற் பண்பாட்டினை பெரியபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியிருக்கின்றது. எனவே, இளையான்குடிமாற நாயனார் வரலாறு கூறும் பகுதியினூடாக சேக்கிழார் காட்டியிருக்கின்ற – கையளிப்புச் செய்ய முனைந்த வாழ்வியல் நெறி பெறுமதியானது. சமுதாய மதிப்பினை உயர்த்த வல்லது.

**இளையான்குடிமாற நாயனார்**

பெரியபுராணம் சுட்டித்துக் கூறும் அறுபத்து மூவருள், உணவிடுதல் தொண்டின் மூலம் சிறப்புற்று விளங்கும் நாயன்மார்களுள் இளையான்குடிமாறநாயனார் தலையாயவர். மாறன் என்னும் பெயருடைய இவர் வாழ்ந்த இடம் இளையான்குடி. இவ்வூர் சோழ நாட்டிலே திருநள்ளாற்றுக்குத் தெற்கே உள்ளது என்றும், பரமக்குடிக்கு வடக்கேயுள்ளது என்றும், தொண்டை மண்டலத்திலுள்ளது என்றும் வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயினும் மதுரை ஜில்லாவில் பரமக்குடிக்குச் சற்று வடகீழ்த்திசையில் ஏழு மைல் தூரத்தில் இளையான்குடி என்ற வளநகரம் இருக்கின்றது என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக் கப்படுகின்றது. சேக்கிழார், **'இளையான் குடிப்பதி மாறனார்'**[13] என்று குறிப்பிடுவதனூடாக இளையான் குடிப்பதி என்பது அவர் வாழும் குடிக்குரிய பெயராக இருத்தல் வேண்டும். எனவே இளையான்குடி என்ற ஊர்ப் பெயரோடு மாறன் என்ற பெயரும் இணைந்து "இளையான்குடிமாற நாயனார்" என்ற பெயர் நிலைபெறுவதாயிற்று.

வேளாண்மைக் குலத்தைச் சார்ந்தவரான இவர், மிக்க செல்வந்தராகவும் சிவபக்தி உடையவராகவும் விளங்கினார். வேறுபாடு நோக்காத தன்மையில் அடியவர் யாவராயினும் உணவளித்தல் தொண்டினை பெரும் சிறப்பாகச் செய்து வந்தவர். இவருடைய சிறப்பினைக் கூறவந்த சேக்கிழார், **"தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின்மேன்மை தரித்துள்ளார்.."**[14] என்கின்றார். சால்பு எனும் சொல் பண்பாடு என்ற சொல்லுக்கு நிகராகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. 'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண்' என்பதன் மூலம் முன்னைந்து பண்பும் சால்பாகிய பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள் என்பதனைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருவருடைய மனம் ஒழுங்குபடுத்தப்படுகின்ற – செம்மைப்படுத்தப்படுகின்ற போது அவ்வைந்து பண்புகளும் மேன்மையுற்றுக் காணப்படும். அதாவது ஒருவரது நற்குண நற்செய்கைகள் அனைத்தும் இவ்வடிப்படைக் கூறுகளிலிருந்தே கட்டியெழுப்பப்படுகின்றன.

ஒருவர் சால்புடையவர் என்றாலோ அல்லது பண்பாடுடையவர் என்றாலோ அவரிடத்திலே முற்கூறிய பண்புகள் நிலைபெற்றிருக்கும் என்பது புலனாகின்றது. அவ்வாறே சேக்கிழார், 'உயர் சால்பின் மேன்மை தரித்துள்ளார்' என மாறனாரின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றார். இங்கு உயர்சால்பு என்பதனை உயர்ந்த பண்பாடு என்று பொருள் கோலுமிடத்து 'உயர்ந்த பண்பாட்டைத் தனக்கு அணிகலனாக உடையவர்' என்றே மாறனாரின் பெருமையினைப் பெரியபுராணம் பதிவுசெய்திருக்கின்றது. மேலும், தம்பிரான் அடிமைத் திறத்தினாலேயே உயர் சால்பின் மேன்மையினை நாயனார் தரித்துள்ளார் எனவும் சேக்கிழார் கூறியிருப்பதன் மூலம் ஆன்மிக நெறிப்பட்ட வாழ்க்கை முறையே உயர் பண்பாட்டை உடைமையாக்குவதற்குத் துணைநின்றது எனும் கருத்துநிலையாக்கம் இந்நாயனாரின் வாழ்வியலினூடாக வெளிப் பட்டுத் தெரிவதனை அவதானிக்கலாம்.

மேலும், பிறப்பினால் ஒருவருடைய பெருமை அல்லது தனித்துவம் தீர்மானிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதல்ல. அவை ஒருவருடைய உயர்ந்த செயற்பாடுகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ஒருவர் சூத்திரனாக இருப்பினும் அவரது உயரிய இலட்சியங்களாலும் செய்கைகளாலும் சமூகத்தில் உயர்ந்தவராகக் கருதப்படுவர் என்பது உபநிடத காலச் சிந்தனையாளர்களின் சமூக நிலைப்படுத்தலுக்கான கருத்தாகும். வேளாண் மரபில் தோன்றிய சூத்திரராக மாறனார் சேக்கிழாரால் சுட்டுணர்த்தப்படுகின்றார். 'சூத்திர நல்குலம் செய்த தவத்தினால் இவ்வுலகத்தில் உயர்ந்தவர் யாவரென விளக்கினார் இளையான் குடிப்பதியிலிருந்து தோன்றிய மாறனார் எனச் சுட்டிக் கூறியிருப்பதன் மூலம் சேக்கிழாரின் சமூக உற்று நோக்கற்றிறம் புலப்படுகின்றது.

## முதிர்ந்த கொள்கையர்

ஒருவரின் எண்ணம், சொல்,செயல் முதலியன அவரை உயர்ந்த கொள்கையாளனாக்கி விடுகின்றது. பல்வேறுபட்ட எண்ணங்களையுடைய மனிதன் சில செயற்பாடுகளிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான். மனிதனுடைய பெருமை, சிறுமை என்பதன் தரத்தினை அறிவதற்கு அவனுடைய செயற்பாடுகளே உரைகல் ஆகின்றன. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்பது வள்ளுவர் சித்தாந்தம். அதாவது ஒருவரது பெருமைக்கும் சிறுமைக்கும் காரணம் அவரது செயல்களே என்பது மேற்போந்த குறளின் கருத்தாக்க சிந்தனையாகும். மாகேஸ்வர பூசையை மாறனார் செல்வம் உண்டான பொழுது செய்தமையும், மிக்க வறுமை ஏற்பட்ட பொழுதில் மனம் மிகவும் சுருங்குதலின்றி முன்போலவே சிறிதும் தவறாது செய்தமையும் இவ்வளவு என்று சொல்லக்கூடாத பெரும் வியப்பைத் தருகின்றது. இவருக்கு வந்த வறுமையின் கொடுமை மிகப் பெரியது. இதன் தன்மை சேக்கிழாரால்,

"இன்னவாறு வளம் சுருங்கவும் எம்பிரான்
இளையான்குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி
உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன
கொண்டு பின்
முன்னை மாறு இல் திப்பணிக்கண் **முதிர்ந்த
கொள்கையர்** ஆயினர்"

என உணர்த்தப்படுகின்றது. இதுவே மாறனார் முதிர்ந்த கொள்கையரானமைக்கான பின்புலமாக அமைகின்றது.

மாறனாரின் குன்றிக் குலையாத உறுதியுடைய கொள்கையும், அதனால் விளைந்த செயற்கரிய செயல்களும் அவரை முதிர்ந்த கொள்கையுடையவராக்கியிருக்கின்றது. கொள்கை என்பது நோன்பு, கருத்து, ஒழுக்கம், கோட்பாடு, பெறுகை, நிகழ்வு, இயல்பு, நட்பு என்ற பொருள்களிலும் எடுத்தாளப்படுவதுண்டு. ஆக, இளையான்குடிமாறநாயனார் விருந்தோம்பும் ஒழுக்கத்தில் சற்றும் குறைவுபடாத குறியிலக்கினை உடையவராதலின் 'முதிர்ந்த கொள்கையர் ஆயினர்' என்கிறார் சேக்கிழார். ஒருவருடைய குறியிலக்கானது அகம் மற்றும் புறச்சூழமைவுகளால் சிதைவுறலாம் அல்லது மாற்றத்திற்கு உள்ளாகலாம். இத்தகைய சிதைவுகள், மாற்றங்களுக்குள்ளும் தமது இலக்கினை மாற்றியமைக்காது மனவுறுதியுடன் இருப்பதே மனிதனை உயர்ந்தோனாக்கும். இதனடிப்படையில் சேக்கிழார், **'வளம் சுருங்கவும் இளையான்குடி மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி'** எனக் கூறியிருப்பதானால் மாறனாரின் அகவைராக்கிய உணர்வையும், புறச் சூழமைவினால் ஏற்பட்ட உளநெருக்கீட்டினையும் இனங்காண முடிகின்றது. குன்றாத உணர்வு, குலையாத மனம், அதன் விளைவுகளான நற்குண நற்செய்கைகளாகிய நடத்தைகள் யாவும் சைவ வாழ்வியலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமகுாந் தன்மையாக – உறுதியான கொள்கையாக மாறனாரின் வாழ்வியலினூடாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளமை ஈண்டு நோக்குதற்குரியதாகும்.

**இளையான்குடிமாறநாயனார் சைவ வாழ்வியலில் மேம்பட்டு நிற்பதற்கான காரணங்கள்**

சேக்கிழார் ஒவ்வொரு நாயன்மார் வாழ்வியலினூடாகவும் தனிமனித முன்னேற்றத் திற்குத் தேவையான தனித்துவமான ஆளுமைப் பண்புகளை விபரித்திருக்கின்றார். அவ்வாளு மைகள் ஒவ்வொன்றும் சைவவாழ்வியலில் தனித்தவோர் அடையாளத்தைப் பெற்று சமூகத்தில் நிலை பெற்றுவிட்டன. குறிப்பாக, "வாளான் மகவரிந் தூட்டவல்லேனல்லன், மாதுசொன்ன சூளால் இளமை துறக்க வல்லேனல்லன், றொண்டுசெய்து நாளாறிற் கண்ணிடந்து அப்பவல்லேனல்லன்" என்ற பட்டினத்தாரின் கூற்று மேற்படி ஆளுமைத் திறன்களை தெள்ளிதின் விளக்குகின்றதாகும். சேக்கிழார் இளையான்குடிமாற நாயனார் சரித்திரத்தினூடாக உயரிய இல்லறவியல் மாண்பினைக் கட்டமைத்திருக்கின்றார். இந்த வகையில் மாறனார் சைவவாழ்வியலில் உயரிய இடத்தினைப் பெற்றிருப்பதற்கான காரணங்களை கீழ்வருமாறு இனங்காணலாம்.

- » தனக்கென வாழாத் தன்மையுடைய வராயிருத்தல்.
- » வறுமையிலும் ஒழுக்கம் காத்தல்.
- » குன்றாத உணர்வும், குலையாத மன வுறுதியுமுடைய முதிர்ந்த கொள்கையராக விளங்கியமை.
- » நச்சப்படாதவன் செல்வமாக தன் செல் வத்தை கொண்டிராமை அதாவது பெரும் செல்வந்தனாக விளங்கினாலும் அவை யாவற்றையும் தொண்டு நெறிக்காகச் செலவு செய்தமை.
- » விருந்தினரை எதிர்கொண்ட காலச்சூழல்.
- » விருந்தளித்த முறைமை மற்றும் விருந்தினர் உபசரிப்பு.
- » மனைவியிடம் ஆலோசனை பெற்று இசைந்து ஒருப்பட்டு இல்லற அறத்தினைப் பேணியமை.
- » வறுமையுற்ற போழ்தினும் மனைவியின் ஆலோசனையினால் செல்வம் பெற்றவர் போல் மகிழ்ந்திருந்தமை.
- » தாம்பசியுற்றிருந்தும் அடியவரின் பசியைப் போக்குவதற்குரிய வழியைச் சிந்தித்து விருந்தளித்தமை.
- » போக்குவரத்து மற்றும் மின்சார வசதி யின்மையான காலத்தில் கனத்த மழை, கடும் இருள், வெள்ளம் இவற்றைப் பொருட் படுத்தாது வயலுக்குச் சென்று விதைத்த நெல்லை மீள எடுத்து மறுபயனின்றி அவ்விதையைப் பயன்படுத்தியமை.

**இல்வாழ்க்கை**

ஆடவனும் பெண்ணொருத்தியும் கருத்தொருமித்து இணைந்து வாழ்தலே இல்வாழ்க்கை ஆகும். இல்லறம் அல்லது நல்லறம் அன்று என ஔவையார் இல்லறத்தைச் சிறப்பிக்கின்றார். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளும் ஒருங்கே அனு பவித்தற்குரியதாக இல்லற வாழ்வியல் கட்ட மைக்கப்பட்டிருக்கின்றது. பண்டைய தமிழ் மக்கள் மனித வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமையவேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தனர். அதற்குரிய சிறந்த கருவியாக இல்வாழ்க்கை அமையும் என்பதனை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அன்பே இல்வாழ்க்கையின் பண்பாகப் போற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் அறனும் தனித்தவையாகவன்றி அறுபடாத் தொடர்புடைய இரு கூறுகளாக இல்லறத்தில் சிறப்புநிலை கண்டு விளங்கியது. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்கிறார் வள்ளுவர். குடும்ப வாழ்க்கையில் மனைவிக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டது. தமிழனுடைய இல் வாழ்க்கை உள்ளத்தால் ஒன்றுபட்ட தலைவன் – தலைவியரைக் கொண்டதாக இருந்தது. இல்லாளை, குடும்ப விளக்காக – மனைக்கு விளக்காகிய வாள்நுதல் என்று புறநானூறு போற்றுகின்றது.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்கள் விருந்தினரைப் போற்றி வரவேற்று உதவுவதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். பண்டைத் தமிழருடைய இல்வாழ்க்கையின் சீரும் சிறப்பும் விருந்தோம்பும் பண்பிலே நன்கு வெளிப்பட்டது. இளையான்குடிமாற நாயனாரின் மனைவி சிறந்த இல்லத்தரசியாக சித்தி ரிக்கப்படுகின்றார். பெரியபுராணம் காரைக்காலம்மையார், மங்கையற் கரசியார், இசைஞானியர் போன்றோரின் வரலாற்றை சிறப்புச் செய்திருந்தாலும், பல பெண்ணடியவர்களின் வரலாற்றினை ஆண்டியவர்களின் தொண்டு வாழ்வியலுக்குப் பின்னால் வைத்துப் போற்றியிருக்கின்றமை காணத்தக்கது.

இளையான்குடிமாறநாயனார் வறுமையிலும் ஒழுக்கம் காத்தமை சிறந்த வாழ்வியல் நெறியாகும். குடும்பச் சூழலில் இன்னாப்புக்கள் நிகழ்ந்தாலும், அவர் விருந்தினரை எதிர்கொண்ட நேரம், உபசரித்த முறைமை, விருந்தளித்த தன்மை, விருந்தளிப்பதற்காக மனைவியிடம் ஆலோசனை பெற்று இசைந்து ஒருப்பட்டு இல்லற வாழ்வில் அறத்தினைப் பேணிய முறைமை என்பன உச்சமான சைவவாழ்வியற் பண்புகளாகும்.

**வழக்கங்கள்**

அருவப்பண்பாட்டுக்கூறுகளில்வழக்கங்கள் (Custams) என்பதும் ஒன்றாகும். வழக்கம் என்பது சம்பிரதாயம் அல்லது நடைமுறை என்ற பொருளிலும் எடுத்தாளப்படுவதுண்டு. மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சமூக மயமாக்கப் பெற்ற நடவடிக்கைகளின் குறிக்கோள்கள் வழக்கங்கள் எனப்படும் என சமூகவியல் அகராதி குறிப்பிடுகின்றது. வழக்கங்களுக்கு எதிரான செயல்களுக்கு சமூகம் ஒப்புதல் அழிப்பதில்லை என்பதனால் இவ்வழக்கங்கள் சமூகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. தம்மிடத்து வருவாரை மனம் மகிழ்ந்து வரவேற்கும் வழக்கம் சிறந்த வாழ்வியற் பண்பாடாகும். இளையான்குடிமாறநாயனார் புராணத்தினூடாக விருந்தோம்புதல், விருந்தினரை வரவேற்றல், கைகள் குவித்து நிற்றல், குலாவு பாதம் விளக்குதல் (பாதபூசை), ஆசனத்தில் அமரச் செய்தல், கைம்மாறு பெறுதல், அதனை மீளளித்தல், விருந்தினரை முன்னுரை செய்தல், பொருட்களை தலையில் சுமந்து செல்லுதல், சமையலுக்கு அடுப்பினைப் பயன்படுத்துதல் முதலியனவற்றை சமூக வழக்கங்களாக இனங் காணலாம். இச்சிந்தனையினை,

"கொண்டுவந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியேமண்டு காதலின் ஆதனத்திடை வைத்து அருச்சனை செய்தபின்.."

கூரவந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து ஈரமன்மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை செய்தபின்"

எனக் கூறியிருப்பதனூடாக ஒருவரை வர வேற்புச் செய்வதில் பல்வேறு நடைமுறைகள் உள்ளமையை அறிய முடிகின்றது. இத்தகைய வழக்கங்கள் பெருவழக்கிலிருந்தமையை சிறுத்தொண்டர், காரைக்காலம்மையார், திருநீலகண்டர், அப்பூதியடிகள் முதலியோரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலூடாகவும் இனங்காணலாம். மேலும், உண்ணுதல், தின்னுதல், நக்குதல், பருகுதல் என உண்டி நாலுவிதத்திலும், கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என ஆறு சுவைத்திறத்தினிலும் உணவு தயாரிக்கும் வழக்கம் இருந்தமையினையும் நன்கறியலாம். முன்னர் செழிப்புடன் இருக்கும் போது எப்படி பெருவிருந்து அளித்து உவகையடைந்திருந்தேன், இன்றைய நிலை இவ்வாறு உள்ளதே என்று வருந்தியவராக மனைவி திருவமுது சமைத்தார் என்று சேக்கிழார் கூறியிருப்பதன் மூலம் கடந்த காலங்களை நினைத்து வருந்துதல் என்னும் வழக்கம் அக்கால சமூகத்தில் நிலைபெற்றிருந்தமையினைப் புலப்படுத்துகின்றது.

**விருந்தோம்பல்**

தெய்வம், பிதிரர், விருந்தினர், சுற்றத்தார், தான் எனப்படுகின்ற ஐவர்க்கும் விருந்தளிப்பது இல்வாழ்க்கையின் தலையாய பண்பாக – அறச் செயலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. விருந்தினரை வரவேற்று இன்முகம் செய்வதற்கேதுவாவது 'பொருள்' என்று கூறி, அவற்றையும் அறவழிப்பட்டதாக்கியது சைவ வாழ்வியல். அத்துடன் அறத்தால் வருவதே இன்பம் என சமூகப் போதனையும் செய்தது. இதற்குரிய அடிப்படை உணர்வானது சங்ககால மக்களின் வாழ்வியலிலிருந்து மரபுச் செல்வமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதலாம். பண்டைத் தமிழரின் அறவழியிலமைந்த அன்றாட வாழ்வியலின் நிகழ்ச்சிகளை சங்கப் பாடல்கள் பலவாறு கூறிநிற்கின்றன. சிறப்பாக புறநானூற்றில் வரும் பின்வரும் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

வீட்டிற்குப் பசியுடன் வந்த பெரியவர்களை அன்போடு வரவேற்று விருந்தளிப்பதற்கு இல்லாள் முயன்றாள். ஆனால் வீட்டிலிருந்த வரகும் தினையும் இரவலரின் பசிபோக்கிய செயற்பாட்டினால் தீர்ந்துவிட்டன. திருப்பித் தருவதாகக் கடன்வாங்கிச் சென்றோரும் அந்நேரத்தில் உதவும் நிலையில் இல்லை. அவள் மனதார வருத்தமுற்று சிந்திந்த போது அடுத்த உழவுக்குப் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்கப்பட்ட தினை விதை வீட்டிலிருப்பது நினைவுக்கு வரவே, அதனை மகிழ்வோடு உரலிலிட்டு குற்றியெடுத்து உணவு சமைத்து விருந்தினரை மகிழ்வித்தாள் என அந்நிகழ்வினைப் புறநானூறு குறிப்பிடுகின்றது. இளையான்குடிமாறனார் மறுபயனின்றி நெல் எனும் தானியத்தைப் பயன்படுத்தியமையை ஒத்த நிகழ்வாகவே மேற்படி நிகழ்வினை இனங்காண முடிகின்றது. 'உள்ளபொழுது ஏதும் உவந்தளிப்பதல்லாமல் எள்ளளவும் ஈய இசையுமோ?' என கையில் உள்ள போதே அறம் செய்க என்று கூறும் நீதி வெண்பாவின் கருத்துக்கு எதிர்கணியச் சிந்தனையாக இத்தகைய வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றமை நோக்குதற்குரியது.

விருந்தோம்பி வாழ்தலே இல்வாழ்வானின் பிரதான கடமையாகும் என்பதனை வள்ளுவரும், 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று தெளிவுபடுத்தியுள்ளர். இல்லறத்தார்க்குரிய இவ்வறத்தின் மேன்மையினை சான்றோர்கள் பலரும் சமயம் சார்பின்னணியிலும் அதனைக் கடந்த நிலையிலும் காலந்தோறும் வலியுறுத்தி வந்துள்ளனர். 'கொல்லா விரதம் குளிர்பசி நீக்குதல் நல்ல விரதமடி குதம்பாய்'[28] என்கின்றார் குதம்பைச்சித்தர். பசி நீக்குதல் என்பது சிறந்த வாழ்வியல் ஒழுக்கமாகும். குறிப்பாக அழிபசி, கொடும்பசி, உறுபசி என்ற வகைமைகள் கடந்து சித்தர் குளிர்பசி எனக் கூறியது எதனை? என நோக்குமிடத்து, குளிர் எவ்வாறு ஒருவனை உடலுள ரீதியாக கொடுமைப்படுத்துகின்றதோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறுதான் பசியும் ஒருவனுடைய உடலையும் உள்ளத்தையும் கொடுமைப்படுத்தவல்லது. எனவே அதனைப் போக்குதல் சிறந்த மானிடப் பண்பியல்சார் ஒழுக்கம் என அறிவுறுத்துகின்றார். 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என திருவள்ளுவரும், 'பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும் நன்றென்றிரு' என பட்டினத்தடிகளும் பசிதீர்க்கும் அறத்தின் மாண்பினைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வரலாற்றுக் காலந்தொட்டு விருந்தோம்பும் பண்பு தமிழரிடையே தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்து வந்தமையினை சைவ இலக்கிய வரலாறு தெள்ளிதின் விளக்கிநிற்பதனை உணரலாம்.

இச்செயற்பாட்டின் தொடருறு நிலையினை – சமூக வழக்கத்தினைப் பெரிய புராணம் பல்வேறு அடியவர்களின் வரலாற்று நிகழ்வுகளினூடாகப் பதிவு செய்திருக்கின்றது. உணவிடும் தொண்டினை 27 அடியார்கள் பிரதானமாகச் செய்தார்கள் எனச் சுட்டிக் கூறும் சேக்கிழார், அத்தொண்டின் உச்சத்தைத் தொட்டு நின்றவராக இளையான் குடிமாற நாயனாரைச் சிறப்புச் செய்கின்றார். இந்நாயனாருடைய வரலாறுரைக்கும் பகுதியில் அவர் உணவளித்த (சோறு) சிறப்பைக் கூறும் சேக்கிழார்,

"ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்

நேரவந்தவர் யாவர் ஆயினும் நித்தம் ஆகிய பத்திமுன்.."[31]

என 'யாருக்கு உணவிட்டார்' என்பதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றிய சிந்தனையில் அ.ச. ஞானசம்பந்தன் பின்வரும் கருத்தினை முன்வைக்கின்றார். 'ஆரமும் எலும்பும் அணிந்த ஐயரது அன்பர்கள் என்ற ஒரே தன்மையினை உட்கொண்டு, அதுவே காரணமாக வைத்து முன்னே வந்தவர்கள் யாவரே ஆயினும் உறுதியாக நிலைத்த பத்திகூர வந்த எதிர்கொண்டு அழைத்து..' என சி.கே.சு முதலியாரவர்கள் வகுத்த உரையினைச் சான்றுகாட்டி அதனை சில காரணங் கூறி மறுத்துரைத்து, நேரவந்தவர் யாவராயினும் ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால், நித்தமாகிய பத்தி முன்....என்று பொருள்விளக்கம் கிடைக்கும் என விளக்கியுள்ளார். இதற்கு சற்று மேலே சென்று, ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்னும் தன்மையின் உட்கிடை, தம் அன்பர் என்னும் உட்கிடை என இருதிறத்தில் அதனை நோக்க வேண்டும். அவ்வாறன்றி, இறைவனது அன்பர்கள் என்ற ஒரே தன்மையால் மட்டுமே நேர வந்தவர் யாவரேயாயினும் எதிர்கொண்டழைத்து விருந்தளித்தார் என்பது அவரது பொதுமைத் தொண்டு நெறிக்கு களங்கத்தை ஏற்படுத்தும். எனவேதான், ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பதனால் அவ்விறைவனின் அன்பராகிய தன்னையொத்த அடியவர்கள் யாவராயினும் என்றும், தனது அன்புக்குப் பாத்திரமாகியோர் யாவராயினும் என்றும் பொருள் கொண்டு 'நேரவந்தவர் யாவராயினும்' என விளக்கம் காணவிழைகின்ற போது அன்பு என்பது பொதுமைத் தொண்டு நெறிக்கு – சமூகப் பொதுமை நோக்குந் திறனுக்கு அடிப்படை உணர்வென்பது பெறப்படுகின்றது. அத்துடன் யாவராயினும் என்று அழுத்திக் கூறப்பட்டிருப்பதனூடாக சமத்துவநோக்கு புலப்படுவதனை அவதானிக்கலாம். **'கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'** என்னும் நாவுக்கரசரின் சமத்துவப் பார்வை **'ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால் நேரவந்தவர் யாவர் ஆயினும்'** என்ற சேக்கிழார் சிந்தனையோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

இதனடிப்படையில் உயிர்களை அன்பு கொண்டு நேசித்ததன் காரணத்தினால், **'யாவராயினும் பசித்து வந்தவர் அனை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வர்க்கும் விருந்திட்டார் மாறனார்'** என சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார் என்று கருத வியலும். இங்கு 'யாவராயினும்' என்ற சொல் அழுத்தியுரைக்கப்பட்டுள்ளதாக எண்ணமுடிகின்றது. முன்பின் தெரியாதவர்களாக வரும் புதியவர்களை யாரோ என்று சுட்டித்துப் புறமொதுக்காது விருந்தினர் எனப் பெயரிட்டு நித்தமாகிய பத்திமுன் கூரவந்தெதிர் கொண்டு விருந்தளித்த முறைமைகள் தமிழர் பண்பாட்டின் தனித்தவியல்பாகும். இவ்வாறு தமிழர் சமுதாய ஒழுங்கும் நலனும் காக்கப்படுவதற்கென மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகளாக—மரபுச் செல்வங்களாக உள்ளனவற்றை 'அளிப்புகள்' எனக் கூறலாம். சேக்கிழாரும் சமுதாய ஒழுங்கு நலன்கள் பேணப்பட வேண்டுமெனும் நோக்கில், சைவ நாயன்மார்களின் வாழ்வியலூடாக இளையோடியிருக்கின்ற மனித நடத்தைக் கோலங்களை அளிப்புகளாக விபரித்துள்ளமை ஈண்டு குறிப்பிடற்குரியது.

### விருந்தளித்த நேரம்

தொண்டு நெறிக்கு நேரம், காலம், இடம் வேண்டப்படுவதில்லை. ஆன்மிக இன்பம் ஒன்றே அதன் உயரிலக்காக உள்ளது. பகல் – இரவு என்ற கால வேறுபாடின்றி விருந்தளித்த செல்நெறியினை சைவ இலக்கிய வரலாற்றினூடாக இனங்கண்டறியலாம். விருந்தின்றி உண்ட பகல் நோயை ஏற்படுத்தும் என்கிறார் நல்லாதனார். 'மாரிக்காலத்து இரவினில் வேரித்தாரான் விருந்து எதிர் கொண்டனன்' என்று மாறனார் விருந்தளித்த காலம் 'மாரிக்காலத்து இரவு' என சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இங்கு மாரிக்காலத்து இரவு என்பது இரவிலும் இரவு எனக்கூறத்தக்க வகையில் கடும் மழை, வெள்ளம், குளிர், காற்று, கொடிய இருள் நிறைந்த சூழலாகும். இச்சூழலில் விருந்தினரை எதிர்கொண்டு இன்முகம் செய்து – முன்னுரை வழங்கி – வரவேற்று – விருந்தளிக்க முயன்றமையானது இப்புராணத்திற்கு சிறப்பைத் தரும் நிகழ்வுகளாகும்.

### தொடர்பாடல் திறன் வெளிப்பாடு.

இளையானகுடிமாற நாயனாரும் அவர்தம் மனைவியாரும் விருந்தினை எதிர் கொண்ட நேரம் – எதிர்கொண்டு உபசரிப்புச் செய்ய விரும்பியதன் பின் நிகழ்ந்த ஒவ்வொரு செயற்பாடும் நெருக்கடியான சூழலாக அமைந்தது. இச்சூழலில் அவர்களிருவரினதும் தொடர்பாடற்றிறன் நேர்த்தியானதாக அமைந்திருந்தது. நெருக்கடியான பொழுதுகளில் தன் துணையாளிடம் மாறனார் ஆலோசனை பெறுகின்றார். இச்சூழமைவினைச் சேக்கிழார்,

> "ஈரமேனியை நீக்கி இடம்கொடுத்து
> ஆர இன்னமுது ஊட்டுதற்கு ஆசையால்
> தாரமாதரை நோக்கி 'தபோதனர்
> தீரவே பசித்தார் செய்வது என்'னென்று"

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு ஈர மேனியை நீக்கி என்பதனூடாக விருந்தினரை முறை செய்த வகைமையும், இன்னமுது ஊட்டுதற்கு ஆசையால் என்பதனூடாக நாயனார் விருந்தோம்பலில் அவாவி நிற்கும் செயலும், தபோதனர் தீரவே பசித்தார் செய்வது என்? என்பதனூடாக மனைவியிடம் கலந்தாலோசித்து முடிவெடுக்கும் திறனும் விபரிக்கப்பட்டுள்ளது.

வந்த விருந்தினர்க்கு உணவளிக்க விருப்பம் கொண்டவராகத் தன் மனைவியாரை உடனழைத்து, இத்துறவியார் (தபோதனர்) பெரிதும் பசியோடுள்ளார். அதற்கு செய்ய வேண்டியதென்ன? என்றார் மாற னார். 'இன்று பகற்காலத்திலே வயலில் விதைக்கப்பட்ட ஈரத்தன்மையால் முன்னமே முளைகொண்டிருக்கின்ற நெல்லை வாரிக் கொண்டு வந்தால், இயன்றபடி அமுதாக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவன்றி வேறொரு வழியறியேன்[36] என்று கூறி அயர்வுற்றார் மனைவியார். இங்கு அம்மையார் அயர்வுற்றார் எதனாலெனின், விதைப்பதற்காகச் சேமித்து வைத்த நெல்லை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தாமை மரபாகும். அம் மரபில் மாற்றம் நிகழ்ந்தமையினால் அவர் வருத்தமுற்றார் எனக் கொள்ளுதல் வேண்டும். மாறனார், மனைவியின் கூற்றினால் செல்வம் பெற்றவர் போல் மகிழ்ந்து மனம் இசைந்து நீர் சூழ்ந்த வயலைச் சென்றடையத் தலைப்பட்டார். இந்நேரப் பொழுதின் வடிவம்,

"பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து
அருகு நாப்பண் அறிவரும் கங்குல்தான்
கருகு மையிருளின் கணம் கட்டுவிட்டு
உருகு கின்றது போன்றது உலகெலாம்.

என அமைந்திருந்தது.

இச்செயலின் பின்னரான செயற்பாடுகள் ஒவ்வொன்றும் கணவன் மனைவி இருவருக்கிடையிலான உரையாடல் திறனைப் புலப்படுத்துவதாகவுள்ளது. நாம் இன் அடிசில் தகவு உற அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே"[38], மற்றொன்றும் காண்கிலேன் ஏதிலாரும் இனித் தருவாரில்லை போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை தீது செய்வினை யேற்கென் செயல் என்று,?, மற்று அல்லது ஒன்று அறியேன்[40], கறிக்கு இனி என்செய்கோம்?[41] என்ற வகையில் கணவன் – மனைவி இருவருக்கிடையிலே நிகழ்ந்த உரையாடல்கள் காத்திரமானவையாகும். இதனடிப்படையில் ஒருவரது திறன் விருத்தி அவரது உரையாடல் பண்பினூடாகவும் வெளிப்படுகின்றது எனும் கருத்தாக்க நிலையில், அன்புடைமை, ஒருமித்த முடிவு, குறியிலக்கில் உறுதியாயிருத்தல், பிறர் இன்பத்துக்காக தாம் இன்னாப்புக்களை அனுபவித்தல் முதலியன மாறனார் – மனைவி இருவருக்கிடையேயும் நடந்த உரையாடலின் பெறுபேறுகளாக அமைந்திருந்தன எனக்கூறலாம்.

**நிறைவாக** – சைவ சமூகத்தவரின் வரலாற்றை அறியத்துணைபுரியும் நூல்களுள் பெரியபுராணத்துக்கு தனியிடமுண்டு. குறிப்பாக சைவநாயன்மார்களின் வரலாற்றையும், வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்வுகளையும், அதன் மூலமாகப் புலப்படுத்தப்பட்டிருக்கும் பண்பாட்டுப் பெறுமானங்களையும் வெளிக்கொண்டு வந்ததில் இந்நூலுக்கு சிறப்புண்டு. திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி முதலான நூல்களை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட இந்நூலின் பொருண்மைப் பகுதியாக அறுபத்து மூவரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. ஒவ்வொருவரதும் வாழ்வியலூடாக பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் பிரதான பகுதியாக விருந்தோம்பும் திறனும், அவ்வழக்கத்தால் தனித்தவிடத்தை தக்கவைத்துள்ள வருமான இளையான் குடிமாறநாயனார் வாழ்வியலும் அமைந்துள்ளது. பெரியபுராணம் இருபத்தாறு பாடல்களில் இளையான்குடிமாறநாயனார் புராணத்தை கட்டமைப்புச் செய்து உயர்ந்த சைவ வாழ்வியற் சிந்தனைகளை வழங்கியிருக்கின்றது. இப்புராண வரலாற்றினூடாக சைவப்பண்பாடு சார்ந்த நெறியியல் கூறுகள், சமுதாய மதிப்புக்கள் என்பனவும், இளையான்குடிமாற நாயனார் சைவ வாழ்வியலில் மேம்பட்டு நிற்பதற்கானதும், முதிர்ந்த கொள்கையரானமைக்குமான காரணங்கள், மற்றும் அறவழிப்பட்ட இல்வாழ்க்கை, வழக்கங்கள், விருந்தோம்பல் திறன், விருந்தளித்த நேரம், அச்சூழலில் எதிர்கொண்ட உள நெருக்கீடுகள், கணவன் மனைவியருக்கு இடையிலான தொடர்பாடற்றிறன் என்பனவும் விபரிக்கப்பட்டுள்ளன.

பண்பாட்டின் வழி மிகப்பெரிய அளவில் ஊடுருவி சமூகச் சீரழிவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தாராளமயமாக்கல், உலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாக்கல் ஆகியவற்றுக்கான அதியுச்ச ஆதரவு சமூகத்தில் பாரியளவிலான மாற்றங்களை வேகப்படுத்தியிருக்கின்ற சமகாலச் செல்நெறியில் சமூக மதிப்புக்களை வலியுறுத்த மக்களிடையே வழக்கத்திலிருந்த நிகழ்வுகளை மீட்டுருச் செய்வது தவிர்க்கவியலாத நிகழ்வுகளாகும். இந்த எத்தனத்தின் வழி இக்கட்டுரையாக்கம் இடம்பெற்றிருக்கின்றது. எனவே, உலகெலாம் உணர்ந்து எனத் தொடங்கிய சேக்கிழார் மன்றுளார் அடியாரவர் வான்புகழ் நின்ற தெங்கும் நிலவி உலகெலாம் என்று நிறைவு செய்வதில் உலகப் பொதுநோக்கு தெளிவாகத் தென்பட்டிருப்பதனை சாதாரணமாகவே அறியவியலும்.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவத்சல பாரதி, 2011, பண்பாட்டு மானிடவியல், அடையாளம், திருச்சி, பக். 14 – 15.
2. மேலது, 15 – 16.
3. தெட்சணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, ப.4.
4. ஈஸ்வரபிள்ளை, தா., 2008, பண்பாட்டு நோக்கில் திருமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.15.
5. பக்தவத்சல பாரதி, மு. கு. நூ., பக்.33– 34.
6. மேலது, பக். 25 –26.
7. மேலது, ப. 27.
8. ஈஸ்வரபிள்ளை, தா., மு. கு. நூ., ப. 17.
9. ஞானசம்பந்தன், அ.ச., பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், தியாகராயநகர், சென்னை, ப.230.
10. பெரியபுராணம், பா.
11. மேலது, பா. 144.
12. மேலது, பா. 143.
13. மேலது, பா. 440.
14. மேலது,
15. குறள், 45.
16. பெரியபுராணம், பா. 440.
17. மேலது,
18. குறள், 505.
19. பெரியபுராணம், பா. 446.
20. தமிழ் தமிழ் ஆங்கில அகராதி, ப. 532
21. பட்டினத்தார் பாடல்கள், பா.
22. குறள்,
23. பெரியபுராணம், பா. 443.
24. பெரியபுராணம், பா. 442.
25. புறநானூறு,333.
26. நீதி வெண்பா, பா.36.
27. குறள், 81.
28. குதம்பைச்சித்தர் பாடல்,
29. குறள், 226.
30. பட்டினத்தார் பாடல்கள், பா.
31. பெரியபுராணம், பா. 442.
32. ஞானசம்பந்தன், அ.ச., மு. கு. நூ., ப. 263 – 264.
33. திரிகடிகம், பா. 44.
34. பெரியபுராணம், பா. 448.
35. பெரியபுராணம், பா. 449.
36. பெரியபுராணம், பா. 452.
37. பெரியபுராணம், பா. 454.
38. பெரியபுராணம், பா. 450.
39. பெரியபுராணம், பா. 451.
40. பெரியபுராணம், பா. 452.
41. பெரியபுராணம், பா. 459.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**துர்க்காதேவி சித்த ஆயுர்வேத மருத்துவமனை, தெல்லிப்பழை**




**ஸ்ரீ துர்க்காதேவி கோசாலை, துர்க்காபுரம், தெல்லிப்பழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**துர்க்காதேவி சித்த ஆயுர்வேத மருத்துவமனை, தெல்லிப்பழை**




**ஸ்ரீ துர்க்காதேவி கோசாலை, துர்க்காபுரம், தெல்லிப்பழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**துர்க்காதேவி சித்த ஆயுர்வேத மருத்துவமனை, தெல்லிப்பழை**




**ஸ்ரீ துர்க்காதேவி கோசாலை, துர்க்காபுரம், தெல்லிப்பழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமுறைமடம்



அன்னபூரணி மண்டபம்



அன்ன சத்திரம்



தணிகாசலம் பூங்கா



சிவத்தமிழ்ச் செல்வி
அன்னையர் இல்லம்



நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி
மணிமண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் கலிவெண்பாவில் கூறப்படும் பதியுண்மை ஓர் ஆய்வு

**கலாநிதி.இ.ஜெயந்திரன்**
**வருகை விரிவுரையாளர்,**
இந்துநாகரிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**ஸ்ரீ** குமரகுருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலிவெண்பாவில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிவாகக் காணப்படுகின்றது. சிறுவயதில் வாய்பேசத் தெரியாது ஊமையாக இருந்த சுவாமிகள் திருச்செந்தூர் முருகன் அருள்பெற்று ஊமை நீங்கப்பெற்று, பேசும் வல்லமை பெற்றார். முருகனிடம் அருள் பெற்ற சுவாமிகள் தமக்கு அருளுபதேசம் செய்துவைக்க ஒரு ஞான குருவை வேண்டி நின்றார். சுவாமிகள் யாருடன் உரையாடும் போது அவருக்குப் பேச்சுத் தடைப்படுகின்றதோ அவரே குரு என முருகன் அருளினார். தமது ஞானகுருவை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அக்காலத்தே தருமபுரம் ஆதினத்தின் குரு முதல்வராக எழுந்தருளி அருளாட்சி செய்த மாசிலாமணிதேசிகரைக் கண்ணுற்றார். மாசிலாமணிதேசிகர் குமரகுருபரரிடம் **"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள...."** எனும் பெரியபுராணப் பாடலுக்கு அனுபவ உரை கேட்க அதற்குப் பதில் கூறமுடியாது வாக்குத் தடைப்பட்டு நின்றார். இப்பாடலானது சுந்தர மூர்த்தி சுவாமிகள் தில்லையம்பலவனைத் தரிசித்த அனுபவத்தைக் கூறுவதாகும். அவ் அனுபவம் குமரகுருபரருக்கு ஏற்பட்டதன்று. அதனால் அனுபவ உரை சொல்ல முடியாதே வாக்குத் தடைப்பட்டார். இறைவன் திருவுள்ளம் உணர்ந்து மாசிலாமணி தேசிகரை குருவாகக் கொண்டார். மாசிலாமணிதேசிகர் பெருமையை பண்டார மும்மணிக்கோவை எனும் நூலாகச் செய்தருளினார். குமரகுருபரசுவாமிகள் குருவின் ஆணை வண்ணம் காசிக்குச் சென்று அங்கு காசித்திருமடத்தினை ஸ்தாபித்தார். அம்மடம் இன்றும் தருமபுர மடத்தின் கிளை மடமாக உள்ளது. சுவாமிகள் போல் சைவசித்தாந்தப் பெரும்புலமை வாய்ந்தவரைக் காணுதல் அரிது.

இந்நூலில் முருகனின் தோற்றம் முதல் சூரசங்காரம், வள்ளி திருமணம் என அனைத்து வரலாற்றினையும் தெளிவாகக் கூறியுள்ளார். சைவசித்தாந்தக் கருத்தினை எளிமையாகக் கூறுவது இந்நூலுக்குத் தனிச் சிறப்பாகும்.

**முதல்வனது உண்மை இயல்பு:**

சைவசித்தாந்தம் பதி.பசு,பாசம் எனும் முப்பொருளுக்கும் உண்மை இயல்பு, பொது இயல்பு என இரண்டு இயல்புகளை அமைத்துப் பேசுகின்றது. முன்னயது முத்திநிலை பற்றி யும் பின்னயது பெத்தநிலை பற்றியும் கூறு வது. முதல்வன் சொயம் பிரகாசமாக நிற்கும் தன்னுண்மை நிலை சொஷரூபம் எனப்படும். சிவஞான முனிவர் தனது சித்தியார் உரையில் 'அநாதி முத்தசித்துருவாகிய முதல்வன் ஒன்றினுந் தோய்வின்றித் தானே சொயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையிற் சிவமெனவும்' எனச் சொஷரூப இலக்கணத்துக்கு வரைவிலக்கணம் தருகின்றார், இக்கருத்தினை குமரகுருபர சுவாமிகள் கூறும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாதமும், நாதாந்த முடிவும், நவை தீர்ந்த
போதமும் காணாத போதமாய் – ஆதிநடு(வு)
அந்தம் கடந்த நித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய், – வந்த
குறியும், குணமும், ஒரு கோலமும் அற்(று) எங்கும்
செறியும் பரம சிவமாய், அறிவுக்(கு)
அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய், அன்றே
மனாதிகளுக் கெட்டா வடிவாய்த், – தனாதருளின்
பஞ்சவித ஷரூப பரசுகமாய், எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப் பொருளாய், – எஞ்சாத
பூரணமாய், நித்தமாய்ப், போக்குவரவும், புணர்வும்
காரணமும் இல்லா கதியாகி"

என்று அருளியுள்ளார். சைவசித்தாந்தம் முதல்வனுக்குக் கூறும் சொரூபலக்கணத்தின் இலக்கணத்தை இதுபோல் எங்கும் காணுதல் அரிது. இங்கு சிவனைப் பரமசிவன் என்றும் அவனது சத்தியைப் பராசத்தி என்றும் சொல்லுவர். சத்தியின் வடிவம் ஞானமே சொரூபமாகும். சித்தியார் "**சத்தி தன் வடிவு ஏதனெல் தடையிலா ஞானம்**" என்று இதனைக் கூறும். சொருபநிலையில் உள்ள இறைவனை உபநிடதங்கள் சத், சித், ஆனந்தம் (சச்சிதானந்தம்) என்று கூறும். வேதவழக்கில் முக்குணமாகக் கூறப்பட்ட இறைவனது குணம் ஆகம வழக்கில் ஆறு குணங்களாகவும் அதனை விரித்து எண்குணங்களாகவும் கூறுவர். அவை **தன்வயத்தனாதல்** – அதாவது பூரண சுதந்திரம் உடையவன் என்பது பொருள். உயிர்கள் பிறர் வயப்பட்டு செயல்படும் இறைவன் அவ்வாறானவன் அல்ல. **இயற்கை உணர்வினன் ஆதல்** – ஒரு பொருளினை பிறரது உதவி வேண்டாது தானே அறியும் ஆற்றல். இதனை 'சொயம்பிரகாசம்' என்று கூறுவர். உயிர்கள் தானே அறியாது அறிவித்தாலே அறிவது. இதனை வடமொழியில் 'நிராமயான்மா' என்பர் **இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்** எனும் குணமும் இதில் அடங்கும். வடமொழியில் இதனை 'அநாதி போதம் அல்லது அநாதி முத்தத் தன்மை' என்பர். **முற்றுணர்வினன் ஆதல்** – அனைத்துப் பொருட்களையும் ஒருசேர அறியும் அறிவு. இதனை வியாபக அறிவு என்பர். உயிர்கள் வியஞ்சக அறிவு (சுட்டறிவு) உடையன. இக்குணத்தை வடமொழியில் 'சருவஞ்ஞத்துவம்' என்று கூறுவர். **அளவிலா ஆற்றல் உடையனாதல்** – எச்செயலையும் சலிப்பின்றிச் செய்யும் ஆற்றல். இறைவன் ஒரு செயலை நினைத்த மாத்திரத்தில் செய்ய வல்லான் (சங்கர்ப்பமாத்திரை). ஆனால் உயிர்கள் ஒவ்வொரு செயலையும் முயன்றே செய்யவல்லன. வடமொழியில் இதனை 'அநந்தசத்தி' என்பர். **வரம்பிலா இன்பம் உடையன் ஆதல்** – இறைவன் எல்லை இல்லாத பேரின்பம் உடையவன். இன்பத்தின் முடிவு துன்பமாகும். எனவே முடிவிலாத இன்பம் எனின் இறைவனுக்கு என்றும் துன்பம் இல்லை என்பது பொருள். வடமொழியில் இதனைப் 'பூர்த்தி' என்பர். **பேரருள் உடையனாதல்** – கைமாறு கருதாது உயிர்கள் பால் பெருங் கருணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளமை. வடமொழியில் இதனை 'அலுத்தசத்தி' என்பர். **தூய உடம்பினனாதலும்** இதில் அடங்கும். இதனை வடமொழியில் 'விசுத்த தேகம்' என்பர்.

**பதியின் பொது இயல்பு:**

முதல்வன் உயிர்கள் மீது கொண்ட பெருங்கருணையினால் தன்னிலையில் இருந்து பொது நிலைக்கு வருகின்றான். இந்நிலையில் பதி என அழைக்கப்படுகின்றான். பதி என்பது முதல்வன் ஐந்தொழில் ஆற்றும் நிலையாகும். பொது நிலையில் உள்ள முதல்வனை இலயம், போகம், அதிகாரம் எனும் மூன்று நிலையில் வைத்து விளக்குவர். இலய நிலையில் நாதம் (அபர சிவன்), விந்து (அபரசத்தி) எனும் இரண்டு அருவத் திருமேனிகளை முதல்வன் தரிக்கின்றான். நாதத் திருமேனியில் முதல்வனது ஞானாசத்தி மேலோங்கிக் காணப்படும். விந்துத் திருமேனியில் கிரியா சத்தி மேலோங்கிக் காணப்படும். போக நிலையில் முதன்வன் சதாசிவன் எனும் அருவுருவத் திருமேனியைத் தரிக்கின்றான். இதனை இலிங்கத் திருமேனி என்றும் கூறலாம். இந் நிலையில் முதல்வனது ஞானம், கிரியை எனும் இரண்டும் சமமாகவே இருக்கும். அதிகாரம் எனும் நிலையில் மகேசுரன் எனும் உருவத் திருமேனி தாங்குகின்றான். இந் நிலையிலே இறைவனது அனைத்து உருவத் திருமேனிகளும் கொள்ளப்படும். இதில் இறைவன் தானே தொழில் செய்கையில் ஞானா சத்தி கூடியும், கிரியா சத்தி குறைந்தும் காணப்படும். பக்குவமுடைய ஆன்மாக்களினைக் கொண்டு தொழில் செய்கையில் கிரியா சத்தி கூடியும், ஞானா சத்தி குறைந்தும் காணப்படும். இறைவனது இச்சா சத்தியில் என்றும் மாற்றம் இருப்பதில்லை. அவனுக்கு உயிர்களுக்கு அருள வேண்டும் எனும் பெருமிச்சை ஒன்றே உள்ளது அதனால் அவ்விச்சை என்றும் மாறுவதில்லை. முதல்வன் எத்திரு மேனிகளைத் தரிக்கின்றானே அத்திருமேனிக்கு ஏற்ப அன்னையும் வேறு பெயரில் திருமேனி தரிப்பாள். இதனை **"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்"** எனும் சித்தியார் பாடலில் காணலாம். உருவத் திருமேனியில் உள்ள இறைவனது வடிவத்தினைப் போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என்று மூன்றாகப் பகுக்கலாம். போகம் என்பது அம்மையப்பராக இருந்து உயிர்க்கு இன்பம் பயக்கும் நிலை இந் நிலைக்குச் சோமஷ்கந்தரர், உமாமகேசுவர் போன்றவற்றைக் கூறலாம். யோகம் என்பது இறைவன் நிட்டையில் அமர்ந்துள்ள நிலையாகும். இந்நிலையில் உள்ள இறைவனுன் வடிவம் தட்சிணாமூர்த்தியாகும். வேகம் என்பது தீமைகளை அழிக்கும் நிலை இதற்கு இறைவனது அட்ட வீரட்டச் செயல் புரிந்த நிலையைக் கூறுவர். இக்கருத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கி,

**'திகரணம்**

ஆகவரும் இச்சை, அறி(வு) இயற்றலால் **இலய**
போக அதிகாரப் பொருளாகி– **ஏகத்(து)**
**உருவும், அருவும், உருஅருவும் ஆகிப்**
பருவ வடிவம் பலவாய்'

எனக் கூறுகின்றார்.

**அத்துவா மூர்த்தம்:**

முதல்வன் ஓர் உருவம் ஓர் நாமம் ஒன்றும் இல்லான். ஆனால் ஆயிரம் திருநாமம் தாங்குகின்றான் என மாணிக்கவாசகர் கூறுவார். இவ்வாறு இறைவன் திருமேனி தாங்கினாலும் அவன் சேதன அசேதனப் பிரபஞ்சங்களில் ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கின்றான். இங்கு சேதனப் பிரபஞ்சத்தில் மட்டுமே உடனாய் இருத்தல் நிகழும். உருவம் இல்லாத இறைவனுக்கு உடல் ஏது எனின் இவ்வுலகே அவனது உடலாகும் என்று ஞானியர் கூறுவர். மாயையே உலகமாகப் பரிணமிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மாயையின் காரியமான மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை எனும் ஆறு அத்துவாக்கள் பெருமானது திருமேனியாக உபசாரமாகச் சொல்லப்படும். இதனை,

'மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்
–பந்தனையால்
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவாய் – வைத்த
கலையே அவயவமாய் நின்றோய்'

எனக் கூறுவதைக் காணலாம். இங்கு மந்திர குருதியாகவும், வான்பதம், மணிமுடியாகவும், வன்னம் தோலாகவும், புவனம் உரோமங்களாகவும், முப்பத்தியாறு தத்துவங்களும் சப்த தாதுக்களாகவும் (சப்த தாதுக்களில் குருதி முன்பு கூறப்பட்டமையால் ஏனைய – சுக்கிலம், மூளை, தசை, நரம்பு, எலும்பு என்பன இங்கு கொள்ளப்படும்), நிவர்தி முதலிய பஞ்ச கலைகளினை அங்கம் உபாங்கமாகவும் கொண்டுள்ளான். இக்கருத்தினைச் சிவஞான சித்தியார்' 'அத்துவ மூர்த்தியாக....' எனும் பாடல் தொடங்கி 'மந்திரன் அதனில்...' எனும் பாடல் வரைக்குமாக நான்கு பாடலில் விரித்துக் கூறுகின்றது.

ஈசன் விசுவரூபமாக இவ்வுலகெலாம் நின்று ஐந்தொழில் ஆற்றும் வல்லமையினை,

'அண்டம் உருவாகி, அங்கம் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்று உட் கரணமாய்த் –
தொண்டுபடும்
ஆவிப் புலனுக்கு அறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எம்கோவோ'

என்று கூறுகின்றார். இக்கருத்துக்கள் அனைத்தையும்,

'உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியை உட் கரணமாக,
அலகிலா உயிர்ப் புலன்கட்கு அறிவினை ஆக்கி,
–ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன்
–நாதன்'

என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது.

**அட்டமூர்த்தம்:**

இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் (உயிர்) எனும் எட்டுப் பொருட்களிடம் சிறப்பாக வெளிப்பட்டு அருள்வான். அதனால் இவை அட்ட மூர்த்தங்கள் என்று சொல்லப்படும். இதனை,

'மேவ
வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே! – மெய்ஞ்ஞானம்
தரும் அட்ட யோகத் தவமே!'

என்று கூறினார். திருநாவுக்கரசு சுவாமிகளும் திருத்தாண்டகத்தில் 'இருநிலனாய் தீயாகி நீருமாகி' என்று இக்கருத்தினைக் கூறியுள்ளார்.

**தசாங்கங்கள்:**

உலகினைச் செங்கோன் முறைமை செய்கின்ற வேந்தனை, இறைவனோடு ஒப்பிட்டு அறிஞர்கள் கூறுவர். அந்தவகையில் செங்கோல் செலுத்தும் அரசனுக்குப் பத்து அங்கங்கள் கூறப்படும். பசுக்களின் தலைவனாகிய பசுபதிக்கு அவ் அங்கங்கள் எவை என்று குமரகுருபர சுவாமிகள் கூறுகையில், மலை – இருவினை ஒப்பு அடைந்த அருளாளர் அறிவில் பதியும் இறைவனது சத்தி (அருட்சத்தி–சத்தி நிபாதம். திரோதாயியே பக்குவம் பெற்ற பின்னர் அருட்சத்தியாக பதி கின்றது. ஆறு–சுத்த புவன போகங்கள் நாடு–துரியாதீதம் எனப்படும் உண்மை உணரப்படும் நிலை நகர்–இன்பத்தை நல்கும் உலகங்கள் குதிரை–திருவைந்தெழுத்தை சுத்தமானதாகக் கணிக்கும் முறை யானை–ஐம்மலங்களையும் நீக்கும் சிவஞானம். மாலை–அடியார்கள் மெய்யுணர்வு கொடி–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழில்கள் நடத்தும் கொடி (இறைவனுக்கு இடபக் கொடி, நீற்றுக் கொடி என இரண்டு கொடிகள் திருமுறைகளில் கூறப்படும்) முரசு– சுத்தமாயையின் காரியமான சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும் நால்வகை வாக்குகள் ஆணை–திரோதாயி. இவ்வாறு முதல்வனான இறைவனுக்குப் பத்துத் தசாங்கங்கள் உண்டு என்று கூறுகின்றார். இதனை,

அகலாத பேரன்(பு) அடைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும், – சுகலளிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறும், மீதானம்
தேரின்பம் நல்கும் திருநாடும், – பாரின்பம்
எல்லாம் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லா துயர்ந்த அணிநகரும், – தொல்லுலகில்
ஈறும் முதலுமகன்(று) எங்கு(ம்) நிறைந்து ஐந்தெழுத்தை
கூறி நடாத்தும் குரகதமும் – ஏறு மதம்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும் – வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டும் நறுந்தொடையும், – காரணத்துள்
ஐந்தொழிலும் ஓவா(து) அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும், – சந்ததமும்
நீக்கமின்றி, ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும் – தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித் தனியே
பேசும் தசாங்கம் எனப் பெற்றோனே!'

என்று கூறுகின்றார். சிவஞானசித்தியாரும் முதல்வனை அரசனாகக் கூறுகையில் 'தரணி யோடு **தராபதி** போலத்தாமே' என்று கூறுகின்றது.

ஆன்மாக்கள் உய்திபெற உயிருக்கு உயிராக நின்று அதனை இயக்கிய முதல்வன் குருவாக வெளிப்பட்டு அருளும் திறத்தினைக் கந்தர் கலிவெண்பா கூறுகின்றது. சைவ வழக்கில் சிவனையும் முருகனையும் குருவாகக் கொள்ளும் மரபு உண்டு. 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என அருணகிரிநாதர் கந்தர்குருகவசத்தில் இதனையே கூறுகின்றார். இக்கருத்தினையே,

"கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி உடலறிபத் தெட்டுநிலம்
ஏழுமத்துவாக்கள் ளிருமூன்றும் – பாழாக
ஆணவமான படலம் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞானம் கண்காட்டி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுவதில் அறியலாம். இங்கு ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்ப முதல்வன் விஞ்ஞானகலர்க்கு தன்னிலையில் உள்நின்றும், பிரளயாகலர்க்கு முன்னிலையில் நின்றும், சகலர்க்குப் படர்க்கையில் நின்றும் மலம் நீக்கி ஞானம் உதிப்பித்து வீடு நல்குவான்.

சிவனது பேரருள் திறம் அனைத்தினையும் முருகன்மேல் வைத்துக் கந்தர் கலிவெண்பா பாடப்பட்டுள்ளமை அதன் தனிச்சிறப்பாகும். முருகனை அறுமுகச்சிவன் எனப் போற்று வதற்கு அமைய முருகனே சிவன், சிவனே முருகன் என்னும் சிந்தனை முருக மற்றும் சிவபக்தர்களை ஒன்றிணைக்கும் செயலுமாகும். சைவசித்தாந்தம் முருகன் மற்றும் கணபதி போன்றோரையும் சிவபுத்திரராகவும் சிவாம்சமாகவும் கொள்வது நோக்கத்தக்கது.

"இம்மைப் பிறப்பில் இருவாதனையும் அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் – தம்மைவிடுத்
தாயும் பழய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச் – சேய
அயியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்'

எனக் குமரகுருபரர் இறைவன் திருவடிகாட்டி அருளுமாறு வேண்டுகின்றார். இங்கு இறைவனது தாழ் என்றாலும் திருவருள் என்றாலும் ஒன்றினையே குறிக்கின்றது. இறைவனது திருவடியைக் காணுதல் என்பது இறைவனது கிரியாசத்தி வியாபகத்தையே குறிக்கும். இக்கிரியாசத்தி வியாபகமே இறைவனது திருவடி ஞானமாகும். அஞ்ஞானம் பெற்று அனைவரும் உய்தி பெறுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவ ஞானமே மேலானது

**உயர்திரு.க.ஸ்ரீபவன்**

முன்னாள் பிரதம நீதியரசர், இலங்கை

**07-01-2018இல் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்ற சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 93 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட முன்னாள் பிரதம நீதியரசர் உயர்திரு க.ஸ்ரீபவன் அவர்கள் அங்கு ஆற்றிய உரை.**

**ஸ்ரீ** துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பெருந் தலைவராகவும், உலகம் போற்றும் ஆன்மீக அன்னையாகவும் விளங்கும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 93ஆவது பிறந்ததின அறக்கொடை விழாவிலே பங்குபற்றுவதில் நானும் என் மனைவியும் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

துர்க்காபுரத்து மகளிர் இல்லத்தின் பழைய மாணவியும், தற்போது பட்டதாரி ஆசிரியராய் பணிபுரியும் திருமதி தவனேஸ்வரி அவர்கள் அம்மாவைப் பற்றிப் பின்வருமாறு அருள்ஒளி என்னும் மாதாந்த சஞ்சிகையில் கூறியிருக்கின்றார்.

"தனது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் எண்ணங்களிலும் தூய்மையுள்ளவராக விளங்கி, சமூகத்திற்குப் பலவழிகளிலும் உதவி ஒரு மனிதநேயம்மிக்க பங்காளியாக, ஆன்மீகவாதியாக, வழிகாட்டியாக விளங்கியவர் அம்மா என்றால் மிகையில்லை". இதைவிட மிக அழகாக அம்மாவை வர்ணிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. தாய்ப்பாச உணர்வுக்கு உயிர்கொடுக்க விரும்பிய உத்தம உள்ளம் படைத்தவராக நான் அவரைக் காண்கின்றேன். நம் முன் இருக்கும் நமது கடமைகளைச் செய்வதுதான் நாம் உயர்வு பெறுவதற்கு உரிய ஒரே வழியாகும் என்பதனை நம் எல்லோருக்கும் உணர்த்தியவர்தான் அம்மா. அவ்விதம் நமது கடமைகளைச் செய்வதன் மூலம் நம்மிடம் இருக்கும் வலிமையைப் பெருக்கிக்கொண்டே சென்று இறுதியில் நாம் உயர்ந்த நிலையை அடைந்துவிடலாம் என்ற உன்னத குறிக்கோளை நமக்கு உணர்த்தியவர்.

இளம் துறவி ஒருவர் காட்டிற்குச் சென்றார். அங்கு அவர் தியானம், வழிபாடு, யோகப்பயிற்சி போன்றவற்றில் நீண்டகாலம் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் அவர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். அப்போது அவர் தலை மீது சில உதிர்ந்த சருகுகள் வீழ்ந்தன. அங்கே மரக்கிளை ஒன்றில் ஒரு காகமும் கொக்கும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவருக்கு வந்ததே கோபம்! கோபத்துடன் அவர், "என்ன எவ்வளவு துணிச்சல் இருந்தால் என் தலைமீது சருகுகளை உதிர்ப்பீர்கள்" என்று கூறியபடியே அந்தப் பறவைகளைப் பார்த்தார். யோகி அல்லவா! அவரது கண்களிலிருந்து ஒரு நெருப்பு மின்னல் போல் மேலெழுந்து சென்று அந்தப் பறவைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அவருக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. பார்வையாலேயே பறவைகளை எரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆற்றலைக் கண்டு அவருக்கு தலைகால் புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அந்தத் துறவி, உணவிற்காக அருகில் இருக்கும் ஊருக்குச் சென்றார். அங்கு ஒரு வீட்டின் முன் நின்று "அம்மா, பிச்சை இடுங்கள்" என்று கேட்டார்.

"மகனே! கொஞ்சம் இரு" என்று வீட்டின் உள்ளே இருந்து ஒரு குரல் வந்தது. இதைக்கேட்ட அந்தத் துறவி தனக்குள் "பெண்ணே! என் சக்தியை நீ அறியவில்லை! என்னைக் காக்க வைக்கின்றாயே! உனக்கு எவ்வளவு தைரியம்" என்று நினைத்தார்.

இப்படி அவர் நினைத்ததுமே உள்ளே இருந்து "மகனே! உன்னைப்பற்றி அவ்வளவு பெரிதாக நினைத்துக் கொள்ளாதே! இங்கே இருப்பது காக்கையும் அல்ல, கொக்கும் அல்ல" என்று குரல் வந்தது. துறவி திகைத்துவிட்டார். எப்படியானாலும் அவர் காத்திருக்கத்தான் வேண்டியிருந்தது. கடைசியாக அந்தப் பெண் வெளியில் வந்தாள். துறவி அவள் கால்களில் வீழ்ந்து வணங்கி "அம்மா! நான் மனதில் நினைத்ததை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? என்று வினவினார். அதற்கு அவள் "மகனே! உன்னைப்போல் எனக்கு யோகமோ தவமோ தெரியாது. அன்றாடம் என் கடமைகளைச் செய்துகொண்டிருக்கும் ஒரு சாதாரண பெண் நான். என் கணவர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றார். நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். அதனால்தான் உன்னைக் காக்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் என் கடமைகளை வாழ்நாள் முழுவதும் மனப்பூர்வமாகச் செய்து வருகின்றேன். திருமணத்திற்கு முன்பு பெற்றோருக்கு என் கடமையைச் செய்தேன். இப்போது என் கணவருக்குச் செய்துவருகின்றேன். என் கடமைகளை நான் செய்துவந்த காரணத்தால் என் ஞானக்கண் திறந்துவிட்டது. அதன்மூலம் தான் நான் உன் எண்ணங்களைப் புரிந்துகொள்ள முடிந்து என்றாள். ஆகவே பிள்ளைகளே! உங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யப் பழகிக்கொள்ளுங்கள். அதற்காக அத்திபாரம் உங்கள் அனைவருக்கும் இங்கேயே இடப்பட்டுள்ளது. அம்மா காட்டிய வழியைப் பின்பற்றி உங்கள் சொல்லிலும், செயலிலும், எண்ணங்களிலும் தூய்மையுள்ளவராக விளங்குங்கள். இதுவே நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை.

இன்னுமொரு கதை, இராமபிரானின் கணையாழியை அடையாளப் பொருளாகத் தன்னிடம் கொண்டுவந்து கொடுத்த அனுமன் மீது அளவற்ற பாசம் தோன்றியது சீதாப்பிராட்டிக்கு. உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தவளின் முடிவை மாற்றி வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்திய அனுமனுக்கு என்ன பரிசு தருவது என நினைத்தாள் சீதாபிராட்டி.

மகனே! நீ என்றென்றும் சிரஞ்சீவியாக இருப்பாயாக!" என்று, தன் உயிரைக்காத்தவனுக்கு என்றென்றும் வாழும் சிரஞ்ஜீவித்துவத்தை வரமாக அளித்தாள் சீதாதேவி. அந்த வரத்தின் சிறப்புத்தன்மை என்ன? யாரிடம் கேட்டறிவது? என்று அனுமன் யோசித்தான். அனுமனுக்குத் திடீரென ஜாம்பவான் ஞாபகம் வந்தது. ஜாம்பவானும் சிரஞ்ஜீவியாக என்றென்னும் வாழும் வரம் பெற்றவர்தானே! அவரிடம் சிரஞ்ஜீவியாக இருப்பதால் என்ன இலாபம், என்ன நஷ்டம் என்று விசாரித்தான் அனுமன்.

ஜாம்பவான் ஒரு பெருமூச்சோடு சொன்னார். "அனுமனே! நாம்தான் சிரஞ்ஜீவி. நம் உறவினர்களோ, நண்பர்களோ சிரஞ்ஜீவி அல்லரே! ஆகவே அவர்களின் நிரந்தர இழப்பை அடுத்தடுத்து நாம் தாங்க வேண்டியிருக்கும்!"

"சரி, இந்த வரத்தால் கிடைக்கும் இலாபம் என்ன?" எனக் கேட்டான் அனுமன். ஜாம்பவான் பெருமிதத்தோடு சொன்னார், "நெடுங்காலம் உயிர் வாழ்வதால் நம் அனுபவ அறிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாகிக்கொண்டே இருக்கும். கல்வியால் கிடைக்கும் அறிவின் கனபரிமாணத்தைவிட, அனுபவத்தால் கிடைக்கும் ஞானத்தின் கன பரிமாணம் பல்லாயிரம் மடங்கு அதிகம். மற்றவர்கள் சிரமப்பட்டும் உணர இயலாத மாபெரும் உண்மைகளை நம் மனம் அனுபவ ஞானத்தின் மூலம் ஒரே கணத்தில் உணர்ந்துகொள்ளும். உன் அனுபவ ஞானத்தால் நீ பலருக்கு வழிகாட்டலாம்" என்றார்.

இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகின்றது. ஞானம் வேறு. அறிவு வேறு. கல்வியால் அறிவு வரும். அனுபவத்தால்தான் ஞானம்பெற முடியும். கல்வியை ஏட்டுப் படிப்பால் அடையலாம்; ஞானத்தை வாழ்க்கைப் பள்ளியில் படித்தே அடையமுடியும். அறிவுக்கு விலை உண்டு; ஞானம் விலைமதிப்பற்றது. முதுமையை மதிக்க வேண்டும் என்று சொல்வது வெறுமனே அவர்களின் வயதுக்காக அல்ல. வயதால் அவர்களுக்குக் கிட்டியிருக்கும் அனுபவத்திற்காக!

முதியவர்களின் அறிவுரை கேட்டு நடக்கும் குடும்பங்கள் என்றும் நல்வாழ்க்கை வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. பெற்றோரையும் முதியோரையும் மதிக்க வேண்டும் என்று நம் பண்பாடு சொல்வது ஏதோ சம்பிரதாயமல்ல. அதன் பின்னணியில் இந்த வாழ்வியல் ஞானம் குறித்த மதிப்பீடு அடங்கியிருக்கின்றது. அனுபவசாலிகளை மதித்து அவர்களிடம் அறிவுரை கேட்பதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. இன்று நாம் மதிக்கும் அனுபவசாலிகள் எல்லாம் ஒரு காலத்தில் தங்களைவிட அனுபவம் மிக்கவர்களிடம் பல நுணுக்கங்களைக் கேட்டுத்தான் அறிந் திருப்பார்கள். வழிவழியாக வற்றாத ஜீவநதி போல் ஓடிவரும் அனுபவ ஞானம் என்ற வெள்ளத்தால்தான் வாழ்க்கை வளம் பெறு கின்றது.

"தாய் – தந்தையைக் கவனி" என்கின்றது வேதம். பிறந்த குழந்தைகளுக்கும் மனைவிக் கும் பாதுகாப்பாகச் செயற்படச் சொல்கிறது தர்மசாஸ்திரம். "வேதமும் தர்மசாஸ்திரமும் சொன்னதை அலட்சியம் செய்பவன் எனது பக்தனாக மாட்டான்", என்கின்றார் கண்ணன். தர்மசாஸ்திரக் கோட்பாடுகளைச் செயற்படுத்தும்போதும், நாம் செய்யும் கடமை களிலும் இறைநாமத்தையும் பக்தியையும் கலந்து செயற்படும்போதும் இறைவன் நமக்கு எப்பொழுதும் துணையாக இருப்பான். முக் காலத்தையும் உணர்ந்து அதற்குத் தக்கபடி நம் வாழ்க்கையை அமைத்து அருளும் ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் உங்கள் அருகிலேயே உறைகின்றாள். அம்பாளின் சந்நிதிக்கு வந்து நின்று ஒரு நிமிடம் கண்மூடிப் பிரார்த்தித்து தரிசனம் செய்தால் அவளே உங்கள் மனதில் புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் விதைத்துவிடுவாள். அருளே வடிவாக விளங்கும் அன்னையின் ஆசி உங்கள் அனை வருக்கும் கிடைக்க அவளையே இறைஞ்சி விடைபெறுகின்றேன்.

**"அனுபவ ஞானமே மேலானது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் மகத்துவம்

கலாநிதி செ.திருநாவுக்கரசு

"உலகமெங்கணும் பரவி நின்றதும்
உயிரினங்களில் மருவி நின்றதும்
அளவில்லாததும் அழிவில்லாததும்
ஆதி பராசக்தி"

என்று சைவ சித்தாந்தத்தின் உட் பொருளை உள்ளடக்கி மகாசக்தியின் இயல்பினைப் பாடியுள்ளார் உடுமலை நாராயணகவி. "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி, பின்னமிலான் எங்கள் பிரான்" என்று இறைவனாகிய சிவபெருமான் திருவருட் சக்தியினின்றும் பிரிவின்றிக் கலந்துள்ளான் என்பதைத் திருவருட்பயன் நூல் உரைக்கும். இறைவன் தன் திருவருட்சக்தியின் துணைகொண்டே ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான். ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றான் எனக் கொள்வது சைவசித்தாந்தம். பல தெய்வங்களாய், ஒரு தெய்வமாய் உள்ளது. ஒரு பொருளாய் இறைவழிபாடு இயற்றப்பட்டு வளர்ச்சி கண்டது இந்து மதத்திலாகும். "அர்த்த நாரீஸ்வரர்" என்னும் அம்மையப்பன் பாதிபாதியாய் விளங்கும் வடிவ வழிபாடும் சிவ – பார்வதி வணக்கத்துக்குரியதாய் இன்றும் போற்றப்படுவது. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெருந் தெய்வங்களுக்கும் முறையே சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி ஆகிய மூன்று சக்திகளைக் (ஆற்றல்களை) கற்பித்து, அவற்றைத் தெய்வீக நிலை யில் பூசித்து வருவதும் இந்துமத மரபினை அடியொற்றியதாகும். உலகின் தோற்றம் முதல் மனித குலமானது இயற்கை வழிபாட்டினையே முதலில் மேற்கொண்டது. பாரத நாட்டின் நதிகள் பலவும் புராண இதிகாச வழிநின்று கங்கா, யமுனா, சரஸ்வதி, கோதாவரி எனப் பெண்களின் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிட மக்களது சிந்துவெளி நாகரிகத்தில் சக்திவணக்கம் போற்றப்பட்டதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அங்கு தாய்த்தெய்வ வழிபாடாக அது காணப்பட்டது. உலகைப் படைத்தவன் என்ற உண்மையை நிலைபெறச் செய்யுமுகமாக ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து தழைக்கும் செடியொன்றின் உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மரதேவதை, நதி தேவதை, வன தேவதை, நில தேவதை என்றவாறு சக்தி வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்து சமயச் செயல்நெறியில் சக்தி வழிபாடு இரண்டறக் கலந்துள்ளது. தமிழர்களில் பெரும்பாலானவர்கள் சைவசமயத்தினர். அவர்கள் உலகெங்கும் பரவி வாழுகின்றனர். தாம் வாழும் இடமெங்கனும் ஆலயங்களை அமைத்து வழிபடுகின்றனர். அந்த ஆலயங் களில் மூலமூர்த்தமாகவோ, பரிவார மூர்த்தமாக சக்தி விளங்குவதைக் காணமுடியும். உலகில் அருள் புரியும் சக்தி பீடங்கள் பலவுள்ளன. இந்தியாவிலும், இலங்கையிலும் அவை தொன்மை பெற்றுள்ளன.

சக்தியின் வடிவங்கள் பற்றியும் புராணங்கள், இதிகாசங்கள், பக்திப் பனுவல்கள் யாவும் கூறியுள்ளன. அவள் ஆயிரம் நாமங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவள், எப்படி ஒரு தாயானவள் பல்வேறு குண பேதங்களையும்காட்டுவாளோ, அவ்வாறே அருள்பொழியும் சக்தியானவளின் ரூபங்களும் வேறுபடும்; மாறுபடும். ஒவ்வோர் ஆலயத்திலும் ஒவ்வொரு பெயர் அவளுக்கு. பெண்மையின் மென்மையில் பார்வதியாகவும், வன்மையில் காளி, துர்க்கையாகவும் விளங்குகிறார். நீலி, சூலி, பைரவி, வராகி, திரிபுர சுந்தரி, துர்க்கை, காளி, பார்வதி, சிம்மவாஹினி, சாமுண்டி, அம்பிகை என்றவாறு அவள் பல கோலங் கொள்பவள்; பல நிலைகளில் அருள்பவள்.

"உண்மையாம் பிரமம் தன்னிலே புணரும்
பெண்மையாகும் பெருமங்கையாய்
கண்ணில் காணும் பல தோற்றமாகிடும்
வண்ணம் ஆக்கும் சக்தி – முகில்
வண்ணனாகி காக்கும் சக்தி – முக்
கண்ணனாகியே அழிக்கும் சக்தி
ஆதி பராசக்தி"

என உடுமலையார் பாடுகையில் முத்தொழிலையும் சக்தியே மும்மூர்த்திகளினூடாகச் செய்கின்றாள் என்கிறார். சக்தி பற்றிய புராணச் செய்திகள் ஏராளம். அவை கூறும் நம்பிக்கையின் அடித்தளத்தில் மக்கள் வழிபாடு ஆற்றுவதும் நடைபெறுகிறது. கவிஞர் கூறும் புராணம் தழுவிய அருட் செயல்களில் சில வருமாறு;

"எதிர்த்த தக்கனை யொழித்து முப்புரம்
எரித்த அற்புத சிவசக்தி
இடர் செயு மவுணர்கள் பொடிபட – மயிலவன்
அயில்புகு ஜெய ஜெய சக்தி
ஆதி பராசக்தி
வளர் திங்கள் நதி கங்கை மலர்க் கொன்றை யணிகின்ற
சிவசம்பு மகிழ் "சுந்தரி நிரந்தரி மலை தந்த
முகபிம்ப எழில் சிந்தும் அரவிந்த பத அந்தரி
புரந்தரி
மனதில் நிலைபெறு மினிய கலைகளும்
புகழுமுயர்வுறு தெருளும் பல பல
பொருளும் உலகிய வறிவும் தரும் சக்தி"

சக்தியானவள் உலக நாயகி; பாரினைப் படைத்த தாயானவள்; இருந்தும் என்றும் குமரியாய் விளங்குபவள்; அன்பின் வலை தனில் அகப்படும் ஆரமுது வேண்டுவார் வேண்டுவதை அருள்பவள்; வேத வித்தகி; அபிராமி பட்டருக்கு அருள் புரிந்தவள்; மகிஷாசுரனை மர்த்தனம் செய்தவள்; சாந்தமும் குரூரமும் கொண்டவள்; அவளருளாலே முத்தியடைந்தோர் பலருளர் சக்தி விரதங்கள் இன்றும் அடியவர்களால் நோற்கப்படுகின்றன மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சி யில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், பெரிய பாளையத்தில்பவானியாகவும், திருவேற்காட்டில் கருமாரியாகவும் வீற்றிருப்பவள். ஈழத்தில் தெல்லிப்பளையில் துர்க்காதேவியானவள், முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாகவும், திருக்கோணேச்சரத்தில் மாதுமையாளாகவும், திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளாகவும் வீற்றிருந்து சிவசக்தியாக அருள்பாலிக்கின்றார். ஒவ்வொரு இடத்தினிலும் ஒவ்வொருநாமங் கொண்டவளாயினும் சக்தி என்றும் ஒருவளேயாவாள். ஆறென்றும் நதியென்றும் ஓடையென்றாலும் – அது

நீரோடும் பாதை தன்னைக் குறிக்கும்
நிற்கும் ஊர் மாறிப் பேர்மாறி உருமாறிக் கருமாறி
ஒன்றே ஓம் சக்தியென்றே உரைக்கும்"

கவிஞர் கண்ணதாசனின் கருத்துப்படி சர்வம் சக்திமயமென்பதை உணர்ந்து, அவள் பாதங்களே எமது பிறவித் துன்பத்திற்கான விடியலைத் தருமிடம் என்பதை நினைத்து வணங்கி உய்வோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கை வழிபாடு

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்த வடிவம் துர்க்கை எனப்படுகிறது. இத்தெய்வ வழிபாட்டால் புகழ், உயர்வு, செல்வம், மங்களம், சுகம், மோட்சம் ஆகியவற்றைப் பெறலாமென்றும், தன்னை வழிபடுவோரின் துக்கம், பீடை முதலியனவற்றை துர்க்கை ஒழித்தருள்வாளென்றும் நூல்கள் கூறுகின்றன. இராகு காலத்தில் துர்க்கை அம்மனை வழிபட வேண்டும். மண்விளக்கில் நெய்த்தீபம் ஏற்றி வைத்துப் பூசிப்பது நல்லது. பால், பாயாசம் முதலியனவற்றை நைவேத்தியமாக வைக்கலாம். துர்க்கா அஷ்டோத்திரம், சுகுநாமாவளி சொல்லித் துதிக்கலாம். இராகு கிரகத்தின் அதிபதி துர்க்கையாதலால் இராகு காலவழிபாடு சிறந்ததாகும். மங்கையர்கள் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் வழிபடுதல் முறையாகும். துர்க்கை தனித்திருக்கும் ஆலயத்தில் ஓர் எலுமிச்சம்பழத்தை இடையாக நறுக்கி, சாறு பிழிந்து, பின் விளக்குப் போல் திருப்பி, நெய்யூற்றி, அதன்பின் ஐந்து இழைகள் கொண்ட நூல்திரி போட்டு, நுனியில் சிறிது கற்பூரம் வைத்து விளக்கு ஏற்ற வேண்டும். அடுத்தவர் ஏற்றிய விளக்கில் ஏற்றக்கூடாது. விளக்கினைச் சோடியாகத்தான் வைக்க வேண்டும். ஒளி அம்மனை நோக்கி இருக்க வேண்டும். 'துர்க்கா' என்பது வடமொழிச் சொல். தமிழில் 'கொற்றவை' எனப்படும் பார்வதியின் ஆங்கார

வடிவங்களில் ஒன்று. வடமொழியில் 'துர்க்கா' என்பதன் பொருள் 'வெல்ல முடியாத வள்' ஆகும். தமிழில் 'கொற்றவர்' என்பது 'வெற்றிக்கு உரியவள்' எனப் பொருள்தரும். துர்க்கா பற்றிய புராணக் கதைகள் பலவுள்ளன. மகிடாசுர அசுரனை அழிக்கத் தோன்றியவள், மேதிய அவுணன் கொல்பாவை, மகிடாசுர மர்த்தனி எனப்படுபவள். சிவபுராணத்தில் ஈசனின் இடப்பாகத்திலிருந்து தோன்றியவள் என்றும், மீண்டும் இரம்பன் என்னும் அசுரனின் மகனான மேதியவுணனை (மகிடாசுரனை) அழிக்கும் மும்மூர்த்திகள் மற்றும் ஏனைய தேவர்களிலிருந்து ஒளிவடிவில் தோன்றியவள் என்று தேவிமான்மியம் நூலும் கூறுகின்றன. துர்க்கா தெய்வம் பிற்காலத்தில் விந்திய மலைத்தொடர், இமயமலைப்பகுதி முதலியவற்றில் வாழ்ந்த பழங்குடிகளின் போர்த் தெய்வமாக வளர்ச்சி பெற்றதை அறியலாம். பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் ஆகிய பழந்தமிழ் நூல்கள் கொற்றவை என்ற அன்னையைத் துர்க்கா தெய்வமாகக் கூறியுள்ளன. முருகனின் தாய்; நெற்றிக் கண்ணு டையவள்; சிவ அடையாளங்கள் தாங்கியவள்; காலின் கீழ் அசுரனின் ஒருமைத்தலை கிடக்க நின்றவள் எனத் தமிழ்நூல்கள் வர்ணித் துள்ளன. திருமுருகாற்றுப் படையானது 'பழை யோற்குருவி' என முருகனைக் குறிப்பிடுகிறது.

நவராத்திரி விரத நாட்களில் துர்க்கை வழிபாடு பாரதநாடு முழுவதிலும் பரந்து காணப்படும். வடநாட்டில் "தசரா" எனக் கொண்டாடப்படும் குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என ஒன்பது நாட்களுக்குரிய சக்தியின் நாமங்கள் அர்ச்சிக் கப்படுகின்றன. இந்நாட்களில் முறையே சக்கரைப் பொங்கல், தயிர்ச்சாதம், வெண் பொங்கல், எலுமிச்சஞ்சாதம், புளியோதரை, தேங்காய்ச்சாதம், கற்கண்டுச்சாதம், அக்கர அடிசிலும் தண்டலும் ஆகியவற்றை நிவேதனமாக வைத்து வழிபடுதல் வேண்டுமெ னக் கூறப்படுகிறது. விஜயதசமி வரையுள்ள நவராத்திரியின் (தசராவின்) இறுதி நான்கு நாட்களும் வங்காளம், அசாம், ஒரிசா, நேபாளம் ஆகிய இடங்களில் கோளாலே வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. கார்த்திகேயன், கணேசன், இலக்குமி, சரஸ்வதி ஆகிய நால்வரும் புடைசூழத் துர்க்கை வீற்றிருக்கும் வழிபாடு வங்காளத்தில் சிறப்புடையது. தெலுங்கானாவில் "பாதுகாம்மா" என்ற பெயரில் நவராத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுகிறது. நவராத்திரி தொடர்பாக உலகெங்கணும் வாழும் இந்துமதத்தவர் முப்பெருந்தேவியரையும், சிறப்பாக மூன்று சக்திகளும் ஒன்று சேர்ந்த ஆதிபராசக்தியையும் வழிபட்டு வருவது மரபு. காஷ்மீரில் "சாரிகை" என்ற பெயரில் இவ்வழிபாடு நடைபெறுகிறது. யட்டீஸ்வரம் துர்க்கை, விஜயவாடா கனக துர்க்கை, மைசூர் சாமுண்டேஸ்வரி, இலங்கையில் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆகிய கோயில்கள் துர்க்கா வழிபாட்டிற்கான குறிப்பிடத்தக்க ஆலயங்களாகும்.

இராகு, கேது கிரகங்களால் ஏற்படும் சிரமங்களை நிவர்த்திக்கும் பொருட்டுத் துர்க்கை வழிபாடு செய்தல் இயல்பானதாகும். அபிராமிப்பட்டருக்கு அம்பிகை அருள் செய்த நாளாகத் தைமாத அமாவாசை போற்றப்படுகிறது. சக்தியின் மென்வடிவமே அம்பிகை. திருக்கடவூர் அம்பிகை ஆலயத்தில் தன்னை மறந்த நிலையில் அம்பாளின் ஒளியழகில் ஈடுபட்டிருந்த பட்டருக்கு, ஆலயத்திற்குப் பரிவாரங் களுடன் வழிபட வந்த தஞ்சை அரசன் சரபோஜி பற்றித் தெரியவில்லை. அனைவரும் எழுந்து மரியாதை செய்தபோது பட்டர் மட்டும் அம்பாளை நினைத்து உருகியிருந்தார். யார் இவர்? என அம்மன் கேட்டபோது அம்பாளின் அடியவரான பைத்தியம் என மறுமொழி கிடைத்தது. இன்று என்ன தினம்? எனப்பட்டரை அரசன் கேட்ட போது முழு அமாவாசை நாள் என்பதைக் கருதாமல், அம்பாளின் அம்பாளின் ஒளி அழகை நினைந்து பௌர்ணமி நாளெனப் பட்டர் மிடுக்காகக் கூறியதும், அதை நிரூபித்துக் காட்டாவிடில் உயிர் பறிக்கப்படும் என அரசன் கட்டளையிட்டதும் அடுத்து நிகழ்ந்தது. ஆழக் கிடங்கு வெட்டி அதிலே தீ வளர்த்து அதன்மேல் தொங்குகின்ற நூறு இழைகளிலானான ஊஞ்சலிலோ (உறியில்) பட்டரை ஏற்றி விட்டனர். நூலிழை ஒவ்வொன்றாக அறுத்து முடிவில் பட்டரும் தீயிக்கு இரையாகும் நிலை காணப்பட்டது. தாயே! அம்பிகையே! என் நாவிலும் மனத்திலும் வீற்றிருந்து 'பௌர்ணமி' எனச் சொல்லச் செய்தவள் நீ தானே! என இரங்கி அழுத பட்டர் தீயின் மெலான உறியில் நின்றபடி அம்பாளை நினைத்து "அபிராமியந்தாதி" யைப் பாடினார். கடவுள் வாழ்த்தும், நூற்பயனும் தவிர்ந்த நூறு பாடல்களைக் கொண்டது இந்நூல். பட்டர் பாடி வருகையில் ஒவ்வொரு நூலாக அறுந்து கொண்டேயிருந்தது. 79வது பாடல் முடிவடைந்ததும் அம்பாள் பட்டருக்குத் தோன்றினாள். தனது காதிலணிந்த குண்டங்களில் ஒன்றையெடுத்து, வானில் வீசினார். வானத்தில் முழுநிலவாக அது பிரகாசித்தது. மன்னம், ஏனையோரும் அபிராமிப் பட்டரின் தூய பக்தியை மெச்சினர். மன்னிப்பையும் அவரிடம் கேட்டன் அரசன். பட்டர், அபிராமிப்பட்டரானார். திருக்கடவூர் அம்பாள் உலகறிந்தவளானார்.

**அபிராமி அந்தாதி**

அபிராமியந்தாதியைப் பாடியவர்கள் அம்பாளின் பேரலகிலும், பெருமைமிகு அற்புத் செயல்களிலும், அவளது அடியார் மீதான பெருங்கருணையிலும் மனமொன்றி உருகிவிடுவார்கள். உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி மென்குடிக் குங்கும தோயமென்ன விதிக்கின்ற மேனி என்றவாறு முதற்பாடலிலேயே அம்பாளாம் அபிராமியை உவமைகளாலும், உருவகத்தினாலும் போற்றுகின்றார் அபிராமிப்பட்டர்

"சுருதிகளின் பனை"

"மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளம்"

"சிந்துர வண்ணப் பெண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகிடன் தலைமேல் அந்தரி"
"ஆரணத்தோன் சுந்தரி"
இலையத்து அன்றும் பிறந்தவள்"
பண்ணளிக்கும் சொல்பரி மலியாமறைப் பைங்கிளி"
"வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே"
"உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்து"
"கமழ் பூங்கடம்பு சாத்தும் குழல் அணங்கு"
"அத்தர் சித்த மெல்லாம் குழைக்கும் களபக்குவிமலை யாமலைக் கோமளம்"

இவ்வாறெல்லாம் அம்பாளைப் பல்வேறு கோணங்களில் கண்டு மகிழ்கிறார் பட்டர். பார்க்கும் இடமெல்லாம் அவளாகவே காண்கிறார். அனைத்தும் அவளென்றே உணர்கின்றார்

"மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணி புனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதலர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!"

என அபிராமியை நினைந்தேற்றும் பாடலழகு போற்றுதற்குரியது. எளிய சொற்களாலான பக்திப்பனுவலாக அபிராமியந்தாதி விளங்குகின்றது. உண்மையான அடியவர்களுக்குச் சோதனை வரும்போது உடனின்று காப்பவள் அன்னை மகாசக்தி என்பதைப் பறைசாற்றுகிறது.

"பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும் போகம் செய்யும் மருளே! மருளில் வரும் தெருளே!" என மறந்திறந்து கூவுகிறார்பட்டர். "புதுப்பூங்குவளைக் கண்ணி" இறைவர் வலிய நெஞ்சை நடம் கொண்ட கொள்கை நலம் கொண்ட நாயகி", "சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக்குன்றில் ஒன்றிப் படரும் பரிமளப் பச்சைக்கொடி", "மின்னாயிரம் ஒரு மெய் வடிவாகி விளங்குகின்றது அன்னார்", "அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி", அருமறைகள் பழகிச்சிவந்த பதாம்புயத்தாள்", பனிமாமதியின் குழவித் திருமுடிக் கோமளயாமறைக் கொம்பு", ஆகிய பலவும் அபிராமிப்பட்டர்ரின் அழகு தமிழிலான அருஞ்சொற் புதையல்கள்

"நாயகி, நன்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி, சாம்பி, சங்கரி, சாமளா, சாதி நச்சு
வாயகி, மாலினி, வராகி, சூலினி, மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே"

உலக அன்னையின் பல்வேறு கோலங்களுக்கான நாமங்களை அபிராமிப்பட்டர் பட்டியலிடுகிறார். மேலும்பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர் உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும் கலா வயிரவி மண்டலி, மாலினி, சூலி, எனவெல்லாம் ஆயிரம் நாமங்களுடையாளை அர்ச்சிக்கின்றார். அபிராமியந்தாதி ஆன்ம ஈடேற்றத்துக்கான நூல் மகாசக்தியின் மகிமையைப் பாராட்டும் நூல் தமிழிலக்கிய வரலாற்றில் தங்கமாக மிளிரும் நூல். சக்தியின் துணையோடு, அவள் மீது கொண்ட அன்பே அரணாக நம் வாழ்கை வழிகாட்டும் ஆன்மீகப் புதையலாக விளங்குவது.

எனவே மகாசக்தி, துர்க்கை, அம்பி கை எனவெல்லாம் நாம் துதிக்கின்ற உலகமுழுதுடையாளின் அடிபணிந்து வாழ்க்கை நலம் பெறுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மிக பலம்

– கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

இப் பூமியில் வாழுகின்ற மனிதர்கள், தெய்வீக மனத்தினர், மனித மனத்தினர், விலங்கு மனத்தினர் என பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றனர். மனத்தின் இயல்பினைப் பொறுத்தே அவர்களின் குணங்களும், செயல்களும் அமைகின்றன. செயல்களுக்கு அடிப்படையாக உள்ளவை எண்ணங்கள். எண்ணங்கள் மனங்களில் தோன்றுகின்றன. விலங்கு மனங்களில் எழுகின்ற எண்ணங்கள், மிருக உணர்வையும், மிருகச் செயல்களையும் மனிதனிடம் ஊக்குவிக்கின்றன. எனவே, விலங்கு மனத்தினர் பிறருக்குத் தீங்குகளையும் தொல்லைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களால் யாருக்கும் நன்மையில்லை. இத்தகைய விலங்கு மனங்கள், மனித மனங்களாக மாற்றப்படவேண்டியது அவசியம். அதற்கும் இறைவனின் திருவருளே தேவை. மாணிக்கவாசகப் பெருமானும் விலங்கு மனமும், நலந்தான் சிறிதும் இலாமையும் கொண்ட சிறியவனாகிய தன்னை, எம்பெருமான் கசிந்த அன்போடு அணைத்து ஆட்கொண்டமை ஆண்டவனின் திருவருட் செயலே என்று திருவாசகத்தில் கூறுகின்றார். ஆகவே, இறைவனை வேண்டி, அவனருள் பெற்று மனித மனங்கொண்டவர்களாக நாம் வாழத் தலைப்படவேண்டும்.

மனித மனங் கொண்டவர்களே மனிதர்கள். இவர்களே தாமும் வாழ்ந்து, மற்றையோரையும் வாழ்விப்பவர்கள். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளையும் ஒருங்கே கொண்ட உத்தமச் சான்றோர்கள். "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்கிறார் வள்ளுவர். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று" என்பது தமிழ் மக்கள் கொள்கை. பண்புள்ளவர்கள் சிலராதல் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே இவ்வுலகம் இன்னமும் காப்பாற்றப்பட்டு வருகின்றது என்பது தமிழ்மறை கூறும் நல்லுரை. சைவ மக்கள் பண்புடையோராக, உயர்ந்தோர்களாக, சான்றோர்களாக இவ்வுலகில் வாழவேண்டும் என்றும், அப்பொழுதுதான், அவர்கள் இம் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்றும் சைவசமயம் கூறுகின்றது. இவ்வாறு சைவநெறிப்படி வாழ்பவர்கள் படிப்படியாகத் தெய்வீக மனத்தினர் ஆகின்றனர். இது மிக உயர்வான நிலை. அவர்கள் "தன்னுயிர்தான் அறப்பெற்றவர்கள்;" தன்னல மறுப்பு அவர்களின் அணிகலன்.

பிறர் நலம் பேணுபவர்கள், சேவை, தியாக சிந்தை, அர்ப்பணம், இறைபக்தி என்பன இவர்களுக்கே உரித்தானவை. இத்தகைய மனித தெய்வங்களை மன்னுயிரெல்லாம் கைகூப்பித் தொழும். மனிதர்களாகப் பிறந்தவர்கள், விலங்கு நிலையிலிருந்தும் விடுபட்டு, மனித நிலையையடைந்து, படிப்படியாகத் தெய்வீக நிலைக்கு உயரவேண்டும் எனும் குறிக் கோளினை உடையவர்களாகத் திகழவேண்டும். குறிக்கோளை வகுத்துக்கொண்டுவிட்டால் மாத்திரம் போதாது; இக்குறிக்கோள் இயன்ற வரை அடையப்படவும் வேண்டும். சைவநெறி இதற்குரிய வழிமுறைகளையும் வகுத்துத் தந்துள்ளது.

மனமது செம்மையானால், மந்திரம் தேவையில்லை, தந்திரம் தேவையில்லை, யந்திரம் தேவையில்லை, மருந்தும் தேவை யில்லை. அந்த அளவிற்குத் தூய உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும், ஆற்றலும் பெற்றுள்ளது. தூய உள்ளங் கொண்டவர்கள் இவ்வுலகில் எதனையும் சாதித்துவிடும் வல்லமையைப் பெற்றுவிடுகின்றனர். இவர்களிடம் இருக்கும் அபரிமிதமான பலம் ஆத்மீகப் பலமாகும். இப்பலத்தை எல்லோராலும் அடையமுடியும். இதற்கு இறை நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் வேண்டும்.

"புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்கின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். உடலைத் தண்ணீரால் சுத்தப்படுத்தலாம். இது புறத்தூய்மை. மனத்தைத் தூய்மைப்படுத்து வதற்கு நாம் எப்பொழுதும் உண்மைபேச வேண்டும். உண்மையைப் பேசினால் நன்மையைப் பெறலாம். உண்மையைப் பேசிக்கொண்டு வந்தால் மனத்தூய்மை தானாகவே வந்து விடும். அடுத்து, வீணான ஆசைகளை அடக்கிக்கொள்ள வேண்டும். ஆசைகள் மனங்களிற் படிந்துவிட்டால், அழுக்கேறிவிடும். அதனை அகற்றுவது சிரமம், எனவே மனங்களில் ஆசைகள் எனும் அழுக்குகள் படியாதபடி பார்த்துக் கொள்ளுதல் அவசியம். ஆசை என்பது என்ன? என நோக்கில், தமது தேவைக்கு மேலாக, எவற்றிலும் விருப்பம் கொள்வது ஆசை எனலாம். மற்றவர்களுக்கும் தேவைகள் உண்டு. அவர்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டியவை எனும் எண்ணத்துடன் தமது ஆசைகளுக்கு வரம்பு கட்டுபவன்தான் தூய மனமுள்ள மனிதன். உண்மை பேசி, ஆசைகளை அகற்றி, மானுட நேயங்கொண்டு வாழ்வது தான் தூய உள்ளத்தினரின் வாழ்க்கைமுறை. இதுவே வாழத் தகுந்த அற வாழ்க்கை; ஆத்மீக பலம் பெற்ற மனித வாழ்க்கையாகும்.

**வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.**

**நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்**
**அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்**
**பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்**
**சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.**

பொருள் : முக்கண்ணனாகிய சிவனும், நான்மறையும், திருமாலும் பிரமனும் போற்றி வாழ்த்துகின்ற அபிராமவல்லியின் இரு திருவடிகளைப் பிறவிப்பயன் என்றுகூறி வழிபடும் அன்பர்கள், கற்பகச் சோலையில், தங்கக் கட்டிலில் அரம்பையர் முதலான தேவகன்னிகைகள் ஆடவும் பாடவும் சொர்க்க இன்பத்தில் தேவர்களாக இனிது வாழ்வார்கள்.

-அபிராமி அந்தாதி (74)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர், அதிபருடன் மேற்பார்வையாளர்கள்



தவைவருடன் பல்கலைக்கழக மாணவிகள்



தலைவருடன் பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்களுடன் மகளிர் இல்லப் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்களுடன் மகளிர் இல்லப் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் வளர்த்த நாயகியாக விளங்கும் தெல்லிநகர்த் துர்க்கையம்பாள்

**பா.துவாரகன்**
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

இந்துசமயமும் தமிழர்களின் வரலாறும் சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புபட்டவை என்று வரலாற்றாசிரியர்களால் நிறுவப் பட்டுள்ளன. ஆதியும் அந்தமும் இல்லா இறைவன் போன்று இந்து மதமும் இயற்கை வழிபாடும் அனாதியானவை. உலகில் தோன்றிய சமயங்களும் இனக் குழுமங்களும் தங்களது கோட்பாடுகளையும் அறங்களையும் காலாத்துக்குக்காலம் மாறிவரும் பண்பாடுசார் மரபுகளையும் வரலாறாக பல்வேறு வடிவங்களில் பதிவுசெய்து மனித சமுதாயத்திற்கு விட்டுச் சென்றுள்ளன.

நிறுவனமயப்பட்ட நன்கு கட்டமைக்கப்பட்ட சமயம்சார் மனித சமூக அல்லது இனக்குழுமமே இன்று தேசங்களை, உலகினை ஆள்கின்றன அல்லது வழிநடத்துகின்றன.

மாறிவரும் உலக ஒழுங்கில் இன்று மிடுக்கு அலைபேசி உலகினை உள்ளங்கையில் வைத்துள்ளது. இந்துசமயம் மற்றும் அதன் கலைமரபுகள் குறித்து சாதாரணமாக அதைப் பின்பற்றுபவர்களே வெறும்பௌதிக நிலைநின்று கேள்வி கேட்கின்றனர். விடையை அறிவதற்கு ஓர் அறிவு வேண்டும் என்று அறிகிலர்.

இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில் தமிழர்களது கலைமரபின் இந்துப் பண்பாட்டின் ஓர் அடையாளம். 1000 வருடங்கடந்தும் தமிழினத்தின் கலைமரபையும் பண்பாட்டை உலகிற்குச் சொல்கின்றது. இலட்சம் நாமங்கள் கொண்டு இறைவன் அர்ச்சிக்கப்படுவது போல ஓர் உயர்ந்த கலைப்படைப்புக்கும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களுக்கும் ஆயிரம் வியாக்கியானங்கள் இரசனைக்குரியவர்களால் அளிக்கப்படும்.

ஒருவர் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆலயங் களைக் கூறுமாறு கேட்டால் நல்லைநகர்க் கந்தனையும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளை யும் கூறுவேன். சான்றோர் இதனையே அறியத் தந்தனர். இன்னும் சில ஆலயங்கள் கூறத்தக்க இம்மரபுக்குள் வரும். எனினும் இவ்விரு ஆலயங்களும் தமக்கான தனித்துமான நீண்ட நன்மரபையும் பண்பாட்டையும் பேணுபவை. நல்லூர்க் கந்தனுக்கு 500 வருடங்களுக்கு மேலான தனித்துமான தமிழ் அரச மரபு இன்றும் பேணப்படுகின்றது. நல்லூரிலே நேரந்தவறாத இராச உபசாரம் நடக்கின்றது. இது ஒரு அறம். நல்லூரானுக்கு உரிய காணிக்கை யாவும் நல்லூர் கந்தனுக்கு என்பது ஓர் மரபோடு இணைந்த அறம். "தன்னந்தனிநின் றதுதான் அறிய இன்னம் ஒருவர்க் கிசைவிப்பதுவோ".

தெல்லிநகர் துர்க்கை அம்பாளை உலகறியச் செய்து துர்க்கையம்பாளுக்கு தனிமரபை ஏற்படுத்தி ஆலயத்தை அறப்பணிகளுக்கு வழிகாட்டிவர் அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார். அம்மையார் ஆரம்பித்த அறப்பணியை இன்று துர்க்கையம்பாள் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களைக் கொண்டு பரந்துபட்டுச் செய்விக்கின்றாள்.

திருவுத்தரகோசமங்கையில் இருக்கும் அம்பிகைக்கு அறம் வளர்த்த நாயகி என்று ஒரு பெயர் உண்டு. 32 வகை அறங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய விரும்பி அம்பாள் பூவுலகுக்கு வந்து அறம் வளர்த்து திருவுத்தரகோசமங்கையிலே அறம் வளர்த்த நாயகியாக வீற்றிருக்கின்றாள். குபேரவாயில் கோபுரத்துடன் விளங்கும் தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் இன்னும் பல கோபுரங்களைக் கண்டு ஈழத்தில் அறம் வளர்த்த நாயகி என்று போற்றப்படுவாள்.

'பின்னே திரிந்து நின்யடியாரைப் பேணிப் பிறப்பறுக்க வழிகாட்டிய தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் தமியேனையும் தன் பக்தருக்குள் ஒருவனாக ஆண்டு கொண்ட நேசத்தை' யான் என் சொல்வேன்.

# நெஞ்சத் துயர் அனல் நீக்கும் நிழல்

**த.ஜெயசீலன்**

வானினை நோக்கியே கூப்பிய கையென
வடதிசை பார்த்துயர்ந் தோங்கி
வாசல்... 'குபேரனின் வாசல்'...எழும்: செல்வ
வரம் வரும் வழி வகை தூண்டி!
ஞானப் பெருங்குவை சேர்க்கும் இறை பணி
நாட்டினார் கோபுரம் ஆக்கி!
நன்மை பிறக்கும் மென்மேலும் ....அறம் மிகும்
நம் அன்னை காப்பளாம் தூக்கி!

பஞ்ச தளப் புதுக் கோபுரம் ..... நம் பசிப்
பஞ்சம் பிணிதுடைத் தோட்டும்.
பாதையாய் மாறிடும்: சொர்க்கம் எம் ஊர் புக
பார்..எங்கள் நாட்டிடர் ஓட்டும்.
நெஞ்சத் துயர் அனல் நீக்கும் அதன் நிழல்
நீதியினை நிலை நாட்டும்.
நில்: 'தெல்லி துர்க்கைக் குபேர வாசல்' முன்.....!அது
நிம்மதியைப் பாலாய் ஊட்டும்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானாமிர்தத்தில் பதிக் கோட்பாடு – ஓர் ஆய்வு

**கு. தவசீலன்**
உதவி விரிவுரையாளர், இந்து மெய்யியல்
இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

வாகீச முனிவரின் ஞானாமிர்த நூலானது கி. பி 12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் பொதுவாகக் குறிப்பிடுவர். ஞானாமிர்தம் எனும் சொல்லானது குற்றமோ குறையோ இல்லாத அமிர்தம் எனப்படுகின்றது. 'அமிர்தம் என்று சொல்லுகின்ற போதே அவை இரு விடயங்களை உணர்த்துவதாகவும் தேவகுண்ட சாவா மருந்து, அது குறித்து கடைந்து எடுக்கப்பட்ட செய்தி என்பன' என ஔவை. துரைசாமிப்பிள்ளை கூறுகின்றார். பொதுவாக ஞானாமிர்தம் என்பது ஞானமாகிய அமிர்தம் என்று விரியும். ஞானமானது சிவநெறி பற்றிய அறிவு, சிவம், உயிர், உலகு என்ற முப்பொருளின் உண்மையும் ஒவ்வொன்றிற்கும் உள்ள இயல்பும், பிணைப்பும் பற்றி அறிந்து கொள்ளும் அறிவு. அமுதம் என்பது தன்னை உண்டாரை உலகில் நீண்ட காலம் வாழச் செய்யும் இயல்புடையது. அது போலவே சிவநெறி பற்றிய அறிவாகிய ஞானம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவப் பரம்பொருளின் திருவருள் இன்ப வாழ்வில் என்றும் நிலைத்து நிற்கச் செய்யும் தன்மை உடையது. இத்தகைய ஞானாமிர்தமானது சைவசித்தாந்தம் கூறுகின்ற பதி, பசு, பாசம் முதலிய முப்பொருள் உண்மைகளைக் கூறி தத்துவ விளக்க நூலாக அமைந்திருக்கின்றது. அந்தவகையில் ஞானாமிர்தத்தில் காணப்படுகின்ற பதி பற்றிய சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரையானது அமைகின்றது.

சைவசித்தாந்தம் என்பது சைவத்தின் முடிந்த முடிபாகும். இது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மைகளைக் கூறி, வைப்பு முறையில் பசு, பாசங்களுக்கு பதியானது முதன்மையாக இருப்பதனால் பதியை முதலில் வைத்துள்ளது. எனவே இத்திரிபதார்த்தங்களுள் பதி முதன்மைக்குரியதாகும். இங்கு பதி என்பது இறை, கடவுள், ஈசன், பேருயிர், பரமாத்மா எனப் பல நாமங்களில் குறிப்பிடப்படுகின்ற சித்தாந்தக் கடவுள் 'சிவம்' எனப்படுகின்றது. சிவம் என்ற அருவப்பொருள் தத்துவ முறையிலே பதி எனப்பட்டது. இதனை **'ஊனக் கண் பாசமுணராப் பதியை ....'** எனச் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரம் விளக்குகின்றது.

ஞானாமிர்தமானது பசு, பாசங்களுக்கு அடுத்ததாகவே பதியைப் பற்றி விளக்குகின்றது. பாசம் நீங்கிய ஆன்மா பற்றிக் கொள்ள வேண்டியது பரமனின் சீர்பாதம் என்ற இன்றியமையாமையின் அடிப்படையில் 'பாசச் சேதவியல்' என்ற பகுதிக்கு அடுத்ததாக பதி நிச்சயம் என்ற தலைப்பில் 53 ஆவது அகவல் தொடக்கம் 72ஆவது அகவல் வரை பதி பற்றிய தன் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது வாகீசர் சம்மிய ஞானம் எனும் உண்மை அறிவையும் சம்மிய தரிசனம் என்னும் உண்மைத் தெளிவையும் பந்தங்களின் தன்மையையும் பந்தங்களில் இருந்து விடுபடும் வழிகளையும் தெளிவுற விளக்கிய பின்பு ஆசிரியர் தனிப்பெரும் முழுமுதலைப் பற்றி பதி நிச்சயப்பகுதியில் கூற விளைந்துள்ளார்.

மாலும் அயனும் தேடிக் காணமுடியாத இறை என்றும் ஒளிவு அற நிறைந்த ஒருவன் என்றும் பதி இலக்கணத்தைக் கூறி அதனூடாக எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல அனாதியான எனப் பலவாறாக பதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிகரற்ற ஒப்பிடற்கரிய இயல்புகளை குறிப்பிட்டுள்ளது. அதனை அடுத்துவரும் அகவலில் கேவலான்னுவய வெதிரேகி அனுமானப் பிரமான வழி இறைவன் பிரபஞ்ச கருத்தா என்பதை **'பூபூதராதி ஓவற உயற்று ஒருவனை உடைத்து....'** என இறைவன் பிரபஞ்சங்களைப் படைத்தல் புலப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக உலகுடன் இறைவனுக்கு உள்ள தொடர்பையும் ஆன்மாக்களின் இலக்கான முக்தியை இறைவனே அருளும் வகையில் பதி பசுத் தொடர்பு என்ற ஒழுங்கமைவில் ஞானாமிர்தம் பதியை விளக்க முனைகின்றது.

ஞானாமிர்தம் பதியின் இயல்புகளை இரண்டு நிலைகளாகப்பிரித்து பதி இலக்கணம் என்ற தலைப்பின் ஊடாக விளக்குகின்றது. இந்நிலையை சைவசித்தாந்தம் சொரூபநிலை, தடத்தநிலை என விளக்குகின்றது.

**பதியின் சொரூபநிலை**

சொருபநிலை என்பது குணம், குறி, வடிவம், நாமம் ஆகியன இல்லாமல், மலங்க ளால் பந்திக்கப்படாமல், ஒரு பொரு ளாய், நித்தியத் தன்மையுடையவனாய், சலனம் அற்றவனாய், அகண்டிதமாய், ஆனந்த வடிவாய் சச்சிதானந்தமாய் இறைவன் விளங்குகின்ற உண்மை நிலையே இதுவாகும் என்று மெய்கண்ட சாத்திரங்கள் தொகுத்துக் கூறியுள்ளன. இவ்வாறு மெய்கண்ட சாத்திரங்கள் கூறுவதற்கு முன்பே ஞானாமிர்தமானது இச் சொரூபநிலை பற்றிய கருத்துக்களைக் கூறி நிற்கின்றது. ஞானாமிர்தம் இந்நிலை பற்றிக் குறிப்பிடுகையில் 'தற்பொருவு இறந்த மெய்ப்பரம்' என தனக்கு உவமையற்ற நித்திய ஞானானந்த சொரூபமானவன் பதி எனக் குறிப்பிடுவதனைக் காணலாம். அதாவது பரமசிவன் ஒப்பிட்டு விளக்குவதற்கு அப்பாற்பட்டு உவமை கடந்தவனாய் உள்ளான் என்கின்றது. இதனை திருவருட்பயன்

**'பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருள் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்'**

என எடுத்தாண்டுள்ளமையைக் காண லாம். அகவல் 55 இல் பதி இலக்கணம் என்ற தலைப்பில் இறைவனது சொரூபநிலை சிறப் பாக விளக்கப்பட்டுள்ளது. பிரம்மா விஸ்ணு க்களாலும் அடி முடி தேடியும் காணமுடியாது போன பரமசிவன் தத்துவாதீதன் என்பதை,

**"மூலமாகிய தத்துவம் முழுவதும் கடந்தும் ஏறுயிர்ந்திரு தனிமுதல்வனன்றி வேறார்"**

எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு ஒப்பு தற்குரியது. அடுத்து ஒளிபற நிறைந்த ஒருவன் எனவும் சர்வவியாபியாகிய எங்கும் நிறைந்த ஒருவன் எனவும் பழிதீர் வண்ணம் இல்லி எனவும் மாசற்ற வண்ணங்களில் ஒன்றும் இல்லாத நிறமற்றவன் எனவும் அமலன் மலபந்தமற்ற நிர்மலன் எனவும் இணையிலி தனக்கு உவமையிலான் மண்முதல் புலனொரு புணரான் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டவன் எனவும், யானென் மதத்தின் பிறப்பிலி என பிறப்பற்றவன் எனவும் ஞானாமிர்தம் சொரூபநிலையை எதிர்மறை நிலையில் உணர்த்தியுள்ளது. இதனை,

"ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்

பெயரிலான் ஒரு முன்னிலான் மண்ணிலான் பிறிதோர்

சாதிலான் வரல் போக்கிலான் மேரிலான் றனக்கு"

எனக் கச்சியப்பரும் குறிப்பிட்டுள்ளார். மேலும் தனக்கென ஒரு நாமமும் இல்லாதவன் மூன்று காலங்களுக்கும் காலமாக இருப்பவன், சலனமற்றவன், தற்பரன், பயம் இல்லாதவன், நித்தன், முத்தன், சுத்தன், பங்கிடப்படாதவன், முக்தி இல்லாதவன், சுக துக்கம் அற்றவன் எனப் பலவாறு குறிப்பிடுகின்றது. ஞானாமிர்தம் கடைசியில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"காட்சி முதலிய வளவையும் மளவற சேட்பட வகன்றனன் சிவன்"**

என அறிவுணர்வு வழிகளாகிய காட்சி முதலாக உள்ள பிரமாணங்களாலும் அளவிட முடியாத நுணுக்கரிய நுண்ணுணர் வாகியுள்ளான் என்று விளக்குகின்றது. இக்கருத்துநிலைகளை அடிப்படையாக வைத்தே இறைவன் பௌதிக, பௌதிக அதீத நிலைக்குரியவனாக இருப்பது மட்டுமன்றி ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் விபரிக்க முடியாத உயர்ந்த நிலைக்குரியவன் முதலிய விளக்கங்களை மெய்கண்ட சாத்திரங்கள் விளக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்னும் நூலில்,

**" நிலவும் அருவுருவின்றி குணங்குறி களின்றி**

**நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி**

**அலகுயிற்க்குகுணர்வானாகி அசலமாகி**

**திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந் துள்ளேரே"**

எனவும் அருணந்திசிவாச்சாரியார் சித்தியாரில்

**"பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய**

**பரம்பரனைப் பதி ஞானத்தாலே நேசமோடும் உள்ளத்தே...."** எனவும்

இறைவனின் உயர்ந்த நிலையைப் பாடி யுள்ளமை வாகீசமுனிவர் பதி யிலக்க ணமாக கூறியுள்ளமையை சித்தாந்தம் பயின்றோர் அறிவர்.

**பதியின் தடத்தநிலை**

சொரூபநிலையில் உள்ள இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு தன்னிலையில் இருந்து ஒருபடி கீழ் இறங்கி வந்து அருளும் நிலையே தடத்தநிலை எனப்படும். தடத்தநிலையினை விளக்கும் போது சிவப்பிரகாசம் **"நாடரிய கருணை திருவுருவமாகி நினைந்த உரு நிறுத்திடுவன் நிமலன்"** என இறைவன் உயிர்கள் மேல் கொண்ட கருணையாலே உருவத் திருமே னிகளை மேற்கொள்வதுடன் அங்ஙனமே நினைத்த போது நினைத்த வடிவை எடுக்கும் உரிமையுடையவர் என உருவம் கொள்வதன் காரணம் கூறப்பட்டது. இந்நிலையை முன்பே ஞானாமிர்தம் சர்வகாரண சிவன் அவிகாரி, பஞ்சகிருத்திய அவிகாரி என்ற அகவலில் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

**மூவகைத்திருமேனிகள்**

தடத்த நிலையில் இறைவன் அருவம், உரு வம், அருவுருவம் எனும் மூவகைத்திருமேனிகள் கொண்டு விளங்குகின்றான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. ஞானாமிர்தம் இவை பற்றி விளக்கும் போது சிவன் அருவன், உருவன், அருவுருவன் என்னும் மூவகைத் திருமேனிகளை தமக்குச் சுதந்திரமாகக் கொண்டு பிரபஞ்சகிருத்தியத்திற்கு கர்த்தாவாக உள்ளார். இதனை **'அருமறை யறையு முருவிலி யருவுரு....'** என்பதனூடாக முத்திருமேனிகளைப் பற்றி ஞானாமிர்தம் கூறுவதனைக் காணலாம். மேலும் 65 ஆவது அகவலில் மீண்டும் ஒரு தடவை இம்மூவகைத் திருமேனி பற்றிய செய்தி ஞானாமிர்தத்திலே காணப்படுகின்றது.

**பதியின் வியாபகம்**

அ என்ற ஒலி எவ்வாறு எழுத்துக்க ளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்து ள்ளதோ அதேபோல் இறைவன் எல்லா உயிர்களுக்கும் அடிப்படையாக அமைந்து 36 தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவராக விளங்கி எங்கும் வியாபித்தவராகவும் பாச பந்தம் அற்றவராகவும் உணர்வுகளுக்கு அப்பாட்பட்டு அகங்காரம் ஆற்றுபவராகவும் பிறப்பு, இறப் பிற்கு உட்படாதவராகவும் ஒரே நேரத்தில் எங்கும் பிரசன்னமாக உள்ளவராகவும் விடுதலையை அளிப்பவராகவும் கட்டுப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரங்களுக்கு அப்பாற்பட்டவராகவும் உள்ள உயர்ந்த வியாபகத் தன்மைகளை சைவசித்தாந்தம் பதியின் இயல்புகளாகக் குறிப்பிட்டுள்ளமையை மெய்கண்ட சாஸ்த்திரத்தின் மூலம் அறியலாம். அவற்றுக்கு முன்னோடியான ஞானாமிர்தம் பதியானவர் யாவற்றையும் கடந்து எதனுக்கும் உட்படாதவர் என்பதுடன் உலகினின்றும் தனித்தனி ஆன்மாக்களில் நின்றும் பிரிக்கமுடியாதவாறு எங்கும் நிறைந்துள்ள சர்வவியாபகி எனும் கடவுளின் ஏகாந்த நிலையை அகவல் 56 இல் திறம்பட விளக்கியுள்ளது.

மேலும் இறைவன் உணர்வுள்ள உணர்வற்ற அனைத்துப் பொருட்களின் உள்ளும் புறமுமாக இருக்கின்றார். இத்தன்மையால் உலகப் பொருட்களில் இருந்து பிரிப்பின்றி உள்ள இறைவன் மாணிக்கக்கல்லும் அதன் பிரகாசமும் போலவும் சந்திர ஒலியும் போலவும் விறகில் தீயும் பாலில் நெய்யும் பழத்தில் சுவையும் உடலில் உயிரும் சொல்லில் பொருளும் எள்ளில் எண்ணெய்யும் அழகிய மலருள் பரவிய வாசமும் போல எங்கும் வியாபித்து இருக்கும் விதத்தை ஞானாமிர்தமானது

**“.....மின்னவிர்**

**பதுமராகப் புதுவெயி னீழல்செய்**

**மதியின் றண்மை ஞெலிகோல் வன் றழல்**

**மடநடை நல்லான் வனமுலை வந்த**

**பாலிற் றீநெய் பழத்தி னின்சுவை.....”**

என இறைவன் தன்னைத் தவிர்ந்த அனைத்துப் பொருட்களிலும் நீக்கமற நிறைந்து வியாபித்துள்ளான் என்பதனை தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் ஆசிரியர் விளக்கியுள்ளார். அத்தோடு இறைவன் மண் முதலிய ஐம்பூதங்களிலும் எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்து மாசற்ற பளிங்கு போல எங்கும் நிறைந்த தன்மையை மேலும் அதே அகவலின் இறுதியில்

**“நிலம் நீர் தீ கால் வெளி உயிர் யாவும்**

**அவையே தான் அவைதானே ஆகி**

**விரலியும் விரவா வீரம் விரவிய”**

என ஞானாமிர்தம் சுட்டி விளக்குவதை சிவஞானபோதமானது

“அவையேதானே யாயிரு வினையின் போக்கு

வரவு புரிய வாணையின் நீக்கமற நிக்குமன்றே”

எனக் கூறியுள்ளமை ஞானாமிர்தம் கூறியுள்ள பதியின் வியாக்கிர இயல்புக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது.

இங்கே ஞானாமிர்தக் கூற்றுப்படி ஐம்பூதங்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்துள்ளான் என்னும் பொழுது அது எங்ஙனம் எனில் ஒரு பொருள் மற்றொரு பொருளைச் செயற்படச் செய்யும் பொழுது அவை பிரிக்கமுடியாது பிணைந்தனவாக ஆகின்றன. அதன்படி உலகம் செயற்படுகையில் கடவுள் அதனைச் செயற்பட வைக்கின்றார். அவ்வகையில் இறைவன் உலகைச் செயற்பட வைப்பதில் இரு வேறு பொருட்களாகப் பிரித்தறிய முடியாதவாறு வியாபித்துள்ளமையை ஞானாமிர்தம் பொருத்தப் பாட்டுடன் விளக்கியுள்ளது. மேலும் அகவல் 61 இலே **“ஒளிவற நிறைந்தோ நின்றும் குழிகட்..”** என்ற செய்யுள் அடி மூலம் பிசாசு பிடித்தவனிடம் பிசாசு எங்குள்ளதென இணங்காண முடியாதவாறு இருப்பது போல இறைவனும் எல்லாப்பொருள்களிடத்தும் வியாபித்துள்ளான். கடவுள் ஒளிமயமானவரும் சூரியனைப் போன்று பிரகாசமானவரும் ஆவார். கண்ணுள்ளவரால் சூரியனை மட்டுமே காணமுடியும். குருடனால் காணமுடியாது. அது போல உணர்வுசூழ் கடந்த ஞானவான்களால் அன்றி கடவுளை உணரமுடியாது என கடவுளின் வியாபகத் தன்மையை ஞானாமிர்தம் புலப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

**ஐந்தொழில்**

இறைவன் உயிர்களுக்கு அருளுவதற்காக உருவம் ஏற்கும் நிலையில் அவனுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக ஐந்தொழில்கள் பேசப்படுகின்றன. படைத்தல்,காத்தல்,அழித்தல், அருளல், மறைத்தல் எனும்தொழில்கள் ஐந்து வகையாகக் கூறப்படினும் இவை அனைத்தும் உயிர்களுக்கு அருள் செய்வதற்காகவே இறைவனால் செய்யப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றும் பிரம்மா, திருமால், உருத்திரனுக்குரியதாகக் கூறப்பட்டபோதும் சிவனது ஏவுதலாலேயே இவற்றைச் செய்வ தாக சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு இறைவன் ஆற்றும் ஐந்தொழிலை ஞானாமிர்தம் பஞ்சகிருத்திய அவிகாரி என்ற தலைப்பின் கீழ் 'ஓவர றியற்றும் ஒருவன்' என்ற வரியின் ஊடாக இறைவன் ஐந்தொழில்களை இடையறாது செய்து கொண்டிருக்கிறான் என விளக்கி நிற்கின்றது. மேலும் இறைவன் உலகிலே பல்வேறு வடிவங்களைக் கொண்டவராக இருந்தாலும் செயற்பாட்டால் மாற்றமோ, வேறுபாடோ, எதுவும் அற்றவராக உள்ளார். மற்றும் கடவுளின் சக்தியானது ஒப்பற்றது, ஒளிமயமானது எல்லாம் வல்லது என்றும் மாறாதது எந்த சக்தியாலும் மாற்றப்பட முடியா தது சுத்த மாயையில் இருந்து நிகழும் அனைத்து மாற்றங்களிற்கும் அடிவேராக அமைந்து பஞ்ச மூலங்கள் எனப்படும். அதுவே ஐந்தொழிலுக்கு அடிப்படையாகின்றது என ஞானாமிர்தம் கூறுகின்றது.

சுத்தமாயையின் மீது கடவுளின் செயற் பாட்டை சந்திரன் உதித்ததும் சமுத்திர அலைகள் பொங்கி எழுந்து மோதி முழங்குகின்றன. அது வானைச் சென்றடைவது போல தெரிகின்றது. அவ்வாறே இறைவனின் வியாபகமும் அவருடைய செயற்பாடும் அவருடைய நாதம் எழுவதையும் அவை சுத்தமாயைகளாக அற்று மறைவதையும் கொண்டதாக உள்ளன. கடவுளின் சக்தி ஒன்றானாலும் அது மூவகையாகக் கொள்ளப்படுகின்றது. அவை ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகின்றன. ஆனால் இறைவனின் சக்திக்கு ஆன்மா மீது எவ்வித விருப்பு வெறுப்போ கிடையாது. அனால் ஆன்மாக்களின் விருப்பு வெறுப்பிற்குட்பட்டதான இன்ப துன்பமாக அது ஏற்படுத்துகின்றது.

**முடிவுரை**

எனவே மேற்படி விடயங்களின் பிரகாரம் ஞானாமிர்தமானது சில வேறுபாடுகள் காரண மாக மெய்கண்ட சாஸ்த்திரங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படாவிட்டாலும் சைவசித்தாந்த பதி பற்றிய கருத்தியல்களை தன்னகத்தே கொண்டு மெய்கண்ட சாஸ்த்திரங்களுக்கு முன்னோடி நூலாக இருந்தது மாத்திரம் இல்லாது, அதற்கு வலுச்சேர்த்த ஒன்றாகவும் காணப்படுவதனை அறியமுடிகின்றது.

**உசாத்துணைகள்**


1) ஞானகுமாரன், நா., (2012),சைவ சித்தாந்தத் தெளிவு, தூண்டி வெளி யீடு, யாழ்ப்பாணம்.

2) திருவிளங்கம், மு., (1925), சிவஞான சித்தியார் சுபக்கம், கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம்.

3) ஔவை துரைசாமிப்பிள்ளை, (1954), ஞானாமிர்த மூல மும் பழைய உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இந்தியா.

4) அம்பை சங்கரனார், ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், தஞ்சா வூர் பல்கலைக்கழகம்.

5) சிறிதேவி மார்க்கண்டு, (2000), மெய்கண்ட சாஸ்த்திரங்களுக்கு முற்பட்ட சைவசித்தாந்தம் (வெளிவ ராத ஆய்வுக் கட்டுரை), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

6) வெள்ளைவாரணனார், க., (2002), சைவசித்தாந்த சாத்திர வரலாறு, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் பண்பாட்டில் மலர்கள்

**கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன்**
முதுநிலை விரிவுரையாளர், தரம் – 01
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திருக்கோயில் பண்பாட்டில் மலர்கள் திருக் கோயில் பண்பாடு**

திருக்கோயில் பண்பாடு பற்றி அறிவதற்கு ஆகமங்கள் துணைபுரிகின்றன. ஆகமங்கள் இறைவன் நூல் என்றவகையில் சமயநெறி சார்ந்த பிரமாண நூல்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. ஓர் இனத்தின் பண்பாடு அதனோடு தொடர்புடைய இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது. நிலத்தை நல்லவகையில் மற்றவர்களுக்குப் பயன்கொடுக்கும் வகையாகப் பயன்படுத்துதல் போன்று மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில் மற்றவர்களை வாழ்விக்கும் நெறியில் நலம்பேணும் வகையில் சிந்தனைகளைப் பயன்படுத்திக் கொள்வதும் பண்பாடு ஆகும். பண்பாட்டின் வகைகளும் வெளிப்பாடுகளும் சூழ்நிலை, சமூகம் உள்ளம் ஆகியவற்றைச் சார்ந்து உருவானவை.

ஆகமம் காட்டும் பண்பாடே திருக் கோயில் பண்பாடாகும். இப்பண்பாட்டின் நிலைக்களன்களாகச் சிவாலயங்கள் சிறப்படைந்தன. இச் சிவாலயங்கள் நாயன்மார்களின் சைவபக்தி இயக்கத்திற்கு நிலைக்களனாக விளங்கின. ஆகமமரபில் குறிப்பிடப்படும் கிரியைகள் ஆலயங்களில் பக்தியை வளப்படுத்த உதவியமையும் குறிப்பிடத்தக்கது. ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடு பற்றியும் கோயில் அமைப்பு பற்றியும் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தூலவிங்கம், சூக்கமலிங்கம், பத்திரலிங்கம் ஆகியவை பற்றியும் குறிப்பிடுகின்றது. கோயிற் பூசைகள் முறையாக நிறைவேறாதுவிடின் வரும் கெடுதல்கள் பற்றியும் திருக்கோயிலிழிவு என்ற பகுதியிற் கூறியுள்ளார். காலத்திலும் இடத்திலும் வேறுபட்டு கோயில்கள் பல ஒரு பிரதேசத்தில் பரந்து காணப்படினும் அக்கோயில்களின் கட்டட அமைப்பு வழிபடுவதற்கான இறைவனது திருவுருவ அமைப்பு மற்றும் அங்கு நிகழும் நித்திய நைமித்தியக் கிரியைகள் ஆகிய விடயங்களில் காணப்படும் ஒழுங்கு சீர்மை என்பவற்றுக்கு ஆகமங்களே அடிப்படையாகத் திகழ்கின்றன.

திருக்கோயில்கள் இயற்கையான சூழ்நிலைகளைக் கொண்ட மலை, ஆற்றங்களை வனம் போன்ற இடங்களில் எழுச்சி பெற்றவிடத்தும் நகரங்களிலம் கிராமங்களிலும் ஓர் ஒழுங்கு முறையில் கோயில்களை அமைக்க ஆகமங்கள் உதவியுள்ளன. மக்கள் வாழ்வதற்கேற்ற கிராமத்தையோ, நகரத்தையே உருவாக்கும் போதே இவ்விடத்தில் ஆலயம் அமைத்தல் வேண்டும் என்ற விளக்கமும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. நிலத்தின் விளக்கமும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. நிலத்தின் தன்மைக்கும் அதில் வாழும் உயிரினங்களுக்கும் ஏற்ப பன்னிரண்டு விதமான நிலங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவையாவன சைவபூமி, பிரம்மபூமி, விஷ்ணு பூமி, இந்திரபூமி, பூதபூமி, ஆலயரைபூமி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைசாச பூமி, ராஷஸ பூமி, வாயு பூமி, வருண பூமி, ஆக்னேய பூமி ஆகிய பிரிவுகள் உள. மேலும் ஆலயங்கள் நாகரம், வேஸரம், திராவிடம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது போன்று நிலங்களும் இவ்வகையிற் பிரிக்கப்பட்டுள்ளன. ஆகமமரபில் எழுச்சி பெறும் கோயில்களைச் சுற்றியே மக்கள் சமூகம் சிறப்புடன் வளர்ச்சி பெற்றது.

ஆலய நிர்மாணத்துக்குரிய நிலங்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் பற்றியும் சமயக்கிரியைகள் பற்றியும் ஆகமங்கள் விரித்துரைக்கின்றன. இதனால்தான் அப்பரும்

"திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீயாத திருவிலூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே....."

எனப் பாடியுள்ளார். மேலும் கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முது மொழியும் இங்கு நினைவு கூரத் தக்கதாகும். ஆலயம் ஒன்றினை அமைப்பதற்கு தகுந்த காலம், அபசகுணம், நிலத்தேர்வு தராதரம் அறிதல், நிலத்தை உழுதல், பரப்பளவிற்கு ஏற்ப நிலத்தைப்பகுத்தல், பிரவேசபலி, சங்கு ஸ்தாபனம் போன்றன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

**மலர்ப் பண்பாடு**

மனிதன் தோன்றிய காலம் முதல் இயற்கையுடன் இயைந்து, வாழ்ந்து கொண்டிருக்கின்றான். புல்பூண்டு, செடி, கொடி, மரங்கள் தாவர இனத்தைச் சேர்ந்தவை; ஓரறிவுடையவை; பரிணாம வளர்ச்சியில் உயிர்த்தோற்றத்தின் முன்னோடிகள்; ஓரறிவுயிர் படிப்படியே இரக்கங்கொண்டு ஆறறிவுயிராகிய மனிதன் வரையில் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது அறிவியலுண்மையும் சமய நம்பிக்கையுமாகும். எனினும் மனிதன் ஏனைய ஐந்தறிவு உயிர்களிடத்தும் தன்னை இணைத்துக் கொண்டு அவ்வாறான சூழலிலும் ஒருவகையான ஆன்மநேயப்பண்பாட்டினை உருவாக்கியுள்ளான். இந்நிலையில் ஓரறிவுயிர் அவனது உணர்விலும் உள்ளத்திலும் உயிரிலும் பதியலாயிற்று. அதன் அடையாளமாகவே அவன் கொண்டிருக்கும் மலர்ப் பண்பாடு அமைந்துள்ளது.

உலக அரங்கில் பலநாடுகளிலே மலர்களைப் பல்வேறு நோக்கங்களிலே பயன்படுத்துகின்றனர். எனினும் இந்துக்களின் வாழ்வியலில் அக ஒழுகலாற்றிலும் புறவொழுகலாற்றிலும் மலர்கள் பயன் படுத்தப்படுகின்றன. அன்னையின் மடியில் வாழ்வைச் செயலாற்றி மண்ணின் மடியில் அடங்கும் நிலையிலும், மலர்கள் அவனுடன் தொடர்பு கொண்டுள்ளன. அதாவது கழுவாய் இருந்த காலத்திலும், பூமியில் பிறப்பெழுத்த காலத்திலும், குழந்தையாய்த் தவழ்ந்த காலத்திலும், படிப்படியே வளர்ந்த காலத்திலும், பருவமுற்ற காலத்திலும் திருமணத்தின் போதும், பல்வேறு விழாக்களைக் காணும் போதும், அன்பானவரை வரவேற்கும், காலத்திலும் தெய்வத்தை வழிபடும் காலத்திலும், புகழ்நிறுவி வாழ்வை முடித்த காலத்திலும், மலர்கள் அவனது வாழ்வியலில் பின்னிப் பிணைந்துள்ளன. எனவே இந்துப் பண்பாடு பெரிதும் மலர்ப் பண்பாடாகவே அமைந்து விடுகின்றது எனலாம்.

**இயற்கை வழிபாடும் மலர்களும்**

பண்டைய இயற்கை வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய கருத்துக்களை நோக்கும்போது மனிதன் ஐம்பூதங்களையும் கண்டு பணிந்து வணங்கி வழிபட்டதை நாம் அறியமுடிகின்றது. காலத்துக்குக்காலம் மக்கள் வழிபாட்டு நடைமுறைகளிலே சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படையில் மாற்றம் ஏற்படவில்லை என்றே கூறமுடிகின்றது. சங்ககாலத்தில் இயற்கை வழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்கொண்டு வழிபடும் முறைமை இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. தெய்வத்திற்குரிய மடையிடும் பொருட்களில் மலர்கள் சிறப்பிடம் பெற்று விளங்கின. இதற்கு எடுத்துக்காட்டாக ஐங்குறுநூறிலே வருகின்ற

"குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங்கையண்
முலர்ந்த காந்த ணாறிக்
குலிழ்ந்த கண்ணளெம் மணங்கியோனே"
(ஐங்குறுநூறு: 259)

என்ற பாடலில் மலையிலே உறைகின்ற கடவுளுக்கு மலையிலே வாழ்கின்ற இளமகள் செய்யும் வழிபாடு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வேங்கை மலர்கள் சிலவற்றைக் கொய்து தூவி நறிய தேனைப் பலியாக அள்ளிச் சொரிந்து அவள் வழிபடுகிறாள். மலைத்தெய்வம் அவள் முன்னோர் வழிபாடு செய்த குலதெய்வம் மலர்கள் வழிபாட்டில் இடம்பெறுவதற்கு அவற்றின் காலங்காட்டும் மலர்வும் நறுமணமும் காரணமாயின. காலை, மாலை, இரவு எனப்பொழுதுகளின் வரவையும் கார், வேனில் என்னும் பருவங்களின் மாற்றத்தையும் மலர்கள் மக்களுக்கு அறிவித்தன. இயற்கையோடு இயைந்த அக்கால வாழ்க்கையில் கால மாற்றத்தை அறிவதற்கு இயற்கையின் வெளிப்பாடுகள் உதவின. கவின் நிலையிலே மலர்கள் மனிதரைத் தொடர்புறச் செய்தன. நாற்றமும் வண்ணமும் மனிதரை அணுகச் செய்தன இவ்வியப்புகளைக் கண்டு வியப்புற்ற மனிதன் அவற்றை இயற்கையின் கொடையென மதித்து வழிபாட்டுப் பொருட்களாக்கினான் பூக்களைச் சொரிந்து இயற்கையை வழிபடல் பூசையாயிற்று 'மலர்' என்ற சொல்லும் 'பூ' என்ற சொல்லும் வேறுபட்ட நிலையிலிருப்பதை முன்னெம் உணர்ந்திருந்தனர் 'பூ' என்பது முழுமையான விருந்த நாற்றமுடையதன்று மலர் என்பது முழுவதும் மலர்ந்தது. இறைவனுக்கு மடையிடும் போது முற்றாக மலர்ந்த மலர்களையே பயன்படுத்த வேண்டும். மலராதவை தவிர்க்கப்பட்டது. வேறு நிலைகளிலே மலர்கள் முற்றாகப் பயன்படுத்தப்பட்டன. மனிதன் தம் உடலை அழகுபடுத்த அவற்றைப் பயன்படுத்தினான். விழாமன்றுகளையும் அழகுபடுத்தினர். இறைவன் தாள்களிலே இட்டு வணங்குவதற்கு முற்றாக மலர்ந்த நறுமணமுடைய மலர்களே பயன்படுத்தப்பட்டன. பூ மலர் என்னும் சொற்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சான்றாக

'பேரமர் மலர்க்கண்மடத்தை எனவும்
மான் எழில் மலர்க்கண் எனவும்
பனிமலர்க் கண்ணி எனவும்
பனிமலர்க் கண்ணர் எனவும் வருகின்ற
சங்கப்பாடலடிகளில் மலர் என்ற சொல்லையும்
பூங்கண் மடத்தை எனவும்
பூங்கட் பேதை எனவும்
பூங்கண் ஆயம் எனவும்
பூங்கண் பதல்வன் எனவும் வருகின்ற
சங்கப்பாடலடிகளிப் பூ என்ற சொல்லையும்
குறிப்பிடுகின்றன.

கண்களின் அழகின் வேறுபாட்டை எடுத்துக்காட்ட மேற்படி எடுத்துக்காட்டுகளில் மலரும் பூவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு மலர் அழகுடன் உணர்வு நிலையையும் புலப்படுத்தும் கண்களை விளக்கி நிற்கின்றது. பூ அழகுடன் இளமையையும் சிறுமையையும் உடைய கண்ணை விளக்கி நிற்கின்றது. மேலும் பூ மூடிய கன்னையும் மலர் திறந்த கண்ணையும் சுட்டுவதும் உண்டு. இவ்வகையில் இரு சொற்களும் பொருள் நிலையில் நுண்ணிய வேறுபாடு கொண்டுள்ளதை நாம் உணர முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார் பாடல்களும் மலர்களும்

நாயன்மார் தாம் பாடிய தேவாரப் பாடல்கள் வாயிலாக மலர்கள் பற்றிய குறிப்புக்களை ஆங்காங்கே பதிவு செய்து உள்ளனர். இவ்வகையில் மலர்களின் பண்பாட்டு நிலைகளைச் சம்பந்தர் பாடல்கள் இரண்டு வகையாக எடுத்துக் காட்டுகின்றது. ஒன்று இயற்கை நிலையான மலர்களது கவினினிய தோற்றம். மற்றையது செயற்கை நிலையான தோற்றமும் பயன்பாடும். வழிபாட்டு நடைமுறையிலே மலர்கள் இறைவனுக்கு பல்வேறு வடிவ நிலையிலே கொடைப்பொருளாகின்றன. மரபான முறையிலும் மாற்றங்கள் பெற்றும் மலர்கள் மனிதரால் பயன்படுத்தப்பட்டதை சம்பந்தர் விரிவாக விளக்குகின்றார். மலர்களின் வண்ணமும் வடிவமும் நிறமும் இறைவன் கோல அழகுக்கு அணிசெய்தன. சங்க இலக்கியங்களிலே மனிதன் வாழ்வியலில் மலர்கள் பயன்பட்ட இயல்புகள் சுட்டப்பட்டுள்ளன. வழிபாட்டு நிலைப் பயன்பாடு அத்துணை விரிவாகக் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களில் மனித உடலழகினை விளக்க உவமை நிலையிலே மலர்கள் பயன்படுத்தப்பட்டன. சிறப்பாகப் பெண்களின் மென்மைத்தன்மையையும் உறுப்புக்களையும் விளக்கப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இயற்கையான பெண்களின் அழகுநிலை புலவர்களால் பாடப்பட்ட போது மலர்களின் பெயர்களின் வேறுபாடும் விளக்கமாக வெளிப்பட்டது. சம்பந்தர் தமது பாடங்களிலும் இத்தகைய வேறுபாடு தோற்றுமாறு பாடியுள்ளார். மேலும் மலர்களின் செயற்கை நிலையினை விட இயற்கை நிலையையே பாடல்களில் சுட்டியுள்ளார். மானிடரோடு மக்களின் தோற்றத்தோடு மலர்களின் இயல்பை அவர் பாடியதைவிட இறைவனுடன் மலர்களைத் தொடர்புபடுத்திப் பாடிய பாடல்களே அதிகமானவை. இவ்வாறு இறைவனுடன் மலர்களைத் தொடர்புபடுத்திப்பாடிய இடங்கள் ஏறக்குறைய முந்நூற்றைம்பது. அவற்றில் கொன்றைமலர்தொடர்புபட்டஇடங்கள் இருநூற்று இருபத்தைந்து மேலும் சம்பந்தர் ஏனைய மலர்கள் பற்றிய குறிப்புக்களைத் தருவதால் இறைவழிபாட்டில் மலர்கள் பயன்பட்டமையை அறிய முடிகின்றது. சான்றாக,

'நல்இலங்கமும் ஈங்கோய் மலையாரே' எனவும்
'செஞ்சடை வெள்ளெருக்கம் மலர் வைத்தார்' எனவும்
'சடையிடை வெள்ளெருக்க மலர்' எனவும்
'வருகின்ற தேவாரப்பாடலடிகளைக்'
குறிப்பிடலாம்.

இறைவனின் அழகுத் தோற்றத்துடன் மலர்கள் தொடர்புற்றிருந்த நிலையினைச் சம்பந்தர் விளக்கியுள்ளார். மலர்கள் வெறுமனே சூடுவது மட்டுமன்றிப் பல்வேறு வகையான புனைதல் நிலையிலும் அணியப்பட்டுள்ளன. மாலைகளாகத் தொடுக்கப்பட்ட மலருடன் சாந்து புகை, எரி என்பனவும் வழிபாட்டு நடைமுறையில் இணைந்திருந்தன. மலர் வழிபாட்டின் பயன் பற்றியும் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். சான்றாக "உமையவர் கொண்டு உரைவிளிப்போர் உயர்ந்தோரே" எனவும்

'உமையவர் கொரு தொழ அல்லல் கெடுவது துணிவே' எனவும்

'கந்த மாமலர் தூவிக் கைதொழும் சிந்தையர்வினைதேயுமே' எனவும்

'நித்தலும் நியமம் செய்து நீர்மலர் தூவிச் சித்தமொன்ற வல்லார்க்கருளுஞர் சிவின்' எனவும் வருகின்ற பாடற்குறிப்புக்களைக் காட்டலாம்.

மலருடன் நீர்தெளித்து வழிபடும்முறை பண்டுதொட்டு நிலவிவருகின்றது. அடியவர்கள் மலரோடு புனல் கொண்டு வணங்குவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைகட்டி வழிபாடு செய்வதும், அலங்கல் சூட்டுவதும், துணைநல் மலர் தூவி வழிபடுவதும், மலர் சொரிந்து ஏத்தலும், நித்தம் மலர் இட்டு பணிதலும், பனி மலர் கொண்டு போற்றலும், புகழ்தலும், வண்ணமலர் புனைந்து வழிபடுவதும், விரைமலர் கொண்டு தொழுதலும் எனப் பல்வேறு நிலையான வழிபாட்டு நடைமுறை முறைகளைச் சம்பந்தர் காட்டுகின்றார். அவர் பல தலங்களுக்கும் சென்றமையால் பிரதேச நிலையில் வழிபாட்டு நடைமுறையில் மலர்களின் பயன்பாடு எத்தகையது என்பதை நன்கு உணர முடிகின்றது.

வழிபாட்டிடங்களாகக் கோயில் அமையும் போது அதைச் சூழப் பூமிபொழில்கள் அமைக்கப்பட்டன. வழிபாடு மலரின்றி நடைபெறுவதில்லை. பொழில்களை அமைப்பதில் இருந்த செம்மை நிலைமையைச் சம்பந்தர் பாடல் மூலம் விளக்கியுள்ளார். இன்றும் மலர்கள் என்ற சொற்றொடர் இதனைச் சுட்டுகின்றது. மலர்களின் நறுமணமும் தன்மையும் தாய்மையும் வண்ணமும் வடிவமும் இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தின. மனிதன் ஆக்கத்திறனுக்கு அவை அடிப்படையாகவும் விளங்கின. மனிதன் இறைவனை வணங்கி வாழ எண்ணியபோது தன்னைச் சூழவுள்ள இயற்கையை அதன் வளங்களைத் தனக்கென ஆக்கித்தந்த இறைவனுக்கு மலர்களால் மனங்கனித்து வழிபாடு செய்தான். சம்பந்தர் காலத்திலும் இவை நடைமுறையில் இருந்தது. மலர்களை இறைவனுக்கு மடை பொருளாக்கும் போது வெவ்வேறு வகையாகச் செய்யப்பட்டதையும் உணரமுடிகின்றது. தூவுதல், சொரிதல், இடுதல், மிடைதல், வைத்தல், பரவுதல், சூட்டுதல், அணிவித்தல், சேர்த்தல், சிதறுதல் எனப் பலவகைகளைச் சம்பந்தர் காட்டியுள்ளார். இத்தகைய மலர் வழிபாடு தனிநிலையிலும் கூட்டு நிலையிலும் நடைபெற்றுள்ளது. இதனால் வழிபாட்டில் மலர்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இதனால் மனித வாழ்வியலில் பயன்பாடொன்று தோன்றி வளர்வதாயிற்று.

இறைவழிபாட்டில் சிறப்பிடம் பெறுவது அப்போமலர்ந்த மலர். அதாவது நாள் மலராகும். குற்றமற்ற மலர்களை ஆய்ந்து இறைவனின் திருவடியில் இட்டு வழிபாடு செய்வதால் அடியவர்கள் தாம் வேண்டியவற்றை வேண்டிய வாறு பெற்று மகிழலாம் என்பது சமய நம்பிக்கையாகும். இதுபற்றி மணிவாசகர்,

"பரந்து பல் ஆய்மலர் இட்டு முட்டாதடியே இறைஞ்சி இருந்தனல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பருள்ளம்" என விளம்புகின்றார்.

இவ்வாறு மலரிட்டு வணங்குவதிலும் சில மரபுகளைப் பின்பற்றுவது சிறந்தது அடியவர் நம்பினர். எல்லா மலர்களுள்ளும் எண்மலர்கள் மிகவும் இறைவனுக்கு உவப்புடையவை எனக் கருதினர். அதனால் தான் திருநாவுக்கரசரும்,

**"எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி**
**மட்டலர் இருவார்வினை மாயுமால்**
**கட்டித் தேன்கலத் தன்ன கெடிலவீ**
**நட்ட னார்ரடி சேரும் வக்குகே"**

என இயம்புகின்றார். இவ்வாறே திருக்குறுந்தொகை பதிகம் ஒவ்வொன்றிலும் எண்மலரைக் குறிப்பிட்டுச் செல்கின்றார். திருக்குறுந் தொகைக் கடைசிப்பாசுரத்தில்

**"அட்டபுட்ப மலை கொளுமாறு கொண்டு**
**அட்டமூர்த்தி யநாதி நன் பாலணைந்து**
**துட்டுமாறு செய் சிற்ப அதிகைவீ**
**ரட்டனாரபி சேரு மலர்களே"**

திருநாவுக்கரசர் வாழ்க்கையிலே மிகப்பெரிய திருப்பத்தைத் தந்த திருத்தலம் திருவதிகை வீரட்டானம். ஆதலின் அத் தொடர்பின் விளைவாக இந்த எண்மலர் பற்றிய குறிப்பினை வைத்துப் பாசுரம் பாடிச் செல்வது சிந்திக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரரும் அட்டமலர் கொண்டு புரியும் வழிபாட்டில்சிறப்பான நம்பிக்கை உடையவராக விளங்கினார். இதனை

**"அறியவனட புஷ்பமவை கொண்டடி போற்றி"**

என ஏழாம் திருமுறையில் பாடிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இறைவனுக்குப் பூசனை நிகழ்த்துகையில் பதினாறு வகை உபசாரம் என்பது ஆகமம் கூறும் கருத்தாகும். இப்பதினாறு உபசரங்களுள் ஒன்றாகப் புஷ்பதானம் கூறப்படுகின்றது. பதினாறு வகை உபசாரங்களாக, ஆவாகானம், தாபனம், சந்நிதானம், கன்னிரோதனம், அவகுண்டம், பாணீயம், பாத்தியம், ஆக மனியம், அர்ச்சியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், ஜெபசமர்ப்பணம், ஆரத்தி என்பனவாகும். இவற்றுள் புஷ்பதானம் மலர்வழிபாட்டினை உணர்த்தி நிற்கின்றது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் பலவற்றிலும் தெய்வங்களுக்கு நித்திய பூசையிலும் திருவிழாக் காலங்களிலும் செய்யும் அலங்காரங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வகையில் சில கோயில்களில் தெய்வங்களுக்கு எத்தகைய அலங்காரம் அமைத்தல் வேண்டும் என்ற ஆகம மரபும் உண்டு. எடுத்துக்காட்டாக திருவாரூர்க் கோயிலில் நடைபெறும் பூவலங்காரம் பற்றிக் குறிப்பிடுகையில் இண்டை, செஞ்சடை வைத்த இயல்பிண்ணாகிய திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு இண்டைமாலை சாத்தும் அழகு தனித்தன்மை வாய்ந்தாகும்.

இவ்வாறாக, இந்துப் பண்பாடானது வணக்கத் தலங்களை மையமாகக் கொண்டே வளர்ந்து வந்துள்ளது. இறைவனுக்குப் பிரியமான பொருட்களைத் தெரிந்து அவற்றை அவ்விறைவனுக்கு அர்ப்பணம் செய்து இறை வனை மகிழ்விக்கலாம் என்ற மனோதிடம் தோன்றிய போது அப்பொருட்களில் முதன்மை பெற்றதாக மலர்கள் விளங்கின. திருக்கோயில் பண்பாட்டிற்கு மட்டுமன்றி உலகியல் பண்பாட்டிலும் மலர்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மலர்கள் மங்கலப் பொருளாகக் கருதப்படுவதைக் கொண்டு இத்துக்களது வாழ்வியலில் அவை பெற்றுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளமுடிகின்றது. பக்தி நெறியில் முன்னின்று நாயன்மார் ஆழ்வார்களும் மலர்களுக்கு முக்கிய இடத்தினைக் கொடுத்துள்ளமை புலனாகின்றது. அப்பர் "சலம்பூவொரு தூபம் மறந்தறியேன்" எனவும் சம்பந்தர் "பூநாளும் தலைசுமப்பர்" எனவும் சுந்தரர் "விரையார் கொன்றைப்பினாய்" எனவும் மணிவாசகர் பூமாலை புனைந்து ஏத்தி" எனவும் பாடுவதைக் கொண்டு இறைவழிபாட்டில் மலர்கள் பெற்றிருக்கும் இடத்தினை உணர முடிகின்றது. எனவே இந்துப்பண்பாடானது இறைவனையும் அவனது படைப்புக்களையும் அன்போடும் ஆதரவோடும் போற்றி நிற்கின்றது. இப்பண்பாட்டு நெறியில், அழகும், நறுமணமும் மருத்துவமும் ஒருங்கே அமையப்பெற்ற மலர்கள் இந்துக்களது வாழ்வியலில் இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றமை தெளிவாகின்றது.

**உசாவியவை**

01. காமிகாகமம், கிரியாபாதம், பூர்வபாகம், தமிழ் சந்திரிகையுடன், சிவஸ்ரீ. சுவாமிநாத சிவாச்சாரியார், 1977.

02. சண்முகதாஸ், ஆ, இந்து சமயத்தில் மலர்கள் சம்பந்தர் பாடல்களூடாக ஒரு துனிந்த நோக்கு, சிவத்தமிழ் செல்வி பவளவிழா மலர், 2000.

03. கோபாலகிருஷ்னன், ப. இந்துப் பண்பாட்டு மரபுகள், யாழ்ப்பாணம், 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கந்தசாமி,வி, தமிழ்நாட்டில் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், சென்னை, 1983

05. ஞானப்பிரகாசபட்டாரகர், புட்டுவிதி, வித்தியாதுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம்

**அடிக்குறிப்புக்கள்**

1. ஐங்குறுசாறு : 259
2. சண்முகதாஸ், ஆ, இந்துசமயத்தில் மலர்கள் சம்பந்தர் பாடல்களுடாக ஒரு நுனித்த நோக்கு: தமிழ் மொழியியல், இலக்கிய, பண்பாட்டு ஆய்வுக்கட்டுரைகள், 02.01.2001, V.617
3. ஐங்குறுநூறு , 427.
4. நற்றினை , 398.
5. ஐங்குறுநூறு.
6. பரிபாடல் , 8:48.
7. நற்றினை , 355.
8. குறுந்தொகை , 142.
9. நற்றிணை, 90.
10. நற்றினை, 221.
11. திருஈங்கோய்மாலை , 2 .4.
12. திருச்சிபுரம் , 1. 2.
13. திருக்கொச்சை வயம் , 2. 2.
14. மேலது 354 : 3.
15. மேலது 352 :7
16. மேலது 248 : 8
17. மேலது 174 : 1
18. மணிவாசகர் திருவாசகம்
19. திருநாவுக்கரசர் : திருக்குறுந்தொகை
20. மேலது
21. சுந்தார் தேவாரம் : ஏழாம் திருமுறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்கா நன்றிக்குரியோர்

அகிலம் போற்றும் அன்னை துர்க்காதேவியின் ஆலயத்தை அணிசெய்யும் முகமாக தென்திசை வாயிற் கோபுரம் மற்றும் குபேர வாசற் கோபுரம் என்பவற்றை அமைக்கும் சிவப் பணியில் முன்னின்று உழைத்தோர் பலர். இவர்கட்கு வார்த்தைகளால் நன்றிகூறி அமையாது எனினும் எமது பெரு நன்றியைத் தெரிவிக்க கடப்பாடு உடையோம்.

- கோபுரங்கள் நிர்மாணிக்கும் பெரும்பணிக்கு நல்லாசி வழங்கி ஆற்றுப்படுத்திய அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் கோயில் ஆதீனகர்த்தா ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்.

- கோபுர கும்பாபிஷேகக் கிரியைகளை நெறிப்படுத்தி ஆசி கூறி நடாத்தி வைத்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்.

- கோபுரங்கள் அமைவதற்கான நிலையம் எடுத்தல் மற்றும் அத்திபாரமிடல், கும்பாபிஷேகம் போன்றவற்றுக்கான முகூர்த்த நிர்ணயம் செய்த புன்னாலைக்கட்டுவன் ஈவினை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கெங்காதரக்குருக்கள்.

- அத்திபாரமிடல் முதல் கும்பாபிஷேகம் ஈறாக அனைத்து கிரிஜைகளையும் சிறப்பாக நிறைவேற்றிய தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் மற்றும் சிவாச்சாரியார்கள், அர்ச்சகர்கள்.

- கோபுரம் அமைப்பதற்கான அனுமதியை வழங்கியும் அத்திபாரமிடல் கும்பாபிஷேகம் முதலிய நிகழ்வுகளிலும் பங்குகொண்ட தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

- கோபுர நிர்மாணப் பணியில் பங்குகொண்டு உழைத்த நிர்வாகசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

- கோபுரங்களை குறித்த காலத்தினுள் அழகுற அமைத்த ஸ்தபதி சிதம்பரம் க.புருஷோத்தமன் மற்றும் அவர் குழுவினர்.

- கோபுரக் கதவுகளை சிறப்புற அமைத்த தேவஸ்தான ஆசாரியார் திரு.செ.முத்துக்குமார், திரு.செ.செந்தில்குமார் மற்றும் அவரது குழுவினர்.

- கோபுர நிர்மாணத்திற்குத் தேவையான பொருட்களை தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கை எடுத்தும், வடக்கு கோபுரத்திற்கு நேரான பாதையை அமைத்துத் தந்தும் கோபுர நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்தும் உதவிய தேவஸ்தான உபதலைவர் தேசகீர்த்தி லயன்.ச.ஆறுமுகநாதன் அவர்கள்.

- கோபுரத் திருப்பணிக்காக கட்டடப் பொருட்கள், நிதி, பவுண், நவரத்தினங்கள், போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கிய அம்பாள் அடியார்கள், வர்த்தகர்கள், நலன்விரும்பிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோபுரங்களிற்கான அத்திபாரம் அகழ்தல் மற்றும் வர்ண தீந்தை வகைகள் தந்துதவிய Jana Civil Engineering நிறுவன உரிமையாளர் திரு.ஆ.ஜனார்த்தனன்.

- தெற்கு கோபுரத்திற்கான கலசங்களை அன்பளிப்புச் செய்த தேவஸ்தான முன்னாள் செயலாளர் திரு.க.தணிகாசலம் குடும்பத்தினர். வடக்கு கோபுரத்திற்கான கலசங்களை அன்பளிப்புச் செய்த திரு.து.ஜெயகுமார்.

- தெற்கு கோபுர கதவுகளை உதவிய திரு.நா.சங்கர் (சுவிற்சலாந்து) வடக்கு கோபுர கதவுகளை உதவிய வைத்திய கலாநிதி (திருமதி )கருணாகரன் (இங்கிலாந்து)

- மஹாமேரு இயந்திரப் பிரதிஷ்டை செய்வதற்கான உதவி வழங்கிய வைத்திய கலாநிதி மகேசன் தீனதயாளன் குடும்பத்தினர் .

- தென்திசைக் கோபுரத்திற்கான மின் அலங்கார வசதிகளை உதவிய திரு.க.வாசன் (இங்கிலாந்து)

- கோபுர நிர்மாணம் மற்றும் கும்பாபிஷேக காலங்களில் தொண்டுப் பணிகளில் ஈடுபட்ட தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், பெண்கள் தொண்டர் சபையினர், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர் மற்றும் தேவஸ்தான பணியாளர்கள்.

- கும்பாபிஷேக மலருக்கான ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் தந்த பெரியோர்கள் கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய துறைசார் வல்லுநர்கள்.

- கும்பாபிஷேக மலரை அழகுற அச்சிட்டுதவிய Andra Printers நிறுவனம்

ஆகியோருக்கு எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**நிர்வாக சபை,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PRINT @ PRINT MASTER, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org